ஸ்ரீ:

பதினெண்கீழ்க்கணக்கிலொன்றாகிய

# பழமொழி மூலமும்

## பழைய உரையும்.

R0: 80

இவை:

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்

"செந்தமிழ்"ப்பத்திராதிபர்

திரு. நாராயணையங்காரால்

பரிசோதிக்கப்பெற்று

அவரெழுதிய குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பட்டன.

(முதற்பகுதி நூறு பாட்டு.)

செந்தமிழ்ப்பிரசுரம்—௩௧.

தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

மதுரை

1918.

விலை 1—0—0.

ஸ்ரீ:

முன்றுறையர்செய்த

# பழமொழி

## மூலமும் உரையும்.

1. அரிதவித் தாசின் றுணர்ந்தவன் பாதம்
விரிகடல் சூழ்ந்த வியன்கண்மா ஞாலத்
தரியதனிற் கண்டுணர்ந்தா ரோக்கமே போலப்
பெரியத னாவி பெரிது.

என்பது, உலகத்தின்கட் கெடுத்தற்குரியகுற்றத்தைக்கெடுத்துச் சிறிதுமொழியாமன் முழுதுமுணர்ந்தவன்பாதத்தைத் தமக்குரிமைப் பட வாராய்ந்துணர்ந்தவர்க் கோக்கமே யுளதாவது; பேருடம்பினை யுடையதாதலிற் பெரிதாயதுபோன்று என்றவாறு.

(குறிப்பு) உலகம்-கர்மபூமி. குற்றம்-காமம் வெகுளி மயக்கங்களாம்; இதனைக் "காமம் வெகுளி"† என்னுங் குறளுரையானு மறிக. முழுதுமுணர்ந் தவன்-எல்லாமுணர்ந்த இறைவன். அவன்பாதத்தைத் தமக்குரிமைப்பட ஆராய்ந் துணர்தலாவது, அவனை உரியோனெனவும், தாம் அவனடித்தொழும்புக்குரிய உரிமையெனவும் ஆத்துமவிசாரம்செய்து தெளிதல். கெடுத்து, ஆராய்ந்தவர்க் கெனக்கூட்டுக. ஒக்கம்-உயர்வு; மேற்கெதியுமாம். ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. ஒன்றற்கு உடம்பின்வளர்ச்சியாற் பெரியதென உயர்வுண்டாவதுபோல, முற்றுமுணர்ந்தவன்பாதத்தையுணர்ந்தவர்க்கு ஞானவளர்ச்சியால் உயர்வுண்டா மென உவமையொடுபொருத்தியுரைத்துக்கொள்க. ஆராய்ந்துணர்ந்தவர்க் குயர் வுண்டென்றாராயினும், அவரேயுயர்வுடையோர்; அவர் வணங்கற்பாலர்என்பதும் கருத்தாதலால் அடியார்வணக்கமுங் கடவுள்வணக்கமு மொருங்குகூறியவா றாயிற்று. பெருத்ததுபேரிது என உலகவழக்காய்வந்த பழமொழி இங்குக் கொள் ளப்பட்டது.

---

*முதற்

விடப்பட்டது.

† திருக்குறள் ௩௬-ம் அதி. மெய்யுணர்தல் ௧௦.

2. கல்லாதான் கண்ட கழிநுட்பங் கற்றார்முற்
சொல்லுங்காற் சோர்வு படுதலா—னல்லாய்
வினாமுந் துறாத வுரையில்லை யில்லைக்
கனாமுந் துறாத வினை.

எ-து, கற்றுவல்லாதா னாராய்ந்துகண்ட மிக்கநுண்மை கற்றார் முன்பு தான்சொல்லுங்காற் சோர்வுபடுதலால் நல்லாய்! வினாமுற்படாத செப்புமில்லை, கனாமுற்படாதவினையுமில்லை; ஆதலா லவைபோலக் கல்வி முந்துறாத நுண்மையுணர்வுமில்லை எ-று.

(குறிப்பு) கல்லாதான், கற்றார் என்பவற்றிற்கேற்ற செயப்படுபொருளாகிய, நீதிநூல்களை யென்னு மெச்சச்சொல்வருவித்துக் கூட்டியுரைத்துக் கொள்க. நுண்மை-நுண்ணுணர்வாலாராய்ந்த சூழ்ச்சிமுடிவு. சோர்வுபடுதல்-தவறுமொழிதல். நல்லாயென்பது மகடூஉமுன்னிலை. இது, சுவைநயந்தோன்றக்கூறுவதொருமரபுபற்றிவரு மில்வழக்கு. இந்நூலுட் பின்னும் பலபடியாய் வரும் முன்னிலைகளும் இன்ன. சோர்வுபடுதலால் என்னும் மூன்றனுருபை, கல்விமுந்துறாதநுண்ணுணர்வுமில்லை என்பதனுள், இல்லையென்னும் எச்சச் சொல்லொடுகூட்டிமுடிக்க. வினாமுந்துறாதவுரையில்லை, கனாமுந்துறாதவினை யில்லை என்பன இரண்டும் இணைந்து ஒருபழமொழியானமையா லவையிரண்டுந் திருட்டாந்தமாயின. இவற்றுள் வினாமுந்துறாதவுரையில்லையென்றது கடாவின்றி யுரைநிகழாதென்பார்மதம்பற்றிய கலைவழக்கு. இதனை, இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின் என வினவிக்கொண்டுவரையும் உரைநடைகளானும் அறிக. வினையென்றது வினைப்பயனாகவரும் நன்மைதீமைகளாம். அவற்றை யுணர்தற்குக் கனவை நிமித்தமாகக்கொள்ளுதல் மரபாதலால் அவற்றிற்குக் கனா முந்துறுதல் நியமமாயிற்று. இதுவும் கலைவழக்கு. இதனை, "வாரணமாயிரம்"* என்னும் நாச்சியார்திருமொழிப்பாசுரங்களாலும், கனாநூன்முதலியவற்றாலும் அறிக. எடுத்துக்காட்டுக்கிளவியைக் கல்விமுந்துறாதநுண்ணுணர்வுமில்லையெனப் பொருள்வருவித்துரைக்கப்பட்டது. இதனால் ஒருவனுக்கு இயற்கையானுண்டாகிய நுண்ணுணர்வுக்கு அவன் முற்பிறப்பிற்கற்றகல்வியே காரணமாமென்பதும், அந்நுண்ணுணர்வுநிலைபெறுதற்குப் பின்னுங் கல்வியுணர்வே வேண்டுமென்பதும் பெறப்படும். பெறவே, நுண்ணுணர்வுடையோனேயாயினும் அது சோர்வடையாமைப்பொருட்டு நீதிநூல்கற்கவேண்டுமென்பது கருத்தாய்த் தெய்வவணக்கத்தையடுத்துச் செயப்படுபொருளாகிய நீதிநூலின்சிறப்புக் கூறியவாறாயிற்று. இப்பாட்டிற்காட்டியபழமொழி காவியவழக்காய் முந்தையோர்செய்யுளிற்பயின்றதுபோலும். இவ்வாறே பின்னும் "இழுக்கத்தின்மிக்கவிழிவில்லை யில்லை, யொழுக்கத்தின்மிக்கவுயர்வு"† எனவருதலும் காண்க.

---

*நாலாயிரப்பிரபந்தம் நாச்சியார்திருமொழி, 6-ம்பத்து.

† இது இந்நூலின் அறுபத்துநான்காம் செய்யுள்.

3. கல்வியா னாய கழிநுட்பங் கல்லார்முற்
சொல்லிய நல்லவுந் தீயவா—மெல்லா
மிவர்வரை நாட தமரையில் லார்க்கு
நகரமுங் காடுபோன் றாங்கு.

எ-து, கல்வியானாய மிக்கநுண்மையறிவா லொருவன் கல்லாதார் முன்புசொல்லிய நல்லபொருள்களுந் தீயவாம்; எல்லாப்பொருள்களாலும்விரும்பப்படாநின்றவரைநாடனே! தமரையில்லாதார்க்கு நகரமுங் காடுபோன்றாற்போல எ-று.

(குறிப்பு) நுட்பம்-நுண்ணுணர்வு. நுட்பத்தால், எல்லாவற்றானும் என மூன்றனுருபுவிரித்துரைக்கப்பட்டது. கல்லாரால், தீயனபோற்கருதப்படுமென்பார் தீயவாம் என்றார். தமர்-தம்மொடுபயின்றார். ஒருவர்க்குத் தம்மொடுபயின்றாரில்லையாயின், பயிலாதநல்லோர்பலரிருக்கும்நகரமும் ஆள்வழக்கற்றகாடுபோல மனங்கொள்ளாதாகுமாறே, கற்றுவல்லார் நுணுகிக்கண்ட நல்லனவாயபொருள்களைக் கல்லாதார்க்குச்சொல்லின் அவ ரவை பயிலாமையால் மனங்கொள்ளாது விடுவரென உவமையொடுபொருத்தியுரைத்துக்கொள்க. கல்வியினுண்ணறிவாற் கண்ட செவ்வியபொருள்களைக் கல்வியறிவில்லாதமூடமக்களிடத்துச் சொல்லலாகாதென்பது கருத்து. கற்றோரிடத்தேசொல்லவேண்டுமென்பது குறிப்பு. உற்றாரையில்லாத வூரும் ஊரோ? என்பது உலகவழக்கான பழமொழி. இதனால் நூற்பொருள்கேட்டற் கதிகாரமில்லாதாரிவரென்பது சொல்லப்பட்டது.

4. கேட்பாரை நாடிக் கிளத்தப் படும்பொருட்கண்
வேட்கை யறிந்துரைப்பர் வித்தகர்—வேட்கையால்
வண்டு வழிபடரும் வாட்கண்ணாய் தோற்பது
கொண்டு புகாஅ ரவை.

எ-து, தாமுரைக்கின்றபொருளைக் கேட்கவல்லாரைநாடித் தாஞ் சொல்லப்படும்பொருட்க ணவர்விரும்புவாரென்பதனையறிந்து சொல்லுவர் தெள்ளியார், தங் காதலாலே வண்டுகள் பூவென்றுபின்செல்லாநின்ற வொளியினையுடையகண்ணாய்! தோற்பனகொண் டவையின்கட் புகாராதலா லதுபோல எ-று.

(குறிப்பு) கேட்பார்-நூல்கேட்டற்குரிய கல்வியறிவுடையார். கல்வியிலராயி னவரிடைச்சொல்லின் அவரறிந்துகொள்ளமாட்டாமையாற் பயன்படாதென்பார் கேட்பாரைநாடி யென்றும், கல்வியுடையராயினும் சொல்லும்பொருட்கண் அவர்க்கு விருப்பமில்லையாயிற் சொல்லுவதாற்பயனில்லையென்பார் கிளத்தப்படும்பொருட்கண் வேட்கையறிந்து என்றும் கூறினார். பூவென்று என்றது

வண்டுகள்வழிபடர்தற்குக் காரணம்விரித்துரைத்தவாறு. இங்கு, தோற்பது-தோல்வியுறும்சொற்கள். தோற்பதுகொண்டுபுகாஅரவை என்னும் பழமொழிப் பொருள் இங்கு வெதிரேகதிருஷ்டாந்தமாகக் காட்டப்பட்டமையால் அவையிற் புகுவார் வெல்வதற்கேற்ற செல்லுஞ்சொற்கொண்டுசெல்வர் என்னு முடன்பாடாகிய பொதுப்பொருளால், சொல்லுவனசெல்லுமாறு, கேட்பாரைநாடிக்... ....................துரைப்பர்வித்தகர் என்னும் சிறப்புப்பொருள் துணியப்பட்டது. இதனாற் கேட்போராகிய அதிகாரியையறிந்து சோர்வுபடாது நூற்பொருள்சொல்லவேண்டுமெனச் சொல்லுமாறும், கல்வியறிவுடைமையாகிய ஆற்றலும் விருப்பமுமுடையாரே நூற்பொருள்கேட்டற்குரிய அதிகாரியென்பதும் சொல்லப்பட்டன.

5. புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்—நலமிக்க
பூம்புன லூர பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால்.

எ-து, அறிவுமிக்கவரை யம்மிக்கவறிவினை யாராய்ந்தறிதல் அறிவு மிக்கவர்க்கே யுளவாம்; நன்மைமிக்க புனலூரனே! சிறப்பில்லாதமக்கட்குத் தெரிதலரிது; பாம்பினுடையகால்களைத் தமக்கினமாகிய பாம்புகளறியுமாதலா னதுபோல எ-று.

(குறிப்பு) புலமென்றது புலந்தொகுத்தோன், புலநெறிவழக்கு, புலவர், என நூலொடியைந்தேஅறிவுக்கானமையால் உரையினுள் அறிவென்றது நூலறிவையெனக்கொண்டு, நூல்கற்றநுண்ணறிவான்மிக்காரியற்றிய நூலின்கண்ணுள்ள ஆழ்ந்தகருத்துக்களை யாராய்ந்தறிதல் நூலறிவான்மிக்கார்க்கே யுளவாம், எனப் பொருளை விரித்துரைத்துக்கொள்க. இதனை, "வித்வாநேவ விஜாநாதி வித்வஜ்ஜநபரிஶ்ரமம்" என வடமொழிவாணரும் வழங்குவர். புலமிக்கவரைப் புலமைதெரிதல் என்றது, பசுவைப் பாலைக்கறத்தல் என்பதுபோன்று ஈருருபிணைந்துநின்றது. அது புலமிக்கவரதுபுலமைதெரிதலென்றபடி. புலப்படுவது உள்ளதேயாமாதலால், புலனாமென்றதற்கு உளவாமெனப் பொருளுரைக்கப்பட்டது. தெரியுமாறு பலவாதலாலும், தெரியும் பொருட்பன்மையாலும் தெரிதல் பலவாதலால் உளவாமென்றார். புலமிக்கவராகிய நூலாசிரியரது நுணுகியகருத்துக்களைப் புலவரேதெரிவராதலால் அவர்பாற்சென்றே நூற்பொருள்கேட்க வேண்டும் என்பது குறிப்பு. புலமிக்கவர்க்கேபுலனாமென்றமையானே பொதுமக்கட்காகாதென்பது பெறப்பட்டிருக்கவும், மறித்தும் பொதுமக்கட்காகாதென்றது, இறைவனால் மயர்வறமதிநலமருளப்பெற்ற சிறப்புடையார் கல்லாதுமுணர்வர் என்பதுணர்த்தற்கென்க. பாம்பறியும்பாம்பினகால்என்றது பாம்பின்கால் பாம்பறியும் என்னும் பழமொழியாம். அது இங்குச் செய்யுள்நோக்கி முன்

பின்னுகமாற்றி ஆறனுருபுவிரித்துரைக்கப்பட்டது. இப்பழமொழி, "பாம்பறியும் பாம்பினகா லெனமொழியும் பழமொழியும் பார்க்கிலீரோ"* எனத் தமிழ்ப் புலவராலும், "அஹிரேவ பாதாந்ஹ்யஹே:" என வடமொழிவாணராலும் காவியங்களில் எடுத்தாளப்பட்டது. கால் என்னுஞ்சொல், வழக்குவலியால் நடக்குமுறுப்பையுணர்த்துவதாயிருப்பினும், அவ்வுறுப்புப் பாம்புக்கில்லாமையா லிங்கு அதனையொழித்துப் பொருளுக்கியைய இடவிசேடமேபொருளெனக்கொள்ளத் தக்கதாயிற்று. கால் என்பது இடவிசேடத்தையுணர்த்துஞ்சொல்லாகுமென்பதைக் "கண்கால்புறமகம்"† என்னுஞ் சூத்திரவுரையுட் **சேனாவரையர்** கூறியவாற்றானும், கால்‡, கால்வாய், வாய்க்கால் என்றற்றொடக்கத்து உலகவழக்கால் ஒடுங்கியும், முடங்கியும், வளைந்தும், நிமிர்ந்தும், நீண்டும் இருக்கும் இடவிசேடங்களையுணர்த்துதலானு மறிக. பாம்புறையும் இடங்களும் அதனுடற்கிடக்கைக் கேற்றவாறே அத்தன்மைகளையுடையவாயிருக்கவேண்டுமாதலா லவை **பாம்பின் கா**லெனப்படும். நண்டு, கறையான் இவை உறையுமிடத்தை நண்டுவளை, கறையான்புற்று எனவழங்கும் மரபுபோலப் பாம்புறையுமிடத்தைப் பாம்பின்கால் என வழங்குவது பண்டையோர்மரபாதலால் மூலத்துள்ளும் உரையுள்ளும் பாம்பின கால் என்பதற்குப் பாம்புறையுமிடங்களை எனப் பொருளுரைத்துக்கொள்க. மிகவும் கோப்பியமாகப் பாம்புறையுமிடங்களை அவற்றோடொத்த பிறபாம்புகளறிவதல்லது பிறரறியாதவாறுபோல நூலறிவுடையோரது கோப்பியமானகருத்துக்களை, அவரோடொத்த நூலறிவுடையோரேயன்றிப் பிறர் அறியாரெனப் பொருளொடுபொருத்தி யுரைத்துக்கொள்க. இது, கோப்ய ரக்ஷக ப்ராப்யத்தன்மைகளை ஒப்புமையாகக்கொண்ட எடுத்துக்காட்டு. இப்பழமொழியின்கருத் திதுவேயென்பதற்கு இப்பழமொழியின் எச்சப்பொருளாகிய பிறரறியாரென்பதனை, "இன்னபுற்றிற்பாம்பிருக்குமென யாரறிவார்" என வழங்கும் உலகவழக்கும், "அஹிரேவ பாதாந்ஹ்யஹே:" என்னும் வடமொழித்தொடருள்ள அஹே: **பாதாந்** என்பதற்குப் பாம்புறையுமிடங்களை என்னும் பொருளுடைமையும் சான்றாம். இங்ஙனமன்றி, இப்பழமொழி, "ஸர்ப்ப ஏவ ஜாநீதே ஸர்ப்பாணாம் **சரணம் ஸகே**" எனக் குவலயானந்தத்துள் வல்லோர்நவிற்சியணிக் குதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. இதில் ச(ஞ)ரணம் என்றது நடக்குமுறுப்பாகிய கால்களையேயுணர்த்துவதாம். இதற்கு "**பாத:** பதங்க்ரிஶ்சரணோ(அ)ஸ்த்ரியாம்" என்னும் நாமலிங்காநுசாஸனமும், "கருவரிக்கால்காலும், மயிரெனக், கட்செவியாய்ப்பிறர் காணரிதாய், நாலாறுகாலுமுண்டாம்" என்னும்

*கம்பராமாயணம், ஆரணியகாண்டம், சூர்ப்பநகைப்படலம், செய்-கஙஅ.

† தொல். சொல். வேற்றுமையியல். சூத்திரம்—உக.

‡ உயிர்மெய்யெழுத்தின் ஆகாரக்குறி. நடக்குமுறுப்புமாம்.

சித்தராரூடமும், பல்லி பாம்பரணை யிவற்றின்பரம்பரையே நாளடைவிற் பாம் பாகப்பரிணமித்ததென்னு மொருசாராங்கிலநூல்* வல்லார்கொள்கையும்† சான்றுவனபோலும். இப்பாட்டிற் புலமையென்றது நூலிலுள்ளநுணுகியகருத்துக்களையாதலால், புலவராலறியத்தக்க நுணுகியகருத்துக்களையுடையதே நூலாம் என நூலினிலக்கணமும், அத்தகைய நுணுகியகருத்துக்களையறிந்துசொல்லற்குரியோன் நூல்வல்லோனுயிருக்கவேண்டுமென ஆசிரியனிலக்கணமும் ஒருங்குகூறியவாறாயிற்று. இவையைந்துபாட்டும் நெறியுணர்த்துதல்பற்றி நூலாகவும், வணக்க மதிகாரமுதலியவுணர்த்துதல்பற்றிப் பாயிரமாகவும் ஒருங்கேகொள்ளுமாறுகூறியதொரு தந்திரவுத்தி. இவையே அவையடக்கியலுமாமா றுராய்ந்தறிந்துகொள்க. இனி, இந்நூலாசிரியர், மாணுக்கர்க்கறிவுறுத்தற்குரிய அறமுதற்பொருள்களைக் கூறுவான்றொடங்கி, அவற்றை அதிகாரப்படவைப்பின், செய்யுள்களின்பொருள்கள் அதிகாரத்தளவா யடங்கியொடுங்குமெனநினைந்து, அவ்வாறுகூறாது, விரோதமின்றிவிளங்கும்பொருள்களையெல்லாம், வேண்டியவாறே வெகுமுகமாய் விரித்துரைத்துக்கொள்ளுதற்கேற்ற முத்தகச்செய்யுள்களானேகூறுப.

---

*Encyclopædia Britannica Vol. 22. p. p. 189—190.

†இக்கொள்கை யுண்மையுடையதாயின் அப் பல்லிவகையின்கால்கள் நாளடைவிற் குறுகிக்கொண்டுவந்து பிறர்க்குத்தோன்றாதுமறையுந்தருணமாகிய முன்னையவூழிக்காலங்களி லிப்பழமொழி பிறந்திருக்கலாமெனக்கொள்ளுதல் பொருந்துமாயினும், அக்கால்களையறித லநுபயோகமாய்ப் பொருளொடுபொருந்தாமையாலும், சித்தராரூடத்துட்கண்டது:-கரும்பு மூங்கில்முதலியவற்றினுள்ள வட்டவடிவானவரையைக் கண்ணென்னுமிடப்பெயரால்வழங்குதலும் துலாக்கோலின்மேற்புறத்துள்ள நிறையறிகுறியான வெண்ணிறவரையை வெள்ளிக்கால் என வழங்குதலும்போலப் பாம்பினடிப்புறத்துக் குறுக்காய்நீண்டவடிவுள்ள வரைகளையே காலென்னு மிடப்பெயரால்வழங்கியதாகக் காணப்படுதலால் அவையும் வல்லோர்நவிற்சிக்கேற்ற பொருட்குறிப்புக் கிடனுகாமையாலும், நாமலிங்காநுசாஸனத்திற்கண்ட ஸ-ந்ஸவாதீ (மறைந்தகால்களையுடையது) என்னும் பெயரானது:-கூடசப்தம் அபாவலக்ஷகமாக, "அருங்கேடன்" (குறள் 210) என்பது போன்று இன்மையின்முன்மையில் இல்லதை யுள்ளதுபோல்வைத்துக்கூறுவதொருவழக்குவகையாற் காலில்லாதது என்றபொருளையுணர்த்தி விரோதிக்கையாலும், அவை சான்றாகாமையால், குவலயானந்தத்திற்கண்ட ச(ஷ)ரணம் என்ற சொல்லானது கிருஹ ரக்ஷகவாசகமாய் அடையுமிடத்தையுணர்த்தும் ச(ஶ)ரணம் என்ற சொல்லாயிருக்கவேண்டுமென்றும், அதன் வியாக்கியானத்தில், "ஸுஷ்: ஸாதா ஸரீஸ்ருபவிசேஷ:" என்றிருப்பது ஸுஷ்: ஸதா ஸரீஸ்ருபவிசேஷ: என்றிருக்கவேண்டுமென்றுந் தோன்றுகின்றது.

6. ஈனுலகத் தாயி னிசைபெறூஉ மஃதிறந்
தேனுலகத் தாயி னினிதாகுந்—தானொருவ
னுள்வாயு நல்லறஞ் செய்வாற் கிரண்டுலகும்
வேள்வாய் கவட்டை நெறி.

எ-து, இவ்வுலகின்றிறத் தாராய்வேமாயிற் புகழைப்பெறும், புகழைத்தவிர மறுமையுலகின்றிறத் தாராய்வேமாகில் மறுமையுலகமு மினிதாம், ஆதலால் நாடோறு நல்லறஞ்செய்யுமொருவற் கிரண்டுலகமுங் கவட்டைநெறியின்கணுளவாகிய கல்யாணங்கள்போலும் எ-று.

(குறிப்பு) ஈனுலகத்து-இவ்வுலகின்றிறத்ததாகியநன்மை. ஏனுலகத்து-மறுமையுலகின்றிறத்ததாகிய நன்மை. இசைபெறூஉம் என்பதற்கு நல்லறஞ் செய்வான் என்பதனையும், இனிதாகும் என்பதற்கு நல்லறஞ்செய்வாற்கு என்பதனையும் வாக்கியசேடங்களாகவருவித்துக் கூட்டியுரைத்துக்கொள்க. ஏனுலகத் தாயி னினிதாஉம், வேள்வாய்க் கவட்டை நெறி என்பன பிரதிபேதம். வேள்வாய்-வேட்குமிடம்; கல்யாணவீடென்றபடி. கவட்டைநெறிக்கண் என ஏழனுருபைவிரித்துக் கவட்டைநெறிக்கட் கல்யாணமென்க. யாத்திரைசெய்யுமொருவன் தான்கருதியவூர்க்குச்செல்லுங் கவட்டைவழியிலுள்ளவூர்களிரண்டிற் கல்யாணமுளவாயின் அவன் எந்நெறியாற்செல்லினும் விருந்துண்டு கண்டு களித் தின்புறுமாறுபோல, அறநெறியொழுகுமொருவன், இகலோக பரலோக மிரண்டினுள் யாங்குவாழினும் முறையே புகழ்புண்ணியங்களை நுகர்ந் தின்புறுவனெனக் கருத்துநோக்கி உவமையொடுபொருத்தி யுரைத்துக்கொள்க. ஈனுலகமெனச் சுட்டிடைச்சொல்நீண்டவழித்தோன்றியமெய் திரிந்துநின்றது. ஏனையென்பதனிறுதி விகாரத்தாற்றொக்கது. வேள்வாய்க்கவட்டைநெறியெனக் ககரவொற்றுமிக்க பிரதிபேதமும் பாடமாயின் ஒருகல்யாணத்துக்கு இருதலையானுஞ்செல்லுதற்குரிய கவட்டைநெறிபோலுமெனப் பொருளுரைத்துக் கொள்க. இங்குக் கவட்டைநெறியாவது ஒருகல்யாணத் துபயசம்பந்திகளுக்குந் தொடர்புடையனாதல். இத்தொடர்புடையான் எங்கள்வழியினன் எங்கள் வழியினன் என உபயசம்பந்திகளாலும் உபசரிக்கப்பெற் றிருநெறியானும் இன்புறுதல்போல அறஞ்செய்வானும் இகபரமென்னும் இருதலையானும் இன்புறுவனென உவமையொடுபொருத்தியுரைத்துக்கொள்க. இவ் விருதலைத்தொடர்புடையானை இரட்டைச்சம்பந்தியென்பது மணமனைவழக்கு. கவட்டைவழி என்பது ஒரு சொலவடையாய்வழங்கும் வழக்கு. இது கவையடி என்றும் வழங்குவதுண்டு. இதனை, இரண்டுகாரியத்துக்கு ஒருபாயம்செய்திருக்குமவனைக் கவையடிக்காரன் என வழங்குதலா லறிக. இப்பாட்டால் இம்மைப்பயனொன்றேயுடைய பொருளின்பங்களினின்றும் இருமைப்பயனுமுடைமையால் அறம் சிறந்ததென அறத்தின்சிறப்புக் கூறப்பட்டது. அறஞ்செய்யவேண்டும் என்பது கருத்து.

7. ஆஅ மெனக்கெளி தென்றுலக மாண்டவன்
மேனந் துணையறியான் மிக்குநீர் பெய்திழந்தான்
ரூஉ முடைய தொடங்குவார்க் கில்லையே
தாஅந் தரவாரா நோய்.

எ-து, மூவடிநிலங்கொடுப்ப தெனக் கெளிதாமென்றுசொல்லிப் பண்டொருநா ளுலகமுழுதாண்டமாவலியுந் தன் மந்திரிசொல்லை விரும்புமளவறியானுய்ச் செருக்கினுன்மிக்கு நீர்த்தானமாக நீர்வார்த் துலகமெல்லாமிழந்தானுதலாற் குற்றமுடையகாரியங்களைச் செய்யத் தொடங்குவார்க்குத் தமக்குத் தாந்தரவாராதநோய்களில்லை எ-று.

(குறிப்பு) உலகமாண்டவன் எனக்கெளிதாமென்று மேனந்துணையறி யான்மிக்கு நீர்பெய்திழந்தான் எனக் கூட்டுக. உலகமாண்டவன் நீர்பெய்திழந் தான் என்னுங்குறிப்பால் எளிதென்பதற்கேற்ற மூவடிநிலங்கொடுப்ப தெனக்கு என்னும் எச்சச்சொற்களும், மேவும் என்னும் வினைக்கேற்பத் தன் மந்திரி சொல்லை என்னுஞ் செயப்படுபொருளும், பிறவற்றிற்கேற்ற பிறவும் வருவித் துரைக்கப்பட்டன. மேவும் என்னும்பெயரெச்சம் ஈற்றுயிர்மெய்கெட்டுத் தொடைநோக்கி யளபெடுக்கப்பட்டது. தாந்தரவாராநோயில்லை என்றது தாந்தர வரும் நோயே உண்டு என்றபடி. இது ஸ்வயம்கிருதாநர்த்தம் என வட மொழியால்வழங்குஞ்சொலவடையின்கருத்துடையது. திருட்டாந்தத்தில் மேவுந்துணையறியாதுமிகுதல் தோமாகக்கொள்க. மாவலிசெயலாகிய சிறப்பால் தோமுடையதொடங்குவார்க்குத் தாந்தரவருநோயுண்டெனப் பொதுப்பொருள் துணியப்பட்டது. அரசன் எத்துணை சிறப்புடையோனுயினும் நீதிநூல்வல்ல அமைச்சர்சொல்வழிநடக்கவேண்டுமென்பது கருத்து.

8. எந்நெறி யானு மிறைவன்றன் மக்களைச்
செந்நெறிமே னிற்பச் செயல்வேண்டும்—மந்நெறி
மான்சேர்ந்த நோக்கினு யாங்க வணங்காகுந்
தான்செய்த பாவை தனக்கு.

எ-து, எல்லாவாற்றானுந் தந்தை தன்புதல்வனைச் செவ்வியநெறிமே னிற்கும்வகை யறிவுண்டாகச்செய்யவேண்டும்; அச்செய்தநெறி, மான் சேர்ந்தநோக்கினுய்! தாதைக்கேதெய்வமாகுந் தான்செய்த பாவை யதுபோலும், அத்தந்தைதனக்கு எ-று.

(குறிப்பு) எல்லாவாற்றானுமென்றது அறம்பொருளின்பங்களையடைதற் குரிய பலவழிகளிலும் என்றபடி. மக்கள் எனப் பின்வருதல்நோக்கி, அதற் கியைய இறைவன் என்பதற்குத் தந்தையெனப் பொருளுரைக்கப்பட்டது. மக் கள் சாதிப்பன்மையாதலாற் பால்பிரித்துப் பொருளுரைக்கப்பட்டது. செந்நெறி-

பழிக்கப்படாதநெறி. நெறி என்றதுணையானே அதன்கண் நிகழ்தற்குரியது ஒழுக்கமாகியநடையென்பது தானேபெறப்படுதலால் நெறிமேல்நடக்கவென்னாது நிற்கவென்றார். ஈண்டு நிற்றல் விலகாமையையுணர்த்திக் கொடுநெறிக்கட்செல்லுதலைவிலக்கிநின்றது. இக்கருத்தடக்கம்பற்றியே, நெறிசென்றாரென்னாது "நெறிநின்றார்நீடுவாழ்வார்"* என்றும், "கற்றபி, னிற்கவதற்குத்தக"† என்றும், "சக்கரநெறிநில்" என்றும் யாண்டும் வழங்குதல்காண்க. அறிவுண்டாயினல்லது, அங்ஙனம் நிற்றல்கூடாமையின் அறிவுண்டாகவெனக் காரணம் விரித்துரைக்கப்பட்டது. அந்நெறி-அங்ஙனம்செய்த செந்நெறி. மான் சேர்ந்த நோக்கினாய் என்றது மகடூஉமுன்னிலை; மான்விழிபோன்ற இணைந்தவிழியினையுடையாய் என்பதுபொருள். ஆங்க என்பது உவமச்சொல். தாதை-பிதாவைப்போலவே சாதகருமமுதல் உபநயனமீறாகியசடங்குகளை விதிப்படிசெய்து தெய்வபிம்பத்தைப் பிரதிஷ்டைசெய்யுமவன்; இது, ஐயர், பட்டர், போற்றி என வழங்குவதுபோன்றதொரு பூஜ்யவாசகமாகவுமாம். செய்தபாவை தனக்கு அணங்காகும் என்னுங்குறிப்பால், அச்செயலின்வினைமுதலாகிய தான் என்பது இங்குத் தெய்வப்பிரதிஷ்டைசெய்பவனை யுணர்த்திற்று. செய்தவென்பதற்கு, நெறிநிற்கச்செய்த எனப் பொருளடை கூட்டி, நூன்முறை பிரதிஷ்டைசெய்த எனப் பொருளுரைத்துக்கொள்க. ஒருதாதையால் நெறிமுறைநிறுவப்பெற்ற தெய்வபிம்பமானது அத்தாதையாலும் போற்றத்தக்க பாதுகாப்பாய்நின்றே அத்தாதைக்கும், உலகுக்கும் இம்மைமறுமைநலங்களை அளித்துதவுவது போல அரசன் தன்மகனை நெறிமுறைநிறுத்தும் செந்நெறியானது, அவ்வரசனும்போற்றத்தக்க பாதுகாப்பாய்நின்றே அவனுக்கும், உலகுக்கும் இம்மைமறுமைநலங்களையளித்துதவும் என உவமையொடுபொருத்தியுரைத்துக்கொள்க. இங்கு, " பிறர்திருவாராதனத்தின் தீர்த்தமே ஸ்வீகார்யமாய்த் தான் எதியருளப்பண்ணின விக்ரஹத்தின்தீர்த்தம் ஸ்வீகார்யமாகாதோ"‡ என்று ஆண்டாள் அருளிச்செய்தவார்த்தையும், "கணபுரங்கைதொழும், பிள்ளையைப்பிள்ளையென்றெண்ணப்பெறுவரே"§ என்ற திவ்யசூக்தியும் ஸ்மரிக்கத்தகும். இனி, இப்பாட்டு, புதல்வரைப்பெறுதல் என்னும்நெறியொன்றே யதிகரிக்கப்படாத முத்தகமாதலாலும், "இறைவன் தன்மைந்தனை"யெனக் கருதியபொருள் இனிதுவிளங்கக்கூறாது, "இறைவன் றன்மக்களை" எனப் பிறிதுபொருளும் கொள்ளுமாறே கூறப்பட்டமையானும் வேறுபொருளும் கொள்ளத்தகும். அதாவது:—அரசன் தன்பிரஜைகளாகியகுடிகளை எல்லாநெறிகளிலும் ஒழுங்காய்நடக்கு மறிவுடையராகச்செய்யவேண்டும்; அங்ஙனம்செய்யுநெறியானது அப் பிரதிஷ்டாபகன் காட்டியதெய்வம்போலத் தனக்கும் உலகிற்கும் பாதுகாப்பாகி இம்மைமறுமைநலங்களையளித்துதவுமென்பதாம். இருவகைப்பொருளிலும் நெறி அணங்காதல் மக்கள்வாயிலாயென வுணர்க.

---

*திருக்குறள், கடவுள்வாழ்த்து-௬. †திருக்குறள், ௪0-ம் அதி. கல்வி-௧.

‡இவை, குருபரம்பராப்பிரபாவம் ஆறாயிரப்படியுள், பட்டர்வைபவத்திற் பதினெட்டாம்பத்தியிலுள்ளவை.

§ பெரியதிருமொழி, 8-ம்பத்து, 2-ம் திருமொழி ...

9. திருந்தாய்நீ யார்வத்தைத் தீமை யுடையார்
வருந்திஞ ரென்றே வயப்படுவ துண்டோ
வரிந்தரிகால் பெய்தமையக் கூட்டியக் கண்ணும்
பொருந்தாமண் ணாகா சுவர்.

எ-து, அவர்மே லார்வத்தைவிட்டுத் திருந்தாய் நீ, நெஞ்சமே! நம்மேற் றீயமனதுடையா ரிவர்வருந்திஞரென்று நமக்கு வயமாவ துண்டோ; வரிதாளையரிந்துபெய்து சேரக்கூட்டியவிடத்துஞ் சுவரெடுக் கின்றபொழுதேபொருந்தாதமண் பின்னைப் பொருந்திச் சுவராகாதது போ லவரும் பொருந்தார் எ-று.

(குறிப்பு) தீமையுடையார் எனப் பின்வருதலால் அவர்மேல் எனச் சுட்டு வருவித்துரைக்கப்பட்டது. ஆர்வத்தை-அபிமானத்தை. விட்டு என்னும் எச்சச்சொல் வருவித்துரைக்கப்பட்டது. திருந்தாய்-திருந்துவாயாக. தீமை யுடையார்-தீங்குபுரியுமியல்புடையார். வருந்திஞரென்று என்றது, நம்மேல் ஆர்வமுடையராய் நம்மை வயமாக்கவருந்திஞரென்றுநினைந்து என்றவாறு. வய மாவதுண்டோ என்றது வயமாகார் என்றவாறு. வரிந்தரிகால்பெய்து என்பதனை வரிகால் அரிந்துபெய்து என விகுதிபிரித்துக்கூட்டி, வரிதாளை அரிந்துபெய்து எனப் பொருளுரைக்கப்பட்டது. வரிகால்-கிட்டிக்கொம்பு; அது விட்டிருக்கு மிரண்டினைக் கிட்டுமாறுநெருக்கும் வரிகொம்பு. அரிந்துபெய்து-செதுக்கி வைத்து. சுவரெடுக்கின்றபொழுதேபொருந்தாதமண் - ஒட்டுச்சுவர். சுவரொடு பொருந்தாத ஒட்டுச்சுவர் விரிந்து வேறுபடுவதுகண்டு கிட்டிவைத்துக்கட்டி வலிந்துகூட்டியவிடத்தும் ஒட்டி ஒருசுவராகாதவாறுபோலத் தம்பகுதியொடு பொருந்தாது தம்மைவிட்டுவிலகுமவரை ஆர்வத்தால் வலிந்துகூட்டியவிடத்தும் அவர் ஒட்டி ஒருகிளையாகார் என உவமையொடுபொருத்தி யுரைத்துக்கொள்க. **கிட்டிவச்சுக்கட்டினுலும் விட்டசுவரோட்டாது** என்பது பழமொழி. இது கிராம்யவழக்கு; **ஓட்டுச்சுவரும் சுவரோ ஓர்ப்படிபிள்ளையும் பிள்ளையோ** எனப் பார்ப்பனமகளிர்குழுவுள்ளும் ஒருபழமொழி வழங்குவதுண்டு.

10. பெரியநட் டார்க்கும் பகைவர்க்குஞ் சென்று
திரிவின்றித் தீர்ந்தார்போற் சொல்லி யவரு
ளொருவரோ டொன்றி யொருப்படா தாரே
யிருதலைக் கொள்ளியென் பார்.

எ-து, மிகத் தம்மை நட்பாகச்சேர்ந்து நட்புக்கொண்டார்க்கும் பகைவர்க்குஞ் சென்று, மனத்தா லொருவேறுபாடின்றி மிக நட் பாயினார்போலே இருதிறத்தாரையும்வேறுபடுக்குஞ் சிலசொற்களைச்

சொல்லி மற்றவரு ளொருவரோடுபொருந்தி யொருப்பட்டுறுதியாயின செய்யாதார், இரண்டுதலையானுஞ்சுடுகொள்ளியோடொப்பர் எ-று.

(குறிப்பு) பெரியநட்டார்க்கும் பகைவர்க்குந் திரிவின்றித் தீர்ந்தார்போற் சென்றுசொல்லி எனக் கூட்டுக. திரிவின்றித்தீர்ந்தார்-ஐயமின்றித்தெளியப் பட்டவர். இன்றித்தீர்தல், இன்றியொழிதல் என்பதுபோன்று ஒருசொல்லா யிற்று. தீர்ந்தார்போல் என்றதனால் உண்மையில், தீராதுவைத்து என்பது குறிப்பாம். இக்குறிப்பானே இருதிறத்தாரையும் வேறுபடுக்குஞ் சிலசொற்களை என, சொல்லி என்பதற்கேற்ற செயப்படுபொருள் வருவித்துரைக்கப்பட்டது. இருதலையானுஞ்சுடுகொள்ளியோடொப்பர் என்றது இருதலையானுஞ்சுடுங் கொள்ளி, தன்னுடனியைந்த இரண்டு காய்ந்ததாறுகளை ஏககாலத்தில் வேமாறு சுட்டுத் தானும்விரைவிற்கெடுவதுபோல் இவரும் அவ்விருதிறத்தாரையுங்கெடுத் துத் தாமும் விரைவிற்கெடுவர் என்றவாறு. இருவர் தம்முள் மாறுகொண்ட விடத்து நட்பாயினார்போன்று இருதிறத்துமூடாடிவேறுபடுப்பார்க்கிடங்கொடுக்க லாகாதென அரசநீதியும், நட்டார்மாட்டு ஒருதிறத்தூன்றிநிற்பவனே தூதனுவா னெனக் குறிப்பாற் றூதனிலக்கணமுங் கூறியவாறு. இருதிறத்தாரைவேறு படுக்குமொருவனை **இருதலைக்கொள்ளி** எனவும், **இருதலைமணியன்** எனவும் வழங்குவதுண்டு. இருதலைமணியன் என்பது இரண்டுபுறமும் தலையுடையதா யூர்ந்துசெல்லவல்ல விடப்பாம்பு.

11. மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலு
முப்பொழிதல் செல்லா வொலிகடல்போன்—மிக்க
வினநல நன்குடைய வாயினு மென்று
மனநல மாகாவாங் கீழ்.

எ-து, மிகப்பெருகி யாறுகளின்மிகுநீர் புகப்பாய்ந்தாலும் ஒலி கடல் உவர்ப்புநீங்காதவாறுபோல, மிக்க இனத்தினன்மை மிகவுண்டா யினும் எஞ்ஞான்றும் மனத்தால் நல்லவாகமாட்டா கீழ்மக்கள் எ-று.

(குறிப்பு) ஒழிதல்செல்லா என்றது ஒருசொல்லாய் ஒழியாத என்னும் பொருளுணரநின்றது. உப்பொழிதலில்லா என்பது பிரதிபேதம். யாறுகள், மேல்நிலத்தவாதலாலும், நன்னீர்மையுடைமையாலும் நல்லினத்துக்குவமையா யின. கடல்கள், கீழ்நிலத்தவாதலாலும், நன்னீர்மையின்மையாலும் கீழ்மக்கட் குவமையாயின. குலத்தாலும் நலத்தாலும் கடையாய கீழ்மக்கள் அவரோடு சேர்ந்த இனத்தாலும் திருந்தாராதலால் அவரைத் திருத்தமுயறல் பயனின்று மென்பது கருத்து. இங்கு உவமையால், இனமென்றது தம்மைவிரும்பாதிருக் குங் கீழ்களைத் தாமாகவேசென்றுசேர்ந்த நல்லினமாதலும், "மனந்தூய்மை ..... இனந்தூய்மைதூவாவரும்"* என்பதிற்சொல்லிய இனம் மனந்தூய்மையடைய மவன் றானேவிரும்பிச்சென்றுசேர்ந்த நல்லினமாதலுமாகிய வேறுபாடுடைமை யால் அக்குறளொடு மாறுபடாமையுணர்க. "தெருண்ட மேலவர் சிறியவர்

* திருக்குறள், 46-ம் அதி. சிற்றினஞ்சேராமை-5.

சேரினு மவர்தம், மருண்ட தன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே"* என்பது அதிசயோக்திமடியாகவந்த அதிசங்கையாதலால் அதுவு மிதனொடுமாறுபடா திதனையே வலியுறுத்தியதெனவறிக. அல்லது, அதிசயோக்தியடியாகக் கலைமலைவுகாட்டுங் கவிசாதுரியமாகியகாவியவாக்கியமாகக்கொள்க கொள்ளவே யதிற் பிராமாண்யமின்மையாலும் மாறுபாடின்றெனவுணர்க. ‘ஆகாவாங்கீழ்’ என இழித்தற்கண் அஃறிணையாயிற்று. ஆறெல்லாம்வெள்ளமடுத்துமடுத்தாலும் நீர்நல்லதாமோகடல் என்பது பழமொழி.

12. விழுமிழை நல்லார் வெருள்பிணைபோ னோக்கங்
கெழுமிய நாணை மறைக்குந்—தொழுனையுண்
மாலையு மாலை மயக்குறுத்தா ளஃதன்றோ
சால்பினைச் சால்பறுக்கு மாறு.

எ-து, விழுமிய அணியினையுடையநல்லார் வெருண்டமான்பிணை போன்றநோக்கங்கள், ஆடவர்மாட்டுச்செறிந்தநாணினைக் கெடுக்கும்; யமுனையென்கிற ஆற்றின்கண், யாரையுமயக்கவல்லமாயவனையும் மயக்கத்தின்கண்ணேவீழப் பின்னையென்பாள் தன் அழகினான் மயக்குறுத்தினாள்; மிகுதியை யதனினுமிக்கதொன்று கெடுக்குநெறி யதுவன்றோ எ-று.

(குறிப்பு) நாண்-நிறை. அது, கெழுமியநாணெனச்சிறப்பிக்கப்பட்டமையால் ஆடவர்மாட்டுச்செறிந்தநாண் எனப் பொருளுரைக்கப்பட்டது. ஆடவர்மாட்டுநாண்செறிந்ததென்பதை, ‘கருமத்தா னாணுத னாணுத் திருநுத, னல்லவர் நாணுப் பிற’† என்பதனாலறிக. மால் என்ற விதவாதசொல்லாற்றலானும் பொருளாற்றலானும் யாரையும்மயக்கவல்லமாயவன் எனப் பொருளுரைக்கப்பட்டது. யாரையுமென்றது பின்னைப்பிராட்டியுமகப்பட எல்லாரையுமென்றபடி. மாலை-பின்னைப்பிராட்டி. மயக்குறுத்தலாவது-வியாமோகிப்பித்தல். அதாவது, பின்னைப்பிராட்டி கண்ணபிரானிடத்து உழுவலன்புடையளாதலின் இவளுக்கவனிடத்துள்ள அளவிறந்தபிரேமமானது அவனது அளவிறந்தநிறையைமறைக்க, அவனுக்கு இவளிடத்துள்ள அளவிறந்தபிரேமம், இவளது அளவிறந்தநிறையை மறைக்க இருவரு மொருவரையொருவர் கலந் தின்புற்றார் என்பதாம். இதனை, சிலப்பதிகாரத்து ஆய்ச்சியர்குரவையுள், "வஞ்சஞ் செய்தான் றொழுனைப் புனலு, ணெஞ்சங் கவர்ந்தா ணிறையென் கோயாம், நெஞ்சங் கவர்ந்தா ணிறையும் வளையும், வஞ்சஞ் செய்தான் வடிவென் கோயாம்" எனவும், "தையல் கலையும் வளையு மிழந்தே, கையி லொளித்தாண் முகமென் கோயாம், கையி லொளித்தாண் முகங்கண் டழுங்கி, மைய லுழந்தான் வடிவென் கோயாம்" எனவும்,

* கம்பராமாயணம், வரைக்காட்சிப்படலம், செய்யுள்-8.

† திருக்குறள் ௧௦௨-ஆம் அதி. நாணுடைமை-௧.

"வைய மளந்தான்றன் மார்பிற் றிருநோக்காப், பெய்வளைக் கையாணம் பின்னைதா ளுமென்றே, ஐயென்று ளாயர் மகள்" எனவும் இளங்கோவடிகள்காட்டியவாற் றானுமுணர்க. "தொழுனையுண்,மாலையுமாலைமயக்குறுத்தாள்"என்றது எடுத்துக் கொண்டபொருளுக்கேற்றதோ ரிதிகாசங்கூறியவாறு. அன்றேயென்றது ஆச் சரியக்குறிப்பு. இனி, இப்படியும் அந்யோந்யாச்ரயமா யொருஸம்பவமுண்டோ வென்னும் ஆசங்கையை, நியாயஸித்தமான திருஷ்டாந்தத்தாற் பரிஹரிக்கிறார், சால்பினையென்றுதொடங்கி. சால்பு-வியாபகத்வவாசகம்; அது இங்கு வியாபகத் துக்கு ஆகுபெயராயிற்று. சால்பினைச்சால்பறுக்குமாறென்றது எல்லாவற்றையுந் தன்னுளடக்கித் தானொன்றுளடங்காது சர்வவியாபகமாயிருப்பதொன்றைப் பிறி தொருசர்வவியாபகம் வியாபித்தாற்போலும், என்றவாறு. அதாவது சர்வவியாபக மான ஆகாசத்தைப் பிறிதொருசர்வவியாபகமான இடம் வியாபிக்குமதுபோலு மென்பதாம். இப்பாட்டால், இரண்டுவியாபகப்பொருள் ஒன்றனையொன்று வியா பிக்கவே அவற்றுள் இது சிறிது, இது பெரிது என்று சொல்லவொண்ணுதபடி இரண்டும் அளவிறந்துசெல்வதுபோல உழுவலன்புடைய, காதலனுங் காதலியுங் கூடுங்கூட்டத்து அவ்விருவர்க்குமுளதாம்பிரேமமு மளவிறந்துசெல்லுமெனக் காமபுருஷார்த்தமாகிய இன்பத்தின்சிறப்புக் கூறப்பட்டது. அறுத்தல், வரைதல், அவச்சேதம் என்னும்சொற்களை வியாபித்தற்பொருளில்வழங்குதல் நியாய நூலார்மரபு. **சால்பினைச்சால்பறுக்கும்** என்னு மிப்பழமொழி நியாயநூல் வழக்குப்பற்றிவந்ததெனக்கொள்க. இப்பாட்டினைப் புணர்ச்சிவிழையாமையின் பாற்படுத்தார் புறத்திரட்டுடையார். இது புணர்ச்சிவிழையாமையைத் துணி வுறுத்தாமையாலும், மேலோர்கொள்கையொடுமாறுபடுதலாலும், உவமையொடு பொருந்தாமையாலும் அது பொருளன்றெனவுணர்க.

13. பாப்புக் கொடியாற்குப் பான்மேனி யான்போலத்
தாக்கி யமருட் டலைப்பெய்யார்—போக்கி
வழியராய் நட்டார்க்கு மாதவஞ்செய் வாரே
கழிவிழாத் தோளேற்று வார்.

எ-து, பாம்புக்கொடியையுடைய குருகுலவேந்தற்குப் போரின் கண் உதவிசெய்தற்குத் தொடர்புடையனாகிய பால்வண்ணன்போல, நட்டார்தாக்கியபோரின்கட் டலைப்பெய்யாதே தம்முடையநட்டார் பட்டதற்பின் அவர்க்கு நன்றாகவென்று பெருந்தவஞ்செய்வார், விழாக் கழிந்தவூரிற் புதல்வரை விழாக்காண்டற்பொருட்டுத் தோண்மே லேற்றுவாரோடொப்பர் எ-று.

(குறிப்பு) பாப்புக்கொடியான்-அரவக்கொடியுடையதுர்யோதனன். பான் மேனியான் - பால்போலவெண்ணிறமுள்ளதிருமேனியையுடைய பெலராமன். தாக்கிய என்பது தாக்கி எனக் கடைக்குறையாயிற்று. தலைப்பெய்யார்-தலைப் பெய்யாது என முற்றெச்சப்பொருளுணர்த்திற்று. தலைப்பெய்தல்-புகுதல். வழியராய்நட்டார்க்குத் தாக்கியமருட்டலைப்பெய்யாதுபோக்கி மாதவஞ்செய்வார் எனக்கூட்டி, தாம் தொடர்புடையராயிருந்துவைத்துத் தம்மைநட்டார்க்குப்

போர்நேர்ந்துழி அப்போரிற்புகுந்துதாக்கி அந்நட்டார்க்குஉதவிசெய்யாது தீர்த்த யாத்திரைமுதலிய விரதமேற்கொண்டுசெல்பவர் எனப் பொருளுரைத்துக் கொள்க. "கழிவிழாத்தோளேற்றுவார்" என்றசொலவடை சமயத்திலுதவாதவர் என்னும் குறிப்புடையது. கழிவிழாத்தேரேற்றுவார் என்பது பிரதிபேதம். இது **திருநாட்கழித்துத்தேரிழுக்கவந்தார்** என்னும் சொலவடையாம். வேண்டுங் காலத்துதவாதவர்நட்பாற் பயனில்லையென்பது கருத்து.

14. தாநட் டொழுகுதற்குத் தக்கா ரெனவேண்டா
யார்நட்ப தாயினு நட்புக் கொளல்வேண்டுங்
கானட்டு நாறுங் கதுப்பினுய் தீற்றுதோ
நாய்நட்டா னல்ல முயல்.

எ-து, தாம் பிறரொடுநட்புக்கொண்டொழுகுதற்குத் தகுவர், தகாரென்று ஆராயவேண்டுவதில்லை; யாவர்நட்பேயாயினும் நட்பைக் கொளல்வேண்டும்; எல்லாப்பூக்களையுமுடையகாட்டினைவென்றுநாறு கின்ற மயிரினையுடையாய்! தம்மைத் தீற்றுதோ! நாயொடுநட்டால் அந்நாய் நல்லமுயலினை எ-று.

(குறிப்பு) தாம் நட்டொழுகுதற்கு என்றது தம் காரியமாகப் பிறரொடு நட்புக்கொண்டு ஒழுகுதற்கண் என்றவாறு. தக்காரெனவேண்டா என்றது அப்பிறர் தக்காராயிருக்கவேண்டுமென்னும் நியமமில்லை என்றவாறு. யார்நட்பே யாயினும் என்றது தக்கார்நட்பேயாயினுமாக, தகாதார்நட்பேயாயினுமாக என்ற வாறு. பின் நட்பு என்றது அது என்றவாறு. கான்-காடு. அடல்-வெல்லுதல். கதுப்பு-கூந்தல். கானட்டுநாறுங்கதுப்பினுய் என்றது நறுநாற்றப்பூக்கண்மலிந்த காட்டிலும்மிக்குப் பரிமளிக்குங்கூந்தலையுடையா யென்றவாறு. தீற்றல்-ஊட்டல். முயல்-முயற்கறி. **நாயோடுசேர்ந்தாலும்நல்லமுயல்கிடைக்கும்** என்பது பழமொழி. தமக்கு உதவிசெய்தற்குரியார் இழிதகையராயினும் அவர் நட்புக் கொள்ளற்பாலதென்பது கருத்து. பிறர் ஸ்வயகாரியமாக நட்புக்கொள்ள வரின் அவரைத் தக்கார், தகவிலரென்பதை யாராய்ந்து, தக்காராயின் நட்புக் கொள்ளவும், தகாதாராயின் நள்ளாதொழியவும்வேண்டுமென்பது குறிப்பு.

15. அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுந் தீங்குறுதல் காண்டுமாற்—பொங்கி
யறைப்பா யருவி யணிமலை நாட
வுறற்பால யார்க்கு முறும்.

எ-து, அங்கண்விசும்பினின்று மிக்கநிலாவைப்பரப்பும் மதியமும் பாம்பினாற்றீங்குறுதல்காணாநின்றேமாதலால்,கற்பாறையின்கண்மிக்கு வந்துபாயாநின்றவருவியையுடைய மலைநாடனே! தமக்குறக்கடவதுன் பங்கள் யாவர்க்கும்வந்துறும் எ-று.

(குறிப்பு) அங்கண்விசும்பு என்றது, திங்களைக் கோள்பற்றுங்காலத்தில், தப்பியோடிப்பிழைக்கத் தட்டுத்தடையில்லாத வெட்டவெளியானஇடத்தின் அளவிறந்தசௌகரியாதிசயங்கூறியவாறு. அகனிலாப்பாரிக்குமென்றது இருள்

வடிவான ராகுகேதுக்களென்னும் சாயாக்கிரகங்கள் தன்னிடமணுகுவதற்கே யோக்கியமில்லாத தனது ஸ்வபாவசக்தியின்வலிமைகூறியவாறு. திங்களும் என்றது தன்னைப்பற்றவரும்சாயாக்கிரகங்கள் பதினெட்டாண்டுசென்றுகடக்கு மொருராசிமண்டலத்தைப் பரிதி ஓராண்டளவிற்கடப்பதாயிருக்கவும், தான் ஒரு மாதத்துக்குள்ளேகடந்துசெல்லும் மிக்கவேகமாகிய தப்புதற்குரிய சாதனாதி சயங்கூறியவாறு. இக்கருத்துப்பற்றியே அங்கண்விசும்பிலவிரொளிபாரிக்குஞ் செங்கதிருந்தீங்குறுதல்காண்டும் என்னாது " திங்களுந்தீங்குறுதல்காண்டும் " எனச் சிறப்பும்மையாற் செங்கதிருமகப்படக்கூறினாரெனவுணர்க. இடம்பொரு ளாற்றலான் மாற்றுமியல்புடையார் எனினும், எய்தியநியதிதவறாதாகையால் ஊழால்வருங்கேட்டிற்கு வருந்தலாகாதென்பது கருத்து. வருவதுவந்தேதீரும் என்னும் உலகவழக்கான பழமொழிப்பொருளே இங்குப் பொருளாகக்கொள்ளப் பட்டதுபோலும். 'வருகுவதுதானேவரும்' என்னு மபியுக்தர்வாக்கும், இக்கருத் துடையதாயிருப்பதுகாண்க. அம்புலியையு மரவுவிழுங்கும் என்பது மொரு பழமொழியாம்.

16. நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக்
கண்கண்ட குற்ற முளவெனினுங் காய்ந்திலார்
பண்கொண்ட தீஞ்சொற் பணைத்தோளா யாருளரோ
தங்கன்று சாக்கறப் பார்.

எ-து, நண்புசெய்து தம்மாலே நாட்டப்பட்டார்களைத் தங் கண் காண அவர்கள்செய்தகுற்றமுளவாயினும் வெகுளார்; பண்கொண்ட தீஞ்சொற்பணைத்தோளாய்! தங்கன்றிற்குப் பால்கொடாதே யதுசாம் வகை பசுவினைக்கறப்பார் யாவருளர் எ-று.

(குறிப்பு) காய்ந்திலார் என்னும் பயனிலைக்கேற்ப மேலோர் என்னும் எழுவாய் வருவித்துரைத்துக்கொள்க. இதனால் நூல்நெறிவழக்கினும் ஆன்றோ ரது ஒழுக்கநெறிவழக்குச் சிறந்ததென்பது குறிக்கப்பட்டது. காய்ந்தியார் என் பது பிரதிபேதம். அதற்குக் காயாதுதவுவரென்பது கருத்தாகக்கொள்க. பணை- மூங்கில். சாவக்கறப்பார் என்பது சாக்கறப்பார் என விகாரமாயிற்று. "களையு நர் கைகொல்லும்"* என்புழிப்போல ஈங்குச் சாதல் வருந்தலுணர்த்திநின்றது. **கன்றுசாகப் பால்கறப்பாரா** என்பது உலகவழக்கான பழமொழி. தம்மால் வளர்க்கப்படும்கன்று கட்டியகயிறறுத்துச்சென்று பாலுண்ணக்கண்டாராயினும் பின்னரும் அதற்குரியபால்விடாது அது வருந்தும்வகை பாலை முற்றக்கறப்பா ரில்லை; அதுபோல நண்பொன்றிப் போற்றப்பட்டார் உரிமையால் நியதி கடந்து தமக்கு வேண்டியதொருபொருளைத் தாமே கேளாதுகொள்ளினும் அது

*திருக்குறள் அஅ-ம் அதி. பகைத்திறந்தெரிதல்—க.

காரணமாக அவர்க் கொன்றும் உதவா தொழிக்கற்பாலரல்லர் எனத் திட்டாந்தத்தொடு பொருத்தியுரைத்துக்கொள்க இப்பாட்டால் நட்பிற் பிழை பொறுக்கவேண்டுமென்பது கூறப்பட்டது. "விஷவ்ருக்ஷோऽபி ஸம்வர்த்ய ஸ்வயம் சேத்துமஸாம்ப்ரதம்" என்னும் வடமொழிவாக்கியமும், "தாம் வளர்த்ததோர், நச்சுமாமரமாயினுங்கொலார்"* என்னுந் திருவாசகமும் இக்கருத்துடையன.

17\. உள்ள தொருவ ரொருவர்கை வைத்தக்காற்
கொள்ளும் பொழுதே கொடுக்கதாங்—கொள்ளார்
நிலைப்பொரு ளென்றதனை நீட்டித்தல் வேண்டா
புலைப்பொரு டங்கா வெளி.

எ-து, தமக்குள்ளதொருபொருளை யொருவர் தங் கையின்கண் வைத்தக்கால் அப்பொருளை வைத்தவர்கள்வேண்டியபோதே வைக்கப்பட்டார் தாங் கொள்ளாதே கொடுக்க; தமக்கு நிலைமையுடையபொருளென்றுகருதி, அவர்க்குக்கொடாதே நீட்டித்தல்வேண்டா; புலையர் மாட்டுள்ளபொருள் அடங்காவாய் வெளியாம்; ஆதலான் அடைக்கலப் பொருளை மறைக்கவியலா எ-று.

(குறிப்பு) புலைப்பொருள்-புலையரதுபுலால். அவர் அதை மறையச்செயினும் அது மறையாது நாற்றத்தால் வெளிப்படும்; அதுபோல அடைக்கலப் பொருளைப் பிறரறியாதடக்கினும் அஃதடங்காதுவெளிப்பட்டுப் பழிப்புக்கிடமாமெனப் பொருளொடுபொருத்தி யுரைத்துக்கொள்க. இதனை, "மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம், பறையறைந்தாங் கோடிப் பறக்கும்-கழிமுடைப், புன்புலானாற்றம் புறம்பொதிந்து மூடினுஞ், சென் றுதைக்குஞ் சேயார் முகத்து"†என்றார் பிறரும். மறைந்துசெய்பவன் றவறு வெளியாகுமென்று வழங்கவேண்டுமிடத்து, நாற்றம்வெளியாகுமென்பது சாதாரணவழக்கு. அதனையே "புலைப்பொருடங்கா வெளி" என இடக்கரடக்காய்க்கூறினரெனக்கொள்க. இதனை இன்னும் அசப்பியபாஷணமாகப் பாமரர்வழங்குப் பழமொழியு மொன்றுண்டு. இன்னோரன்னபழமொழிகளு மிடக்கரடக்கி யிந்நூலுட்கூறப்படுமென்பதனைப் பின் "இழித்தக்ககாணிற்கனா"‡ என்பதனாலுமறிக.

---

*திருவாசகம், ஆநந்தாதீதம் செய்—௬.

†நீதிநெறிவிளக்கம், செய்-௧௫.

‡ இந்நூலின் 182-ஆம் செய்யுள்.

18\. தக்காரோ டொன்றித் தமரா யொழுகினூர்
மிக்காரா லென்று சிறியாரைத் தாந்தேறுர்
கொக்கார் வளவய லூர தினலாமோ
வக்காரஞ் சேர்ந்த மணல்.

எ-து, தக்காரோடுபொருந்தி மற் றவர்க் குறவாயொழுகினூராதலா லவர்மிக்ககுணத்தையுடையா ரிவரென்றுகருதிச் சிறியகுணத்தை யுடையாரைத் தாந் தேறலாகாது; மாஞ்சோலையானிறையப்பட்ட வளவயலூரனே! அக்காரமாகியபாகினேடுசேர்ந்தமணலைத் தின்ன லாமோ! ஆதலான் எ-று.

(குறிப்பு) தக்கார்-வினையாட்சிக்குரியரெனத்தெளியத்தக்க குடிப்பிறப்பு, கல்வி, அறிவு, அன்பு முதலியன வுடையார். சிறியார்-சிற்றினம். இது, "நல்லதனலனும் தீயதன்றீமையும் இல்லெனபோரும், விடரும், தூர்த்தரும், நடரும், உள்ளிட்டகுழு"*. தேறுர் என்பதற்குக் கருத்துநோக்கித் தேறலாகாதெனப் பொருளுரைக்கப்பட்டது. கொக்கு-மாமரம். மணல் சர்க்கரைப்பாகினைச்சார்ந்து கிடந்தாலும், அதற்குத் தன்னியல்பே உளதாவதன்றிச் சர்க்கரைக்குரிய இனிமையும் மென்மையும் நன்மையும் எய்தாமையால் அது தின்னலாகாதவாறு போல, சிறியார் தக்காரினத்தைச்சார்ந்தாராயினும் அவர்க்குத் தம்மியல்பே உளதாவதன்றித் தக்கார்க்குரிய இனிமையுமென்மையு நன்மையுமெய்தாமையா லவரை வினையாட்சியிற் றெளியலாகாதென விரித்துரைத்துக்கொள்க. "தாநட்டொழுகுதற்குத்தக்காரெனவேண்டா"† என்றதனுற் சிறியார் தக்காராற் கொள்ளப்படினு மவர் சிறுமையினீங்கி அநுபாவ்யாராகத் தெளியப்படுதற்குத் தகுதியுடையராகாரென்பதும், அச் சிறியாரினீங்கிய தக்காரே அநுபாவ்யராவரென்பதும் கருத்தாகக்கொள்க. "பானகத்துரும்பு" என வழங்கும் சொலவடையின் கருத்தும் இது. "மிக்குப்பெருகி" என்னும் பதினேராம் பாட்டுக்குக் கீழ்மக்களைத் திருத்தலாகாதென்பது கருத்தாகலானும், இப்பாட்டிற்குச் சிறியாரைக் கைக்கொள்ளலாகாது என்பது கருத்தாகலானும் இது கூறியதுகூறலாகாதென வுணர்க.

19\. கறுத்தாற்றித் தம்மைக் கடியசெய் தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழா—லொறுத்தாற்றின்
வானேங்கு மால்வரை வெற்ப பயமின்றே
தானேன் றிடவருஞ் சால்பு.

---

*திருக்குறள் 46-ம் அதிகாரவிவரணம்.
† இந்நூலின் பதினுன்காஞ்செய்யுள்.

எ-து, கோபத்தின்கண்ணேமிக்குத் தமக்குக்கொடியவாயிருப்பன செய்தாரையும் பொறுத்துச்செலுத்துவது புகழாவது; ஒறுப்பின் கண்ணே மிக்கொழுகின், வானோங்கு மால்வரைவெற்பனே! அதனான் ஒருபயனில்லை; தான் பிறரைப்பொறுக்கும் பொறையான்வருவது சால்பாவது எ-று.

(குறிப்பு) தம்மை உருபுமயக்கம். செய்தாரையும் என்னும் சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. பொறுத்து - அவர்செய்யுங் கடியனவற்றைச்சகித்து. ஆற்றி-அவர்க்குள்ள மனவெப்பத்தை ஆற்றி. சேறல்-அவரை நல்வழியிற் செலுத்துதல்; ஈண்டுச் சேறல் பிறவினைப்பொருளுணர்த்திற்று. சேறல்புகழெனக் காரணம் காரியமாயுபசரிக்கப்பட்டது. பொறுத்தாற்றிச்சேறல் என்பது பொறுத்தாற்றிக்கொள்ளல் எனவும், மால்வரைவெற்பவென்பது மால்வரைநாட எனவும் பிரதிபேதங்களிலுள்ளன. வரைவெற்பவென்பதற்கு மூங்கில்களையுடையமலைநாடனே எனப் பொருளுரைத்துக்கொள்க. ஒறுத்தல்-தண்டித்தல், ஆற்றல்-மிகுதல். ஒறுத்தாற்றலால் உட்பகைகொள்வராதலாலும், புகழும் சால்பு மெய்தாமையாலும் அதனாற் பயனில்லை என்றார். நோன்றல்-பொறுத்தல்; இதனை, "உற்றநோய்நோன்றல்"* என்பதனா லுணர்க. தானேகெடவருஞ் சால்பெனப் பிரதிபேதமிருப்பினும், அது உரையொடுபொருந்தாமையாலும் வேறு பொருட்பொருத்த மின்மையாலும் விலக்கத்தக்கது. சால்பு-பெருமை. **பொறுத்தவர் பெரியவர்** என்பது உலகவழக்காய்வழங்கும் பழமொழி. இப் பாட்டால், தமக்குத் தீங்கிழைப்பாரை யொறுத்தலினும் பொறுத்தலே சிறந்ததென்பது கூறப்பட்டது. இது "ஒறுத்தாற்றின்" என்னுங்குறிப்பால் ஒறுத்தற்குரியராகிய எளியார் பிழைத்தன பொறுத்தலை அறநெறிநோக்கி விதித்தலால், ஒத்தார் மிக்காராய பகைவர்பிழைத்தனபற்றி, "பொறையெனப் படுவ தாடவர் தமக்குப் பூணெனப் புகலினும் பொருந்தார், முறையறப் புரிந்தா லக்கணத் தவர்த முடித்தலை துணிப்பதே முழுப்பூண்"† என்னும் அரசநீதியொடு மாறுபடாதெனவுணர்க.

20. காவலனை யாக வழிபட்டார் மற்றவ
னேவல் வினைசெய் திருந்தார்க் குதவடுத்த
லாவணைய நின்றதன் கன்று முலையிருப்பத்
தாயணா ரூன்சுவைத் தற்று.

---

*திருக்குறள் ௨௭-வது அதி. தவம். ௧.

†வில்லிபாரதம் கீசகன்வதைச்சருக்கம். செய்—௬௧.

எ-து, அரசனைத் தமக்குநட்பாம்வகை வழிபட்டொழுகினுர், மற்றவ்வரசனுலேவைப்பட்டவினைசெய்திருந்தபிறர்க்குஉதவியையடுத்துமற்றவராற் காரியங்கோடல், தன்னையணையநின்ற ஆவினை யதன்கன்று முலையைத்தவிரத் தாயணலேச்சுவைத்தாற்போல்வதொன்று எ-று.

(குறிப்பு) உதவடுத்தல்-உதவுதலைப்பின்பற்றிக் காரியங்கோடல்; அதாவது ஏவல்வினைசெய்திருந்தார்க்கு ஒன்றுதவுதலைச்செய்து அதற்குப்பிரதியாகத் தாங்கருதியகாரியங்கொள்ளமுயறல் என்றபடி. ஆவணையநின்றதன்கன்று என்றதற்கு, தன்னையணையநின்றஆவினை யதன்கன்று எனப் போந்தபொருளுரைக்கப்பட்டது. அணல்-பசுவின்முன்னங்கால்களினிடையே புடைத்திருப்பதோர் உறுப்புவிசேடம். அது, தாடியினடியாம். ஒரு பசுக்கன்றுனது, தன்னிடத்தன்புள்ள தாயின்மடியிற் பால்சுரந்திருக்கும்போதே யதன்வழி தனக்குவேண்டும் பாலைநுகராது, தாயின் தாடியைச்சுவைப்பதாற் பயனுறுதவாறுபோல, ஒருவன் தனக்கு அரசன் அன்புடையனுயும், வேண்டிற்றுதவும் விழைவுடையனுயும் இருக்கும்போதே அவனிடம் கொள்ளுதற்குரிய காரியங்கொள்ளாது அவனே வியவேலைகளைச்செய்யுமவருக்கு ஒன்றுதவிக் காரியங்கொள்ளுமுயற்சி பயனின்றும் என உவமையொடுபொருத்தி யுரைத்துக்கொள்க. முயற்சி பயனிலதாதற்குக் காரணம், அரசனிடத் ததிபரிசயமுடையராயிருந்தும், இக்காரியம் அவனிடத் தெளிதிற்கொள்ளாமையால் அவனுக்கு இதுசெய்ய விருப்பமில்லையோ என்ற ஐயுறவாலும், இவர்க்கு இதுசெய்யின் இவ்வாறே பிறர்க்குஞ்செய்யுமியல்பினனென இவர் தெரிந்துவைத்துப் பின்பொருகாலத்துஅரசனுக்கு அறிவிக்கக்கூடுமென்னு மச்சத்தாலும் அவ ரதுசெய்யாமையென்க. அரசனை வழிபட்டார் அவனுலடைதற்குரியபயனை எய்தும்வாயிலறிந்துபெறுதல் எளிதென்பது இதனுற் கூறப்பட்டது. **தாய்முலைசுவைக்கப்பால்வருமோ? தாடியைச்சுவைக்கப்பால்வருமோ?** என்பது பழமொழி.

21. உரைமுடிவு காணு னிளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்.

எ-து, தம்முண் மறுதலையாயினுரிருவர் தமக்குமுறைமைசெய்ய வேண்டிவந்து சிலசொன்னு லச்சொல்லின்முடிவுகண்டே யாராய்ந்து முறைசெய்ய வறிவுநிரம்பாத விளமைப்பருவத்தானென் றிகழ்ந்த நரைமுதுமக்களுவக்கும்வகை நரைமுடித்துவந்து முறைவேண்டிவந்த விருதிறத்தாருஞ்சொல்லியசொற்கொண்டே யாராய்ந்தறிந்து முறைசெய்தான், கரிகாற்பெருவளத்தானென்னுஞ்சோழன்; ஆதலாற் றத்தங்குலத்துக்குத்தக்கவிச்சைகள் கற்பதற்குமுன்னே செம்பாகமுளவாம் எ-று.

(குறிப்பு) 'தம்முண்மறுதலையாயினாரிருவர் தமக்குமுறைமைசெய்யவேண்டி வந்து சிலசொன்னால்' என்பதும், 'முறைவேண்டிவந்த இருதிறத்தாருஞ்சொல் லிய' என்பதும் இசையெச்சம். காணு என்றதனால், கண்டு முறைசெய்வதற் கேற்ற அறிவுநிரம்பாமையாகிய காரணம் உபசரிக்கப்பட்டது. 'ஆராய்ந்தறிந்து' என்றது முறைசெய்தற்குரிய சாதனம்விரித்துரைத்தவாறு. **குலவிச்சை கல் லாமற்பாகம்படுமென்றது** பழமொழி. இது 'குலவித்தை கல்லாமற்பாதிவரும்' எனவும், "குலவித்தை கல்லாமலேவரும்" எனவும் வழங்கப்படுகிறது. இப் பழ மொழிப்பொருளே இப்பாட்டினுள் எடுத்துக்கொண்டபொருளாக நாட்டப்பட் டமையால் "உரைமுடிவு.........சோழன்" என்றது அப்பொருளைநிரூபித்தற்கு ஒரைதிகங்கூறியவாறு. இவ் வைதிகம், மணிமேகலையுள்ளும் "இளமைநாணி முதுமையெய்தி-உரைமுடிவுகாட்டியவுரவோன்"* எனக் குறிக்கப்பட்டுள்ளது. அதாவது:—முன்பொருகாலத்துச் சோழநாட்டி லரசுரிமைக்குரியாரில்லையாக, அதற்குரியானைத்தெரிந்தெடுக்குமாறு அந்நாட்டார் பட்டத்துயானையின்கையிற் பூமாலைகொடுத்துவிடுத்தவிடத்து, அது கருவூர்சென்று, அங்குக் கடிதிளையனாகி விளையாடிக்கொண்டிருந்த கரிகால்வளவன்கழுத்திலே அம் மலர்மாலைசாத்த, அது கொண்டு, அவனே யவ் வரசுரிமையுடையானென முடிசூட்டப்பெற்று, இளைய னாயிருந்து முறைசெய்துவருங்கால், முறைசெய்வதற்கேற்ற அறிவுநிரம்பாத இளையோனாதலால் இவன்செய்யும் உரைமுடிவு நெறிப்படுமா றெங்ஙனம் என முறைவேண்டிநிற்கும் முதியோ ரையுறுமாற்றையறிந்து, அவ ரங்ஙன மையுறா வண்ணம், பின்பு பிறிதொருமுதியோரைவைத்து முறைசெய்வான்போன்று, நரைமுடிதரித்து முதியோர்வேடம்பூண்டு தானேயிருந்து முறைசெய்துவந்தான் என்பதாம். இச்சரித்திரத்தைப் பின்னர்க் "கழுமலத்தியாத்தகளிறு"† என்னும் பாட்டுரைகூட்டி யுணர்க. இதனால், குலவித்தை இயல்பானேவருமாதலால் ஒருவனுக்குப் பிறதொழிற்பயிற்சி சோர்வுபடுவதுபோலக் குலத்தொழிற்பயிற்சி சோர்வுபடாதென அதன்சிறப்புக்கூறப்பட்டது. குலத்தொழிலைக் கைவிடலாகா தென்பது கருத்து. [இக்கருத்துப்பற்றியே முன்னோராற் பலவகைத்தொழில்க ளும் இந்நாட்டிற் குலாசாரமாக நியமிக்கப்பட்டன.]

22. உரைத்தாரை மீதூரா மீக்கூற்றம் பல்லி
நெரித்த சினைபோலு நீளிரும் புன்னைப்
பொரிப்பூ விதழுறைக்கும் பொங்குநீர்ச் சேர்ப்ப
நரிக்கூஉக் கடற்கெய்தா வாறு.

எ-து, தம்மே லடர்த்துச்சொல்லப்பட்டாரைச் செயலாலடர்க்க மாட்டாது வாயாலடர்த்துச்சொல்லுஞ் சொலவு, பல்லியினுடைய

*காதை-4 அடி-107-108.

† இந்நூலின்-62-ஆம் செய்யுள்.

முட்டையைநெரித்தாற்போலமலர்ந்த நீளிரும்புன்னையினுடைய பொரி நிறம்போன்ற பூக்களினுடையவிதழ்கள்பெய்யாநின்ற பொங்குநீர்ச் சேர்ப்பனே! நரியின்கூப்பீடு கடலிரைசையைத் தாழ்படுக்கமாட்டாத வாறுபோலும் எ-று.

(குறிப்பு) 'உரைத்தாரை'யென்பதற்கு, பின்வரு 'மீதூராமீக்கூற்றம்' என்னுங்குறிப்பால், 'தம்மே லடர்த்துச்சொல்லப்பட்டாரை' எனப் பொருளுரைக்கப் பட்டது. தம்மே லடர்த்துச்சொல்லப்பட்டாரை யென்றது, தம்மை யடர்த்துப் பேசி வாய்க்கலகம்விளைப்பாரை யென்றபடி. சொல்லப்படுதல் ஈண்டுச் செய்வினையளவாய்நின்றது. அடர்த்தல்-அடக்கி மேற்சேறல். மீதூர்தல் என்பதனுள் ஊர்தல் செயலாதலால் அது செயலாலடர்த்தலாயிற்று. அது இங்கு ஊர்தல் என்னுங் குறிப்பான் மெல்லெனமேற்சேறலாகிய நெறிப்பாடுடைய முறை செயலெனஅறிக. இதனால் எதிர்த்துத்தாக்குஞ் செயலாலடர்த்தல் விலக்கப் பட்டது. மீதூராமீக்கூற்றம்-பெயரெச்சத்தொடர். அதற்கு, 'செயலாலடர்க்க மாட்டாது வாயாலடர்த்துச்சொல்லுஞ்சொலவு' எனத் தெளிவுபற்றி வினையெச்சவாய்பாட்டாற் போந்தபொரு ளுரைக்கப்பட்டது. அல்லது ஊராதென்னும் வினையெச்சத்திறுதி விகாரத்தாற்றொக்கதெனக் கொள்க. நெரித்த என்பது உருபுகொள்ளும்பெயரிடைவந்த செயப்பாட்டுவினைப்பெயரெச்சம், செய்ததுபோற்கூறப்பட்டது. உறைத்தல்-துளித்தல்; அது பெயலொப்புமையால் உதிர்தலுணரநின்றது. சேர்ப்பன்-கடற்கரையுடையான். கூ-முதனிலைத்தொழிற்பெயர். கடல் என்பதற்குப் பொருளொடுபொருந்தக் கடலோசையெனப் பொருளுரைத்திருப்பது உபசாரவழக்கு. எய்தாவாறு இதில் எய்தாமை-பொருந்தாமை; அது ஒவ்வாமைக்குறிப்பானமையால், 'தாழ்படுக்க மாட்டாதவாறுபோலும்' என உவமவுருபுவிரித்துப் பொருளுரைக்கப்பட்டது. தாழ்படுத்தல்-தாழச்செய்தல்; அடக்குதலென்றபடி. நரிக்கூப்பீடு கடலொலியைத் தாழ்படுக்கமாட்டாதவாறுபோலச் சொல்லாலடர்த்துவருவா ராரவாரத்தை எதிர்ப்பாரது சொல்லாரவாரம் தாழ்படுக்கமாட்டாதென்பது உவமையாற்போந்த பொருளாம். ஆகவே, சொல்லாலடர்ப்பாரை யடர்க்கப்படுவார் தாமும் அவ்வாறடர்க்காது ஒறுக்குமுறையானே யடக்குகவென்பது கருத்தாகக்கொள்க. **நரிக்கூக்கற்கடன்முற்றும்?** என்பது பழமொழி. இங்கு முற்றும்? என்றது காகுவாதலால் முற்றுதென்பதே பொருளாம். இது, கடற்கரைக்காட்டிலுள்ள நரிகள் கரையருகுவரும் நண்டுகளைத்தின்ன, அதுகண்டு கடல் தம்மையோட்டக் கருதி ஆரவாரித்துவருகின்றதென்றுநினைந்து,அக்கடலையோட்டக்கருதியவைதிரண்டு கூவிளி யெடுக்கின்றனபோலும் என நரிகளிரவி லூளையிடுதலைவருணிக்கும் கற்பனையடியாகவந்தநாட்டுவழக்கு. நரிக்கூவிளிக்கடங்காதகடல் இராமபிரானுக்குக் கடங்கியவாறுபோல, மீக்கூற்றுக்கடங்காது ஆரவாரித்துக் கலாம்விளைப்பார் அரச

ஞானைக்கு அடங்குவார் என்பது குறிப்பு. இராமபிரானாணையாற் கடலடங்கிய தென்பதனை "வென்வேற் கவுரியர் தொன்முது கோடி-முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை-வெல்போ ரிராம னருமறைக் கவித்த-பல்வீ ழாலம் போல-வொலியவிந் தன்றிவ் வழுங்க லூரே* என்னும் அகப்பாட்டடிகளா னறிக.

23. அருமை யுடைய பொருளுடையார் தங்கட்
கரும முடையாரை நாடா—ரெருமைமே
னாரை துயில்வதியு மூரா குளந்தொட்டுத்
தேரை வழிச்சென்றா ரில்.

எ-து, பெறுதற்கரியபொருள் யாதானுமொன்றனையுடையார், தம்மாட்டுக்கொள்ளுங்கருமமுடையாரை யாராயவேண்டுவதில்லை; எருமைமே னாரைதுயில்வதியுமூரனே! குளத்தைத்தோண்டி அதன்க ணுறைவதற்குத் தேரையுள்ளவிடந்தேடிச்செல்வா ரில்லை எ-று.

(குறிப்பு) 'தங்கட்கருமமுடையாரை' என்னுங் குறிப்பால் இங்குப் பொருள் என்றது பொருள்வருவாய்க்கிடனான தொழிற்றுறையையென வுணர்க. அத் துறைவகை பலவாதலால் அவற்றுட் டமக்கேற்றதொன்றனை என்பார், யாதானு மொன்றனை யென்றார். அவை, பொன்மணிமுதலியபொருள்கொளுந்துறைக ளும், பொறிபலசமைக்குஞ் சம்மியத்துறைகளும், இயற்கைப்பொருளாய்ந்தெடுக் குந் துறைகளும், செயற்கைப்பொருள்பலசெய்யுந்துறைகளும், மரக்கலமுதலிய வியக்குறுதுறைகளும் பிறவுமாம். அத்துறைகட்கருமையாவது செய்யக்கடவ வினைகளை இடம்,பொருள்,கருவிமுதலியவற்றினமைதியால் எளிதின்முடிக்குமா றமைத்தல். 'தம்மாட்டுக்கொள்ளுங் கருமமுடையாரை யாராயவேண்டுவதில்லை' என்றது அங்ஙனம் செவ்விதினமைக்கப்பெற்ற தொழிற்றுறைக்குரிய வினைகளை நடாத்தற்குரியார் அத் தொழிற்றுறைமுதல்வனால் ஆராய்ந்துதேடவேண்டாது அவர்தாமே தேடிவிரும்பிவருவர் என்றவாறு. 'எருமைமே னாரைதுயில்வதியு' மென்றது நீர்ப்பரப்பில்லாத வெற்றிடமில்லாமையும், அந்நீர்ப்பரப்பின்கண், திடர்கள்போற் றிரண்டுதொக்க எருமையின் பெருகுதியும், அவற்றின் மடியின் மிகுதியும் குறிப்பாலுணர்த்தி மருதநிலவளஞ் சுவையுறக்கூறி முன்னிலையை விசேடித்தவாறு. நாரை துயில்வதியுமென்றது-அது துயில்வதியுமாறு இரை தேர்தற்கேற்ற மீனினங்களின்மிகுதிகுறித்துநின்றது. ஊரன்-மருதநிலத்தலை வன். 'தேரையுள்ளவிடந் தேடிச்செல்வாரில்லை' என்றது தவளைகள் தாமே வந்தடையு மென்றவாறு. தவளைகள் தாம் ஜீவித்தற்குரிய வாய்ப்பானகுளத் துறைகளைத் தாமே விரும்பிவந்தடைவதுபோல, வினையாளரும், தாம் ஜீவித் தற்குரிய வாய்ப்பான தொழிற்றுறைகளைத் தாமே விரும்பிவந்தடைவர் எனக்

*அகநானூறு, செய்யுள்-70.

கருத்துநோக்கி எடுத்துக்காட்டொடு பொருத்தியுரைத்துக்கொள்க. தொழிற்றுறைகளைநாட்டற்குரிய பெருஞ்செல்வமுடையார் வினையாளரில்லையென்று மடிந்திராது அவர் தாமேதேடிவரும்படி இடம் பொருள் கருவிமுதலியவற்றால் வாய்ப்புடையவாய் அமைக்கவேண்டுமென்பது கருத்தாகக்கொள்க. இதன் பழமொழி, **தூளம்வெட்டத் தவளை தானேவரும்** என வழங்கப்படுகிறது.

24. இசைவ கொடுப்பதூஉ மில்லென் பதூஉம்
வசையன்று வையத் தியற்கையஃ தன்றிப்
பசைகொண் டவனிற்கப் பாத்துண்ணு னாயி
னசைகொன்றான் செல்லுலக மில்.

எ-து, தனக்கியன்றன கொடுத்தலு மியலாதன வில்லையென்றலு மொருவற்குக் குற்றமன்று; உலகத்தார்செயலே; அவ்வகையன்றி, இவனெனக்குப் பசைப்படுவனென்று தன்மனத்திற்கொண்டவொருவ னிற்பக்கண்டு மவனுக்குப் பகுத்துண்ணுதலைத்தவிர்க; நசையுடையாரைத்துன்பமுறுத்தினானுக்குச் செல்லு மறுமையுலகத்தின்கண் ணின்பமில்லையாதலாற் பசைகொண்டவற்குப் பகுத்துண்க எ-று.

(குறிப்பு) இசைவகொடுப்பது என்றது இரப்போன்விருப்பத்தினளவு கொடாது இரக்கப்படுவோன் தனக்கியன்ற சிறிதளவுகொடுப்பதென்றவாறு. இல்லையென்றல் இங்குக் கொடுத்தலின் மறுதலைகுறித்தமையால் அதன் மறுதலைச்செயப்படுபொருளான 'இயலாதன' என்பது கூட்டியுரைக்கப்பட்டது. 'இயலாதனவில்லையென்ற'லாவது இரப்போன்விரும்புமவை கொடுக்கவியலாதனவாயின் உடனே அவை யில்லையென்றுசொல்லி வறிதேபோக்குதலாம். 'அவ்வகையன்றி' என்றது அவ்விரண்டனுள் ஒன்றுஞ்செய்யாதென்றவாறு. பசை-பற்று. இதனைப் "பசைந்தாரிற், றீர்தலிற்றீப்புகுதனன்று"* என்பதனானறிக. பசைகொண்டவன் என்பதில், கொள்ளுதல் கொள்கையாகியமனத்தொழிலாதலால், 'பசைப்படுவனென்று தன் மனத்திற்கொண்டவொருவன்' எனப் பொருளுரைக்கப்பட்டது. அங்ஙனம் அவன் கொள்ளுதற்கு முன்சொல்லிய இரண்டனுள் ஒன்றுஞ்செய்யாமையேகாரணமென்பது கருத்தாகக்கொள்க. பாத்துண்ணுநயின் என வினையெச்சமாகக்கொள்ளாது, பாத்துண்ணுநயில் எனப் பதச்சேதஞ்செய்து, பாத்துண்ணுநயிருத்தலென்பதன் எதிர்மறையாகக்கொண்டு, நசைகொன்றான்செல்லுலகமில் எனப் பின்வருமேதுவுக்குப் பிரதிஜ்ஞாவாசகமாக்கி, "பாத்துண்ணுதலைத்தவிர்க" எனப் போந்தபொருள் உரைக்கப்பட்டது. பகுத்துண்ணல்—"வருவாயுட்கால்வழங்கிவாழ்தல்."† நசை-

* நான்மணிக்கடிகை, செய்யுள்-கரு.

† திரிகடுகம், செய்யுள்-உக.

பால்பகா அஃறிணைச்சொல்; அது இங்கு நகையுடையாருக் காகுபெயராய் அவரது எளிமையும் உடனுணர்த்திநின்றது. கொல்லுதல்-ஈண்டு வருத்துதலாயிற்று. நகைகொன்றாற்கென்னும் நான்கனுருபு விகாரத்தாற்றொக்கது. செல்லுலகம்-மறுமையுலகத் தின்பத்துக்கானமையா லாகுபெயர். 'பகைகொண்டவற்குப்பகுத்துண்க' என்றது ஏதுவையடுத்து முடிந்ததுமுடித்தல் என்னும் நிகமனங்கூறியவாறு. "இயன்றாற்கொடுப்பர் இயலாவிட்டா லில்லையென்பர்" எனச் செம்பொருள்படவழங்கும் உலகவழக்கான தொடர்மொழிப்பொருளே பழமொழிப்பொருளாகவும், அதன்குறிப்புப்பொருளே எடுத்துக்கொண்டபொருளாகவும் இப்பாட்டின்கண் நாட்டப்பட்டுள்ளன. இரப்பவர்க்கு நகையுண்டாகுமாறு அவரைத் தாழ்க்கவைத்து வருத்தலாகாதென்பது கருத்தாகக்கொள்க.

25\. உரிமைதனிற் றம்மோ டுழந்தமை கண்டு
பிரிவின்றிப் போற்றப் படுவார்—திரிவின்றித்
தாம்பெற் றதனு லுவவார் பெரிதகழிற்
பாம்புகாண் பாரு முடைத்து.

எ-து, உரிமையாற் றம்மொடு பிரிவின்றிப் பயின்றுபழகினமை கண்டு பாதுகாக்கப்படுவார், மனத்தின்கணொருவேறுபாடின்றிப் பாதுகாப்பாராற் றாம்பெற்றபொருளினானுவவாது, பின்பு மாசைப்படாநிற்பார், பெரிதகழ்ந்தாற் பாம்புகாண்பாரையு முலகமுடைத்தாதலாற் பெற்றதனானுவக்க எ-று.

(குறிப்பு) உரிமை என்றது உழந்தமை என்னுங்குறிப்பால் இங்கு வினையாட்சியாற் றொடர்புடையராந்தன்மையை யுணர்த்துவதாயிற்று. தம்மொடுபிரிவின்றியுழந்தமைகண் டெனக்கூட்டுக. தம்மொடு என்றது பாதுகாப்பாராகியதலைவரோடென்றவாறு. 'பயின்றுபழகினமைகண்டென்றது' காரியஞ்செய்து பழகினமை கண்டென்றவாறு. போற்றப்படுவார் என்றது பாதுகாப்பாராற்போற்றப்படுவாரென்றவாறு. திரிவின்றி என்னும் வினையெச்சம் உவவார் என்பதன் முதனிலைவினைகொண்டுமுடிந்தது. இதனால், திரிவின்மை உவத்தற்கும், திரிவு உவவாமைக்கும் காரணமாமென்பது காட்டியவாறாயிற்று. திரிவு-உண்மைக்கு மறுதலையாய வுணர்வு. உவவார் என்றது உவவாதார் சிலர் என்றபடி. இது போற்றப்படுவார் என்ற எழுவாய்க்குப் பயனிலையாயும், பின் உவக்க என வருவித்தமுடிக்கும் பயனிலைக்கு எழுவாயாயும்நின்றது. 'தாம்பெற்றதனானுவவார்' என்னும் பொருளடையை மத்திமதீபமாகவைத்தமையால், 'பெரிதகழிற் பாம்புகாண்பாருமுடைத்து' என்னுந் திட்டாந்தத்தொடுங்கூட்டுக. பெரிதகழினென்னுங்குறிப்பால் உவவார் என்பதற்கு, ஆசைப்படாநிற்பார் எனப் பொருளுரைக்கப்பட்டது. பாம்புகாண்பாருமுடைத்து என்னுங் குறிப்பால், பெரிதகழின்

என்றதில், பெருமை அகழும் புழைகளின் எண்ணின்மிகுதியுணர்த்திநின்றது. பெரிதகழிற் பாம்புகாண்பாரு முடைத்து என்றது தாம்பெற்றதனுலுவவாது பேராசைப்படுவார்க் கேதமுண்டாமென்பதை எடுத்துக்காட்டுதற்கேற்றதோ ரைதிகமடியாகப்பிறந்த பழமொழி கூறியவாறு. அப்பழமொழி, பேராசையால் முயலுமொருவனுக்கு அம்முயற்சியே விபரீதமாகும் என்று சொல்லவேண்டு மிடத்து, எலிச்சேலவேன்றுதோண்டப் பாம்புபுறப்பட்டாற்போலும் எனக் கிராம்யவழக்காக வழங்கப்படுகிறது. இதன் ஐதிகமாவது:—ஒருவேடன் உணவின்பொருட்டுக் காட்டெலிபிடிக்கச்சென்று எலியுண்டென்றுதெளிந்த சில எலிப்புழைகளைக்கண்டுதோண்ட அவற்றில் எலிகளிருந் தகப்பட்டதுகண்டு அவ்வளவினமையாது, அவாமிக்குடையனுய், மேலும் தெளியப்படாத பலபுழை களைக்கண்டு தோண்டித் துருவும்போது ஒருபுழையிற் பாம்பிருந்து சீறிப்புறப் பட்டுவரவே தான் முன்பிடித்திருந்த எலிகளையும்போகட்டு ஓடி உயிர்பிழைத் துப் பின் எலிபிடிக்குந்தொழிலையொழிந்தான் என்பதாம். எலிபிடித்தவேடன் எலியுண்டென்று தெளியப்பட்ட சில புழைகளி னியல்பானே கிடைத்தவை கொண் டுவவாது, இன்னுந் தோண்டும்புழைகள்தோறும் எலி கிடைக்கு மென்னும் பேராசையுடையனுய்ப் பாம்பில்லையென்றுதெளியப்படாத புழை களையுந்தோண்டி அவன் ஜீவனோபாயமாயிருந்த எலிபிடித்தற்றொழிலை யிழந்ததுபோல, வினையாளர்விரும்பியசிலவற்றைப் போற்றுவார் உதவுதல்கண்டு அமையாது பின்னும் தாம் விரும்பியவையெல்லாங்கொடுப்பர் என்னும் திரி வுணர்வால்வந்த பேராசைகொண்டு அவரைப் பின்னுஞ் சில கேட்டுவருத்துவா ராயின் ஜீவனோபாயமா யவரிடம்பெற்றிருந்த வினையாட்சியையும் அவர் சீற்றத்தா லிழப்பராதலாற் பெற்றதுகொண்டு உவக்கவேண்டுமெனத் திட்டாந் தத்தொடு பொருத்தியுரைத்துக்கொள்க. என்னை? பாம்புகாண்பாருமுடைத்து என்பதில் உம்மை ஐயவும்மையாதலாற் பெரிதகழ்தலிற் பாம்புகாண்டல் நியத மில்லையென்பது பெறப்படும்; பெறவே, பாம்புகாணுவிடத்துப் பயனுண்டாத லுங் கூடுமாதலால், பயனுண்டோ? இல்லையோ? என்னும் ஐயப்பாடுள்ள கடன் கோடன் முதலியகாரியத்தின்கண்ணும் முயற்சி நிகழ்தல் காண்டலாலும், அது பழிக்கப்படாமையாலும் விலக்கப்படாததாயிருக்க, இங்கு அத்தகைய மேன் முயற்சியைப் பெற்றதுகொண்டுவக்கவென விலக்கியவாறென்னையெனில், கடன்கோடன்முதலியனபோல நன்மைவிளைதன்மாத்திரத்தின் ஐயப்பாடுடைய காரியத்திற்செல்லுமுயற்சி பழிக்கப்படாதேயல்லது, தீமைவிளைவின் ஐயப் பாடுடையகாரியத்திற் செல்லும் முயற்சி பழிக்கப்படுவதேயாம். இதனை, ஒரு நீர்ப்பெருக்கைக் கடந்துசெல்லவேண்டும் நீத்தறியாதாரொருவன், இது நீத்து நீரோ? நிலைநீரோ? என ஐயுறவுள்ளதுணையும் அதி லிறங்காமையாலும், நிலை நீரென்று தெளிந்தபின்னர் இறங்கிச்செல்லுதலாலும் அறிக. பாம்புகாண்பாரு முடைத்து எனத் தீமைவிளைவின் ஐயப்பாடுதோன்றுவதுகொண்டு, இத்தகைய சூதாட்டுமுதலியவற்றின் அம்முயற்சி விலக்கப்பட்டதுபோலவே இங்கும் விலக் கப்பட்டதென்க.

26. விடலரிய துப்புடைய வேட்கையை நீக்கிப்
படர்வரிய நன்னெறிக்க ணின்றா—ரிடருடைத்தாப்
பெற்ற விடக்கு நுகர்தல் கடனீந்திக்
கற்றடியு ளாழ்ந்து விடல்.

எ-து, விடுதற்கரிய நுகர்வினைவிரும்பும்வேட்கையைநீக்கி யொழுகுதற்கரியநன்னெறியாகிய தவத்தின்கணின்றார், மெய்ப்பிணியாற் றமக்கிடர்வந்தகாலத்தின்க ணழிந்து, தாங்கொண்டசீலத்துக்குக் குற்றமாம்படிபெற்றதொரு விடக்கைத்தின்றுய்தல், கடலைநீந்தியேறிக் கன்றினுள்ளடியினீரிலே யழுந்தியதனோடொக்கும் எ-று.

(குறிப்பு) இப்பாட்டால், உண்ணுவாருண்ணுமுணவெல்லாம் உயிருடம்பாயிருத்தலால், துறந்தார்க்குப் பிறரிடுமுண்டியிற்பெற்ற ஊனுண்ணல் பசியால் வருந்தியவழிக் குற்றமாகாதென்பார்* குதர்க்கவாதத்தைத் தர்க்கமென்னும் விதண்டையால் நிக்ரஹிக்கிறார். ‘விடுதற்கரிய நுகர்’வாவது:—இம்மைப்பயனெனக் கண்கூடாகக்கண்டு இயல்பானே ஐம்புலன்களானு மாரத்துய்க்கும் இன்பமாகிய காமநுகர்வு. ‘ஒழுகுதற்கரியநன்னெறி’யாவது:-உற்றநோய்நோன்றலுண்டிசுருக்கன்முதலிய விரதவொழுக்கங்களையும், செயற்கரியசெயலாகிய இயமநியமாதி யட்டாங்கயோகமுயற்சியையுங் கைக்கொண்டொழுகுதல். இடருடைத்தாக என்னுஞ் செயவெனெச்சத்திறுதி விகாரத்தாற்றொக்கது. அந்நெறியென்னும் எழுவாய் வருவித்து, அந்நெறியிடருடைத்தாகப் பெற்றவிடக்கு எனக் கூட்டுக. அந்நெறியிடருடைத்தாதலாவது அத்தவவொழுக்கமாகிய சீலத்துக்குக் கேடுண்டாதல். ‘மெய்ப்பிணியாற் றமக்கிடர்வந்தகாலத்தின்கணழிந்து’ என்றது இசையெச்சத்தால் விடக்குநுகர்தற்குக் காரணங்கூறியவாறு. மெய்ப்பிணி-பசிப்பிணிமுதலாயின ‘தாங்கொண்டசீலத்துக்குக்குற்றமாம்படி’ என்றது அந்நெறியிடருடைத்தாக என்பதன் போந்தபொருள் கூறியவாறு. ‘குற்றமாம்படிபெற்ற’ என்றது குணமாகப்பெறும் யாகசேடத்தை விலக்கியவாறு. பெற்ற

* இங்ஙனங்கூறுவார், புத்தமதத்தினர் முதலாயினார். இதனைப் பிரபோத சந்திரோதயம், புத்தவதைச்சருக்கம் (செய்யுள் 29-30) “ஒருகாலுங் கொலையாகா தான்வேண்டிற் கொன்றதுகொண் டுண்ணலாகுந், தரைமீது மாண்டதெல்லாம் மண்ணினுக்கு நிகரென்பர் தக்கோரன்றே” எனவும், “சீதநீர் வைத்தவருக் கறமதனை யுண்டவர்க்குச் செறியா தவ்வா, றேதினா னுண்டவர்க்குப் பாவமின்று கொன்றவருக் குறுவ தாகு, மாதலா லூனருந்த வாசையுண்டேற் செத்ததுண்ணலாகுமிந்த, நீதியார் மறுத்துரைப்பா ருனக்கூனூட்டாதார் நினைவிலாரே” எனவும் கூறியவாற்றானும், பிறரு மொழுகுதலானு முணர்க.

விடக்கு என்றதனால், பிறரிடம்சென்று இரந்துகொண்டதென்னும் இழிவுணர்த்தியவாறு. 'ஒருவிடக்கு' என்றது விடக்கின் எண்மைதோன்றக்கூறியவாறு, விடக்கு-ஊன்றடி. கடனீந்திக் கற்றடியுளாழ்ந்துவிடல் என்றது, உடற்பொறையாகிய உயிர்ப்பிணிநீக்கக்கருதித் துறவுபூண்டு தவவொழுக்கத்திலுள்ளோன், உடற்பிணிக்குடைந்து புலாலுண்டுய்வானாயின் அவன் ஒழுகும் பிற தவவொழுக்கங்களும் அவனது கூடாவொழுக்கத்தை மறைக்கக்கொண்ட வேடங்களேயாம் என்பதைத் தர்க்கம் என்னும் விதண்டையால் நிரூபித்தபடி. அதாவது கடனீந்திக் கடக்குமாற்றல்போலு மாற்றலுடையராய், உற்றநோய்நோன்றல் முதலிய விரதவொழுக்கங்களால் மனவொருக்கமெய்தினர், கடனீரினளவினின்றும் நொய்மையிற் கன்றினடிச்சுவட்டிற்றங்கிய நீருக்குள்ள வாசிபோலும்வாசியுள்ள மெய்ப்பிணிவாதைக்குட்பட்டுப் புலாலுண்டுய்தல், கடலைநீந்திக்கடந்த வாற்றலுடையான் கன்றினடிநீர்கடக்கமாட்டாது அதனுள்வீழ்ந்து மூழ்கியழிதல்போலு முண்மையுடையதென்பதாம். இதனால்,கடனீந்து மாற்றலுடையான் கன்றினடிநீரில் ஆழானாயின், தவவொழுக்கமுடையோனும் மெய்ப்பிணிக்காற்றாது புலாலுண்ணான் எனத் தவவொழுக்கத்தி னாற்றல்மிகுதியும், கன்றினடிநீரைக் கடக்கமாட்டாதவன் கடனீந்துமாற்றலிலனென்பது ஒருதலையாவதுபோல, மெய்ப்பிணிவாதைபொறாது புலாலுண்பானும் உற்றநோய்நோன்றல் உண்டிசுருக்கல் முதலிய தவவொழுக்கமும் மனவொருக்கமு மெய்துதற்கேற்ற வாற்றலிலனென்பது ஒருதலையாமென அவன் படிற்றொழுக்கின்றொகுதியும் ஒருங்குணர்த்தப்பட்டன. ஆழ்தலெனவே அமைவதாக ஆழ்ந்துவிடல் என்றது ஈண்டு விதண்டைக்கேற்றதொரு தேற்றப்பொருள் தோற்றக்கூறியவாறு. இப்பழமொழி "ஸமுத்ரதரணங்க்ருத்வா கோஷ்பதே மஜ்ஜநம் யதா" என அபூதகற்பனைக்கேற்ற ஈற்றடிகொடுத்துக் கவித்திறமையறியுங் கவிஞர்குழூவழக்காய்த் தோன்றி, இயலாநிகழ்ச்சியை யுருவகவாய்ப்பாட்டா னுணர்த்துவதாயிற்று. "ஸாகரந் தீர்த்வா விஸ்தீர்ணம் கோஷ்பதே தஸ்ய ஸம்ஹதா:" என வான்மீகத்தும் வழங்கப்பட்டது.

27. தேர்ந்துகண் ணோடாது தீவினையு மஞ்சலராய்ச்
சேர்ந்தாரை யெல்லாஞ் சிறிதுரைத்துத்—தீர்ந்த
விரகர்கட் கெல்லாம் வெறுப்பனவே செய்யு
நரகர்கட் கில்லையோ நஞ்சு.

எ-து, ஆராய்ந்தொருவர்மாட்டுங்கண்ணோடாது, தீவினைகளுமஞ்சாது, சேர்ந்துதம்மையடைந்தாரையெல்லாஞ் சிறுமைப்படவுரைத்து, தமக்குக் கிளையான்மிக்கசுற்றத்தார்க்கெல்லாம் வெறுப்பனவேசெய்யாநிற்கும் நரகர்கட்குச் சாவக்கொல்லவல்லதொரு நஞ்சில்லையோ எ-று.

(குறிப்பு) இப்பாட்டில் வெருவந்தசெய்யற்கவென்பார் அது செய்தொழுகு மரசரை எல்லாரும்வெறுக்கும் வெறுப்பினதளவு இத்துணை என்பதனை அவரது உயிர்வாழ்க்கையில் அதிசங்கைபண்ணிக் காட்டுகிறார். 'ஆராய்ந்து ஒருவர்மாட்டுங் கண்ணோடாது' என்றது இவர் கண்ணோடுதற்குரியார்; இவர் அதற்குரியாரல்லர் என அறிந்துவைத்தும் கண்ணோடுதற்குரியராயினுமொருவர்மாட்டுங்கண்ணோடா தென்றவாறு. கண்ணோடுதற்குரியார் தம்மொடுபயின்ற நட்பாளரும் குற்றஞ் செய்யாது குறையிரந்துநிற்பாரும் முதலாயினார். தீவினை-பாவமும் பழியுமாயின செயலும், கடுமொழியும் கடுந்தண்டமு முதலாயின; இவை குடிகளஞ்சுவன. சேர்ந்து தம்மையடைந்தார்-அமைச்சர் புரோகிதர் சேனபதியர் அணுக்கத்தொண் டர் முதலாயினார். 'கிளையான்மிக்கசுற்றத்தார்'-நெருங்கிய வுறவினரும் மிக்க சுற்றத்தாரையுடைய சுற்றத்தாரும். அவர்க்கு வெறுப்பனசெய்தலாவது-அவரை வரிசையானோக்காது பொதுநோக்குநோக்குதலும், அவர் விரும்பியனசெய்யாமை யும் முதலியன. நரகர்-பாபிகள். இங்கு நரரைக்கதறச்செய்பவரெனினுமாம். 'நரகர்கட்குச் சாவக்கொல்லவல்லதொருநஞ்சில்லையோ' என்றது அவர்சாக்காட் டை எல்லாரும்விரும்புதலால் நஞ்சிருந்தால் அவர்நட்பினரே விருந்தாணிலிடுவர்; அதுதாமேயுணர்ந்து விருந்துண்ணாராயினும், மிக்ககிளையாயினார்க்கெல்லாம் வெறுப்பனசெய்தலால் அறுசுவையுண்டி யமர்ந்தூட்டு மில்லாளு மிடுவள்; அது வுந் தாமேயறிந்து பரிசோதித்துண்பராயினும், நட்டாரும், நாட்டாரும், சேர்ந்தா ரும், கிளையான்மிக்க உறவினரும் கைவிடுதலாற் பகைக்கெளியராய்ப் பின் பகைவ ரால்வரக்கடவ பரிபவங்களாகிய மானத்துக்கஞ்சித் தாமேயு நஞ்சுண்ணக்கடவரா யிருக்கச்செய்தே உண்ணாதிருப்பதென்னே? தேர்ந்துகண்ணோடித் தீவினையஞ்சி நல்வினைபுரிந்து சேர்ந்தாரையெல்லாம் பெருமைப்படவுரைத்து, தீர்ந்தவிரகர்கட் கெல்லாம் விரும்புவனசெய்வார் அந் நல்வினைகாரணமாகத் தேவராய்ச்சென்று அமுதபானம் பண்ணுவதுபோல, அவர்க்கெதிரான விவரும் தீவினைகாரணமாக நரகராய்நின்று விஷபானம்பண்ணவேண்டாவோ? அவ்வாற்றானும் அவ ரதுபண் ணாமைக்குக்காரணம் என்னே? நஞ்சினுங்கொடியவிவரைக் கொல்லவல்லதொரு நஞ்சு படைக்கப்பட்டிலதுபோலும் என்றவாறு. இதனால் வெருவந்தசெய்யுமரசர் தாமடங்க எல்லாரானும் சாமாறுவெறுக்கத்தக்கார் என அச்செயலின் கொடுமை கூறப்பட்டது. இதன்பழமொழி, பச்சைநாவிவச்சாலேன்ன எனவும், தீயை வை எனவும், வெறுப்புக்குறிப்பில் வழங்கப்படும்.

28. தாமாற்ற கில்லாதார் தாஞ்சாரப் பட்டாரைத்
தீமாற்றத் தாலே பகைப்படுத்திட்——டேமாப்ப
முன்னோட்டுக் கொண்டு முரணஞ்சிப் போவாரே
யுண்ணோட் டகலுடைப் பார்.

எ-து, தாந் தம்மையாற்றமாட்டாதார் தாஞ்சாரப்பட்டவர்களைத் தீயசொலவுகளாற் பகையாக்கித் தமக்குச் சேமமாக வவர்க்குமுன்னோட்டுக்கொண்டு பகைகோடலையஞ்சிப்போவார், தாமுண்கின்ற வோட்டகலை யுடைக்கின்றாரோடொப்பர் எ-று.

(குறிப்பு) 'தாந் தம்மையாற்றமாட்டாதார்' என்றது தாமே தம்மைப் பாதுகாத்துக்கொள்ளுந் திறமில்லாதார், அதாவது பராபேக்ஷையால் ஜீவிக்கிறவர் என்றவாறு. 'தாஞ்சாரப்பட்டவர்களை' என்றது தமக்குச்சார்பாயிருந்தவர்களை யென்றவாறு. 'தீயசொலவுகள்' பொய், குறளை, கடுஞ்சொற்கள். 'சேமமாக'- பாதுகாப்பாகும்படி. 'அவர்க்குமுன்னோட்டுக்கொண்டு' என்றது அவர் தம்மைச் சார்பறுத்தோட்டுவதற்குமுன்னமே தாமா யவரைவிட் டோடுதலை மேற்கொண்டு என்றவாறு. 'பகைகோடலையஞ்சிப்போவார்' என்றது சார்பாயினார்விரோதம் வந்துவிட்டதென்று அஞ்சிப்போவார் என்றபடி. 'உண்கின்றவோட்டகலை யுடைக்கின்றாரோடொப்பர்' என்றது தாமுண்ணும்பாத்திரமாகிய சட்டியை யுடைத்தெறியுமவரோடொப்பர் என்பதாம். ஓட்டகல்-ஓடாகிய அகல். அகல்- அகன்றவாயையுடைய மண்சட்டி. தானுண்டு உயிர்வாழ்தற்காதரவான சட்டியை யுடைத்துப் பின் புண்ணுதற் கொன்றுமின்றிவருந்து மறிவிலிபோலத் தானுண்டு சீவிப்பதற் குதவியாயிருந்தாரைவிரோதித்துச் சீவனத்தொழிலையிழந்துவருந்து பவனும் அறிவிலியாமெனு உவமையொடுபொருத்தியுரைத்துக்கொள்க. தனக்கு ஆதரவாயிருப்பதொன்றை யொழிக்கும் அறிவிலியைக் குடிக்கிறவோட்டை யுடைக்கிறவன் என்பது கிராம்யவழக்கு. இத்தொடர்மொழிப்பொருளே இப் பாட்டிற்கொண்ட பழமொழிப்பொருளாயிற்று. இதனால் ஒருவரைச்சார்ந்து பிழைப்பவர், பொய் குறளை கடுஞ்சொல் முதலிய தீமாற்றங்களையொழித்து அவருக்கு உண்மையுரைப்பவராயிருக்கவேண்டுமென்பது உணர்த்தப்பட்டது.

29. முழுதுடன் முன்னே வகுத்தவ னென்று
தொழுதிருந்தக் கண்ணே யொழியுமோ வல்ல
லிழுகினு னோகாப்ப தில்லையே முன்ன
மெழுதினு னோலை பழுது.

எ-து, முழுதுடலத்தையு முன்னேபடைத்தவன், நாமுறுகின்ற வல்லலையு நமக்குப்படைத்தா னென்றுகருதி, அவனே யவ்வல்லலைத் தீர்ப்பானாக வவனைத்தொழு தொருகாரியத்தைமுயலாதிருந்தாற் றம்மல்ல லொழியுமோ? அவ்வல்லலைத்தப்ப நினைக்கவே தன்னை யவ்வல்லல் வந்து பிணிக்கமாட்டாது; முற்படவெழுதினவோலை பழுதுபட்டால், அப்பழுதுதீரப் பின்னையு மெழுதுவாராதலான் முன்செய் தீவினைப் பயனை யிப்பொழுது செய்யுமுயற்சியானேநீங்கலாம் . எ-று.

(குறிப்பு) இப்பாட்டால், மடியுடையராகி அன்றெழுதிவைத்தா னழித்தெழுதப்போவதில்லை, எழுதினவோலை பழதாகாது என்னும் ஊழ்வலியுறுத்தும் பழமொழிகளைச்சொல்லிக்கொண்டு, உயிர்களுடையும் நன்மைதீமைகளெல்லாம் ஊழ்வயமாயேயுள்ளனவென்றும், முயற்சியால் ஒருபயனுமில்லையென்றும் பேசுவார்குதர்க்கவாதத்தை அவர்சொல்லும் பழமொழிப்பொருள்கொண்டே நிராகரித்து முயற்சிசெய்யற்பாற்றெறன நிரூபிக்கிறார்.

இப்பாட்டு அப்பழமொழிபற்றிப்பிறந்தமையா லப்பழமொழிப்பொருளு மிங்கு ஆராயத்தக்கதாம். அது பின்வருமாறு காண்க. அப்பழமொழிக்குரிய எழுத்து ஓலை என்னுஞ் சொற்கள் முறையே பழவினைப்பயனூட்டும் பிராரப்தத்தையும் அது தங்கிய உடலையும் உணர்த்துவனவாம். இதனைப் "பொறியின்மையார்க்கும் பழியன்று"* என்னுந் திருக்குறளில் எழுத்தின்பெயராகிய பொறியென்னுஞ் சொல்லாற் பிராரப்தம் வழங்கப்பட்டமையாலும், "ஏடு நிலத்தி லிடுவதன் முன்னம்"† என்னுந் திருப்பல்லாண்டில் ஓலையின்பெயராகிய ஏடு என்னுஞ் சொல்லாற் சரீரம் வழங்கப்பட்டமையாலு மறிக. இங்ஙனம்வழங்கும்வழக்குத்தொன்று தொட்டேயுள்ள பெருவழக்கென்பதை, "தேஹோ தைவக்ருதஸ்சித்ரலேக ஸம்பூர்ணபத்ரவத் ஸ்ம்ருத:" என்றும், "லலாடலிகிதா ரேகா பரிமார்ஷ்டும் ந ஶக்யதே" என்றும் பிராரப்தத்தைச் சித்ரலேகனமாகவும், அது பதிந்தவுடலைச் சித்ரலேகனபத்ரமாகவும் வடமொழிவாணருங் கூறுதலா லறிக.

இனி இவ்வுருவகவகையான் அப்பழமொழிப்பொருள்களை யாராயின், "அன்றெழுதிவைத்தா னழித்தெழுதப்போவதில்லை" என்பதற்கு, உடலெடுக்குமன்று பிராரப்தமென்னும் பொறிகளை உடலின்கட்பதியவைத்ததெய்வம், (ஊழ்வினைத் தொகுதி; அதாவது சஞ்சிதம் என்றபடி.) மறித்தும் அவற்றைமாற்றிப் பிறிதுறப்பதிப்பதில்லை; எனப் பொருள்படுவதாகும். இதனுள் எழுதிவைத்தான் என்றது உலகியற்றுங்கடவுளையெனக்கொள்ளுதல் கூடாதோவெனிற் கூடாது; ஏனெனில், இப்பழமொழிக்கு ஊழ்வலியுறுத்தலே கருத்தாதலால் எல்லாருமவ் வூழின்வயப்படுவர் என அது தன் வயத்ததாகுஞ்சிறப்புத்தோன்றக் கூறுவதே முறையாதலாலும், இறைவன்வயத்ததாக்கிக்கூறுத லீண்டைக்கு ஏலாமையானும், "ஹரிணாபி ஹரேணாபி ப்ரஹ்மணாபி ஸுரைரபி । லலாடலிகிதா ரேகா பரிமார்ஷ்டும் ந ஶக்யதே ॥" என்றும், "விதியால்வருவதல்

*திருக்குறள், 62-ஆம் அதி. ஆள்வினையுடைமை—8.

†பெரியாழ்வார்திருமொழி, க. திருப்பல்லாண்டு. நான்காம்பாசுரம்.

லான்மேதக்கோர்தங்கண், மதியினல்வாழ்வதொன்றுண்டோ-பதிதொறுஞ், சங்கரனுமையமேற்றுண்டான்றடங்கடல்சூழ், மங்கையுடன்காடுறைந்தான்மால்"* என்றும் அக்கடவுளரையும் இதற்கு வயமாக்கிக்கூறினமையானுமென்க. ஊழாகிய அஃறிணைப்பொருளை எழுதிவைத்தான் என உயர்திணைச்சொல்லாற் கூறியிருப்பது குற்றமாகாதென்பதும், இப்பாட்டில் வகுத்தவன் என்ற சொற்பொருளாராய்ச்சியிற்காட்டுவதுகொண் டறியத்தக்கது. இப்பழமொழி ஒலிவேறுபாட்டால் அநிஷ்டக்குறிப்புணரக் கிடத்தலாலும், வழக்குவலியுடைமையாலும் தீயூழைப் பற்றியதென விளங்கும். இதனானே ஏனையது நல்லூழைப்பற்றியதென அறிக.

இனி, "எழுதினவோலை பழுதாகாது" என்ற ஏனைப் பழமொழிப்பொருளை ஆராயின் அநுகூல ப்ராரப்தங்களாற் பதியப்பெற்ற சரீரத்தால் அவற்றின்பயனனுபவித்தல் தவறாதென்பதாம். ஆகவே இப்பழமொழிக்கு நல்லூழின் அநுபவம் தவறாதென்பதும், அன்றெழுதிவைத்தான் என்னும் பழமொழிக்கு, தீயூழின்பதிவை அத்தெய்வம் திருத்தாதென்பதுமே வாக்கியார்த்தங்களாம்.

இவற்றுள், தீயூழின்பதிவை அத்தெய்வம் திருத்தாதென்னும் வாக்கியார்த்தத்தை அவலம்பித்துக்கொண்டு ஊழ்வலியுறுப்பார்சொல்லுந் தர்க்கவாதத்தையெல்லாஞ் சங்கிரகித்து ஒரேதொடர்மொழியா லநுவதிக்கிறார்; 'முழுதுடன் முன்னேவகுத்தவனென்று' என்று. இதனுள் என்று என்னும் இடைச்சொல் இவ்விதமாகச்சொல்லி என்னும் பொருளுடையதாய்த் தன்னையேற்ற தொடர்மொழியைச்சுட்டினமையால் அது அநுவாதக்குறிப்பாயிற்று. ஆகவே அதனாற்சுட்டப்பட்ட முழுதுடன் முன்னேவகுத்தவன் என்பது தர்க்கஞ்செய்யும் வாதிகூற்றெனவுணர்க. இக்கூற்றினுள் வகுத்தவன் என்றது, ஓருயிர் செய்த வினையின்பயன் பிறிதோருயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கேவகுக்கும் விதி, தெய்வம், இயற்கை என்ற பெயர்களால் வழங்கப்படும் பழவினைத்தொகுதியாகிய சஞ்சிதமென அறிக. அஃது அஃறிணைப்பொருளேயாயினும் "இசைத்தலுமுரிய வேறிடத் தான"† என்பதனால் வகுத்தவன் என உயர்திணைச்சொல்லால் வழங்கப்பட்டது. இதனை "வகுத்தான்வகுத்தவகையல்லால்"‡ என்னுங் குறளுரையானும் அறிக. அச்சொல் தன் பகுதிக்கேற்ற அடைகளானடுக்கப்பெற்று முழுதுடன்முன்னேவகுத்தவன் எனப் பழவினைக்கு ஒரு பெயராயிற்று. இதனுள் முழுதுடல் என்றது, யாவஜ்ஜீவஸாவியான பிராரப்தங்களை யாவஜ்ஜீவம் என வழங்குவதுபோல உடலுள்ளகாலமுழுதும் உறக்கடவவான பிராரப்தங்களுக்குப்பெயராய்வழங்கப்பட்டதென வறிக.

* இது நீலகேசி ஐந்தாம்பாட்டுரையுதாரணம்.

† தொல். சொல். கிளவியாக்கம். சூத்திரம்—௬௦.

‡ திருக்குறள் 38-ஆம் அதி. ஊழ்—7.

முன்னேயென்றது உடலெடுக்கும்பொழுதே என்றபடி. இவ்வாற்ருன் முழு துடன்முன்னேவகுத்தவன் என்ற தொடர்மொழியானது, ஒருபெயராய்நிற்கும் நிலையில், வேலன் என்றபெயர் முருகன் என்னும்பொருளுணர்த்துவதுபோல ஊழ் என்னும்பொருளையுணர்த்திக்கொண்டு, அவ்வேலனென்னும்பெயரே அவ யவப்பொருளுணர்த்தும்நிலையில் வேலுடையான் என்னும் பொருளும் உணர்த்தி முருகன் வேலுடையான் என எழுவாயும் பயனிலையுமாகிய வாக்கியார்த்தவாசக மாவதுபோல, அவயவப்பொருளுணர்த்தும்நிலையில் உடலுள்ளகாலமுழுதும் உறக்கடவபிராரப்தங்களைவகுத்தவன் என்னும்பொருளுமுணர்த்தி, ஊழ் உடலுள்ளகாலமுழுதுமுறக்கடவபிராரப்தங்களை வகுத்தது என எழுவாயும் பய னிலையுமாகிய வாக்கியார்த்தவாசகமாயிற்று.

ஆகவே, ஊழ் என்னும் எழுவாயானது, வாதி தர்க்கிக்கும் அநுமானத்துக் குப் பக்கமாகவும், உடலுள்ளகாலமுழுதும் நுகரக்கடவ பிராரப்தங்களையெல்லாம் வகுத்தது என்னும் பயனிலை ஏதுவாகவும் கூறியவாருயிற்று. ஆகவே, அது வகுத்த பிராரப்தங்களினடியாக நாமுறுகின்ற அல்லல்களையும் நமக்குப்படைத் தது என்னுந் துணிபொருளும் பொருளாற்றலாற்பெறப்பட்டது.

இனி இரட்டுறமொழிதலால், முழுதுடன்முன்னேவகுத்தவன் என்பதற் குச் சரீரத்தை அதனுறுப்பாகிய இந்திரியங்களகப்பட முழுதும்முன்னேவகுத்த வன் என்னும்பொருளுந்தோன்றுதல்பற்றிச் சரீரமும் இந்திரியங்களும் ஊழ்மய மாம் என்பதும் பெறப்பட்டது. பெறவே, அவ்வூழால் நாமுறுகின்ற அல்லலைத் தீர்க்க நமக்குவிரகில்லை; அவ்வூழேதீர்க்கவேண்டும் என்னு முடிவுரையும் குறிப் பாற் பெறப்பட்டது. இங்ஙனம் பெறப்பட்டபொருள்களையெல்லாந்திரட்டியே, 'முழுதுடன்முன்னேவகுத்தவனென்று' என்பதற்கு 'முழுதுடலத்தையும் முன் னேபடைத்தவன் நாமுறுகின்ற வல்லலையும் நமக்குப் படைத்தானென்று கருதி அவனே யவ்வல்லலைத்தீர்ப்பானுக' எனப் பொருளுரைக்கப்பட்டது. தீர்ப்பானுக என்றதில் ஆக என்றது, என்று என்னும் இடைச்சொற்பொருளுரைத்தவாறு; இதனை, வந்தானென்றுசொன்னுன் என வழங்கவேண்டுமிடத்து வந்தானுகச் சொன்னுன் என வழங்குதலா லறிக. இடையில் 'என்றுகருதி' என்றது வாதி யின் அநுமானவாக்கியங்களை யநுவதித்துக்கொண்டே மேலும் அவன்கூற்றை அநுவதிப்பார் இடையே அநுமானவாக்கியங்கள் முடிந்தபடிகாட்டிய தம் கூற் றெண உணர்க. என்றுகருதி என்றது என்று அநுமானித்து என்றபடி. கருதல்- அநுமானித்தல்.

இங்கே தொழுதென்னுங்குறிப்பால், வகுத்தவன் என்றது தொழுதற்குரிய படைப்புக்கடவுளை யெனக்கொள்ளிற் படும் இழுக்கென்னையெனில், ஊழ்வலி யுறுப்பானுக்கு அது கருத்தாகாமையாலும், கருத்தாயின், அக்கடவுள்சிறப்

புணர்த்தியதாவதன்றி ஊழ்வலியுறுத்தியதாகாமையாலும், கடவுளரைத்தொழு தல் அல்லலொழிக்கு முயற்சியாதலால் அது முயற்சியுடையாராற் பழிக்கப்படா தாகையாலும், இங்குச்சொல்லப்படுவது செயற்கையாகிய முயற்சியாதலால் அதற் கெதிராயிருப்பது இயற்கையாகிய ஊழெனக்கொள்வதே பொருத்தமு டையதாகையாலும் படைப்புக்கடவுளையெனப் பொருள்கொள்ளுதல் பொருந்தா தென்க.

'தொழுதிருந்தக்கண்ணேயொழியுமோவல்லல்' என்றது, மருத்துவஞ்செய் தற்கிணங்காதுவருந்தும் புண்ணுடையானொருவனை நோக்கி, அப்புண் ணுக்கு மருத்துவஞ்செய்துதீர்க்கவேண்டுமென்னுங் கருத்துடையானொருவன், "நீ இப்புண்ணை வைத்துப் பூசைபண்ணிக்கொண்டிருந்தால் வாசியாமோ" என் பதுபோலக் குறிப்புப்பொருளுணர்த்துமாறு,'அவனைத்தொழு தொருகாரியத்தை முயலாதிருந்தால் தம்மல்லல் ஒழியுமோ' எனப் பொருளுரைக்கப்பட்டது. இங்கு 'அவனைத்தொழுது' என்றது அப்பழவினையாகிய இயற்கைக்குவயப்பட்டு என்ற படி. ஒழியுமோ என்றது ஒழியமாட்டாது, வளரும் என்றபடி; அதாவது.-மன முதலிய இந்திரியங்களகப்பட உடல்முழுதும் பழவினையின்மயமாதலால் அவ் வுடலையே யானெனமயங்கிய உன்னை யீடேற்றுவார் ஒருவரும் இல்லாமையா லும், இயற்கையின்வயப்பட்ட வுனக்கு அவ்வியற்கையின்வாதனையே பின்னுந் தோன்றுமாதலாலும் அப்பழவினை வளருமென்றவாறு. இன்னும், தொழுதிருந் தக்கண்ணேயொழியுமோ என்ற குறிப்பானே 'அவ்வல்லலைத்தப்பநினைக்கவே தன்னை யவ்வல்லல்வந்து பிணிக்கமாட்டாது' என்னுந் தன்றுணிபு முரைக்கப்பட் டது. இங்குத் தப்பநினைத்தலாவது.—அவ்வல்லலைநீங்கநினைதலும், முன் தான் நினைத்திருந்தநினைவுக்கு மாறாகநினைதலுமாம். மாறாகநினைதலாவது.—இயற் கையின்வயமாகிய உடலை யானென எண்ணாது அதனின்வேறாய ஆன்மாவை யானென எண்ணலும், ஊழின்வயமாயடங்கியநினைவாகிய தொழுதற்குமாறாக அதனைத் தன்வயமாயடக்கநினைதலும்,"இன்பம்விழையானிடும்பையியல்பென்"* றெண்ணுதலும், "இன்னாமையின்ப"†மெனக்கொள்ளுதலு முதலாயின. இந் நினைவுகளால் அல்லலொழிவும் வாஸநாக்ஷயமு முண்டாவதுடன், தத்துவ ஞானத்தால் அவ்வல்லலுக்கெல்லாம் காரணமாகிய சஞ்சிதநாசமுமுண்டாகு மென்பதுபற்றிக் காரியசித்தியினெண்மையும், சாதனத்தின் வன்மையுந்தோன் றத் 'தப்பநினைக்கவே அவ்வல்லல்வந்துபிணிக்கமாட்டா'தென்றார். எனவே, முயற்சிசெய்வார்க்கு அவ்வல்லல் ஒழியுமென்பது சொல்லவேண்டாதாயிற்று.

---

* இது திருக்குறள் 63-ஆம் அதிகாரத்தின் 8-ஆங்குறளின்கருத்து.

† திருக்குறள் 63-ம் அதி. இடுக்கணழியாமை—10.

என்னை? நினைத்தற்குரியமனமும் முழுதுடலத்துளொன்றாய் ஊழ்வயமா
யிருத்தலிற் றப்பநினைக்குமா றெங்ஙனங்கூடுமெனின், ஊழின்வயத்ததாயினும்
அது அல்லலுறுத்துங்கால் உயிர் அம்மனத்தைக் கருவியாகக்கொண்டே அவ்
வல்லலை நுகரவேண்டுமாகையாலும், அங்ஙனங் கொள்ளப்படாதாயின் அல்ல
லுணர்ச்சியுண்டாகாதாகையாலும் அம்மனம் உயிருக்கும் வயமாயிருக்கவேண்டு
மாகையால் அந்நிலையில் அதுகொண்டே, அவ்வல்லல் அநிஷ்டமாயிருப்பதுகண்டு
அதனைத் தப்பநினைத்தல் கூடுமென்க. தப்பநினைத்தலால் அல்லலொழிந்தமை
ஆணிமாண்டவ்யோபாக்கியானத்தாலும், முயற்சியால் அல்லலொழிந்தமை மார்க்
கண்டேயோபாக்கியானத்தாலும் அறிக.

அங்ஙனமாயின், "அன்றெழுதிவைத்தானழித்தெழுதப்போவதில்லை" என்
னும் கலைஞர்குழூஉவழக்கால்வந்த பழமொழிக்கு விரோதமாகாதோ என்னும் வாதி
யைநோக்கி அப்பழமொழியின் குறிப்புப்பொருளால் விரோதமில்லையென்று
பரிஹரிக்கிறார் பின்னிரண்டடிகளாலும். அவ்வடிகளை, முன்னமெழுதினானோலை
இழுகினானே பழுதுகாப்பதில்லையே என்று கூட்டுக. அப்பழமொழியில் அழித்
தெழுதப்போவதில்லை யென்றகுறிப்பால் அவ்வெழுத்து அழித்தற்குரிய தூரிய
வெழுத்துப்போல்வதென்பது பெறப்படுமாகையால் அவ்வெழுத்தெழுதினானை
இழுகினான் என்றார். இஃது இழித்தற்குறிப்புமாம். இழுகுதல் மடலெழுதுவது
போல வண்ணநீரால் எழுதுதல். 'முன்னமெழுதினானோலை' என்றது அன்
றெழுதிவைத்தானென்று சொல்லுகிறாயே அவனெழுதியவோலையென்றபடி;
இதுவு மிழித்தற்குறிப்பு. இதனால் எழுதினவோலை பழுதாகாதென்னும் நல்லூ
ழோலை விலக்கப்பட்டது. இழுகினானேகாப்பதில்லையே என்றது அவ்வோலை
யிற்றன்னா லிழுகப்படுமவற்றைத் தான் ஒருநாளுமழிப்பதில்லை என்பதொன்றே
யன்றி எவ்வாற்றானும் அஃதழியாதவாறு அவனாற் காக்கப்படுமென்பது பெறப்
படவில்லையே என்றவாறு. காப்புடைமை பெறப்படாமையால் அழியுமென்பது
தானே பெறப்படும். பெறவே அழிந்தவிடத்துத் தானிருந் ததனைத் திரும்ப
எழுதுவதின்மையாற் பிறர் அது பாழாயிருப்பதுகண்டு, அப்பழுதுதீரப் பின்னை
யும் திருத்தி எழுதிவைத்துக்கொள்ளக்கூடும் என்று பொருள்படுதலால், இதனை
எடுத்துக்கொண்டபொருளொடுபொருத்திப் பின்னடி யிரண்டிற்கும், 'முற்பட
வெழுதினவோலை பழுதுபட்டால், அப்பழுதுதீரப் பின்னையு மெழுதுவாராத
லான் முன்செய் தீவினைப்பயனை யிப்பொழுதுசெய்யு முயற்சியானே நீங்கலாம்'
எனப் பொருளுரைக்கப்பட்டது. பழுதுதீரப் பின்னையுமெழுதலாவது ஒரு சித்
ரபடத்தில், வேண்டாதவண்ணத்தையும் வடிவத்தையுமொழித்து விரும்பிய
வண்ணமும் வடிவுமமைய வெழுதுவதுபோலத் தீயூழையழித்து ஆங்கு நல்
லூழைநாட்டிக்கொள்ளுதல். 'எழுதினவோலை பழுதுபடாது' என்னும் நல்லூ
ழோலை இங்கு விலக்கப்பட்டதென்னையெனின் எழுதினா னழியானாகையா
லும், உறுவோ னின்புறுமாறு விழைபயனளித்தலால் அவ னதனைத் தப்பநினையா
னாகையாலும் அது பழுதுபடாதாகையால் அது விலக்கப்பட்டதென அறிக.

ஆயின், "அங்கண்விசும்பினகனிலாப்பாரிக்கும்"* என்னும்பாட்டில் 'உறற்பாலயார்க்குமுறும்' என்று கூறியவர்தாமே இங்கு இங்ஙனங்கூறுதல் மாறுபாடாகாதோவெனின், அங்கு ஊழ்வலியுறுத்தினாராதலின் அது தோல்வியுறுஞ்செய்தி சொல்லவொண்ணுதாதலால் அதனைவிடுத்து வென்றியடைந்தசெய்தியையே மேற்கொண்டோதினர்; இங்கு முயற்சியைவலியுறுத்தினாராதலின் இது தோல்வியுற்றசெய்தி சொல்லவொண்ணுதாதலால் வென்றசெய்தியொன்றே மேற்கொண்டோதினர். ஆதலின் மாறுபாடின்றெனவுணர்க. மாறுபாடில்லையாயினும் இரண்டையுங்கூட்டியுணர்வார்க்கு முயற்சியான் ஊழைவெல்லல் ஒருதலையென்னும் தெளிவுபெறப்படாமை முயற்சிக்குத் தடையாகாதோவெனின் ஆகாது; ஏனெனில் முயற்சிக்குத் தடையாயுள்ளன தீமைவிளைவின் ஐயப்பாடும் அதன் றெளிவுமேயல்லது, நன்மைவிளைவி னையப்பாடு தடையின்றி உழவுபோலும் முயற்சியைப்பிறப்பிக்குமாகையால் அது தடையாகாதெனவறிக. இக்கருத்துப்பற்றியே, "யத்நே க்ருதே யதி ந ஸித்யதி கோऽத்ர தோஷ:" என்றார் பிறரும்.

30. நிறையான் மிகுகில்லா நேரிழை யாரைச்
சிறையா னகப்படுத்த லாகா—வறையோ
வருந்த வலிதினின் யாப்பினு நாய்வா
றிருந்துத லென்றுமோ வில்.

எ-து, ஐம்பொறிகளையுநிறுத்து நிறையான்மிகமாட்டாநேரிழையாரைக் காவலானகப்படுக்கவியலா; அகப்படுக்கலாமென்பார்க் கறைகூவுகின்றேன்; வருந்த வலிபெறக்கட்டினும் நாயின்வால் செவ்வேநின்று திருந்துத லென்றுமில வதுபோல எ-று.

(குறிப்பு) 'ஐம்பொறிகளையுநிறுத்து' மென்றது நிறை என்னுஞ்சொல்லின் பகுதிப்பொருளை விரித்துரைத்தவாறு. 'நிறுத்துநிறை' என்றதனை நிறுத்துதலாகியநிறையென விரித்துரைத்துக்கொள்க. ஐம்பொறிகளையு நிறுத்தலாவது அவற்றை நெறியின்புறஞ்செல்லவிடாது செவ்வியநெறியி னொழுகச்செய்தலாம். நிறை என்பதற்கு "நெஞ்சைக் கற்புநெறியில்நிறுத்தல்"† எனப் பொருள் கூறுவர் பரிமேலழகர்; அங்குக் கற்புநிமித்தமும் இங்குக் கற்பழிதனிமித்தமுமாகிய விடயபேதமுடைமையால் விரோதமின்றென அறிக. நிறையான் மிகுதல்-நிறையான் மேம்பாடுடையராதல். கில்லா-கிற்குமென்னும் பெயரெச்சத் தெதிர்மறை. கிற்றல்-வல்லுநராதல். 'மாட்டாநேரிழையார்' என்றது

* இந்நூலின் பதினைந்தாஞ் செய்யுள்.

† திருக்குறள் 6-வது அதிகாரம் (வாழ்க்கைத்துணைநலம்) 7-ஆங்குறளுரை பார்க்க.

சாமர்த்தியமின்றி இந்திரியபரவசராய் நெறியினீங்கிய பரத்தமையுடையமகளிர் என்பதாம். சிறை-தடுத்துக்காத்தல். அகப்படுத்தல்-நெறியினடங்கி யொழுகச் செய்தல். அறையோ என்பது வெல்லும்வேட்கையுடையோன் கூறுங்கூற்றாத லால் 'அகப்படுக்கலாமென்பார்க்'கென அக்கூற்றுநிகழ்தற்கேற்றநிமித்தம் விரித் துரைக்கப்பட்டது. 'அறைகூவுகின்றேன்' என்றது அறையோ வென்றத னுடம் பொடுபுணர்த்தலாற்பெறப்பட்ட தன்மையிடமும் கூவுதற்றொழிலும் விரித் துரைத்தவாறு. 'வருந்தவலிபெறக்கட்டினும்' என்றது நாய்வாலை நிமிர்த்துத் திருத்தக்கருதிக் கீழும் மேலும் செவ்வியசட்டங்களைக் கிட்டியாகவைத்து இறு கக்கட்டினு மென்றபடி. திருந்துதல்-கோடுதலின்றிச் செவ்விதாதல். என்றும் என்றது, "மன்னுப்பொருளு மன்னவியற்றே"* என்றதனால் உம்மையும் இட மும் ஒருங்குகூறியவாறு. ஒகாரம் தொரிநிலைப்பொருள்குறித்துநின்றது. இயல் பானேகோடிய நாய்வாலை யாப்பினாற்றிருத்தவியலாததுபோல, இயல்பானே நிறையழிமகளிரது காமசாரவொழுக்கத்தைக் காப்பினாற்றிருத்தல் இயலாதெனக் கருத்துநோக்கிப் பொருளொடுபொருந்தி யுரைத்துக்கொள்க. ஒருவாற்றானுந் திருந்தாரென ஒருவரை யுரைக்கவேண்டுமிடத்து, **நாய்வாலைநிமிர்க்க யாரா லேழடியும்** எனச் சாதாரணவழக்காய்வழங்கும் பழமொழி இப்பாட்டிற் கொள் ளப்பட்டது. இதனை "ஆலைப் பலாவாக்க லாமோ வருஞ்சுணங்கன், வாலைநிமிர்க்க வசமாமோ"† எனப் பிறரும் எடுத்தாளுவாராயினர். இப்பாட்டாற் கற்பில்லாத மகளிரைக் காவல்செய்தடக்குதல் கூடாதென்பது கூறப்பட்டது. இதனானே அபலைகளானமகளிர்க்குப் பொதுமையினெய்திய காவல், கற்பழிமகளிர்க்கே விலக்கப்பட்டமையால், கற்புடைமகளிர்க் கது துணையாமென்பது மிகந்துபடா தாயிற்று. கற்புக்குக் காவல் வேலியாய்ப்பாதுகாக்குமென்பதை, "அரசவேலியல் லதியாவதும், புரைதீர்வேலியில்லெனமொழிந்து, மன்றத்திருத்திச்சென்றீரவ் வழி, யின்றவ்வேலிகாவாதோ" என்ற சிலப்பதிகாரத்தானு‡ மறிக.

31. ஏமரிது செய்க வெமக்கென்று வேந்தன்
றமரைத் தலைவைத்த காலைத்—தமரவற்கு
வேலின்வா யாயினும் வீழார் மறுத்துரைப்பி
னாலென்னிற் பூலென்னு மாறு.

எ-து, நீரெமராகலானெமக்கிக்காரியத்தைச் செய்துதரவேண்டு மென்று வேந்தன் றமரைத் தலைவைத் தக்காரியத்தினிடத்தேயேவிய

---

* தொல். சொல். கிளவியாக்கம் சூத்திரம் 34.

† இது தனிப்பாடற்றிரட்டில் ஔவைவாக்காகக் காட்டப்பட்டிருக்கிறது.

‡ 23-வது கட்டுரைகாதை. 44-47 அடிகள்.

காலே, அவ்வேவப்பட்டதமர்க ளவ்வேந்தற்காக வேலின்வாயின்கணு யினு மிறவா தெமக்கியலாதென்று மறுத்துரைப்பி னொருவ னால மரத்தை யாலமரமென்றுசொல்லின் மற்றொருவன் பூலாமரமென் றதனோ டொக்கும். எ-று.

(குறிப்பு) எமரிதுசெய்க வெமக் கென்றது வேந்தன் தமரைநோக்கிக் கூறுங்கூற்றாகலான் அதற்கேற்ற நீர் என்னும் எழுவாய் வருவித்துரைக்கப்பட் டது. எமர் என்றது, முதனிலைவகையால் ஒருமைக்கும் பன்மைக்கும் பொது வாய்ப் பிரிப்பப்பிரியாக் கிளை நுதற்பெயர்* ராதலால் என்னின்வேறல்லாதவர், எனக்குஅங்கமாய்த் தாங்குபவர்,என் னுணையைநாட்டுமவர்,என்னையேபற்றியிருப் பவர் என்னுங் கருத்துக்களையுடையதாய் என் காரியத்தைத் தங்காரியமாகச் செய்யக்கடமைப்பட்டவரென்றபடி. இக்கருத்துப்பற்றியே 'இக் காரியத்தைச் செய்துதரவேண்டும்' என்பதற்கு ஏதுவாக்கி, 'எமராகலான்' எனப் பொரு ளுரைக்கப்பட்டது. இது, படைத்தலைவரை யொருகாரியத்திலேவுமரசன் கூறும் இன்மொழியிருக்கும்படி காட்டியவாறு. இதனை, "எனக்குயிரென்னப் பட்டானென்னலாற்பிறரையில்லான், முனைத்திறமுருக்கிமுன்னேமொய்யமர் பலவும்வென்றான், றனக்கியான்செய்வசெய்தேன் றான்செய்வசெய்க"† எனச் சச்சந்தன்கூறியவாற்றானு மறிக. எமக்கு என்றது நானும் நீருமாகிய நமக்கு என உளப்பாட்டுத்தன்மைப்பன்மையாற்கூறினமையா லரசன், தன்காரியம்போ லவர்காரியமாகியகடமையையும் தனக்காகச்செய்துதரவேண்டுமென்றுவேண்டிய வாறாயிற்று. தமர்-இதுவு மேற்கூறியவாறே யொருமைக்கும் பன்மைக்கும் பொது வாகிய கிளை நுதற்பெயராதலால், வேந்தனுகியதனக் குரிமைபூண்டொழுகுமவர் எனப் பொருளுரைத்துக்கொள்க. தலைவைத்தல் என்றது, இது செய்கவென்று அரசன் தானே நேர்நின்றுகூறுங் குறிப்பால், சர்வாதிகாரமும்பெற்ற படைத் தலைவராய்வைத் தேவுதலாயிற்று. பின்னுந் தமரென்றது, தலைவைத்தேவப்பட் டாரும் அவர்கீழுள்ளாருமென்பது தோன்றத் 'தமர்கள்' எனப் பொருளுரைக்கப் பட்டது. 'அவ்வேந்தற்காக' என்றது என்னின்வேறில்லாதநீங்கள் என்காரி யத்தை நுங்காரியமாகச்செய்யக்கடவீரென்று முழுதுரிமையுமளித்தவேந்த னுக்கு எனத் தலைவைக்கப்பட்டார் நெஞ்சில்நினைக்கும் நன்றியறிவுதோன்றும் படி கூறியவாறு. 'வேலின்வாயாயினுமிறவா' தென்றது தலைவைத்தேவிய வுடனே அக்காரியத்தைச் செய்துகொடுக்க வேண்டும்; அதற்குப் பகைவர் தடை செய்வராயின் அப்பகைவரையும்வென்று காரியத்தைமுடிக்கவேண்டும்; பகைவ ரதுபடைவலிமிகுதியாற் றம்படை அழிவுற்றதாயின், தலைவைக்கப்பட்டார்

* தொல். சொல். எச்சவியலில் 'தநநு' என்னும் 14-ஆம் சூத்திரம் சேனா வரையருரை பார்க்க.

† சிந்தாமணி நாமகளிலம்பகம் செய்யுள்—176.

தாமே நேரிற்சென்று பகைவரைத் தாக்கிக் கொல்லுதல், அல்லது அவர் கைவேல் பாயச் சாதல்வேண்டும்; அதுவுஞ்செய்யாதே யென்றவாறு. அரசனுரைத்த வின்சொல்லுக்கு அவ ரத்துணைசெய்வதுஞ் சிறிதேயாமென்பார் வேலின்வா யாயினும்வீழார் என இழிவுசிறப்பும்மைகொடுத்துக்கூறினர். 'எமக்கியலா'தென் றது தலைவைக்கப்பட்டார் கூற்று. இதில் வேந்தனையகப்படுத்திய உளப்பாட்டுத் தன்மைப்பன்மையால் எமக்கென்றும், காரியமுடிவுபோகாதென்னுந்துணிவால் இயலாதென்றுங் கூறியவாறு. மறுத்துரைத்தல்-ஈண் டியலுங்காரிய மின்னதே யாமெனப் பிறிதொன்று துணிந்துரைத்தல். ஆலென்னிற்பூலென்னுமா றென் றது அங்ஙன மறுத்துரைத்தல் இத்தன்மைத்தெனக் கூறுதற்கேற்றதோ ரைதிக மடியாகப்பிறந்த பழமொழிகூறிமுடித்தபடி. அப்பழமொழியுரையுள், 'ஒருவன் ஆலமரத்தை ஆலமரமென்றுசொல்லின்' என்றது வினைகொள்வோனொருவன், தன் வினைசெய்வானைநோக்கிச் சேய்மைக்கண்ணிருந்ததோ ராலமரத்தைச்சுட்டி அதோ ஆலமரமிருக்கிறது பார் என்றுசொல்லின் என்றபடி. 'மற்றொருவன் பூலாமரமென்றதனேடொக்கும்' என்றது, அவ்வினைசெய்வோன் வினைகொள் வோனைநோக்கி, அண்மைக்கணின்றதொரு பூலாமரத்தைச்சுட்டி, இதோ பூலா மரமிருக்கிறது என்றதனே டொக்கு மென்றவாறு. அப்பழமொழியின் ஐதிக மாவது:—பொருளீட்டவிரும்பிய முதியோனொருவன், ஒரூரைச்சென்று, இரவிற் றுயின்று, காலையிலெழுந்து, ஊர்ப்புறத்தேசென்று, பொருட்பயனெய்தும் விழைவுடன், ஆலம்வீழ்தாற் பல்விளக்கக்கருதித் தன் வினைசெய்வானைநோக்கி, ஆலம்வீழ்தறுத்துவாவென்னுங்கருத்தாற் சேய்மைக்கணின்றதோ ராலமரத் தைச்சுட்டி, அதோ ஆலமரமிருக்கிறது என்றுசொல்ல,அதுகேட்டு இளையனாகிய வினைசெய்வான், போகப்பயனுறுதற்குரிய பூலாவளாராற் பல்விளக்கல் நலம் அவ் வளார்கொண்டுவருவேன் என்னுங் கருத்தால் வினைகொள்வோனைநோக்கி, அண்மைக்கண்ணிருந்த பூலாமரத்தைச்சுட்டி இதோ பூலாமரமிருக்கிறது என்று சொன்னனாக, அதுபற்றி அவன், ஆலென்றாற் பூலென்பான் எனவழங்கப்பட் டமையால் அவ்வாறு, வினைகொள்வோர்சொல்லியபடிசெய்யாது வினைசெய் வோர்மறுத்துரைக்குமுரைக்கெல்லாம் ஆலென்னிற்பூலென்னல் என ஒரு வாய்பாடாக வழங்கப்பட்டதென்பதாம். ஆல்விழுதாலும் பூல்வளாராலும் பல் விளக்குவோர் முறையே பொருளும் போகமும் எய்துவர் என்பதை, "வேலுக் குப் பல்லிறுகும் வேம்புக்குப் பற்றுலங்கும், பூலுக்குப் போகம் பொழியுங்காண்- ஆலுக்குத், தண்டா மரையாளுஞ் சாருவளே நாயுருவி, கண்டால் வசீகரமாங் காண்"* என்பதனானறிக. இப்பாட்டால் அரசனாலேவப்பட்ட படைத்தலைவர் முதலாயினர், ஏவியகாரியத்தின் நன்மைதீமையாராயாது, எதிர்மாற்றமுமுரை யாது,தமக்கிறுதியுறுவதும் பாராது,அரசன்சொற்படி தவறாதுசெய்துதீரவேண்டு மென்பது கூறப்பட்டது.

---

* பதார்த்தகுணசிந்தாமணி 1394-ஆம்செய்யுள்.

32. தெருளா தொழுகுந் திறனிலா தாரைப்
பொருளா லறுத்தல் பொருளே—பொருள்கொடுப்பிற்
பாணித்து நிற்கிற்பார் யாவருளர் வேற்குத்திற்
காணியின் குத்தே வலிது.

எ-து, தன்னைத் தேறுதொழுகுந் திறனில்லாதபகைவரைப் பொருளாலேகோறல் காரியமாவது, அப்பகைவரைக்கோறற்குச்சிலர்க்குப் பொருள்கொடுத்தால் அவரைக்கொல்லாது நீட்டித்துநிற்பார் யாவருளர், வேற்குத்திற்கு ஆணியின்குத்தேவலிதாகும் எ-று.

(குறிப்பு) தன்னைத் தேறுதொழுகுதலாவது.—தான் நிரபராதியாயிருக்க அதனை உள்ளவாறுணராது அபராதியெனப் பிறழவுணர்ந்து, எதிர்த்தொறுக்குந் திறனின்மையால் வஞ்சனையாற் நீங்கிழைத்துவருதல். அதாவது இல்லெரியூட்டல் நஞ்சிடல்முதலாகிய தீத்தொழில்களைப்புரிதலாம். பொருளாலறுத்தல் பொருள் எனக் காரணம் காரியமாய் உபசரிக்கப்பட்டது. 'நீட்டித்துநிற்பார்யாவருளர்' என்றது எல்லோருமே விரைந்துசெய்வார் என்றபடி. 'வேற்குத்திற்கு ஆணியின்குத்தேவலிதாகு'மென்றது தாமே நேர்நின்று முனைந்துகோறலினும் மறைந்து பிறிதோருபாயத்தாற்கோறல் தப்பாது என்றபடி. நேர்நின்று கோறலை யவரறிந்து பிறவுபாயத்தாற் றவிர்க்கலாமாகையாலும், மறைந்து பிறருபாயத்தாற்கோறலைத் தவிர்க்கப் பிறிதோருபாயமில்லாமையாலும் பிறவுபாயத்தாற்கோறலே தப்பாதாயிற்று. இப்பாட்டிற்கொள்ளப்பட்டபழமொழி, "வேற்புண்விரைந்தாறும், ஆணிப்புண்ணாறாது" என்றும், "குத்துக்காயத்தைவிடக் கோர்வைக்காயம்பெரிசு" என்றும் நாட்டுவழக்காக வழங்கப்படுகிறது. இதில், குத்துக்காயம் என்றது வேற்குத்துக்காயமும், கோர்வைக்காயமென்றது கழுமரத்திற் கோக்கும் ஆணிக்காயமுமென்று கொள்க.

33. வெஞ்சின மன்னவன் வேண்டாத வேசெயினு
நெஞ்சத்துட் கொள்ப சிறிதுஞ் செயல்வேண்டா
வென்செய் தகப்படாக் கண்ணு மெழுப்புபவோ
துஞ்சு புலியைத் துயில்.

எ-து, வெய்யசினத்தையுடைய அரசன் தன்கீழ்வாழ்வாரைத் தகாதனசெய்தானாயினும், அவன் மனத்திற் கறுவுகொள்ளத்தக்கன சிறிதும் அவன்கீழ்வாழ்வார்க்குச் செய்யலாகாது; எல்லாத்துன்பங்களையுந் தமக்குச்செய் தகப்படாக்கண்ணும் எழுப்புவரோ உறங்குகின்ற புலியைத் துயில் எ-று.

(குறிப்பு) சினம் அரசர்க்கு முற்றக்கடியுங் குற்றமன்மையால அளவிறந்த சினமே கடியற்பாலதாதலால் வெஞ்சினமென்றார். வேண்டாதனசெய்தல் என்பதில் எதிர்மறைக்கு மறுதலைப்பொருளுண்மையால் அது வெறுப்பனசெய்தலாயிற்று; அதாவது கொடுங்கோல்புரிதலாம். 'அவன்மனத்திற் கறுவுகொள்ளத்தக்கன' என்றது அவனாணையைவெறுத்தலும், வேற்றரசனை நாட்டநினைத்தலுமாகிய மனத்தொழில்களாம்; ஏனை வாக்குக் காயங்களாலாகிய வேண்டாதசெயலை அவன்றானே கடிதின் ஒறுத்தடக்குவானென்பது சொல்லவேண்டாதாயிற்று. 'அவன்கீழ்வாழ்வார்க்குச் செய்யலாகாது' என்றது அவன்கீழ்வாழ்வார் செய்யலாகாதென்றவாறு. என்செய்தென்பது என்னும்செய்து என்னும் முற்றும்மை தொக்க வினைத்தொடராதலால் 'எல்லாத்துன்பங்களையுந் தமக்குச்செய்' தெனப் பொருளுரைக்கப்பட்டது. அகப்படாக்கண்ணுமென்றது அது தம்வயப்படாதிருக்கவும் என்றபடி. உம்மை, உயர்வுசிறப்பாய், அகப்பட்டக்கண்ணும் அதுசெய்தலாகாதென்பதுகுறித்தது. எழுப்புவரோ என்றது ஒருவரும் எழுப்பாரென்பதாம். துஞ்சுபுலியைத் துயிலெழுப்புமவன் அதனாற் கொல்லப்படுவதுபோலவே வெஞ்சினமன்னவன் நெஞ்சத்துட் கறுவுகொள்ளுஞ்செய்கைகளைச்செய்வாரும் அவனால் இறுதியடைவார் எனத் திட்டாந்தத்தொடு பொருத்தியுரைத்துக்கொள்க. இதன் பழமொழிப்பொருள், "துஞ்சுபுலியிடறியசிதடன்போல, வுய்ந்தனன் பெயர்தலோவரிதே" எனப் புறநானூற்றுள்ளும்,* "வயப்புலியைவாலுருவிவிடுகின்றீரே"† எனப் பாரதத்துள்ளும் வழங்கப்பட்டது. "உறங்குகிறபுலியையெழுப்ப அது அத்தாளங்கேட்டதாம்" எனவும், துஷ்டனொருவனை யொருவன் கோபமூட்டினன் என்று சொல்லவேண்டுமிடத்துத் "தூங்கும்புலியைச் சுள்ளியிட்டுக்குத்தினன்" எனவும் நாட்டுவழக்காக வழங்கப்படுதலுமுண்டு.

34. பரந்த திறலாரைப் பாசிமே லிட்டுக்
கரந்து மறைக்கலு மாமோ—நிரந்தெழுந்த
வேயிற் றிரண்டதோள் வேற்கண்ணாய் விண்ணியங்கும்
ஞாயிற்றைக் கைம்மறைப்பா ரில்.

எ-து, எங்கும் பரந்து வெளிப்பட்டதிறலினையுடையாரைப் பாசிபோலேயிருக்குஞ் சிலசொற்களையுஞ் செய்கைகளையுமிட்டுக் கரந்து மறைக்கலாமோ, நிரந்தெழுந்த வேயிற்றிரண்டதோள் வேற்கண்ணாய்! விண்ணின்கட் செல்லாநின்ற ஞாயிற்றைத் தங் கையான்மறைப்பாரில்லையாதலான் எ-று.

---

* 73-ஆம் செய்யுள், 7—8 அடிகள்.

† வில்லிபாரதம் சூதுபோர்ச்சருக்கம் செய்யுள்—265.

(குறிப்பு) திறல்-வெற்றி; இது, போரும் கல்வியும் கொடையும் முதலிய ஆண்மைக்குணம்பற்றிவருவதாம். அது பரத்தலாவது உலகெங்குமறியப்பிரசித்தி பெறுதல். பாசி-உவமையாகுபெயர். பாசிபோலிருக்குஞ்சொற்களுஞ் செய்கைகளுமாவன.—நீரிலுள்ளபாசி பிறர்க் கொருதீங்குமில்லதாய் நன்னீர்கொள்பவராலொதுக்கப்படுவதுபோல அவரது நன்னீர்மைகொள்வாரால் ஒதுக்கற்பாலன. கரந்துமறைத்தல்-வஞ்சித்துமறைத்தல்; அதாவது அவர் நன்னீர்மையுடையரெனத் தானறிந்துவைத்தே பிறர் அதனை யறியாவண்ணம் அவரது மெல்லிய குற்றங்களால் மறைத்துப்பேசுதல். 'கையான்மறைப்பாரில்லை' என்றது தாம் பாராது மறைத்துக்கொள்வதல்லது உலகத்தார்க்குத்தெரியாவண்ணம் கையான் மறைக்கவல்லாரில்லை என்றவாறு. மிக்கபுகழுடையாரொருவனை யொருவன் புகழழியப்பேசுமிடத்து, அது பொறுதார் அவனைநோக்கிச் சூரியனைக் கையால் மறைப்பவன் நீதானே என்னும் சாதாரணவழக்கே இப்பாட்டில் எடுத்துக் கொண்ட பழமொழிபோலும். இப்பாட்டால், குணமே யொருங்குடையாருங் குற்றமே யொருங்குடையாரு முலகத்தின்மையால், உலகப்பிரசித்திபெற்ற பெருந்தகையாளரிடத்துள்ள மெல்லிய சில குற்றங்களையே பொறுமைக்குணமுடையார்கூறுவாராயினும் அவை கொள்ளத்தக்கனவல்லவென்பதும்,அவற்றையொதுக்கிக் குணங்களையேபாராட்டவேண்டுமென்பதும் ஒருங்கு கூறப்பட்டன.

35. தமனென் றிருநாழி யீத்தவ னல்லா
னமனென்று காயினுந் தான்காயான் மன்னே
யவனிவ னென்றுரைத் தெள்ளிமற் றியாரே
நமனெய்யை நக்கு பவர்.

எ-து, தன்னையுறவென்று தனக் கிருநாழியாயினுமுதவினவன் தன்னைக்காயினுங் காயுமத்துணையல்லது, நம்சுற்றத்தானென்றிகழ்ந்து தனக்குதவியவன்றன்னை அவனிவனென் றிகழ்ந்துரைத்துத் தான் காயலாகாது; தெய்வத்தையூட்டிய நெய்யைக் கூசாதேநக்குவார் யாவருமில்லையாதலால் எ-று.

(குறிப்பு) தமனென் றிருநாழியீந்தவன்காயினும் (காயும்) அல்லால் நமனென்றெள்ளி அவனிவனென்றுரைத்துத் தான்காயான் எனக் கூட்டுக.'தன்னையுறவென்று தனக் கிருநாழியாயினுமுதவினவன்' என்றது எற்போன் தொடர்புடையான் என அபிமானித்து ஏதேனுஞ் சிறிதுதவினவன் என்றவாறு. இருநாழி-நெற்களவேள்வியி லாதுலர்க்கிடுவதொரு சிறிய அளவு. 'தன்னைக்காயினும் காயுமத்துணையல்லது' என்றது அவனும் காயான், ஒரோவழிக் காய்வானாயினும்

ஈயப்பெற்றானுக்குப் பழியும் பாவமு முண்டாகாதிருக்கவேண்டி, அக்காய்தலவி னொழியுமாறு பொறுத்திருப்பதே நலமாயிருப்பவும் அது செய்யாதென்ற வாறு. ஈண்டுக் காயினென்றது "தொடிற்சுடின்"* என்புழிப்போலத் தன் வினைப்பெயரெஞ்சநின்றமையா லது காயுமென விரித்துரைக்கப்பட்டது. 'நம் சுற்றத்தானென் றிகழ்ந்' தென்றது ஈயப்பெற்றோ னெதிர்த்துக்காய நெஞ்சு துணிதற்குள்ளதோரேதுவை விரித்துரைத்தவாறு. இதனால், தொடர்பில்லாதார் காயின் எதிர்த்துக்காய்தலாகாதென்பது சொல்லவேண்டாதாயிற்று. 'தனக்குத வியவன்றன்னை' என்றது காய்தலாகாதென்பதனை வலியுறுத்தும்பொருட்டு ஈந் தோன் நன்றிபாராட்டற்குரியான் என்பதை நினைப்பூட்டியவாறு. நமநெய்-மந்திரமுடிவில் நம (எனதில்லை) என்றுசொல்லித் தேவரையூட்டுதற்கு வேள் விக்கண்வைத்த நெய். உரையில் ஊட்டியநெய்யை யென்றது ஊட்டியவைத்த நெய்யை யென ஒருசொற் பெய்துரைக்கற்பாற்று. கூசுதற்கேது ஒழுக்கக்கேடும் காரியக்கேடும் உண்டாமென்னும் நினைவாதலால், கூசாதென்றது அந்நினை வின்றி என்றபடி. விரலிற் றீச்சுட்டால் உடனே நாவால்நக்கிப்போக்கல் கொல் லுலைமுதலியவற்றில் ஆதுரர்வழக்கானமையால் அவ்வழக்குப்பற்றி, வேண்டிற் றுதவும் வேள்விக்குரிய நமநெய்காய்ச்சுஞ்சட்டிங்கில் அந்நெய் விரலைச்சுடினும் ந(ம்)மநெய்தானேயென் றிகழ்ந்து நக்குதலைச்செய்யாதவாறுபோல, ஏற்போனை இடுவோன் ஏதேனும் ஒருசமயம் காயுமாயினும் அவனை எமனென்றிகழ்ந்து, அவ்வேற்போன் காய்தலாகாதெனப் பொருளொடுபொருத்தியுரைத்துக்கொள்க. இதன்பழமொழி, தீக்கிடுநெய்யில் நாக்கிடலாமா என்பது. இது வைதிகவழக் காகிய ஒழுக்கநெறிபற்றிவந்த பழமொழி. இப்பாட்டாற் செய்நன்றி மறக்க லாகாதென்பது கூறப்பட்டது.

36. மிக்குடைய ராகி மிகமதிக்கப் பட்டாரை
யொற்கப் படமுயறு மென்ற விழுக்காகும்
நற்கெளி தாகி விடினு நளிர்வரைமேற்
கற்கிள்ளிக் கையுய்ந்தா ரில்.

எ-து, முதன்மையாய மிக்கபொருளுடையராகிப் பிறரான்மதிக் கப்பட்டாரை வறியராம்படிமுயல்வேமென்றுநினைத்தல், தமக்கிழுக்கா கும்; மிகவுஞ் சிறிதா யெளிதாயிற்றாயினும், பெரியவரைமேலுள்ளகல் லைக்கிள்ளிக் கைவருந்துதலைத்தப்பினாரில்லையாதலால் எ-று.

(குறிப்பு) பிறரான்மதிக்கப்படுதலாவது அறத்தாறீட்டித் தக்குழியீதல்பற்றிப் பிறரால் நன்குமதிக்கப்படுதல். 'வறியராம்படிமுயல்வேமென்றுநினைத்தல்' என் பதற்கு அவரது ஆக்கங்காணப்பொறாதார்நினைத்தல் என எழுவாய் வருவித்

* திருக்குறள், 116-ம் அதிகாரம் (பிரிவாற்றாமை) குறள்—9.

துரைத்துக்கொள்க. 'வறியராம்படி முயல்வேமென்று' என்றது அவரது ஆக கத்தை யழிக்கமுயல்வேமென்று என்றவாறு. 'நினைத்தல் தமக் கிழுக்காகு'மென் றதனால், சொல்லலும் முயறலும் இழுக்காமென்பது சொல்லவேண்டாதாயிற்று. இழுக்கு-ஈண்டு முயற்சியும் பயன்படாது தாமும் நலிவெய்தல்பற்றிப் பிறரால் இகழப்படுதல். இங்ஙனம் இழுக்காகுமென்றதனை, ஸ்தாலீபுலாகநியாயம்பற்றிய திருஷ்டாந்தமுகத்தால் நிரூபிக்கிறார், நற்கெளிதாகி என்று தொடங்கி. நற்கெளி தாகிவிடினும் என்பதை மத்திமதீபமாகக்கொண்டு ஈரிடத்துங் கூட்டியுரைத்துக் கொள்க. 'மிகவுஞ்சிறிதாய்'என்றது அழிக்கக்கருதும்பொருள்போற் பெரிய மலையினின்றுமெடுத்துக்கொள்ளும் பொருளின்சிறுமைகூறியவாறு. 'எளிதா யிற்றாயினு'மென்றது அழிக்கும்முயற்சிக்குப் பிற தடையொன்றுமின்றியிருந் தாலும் என்றபடி. கிள்ளுதல்-விரலிடைவைத்து நமட்டல். இப்பாட்டால், மலை போலும் மிக்கசெல்வமுடையாரதுபொருளைக் கெடுக்கமுயலும் பொறாமையுடை யார்முயற்சி பயன்படாதுபோவதுமன்றி, அவர் தாமும் துன்புறுவர் என்பதுபற் றிப் பொறாமையொழிக்கவேண்டுமென்பது கூறப்பட்டது. இதன் பழமொழிப் பொருள் "கற்கிள்ளிக் கையிழந் தற்று"என நாலடியுள்ளும்* எடுத்தாளப் பட்டது.

37. வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி யிருபாலு மத்தகத்
தக்குழி நோக்கி யறஞ்செய்க வல்லதன்றோ
வெய்ப்பினில் வைப்பென் பது.

எ-து, தாம் தேடிச் சேமித்துவைத்தபொருளைத் தமக்குதவும் வைப்பென்றுகருதற்க, தாம் அப்பொருளை நுகர்ந்தொழுகி யிருமைக்கு மழகிதாகத் தகுதியுள்ளவிடம்பார்த்து அறத்தைச்செய்க; அவ்வறஞ் செய்கையன்றோ தாம் தளர்ந்தகாலத்துத் தமக்குதவும் வைப்பென்று சொல்லப்படுவது எ-று.

(குறிப்பு) வைப்பு-கேடுற்றவிடத்து உதவுமாறுவைக்கும் சேமநிதி. 'தம குதவும் வைப்பென்றுகருதற்க' என்றது வைத்தவர்க்குக் கேடுநேராதவழி அது அவர்க்கு உதவுதலின்மையாலும், மிக்ககேடுநேரும் ஒரோவழி அதுவும் அழியு மியல்புடையதாகையாலும் அது தம்மதென்று கருதத்தக்கதன்றென்றவாறு. பின்னர், 'தக்குழிநோக்கியறஞ்செய்க' என்பதனுள், கொடையும் அடங்கினமை யால், 'துய்த்துவழங்கி' என்பதிலுள்ள வழங்குதலை ஒழுகுதலாகக்கொண்டு 'நுகர்ந்தொழுகி' எனப் பொருளுரைக்கப்பட்டது. ஒழுகல் இடையீடின்றிநிகழ்த

* 34-ம் அதிகாரம் (பேதைமை) செய்—6.

லாதலால் 'நுகர்ந்தொழுகி' என்பதற்கு நுகராநின்றுகொண்டேயென்பது கருத்தாகக்கொள்க. 'இருமைக்கும்' என்றது இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்வுக்கு மென்றவாறு. அத்தக வலித்தல்விகாரம். இருவகைவாழ்வுக்கும் அழகாவது இன்பமுடைமையும், அறனுடைமையும். 'அழகிதாக' என்றது அழகுடையதாக என்றவாறு. இம்மைவாழ்வுக்கு அழகுடைமை நுகர்ந்தொழுகுதலும், மறுமைவாழ்வுக்கு அழகுடைமை தக்குழிநோக்கி அறஞ்செய்தலால்வரும் புண்ணியமு மாம். இருவகைவாழ்வுக்கும் இவை இன்பமாகிய அழகையுண்டாக்கும் உரிமையுடையவாதல்பற்றி அவற்றிற்கு அழகுடையவாயின. தகுதியுள்ளவிடம் பார்த்து அறத்தைச்செய்தலாவது: காலதேசபாத்திரங்களையறிந்து, அவர் தளர்வு தீரவேண்டியநன்மைகளைச் செய்யத்தக்க அறச்சாலைகளை நிறுவுதல். இங்ஙனம் அறச்சாலைகளைநிறுவுமவர் வறுமையுற்றஞான்று தாமும் அதனான் ஆதரிக்கத் தக்கோராய்ப் பாதுகாக்கப்பெறுதலால் இம்மைக்கண்ணும், உடல்நீங்கியவழிப் புண்ணியப்பேற்றால், தேவராய்ச்சென்று இன்புறுதலின் மறுமைக்கண்ணும் நன்மையடைதலால், அது "தாம் தளர்ந்தகாலத்துத் தமக்குதவும் வைப்பென்று சொல்லப்படுவ"தாயிற்று. எய்ப்பினில்வைப்பென்பது, ஆபத்திலுதவுதற்குவைக்கும் நிதிபோல்வதொன்றை ஆபத்தநம் என்னும் வடமொழிச்சொலவடையான் வழங்கும் பழமொழி. இது, "ஈசனை யிலங்குஞ்சுடர்ச்சோதியையெந்தையை யெனக்கேய்ப்பினில்வைப்பினை" எனப் பெரியதிருமொழியுள்ளும்* வழங்கப்பட்டது. இப்பாட்டாற் பெருஞ்செல்வமுடையா ரறஞ்செய்யுமாறும், அதன் பயனும் ஒருங்கு கூறப்பட்டன.

38. உற்றா னுறாஅ னெனல்வேண்டா வொண்பொருளைக்
கற்றானை நோக்கியே கைவிடுக்க—கற்றான்
கிழவ னுரைகேட்குங் கேளா னெனினு
மிழவன் றெருதுண்ட துப்பு.

எ-து, தனக்குச் சுற்றத்தான் அல்லன் என்று ஆராயவேண்டுவதில்லை; தனது ஒள்ளியபொருளைக் கற்றறிந்தோனைநோக்கியே யவன் மாட்டேகைவிடுக்க; கற்றவன், தன்னையாக்கிய தலைவன்சொல்லைக்கேட்டுச்செய்யும்; செய்யானாயினும், எருதுண்ட துப்பு ஒருவற் கிழவன்று; ஆதலால் அவன் கொண்டபொருளும் கடைக்காற் றனக்கே யுதவும் எ-று.

(குறிப்பு) இப்பாட்டு, தலையாயவினையாளனைத் தலைவன் வைத்தாளுமாறு கூறுகின்றது. 'கற்றா'னென்றது 'கிழவனுரைகேட்கும்' என்னுங் குறிப்பால், கிழவனுரைகேட்டுச் செய்தற்குரிய தொழிற்றுறைக்கல்விகற்றோன் எனப் பொருள்படு

* 7-ம்பத்து, 10-ம்திருமொழி. 4-ம்பாசுரம்.

தலால், அதற்கேற்ப 'ஒண்பொருள்' என்றது புகழொடுபொருந்திய பொருள்வருவாய்க்குரிய தொழிற்றுறையையெனக் கொள்க. 'தனக்குச் சுற்றத்தான் அல்லன் என்று ஆராயவேண்டுவதில்லை'என்றது மிக்கபொருள்படைத்தாெனாருவன், அப்பொருளைப் பாதுகாத்து மேலும்வளர்த்தற்குரிய வினையாளனைத் தெரிந்தெடுக்குமிடத்து, பொதுவாக இவன் நம்சுற்றத்தானாதலால் நம்பொருளைப் பாதுகாக்குந் தொழிற்றுறைவினைக்கு உரியன், இவன் நம் சுற்றத்தா னல்ல னாதலால் அவ்வினைக்கு உரியனல்லன் என ஆராய்ந்து சுற்றத்தானாயிருப்பவனையே அவ்வினைக்குரியனாய்த் தெரிந்தெடுப்பது சாதாரணவழக்காயிருப்பினும், ஆராயப்படுவான் அத்தொழிற்றுறைவினையிற்பயின்று தேர்ச்சிபெற்றானாயிருப்பானாயின் அச்சிறப்புப்பற்றி அங்ஙன மாராயவேண்டுவதில்லையென்றவாறு.'ஒள்ளியபொருளை' என்றது புகழொடுகூடிய பொருள்வருதற்குரிய தொழிற்றுறையை யென்றபடி. இதுவே தொழிற்றுறைக்கல்விகற்றானைநோக்கிக் கைவிடுதற்குரிய செயப்படுபொருளாயிற்று என்பதை, வினைக் கைப்பொருளை, பின்னர் "மறந்தானுந் தாமுடைய தாம்போற்றி னல்லாற், சிறந்தார் தமரென்று தேற்றார்கை வையார்"*எனத் தமராயிருப்பினும் தெளியப்படாதாரிடம் கைவிடுதல்கூடாதென விலக்கப்பட்டமையானும் அறிக. 'கற்றறிந்தோனைநோக்கி' என்றது, இவன் பொருள்செய்யும் தொழிற்றுறைநெறி கற்றறிந்தோனா? அல்லனா? என் றாராய்ந்து கற்றறிந்தானெனத் தெளிந்து அவன் அது கற்றறிந்தமையேநிமித்தமாகக்கொண்டு என்றவாறு. இதனால் வினைக்குரிமைநாடுமாறு கூறப்பட்டது. 'கைவிடுக்க'என்றது தன் வயமாய் வையாது அவன்வயமேயாக்குக என்றவாறு. கைவிடாது தன்வயமாயும் வைத்திருக்குமாயின் அதன் ஆக்கக்கேடுகள் அவன்பொறுப்பாகாமையாலும், ஒரு வினைக் கிருமூப்பு உதவாதாகலானும், அது நன்குசெல்லாதென்பது கருத்தாகக் கொள்க. இதனால் வினைக்குரிமைநாடியபின்றை அவனை அதற்குரியனாக்க வேண்டுமென்பது கூறப்பட்டது. கைவிடுத்தவழி அவ்வினைக்களத்தில் அவன் சொல்லே செல்லவேண்டுமாகையால், தலைவன், தனக்கநுகூலமாகுமவற்றைத் தானேசொல்லவும், அது செல்லவும் இடமில்லாதகுறையுளதெனக் கொள்ளலாகாதென்பார், 'கற்றான் கிழவனுரைகேட்கு' மென்றார். 'கற்றவன் தன்னையாக்கியதலைவன்சொல்லைக் கேட்டுச்செய்யும்' என்றது: பொருள்செய்யும்நெறியறிந்த வினையாளன் தன்னை வினைக்குரியனாக்கியதலைவன், தனக் கநுகூலமாகச் சொல்லுமவற்றைக்கேட்டு அவனுக்காக்கமுண்டாகுமாறு தவறாதுசெய்வன் என்றபடி. 'கேளானெனினும்' என்றது தலைவன் உலோபகுணத்தாற் செலவுசுருக்கச் சொல்லுவது ஒரோவழி நூலொடும் நுணுகியஉணர்வொடும் பொருந்தாதவிடத்து அதனைக்கேளாதே பிறிதுறச்செய்வானாயினும் என்றபடி. 'எருதுண்டதுப்பு ஒருவற் கிழவன்று' என்றது அவ்வினைக்களத்தினூட்டத்தி லவன் கேளாதுசெய்யும்

---

* இந்நூலின் 43-ம் செய்யுள்.

பொருள்விரயமானது, தலைவனது கருத்தைக்கடந்து உழவனூட்டும் எருத்தி னுணவுபோல நட்டமாகாதென்பதாம். அதாவது அவ்வுணவுமிகுதியாலுண்டாம் பொருட்செலவினின்றும் எருத்தின் உடல்வளர்ச்சியாலுண்டாம் விலைமதிப் பேற்றமும், உழைப்புமிகுதியாலுண்டாம் விளைபயனேற்றமும் ஆகிய பொருள் வரவுமிகுவதுபோலக்கிழவனைக்கேளாதுவினைக்களத்தையூட்டும்பொருட்செலவி னின்றும் அவ்வினைக்களத்தின் உடல்வளர்ச்சியின் விலைமதிப்பேற்றமும் வருவாய் மிகுதியுமாகிய பொருள்வரவு மிக்கிருக்குமென்றவாறு. 'ஆதலால் அவன்கொண்ட பொருளும்கடைக்காற்றனக்கேயுதவும்' என்றது அத்தொழிற்றுறையூட்டத்தின் பொருட்டுக் கற்றோன்கொண்டபொருளும் வருவாய்மிகுதியால் முடிவிற் பொரு ளுடையானுக் குதவுமெனக் கற்றோனைவைத்தாளுதலாலுண்டாகும் நன்மை கூறியவாறு. 'எருதுண்டவுப்பு'என்ற பாடத்தில்,'உப்பிட்டவரையுள்ளளவுநினை' என்பதிற்போல உப்பென்பதும் ஈண்டு உணவை யுணர்த்தியதென வுணர்க. காளைதின்றது பாழாகாது எனவும், எருதினட்டம் உழுதாற்றீரும் எனவும் உழவர்குழூவழக்கால்வந்த பழமொழிப்பொருள் இப்பாட்டிற் காட்டப்பட்டது. காளைதின்றதென்றது காளைக்குக் கிழவனுரைகேளாது வேண்டுமளவு உழவ னூட்டும் பருத்திவிதைத்தொக்கு முதலியன.

39. நாட்டிக் கொளப்பட்டார் நன்மை யிலராயிற்
காட்டிக் களைது மெனவேண்டா—வோட்டி
யிடம்பட்ட கண்ணு யிறக்குமை யாட்டை
யுடம்பட்டு வௌவுண்டா ரில்.

எ-து, தம்மாலே யாக்கிக்கொள்ளப்பட்டார் தாமேவப்பட்ட காரி யத்தின்கணின்று தம்மையேவினார்க்கு நன்மையாவதைச்செய்கிலரா யின் அச்செய்யாமையைப் பிறர்க்கறிவித்துக் காரியத்தின்கணிறுத் தலைக்களைவேமென்று கருதாதே,குழைகளையோட்டியிடமுண்டாகவே யகன்ற கண்ணினையுடையாய்! சாவக்கடவமையாட்டை யுடம்பினை யட்டுக் குருதிகொண்டவரில்லை எ-று.

(குறிப்பு) இப்பாட்டு, இடையாயவினையாளரும் தலைவரும் இவ்வாறொரு முகற்பாலரென்பது கூறுகின்றது. 'தம்மாலே யாக்கிக்கொள்ளப்பட்டார்' என் றது தலைவராற் றம்வினைக்குரியராக்கிக்கொள்ளப்பட்டார் என்றபடி. 'தா மேவப் பட்டகாரியத்தின்கணின்று' என்றது தலைவர் வினையாளராகிய தம்மை யேவிய காரியத்தில் தாம் தலைமையுடையராய்நின்று என்றவாறு. நன்மையாவதைச் செய்தலாவது: அக்காரியம் பொருள்வருவாயான்(முன்னையநிலையின்)மிக்கிருக்கு மாறுசெய்தல். 'அச்செய்யாமையைப் பிறர்க்கறிவித்து' என்றது அங்ஙனம் பொருள்வருவாய்மிக்கிருக்கச்செய்யாமையே தவறெனத் தாம் கருதியது அத்

தொழிற்றுறையிலுள்ள பிறருமறிந்து அவரும் அத்தவறுசெய்யாதிருக்க அறிவுறுத்துதல், பொருளொன்றேநோக்கிய தலைவரதியல்பென்பது கூறியவாறு. காரியத்தின்கணிறுத்தலைக் களைதலாவது : வினைக்குரியராகநாட்டியிருத்தலை யொழித்தல். 'களைதும்' என்றது கருதுவார் நெஞ்சினையகப்படுத்திநினைக்கும் உளப்பாட்டுத்தன்மைப்பன்மையாதலால், 'களைவேமென்றுகருதாதே' என முன்னிலையொருமையோடுகூட்டி முரணின்றிப் பொருளுரைக்கப்பட்டது. அது அவரை யறியாதுநாட்டிய தம் குற்றமுணராது அவரை அங்ஙனங் களைவேமென்றுகருதல் ஆண்மைத்தன்மையன்று என்பதுதோன்ற மகடூஉமுன்னிலையாகவே பயனிலைப்பொருள் கூறப்பட்டது. 'குழைகளை' என்றது ஓட்டுதற்குரிய செயப்படுபொருள் விரித்துரைத்தவாறு. 'குழைகளை .........கண்ணாய்' என்றது மகடூஉமுன்னிலை. 'இறக்குமையாட்டை, யுடம்பட்டுவௌவுண் டாரில்' என்றது எடுத்துக்கொண்டபொருளுக்கேற்றதொரு திட்டாந்தங் காட்டியவாறு. 'மையாடு'-இருபெயரொட்டு; வெள்ளாட்டுக்கடாய் என்பது பொருள். இங்குக் காட்டப்பட்ட திட்டாந்தத்தாற் சாவக்கிடக்கும் மையாடு அதனையுடையானுக்கு ஒருகேடும் பயவாதிருக்கச்செய்தே அது கிடையாடுகளைச் சினைப்படுத்தி ஆட்டைப் பலுகச்செய்யாதிருப்பதே ஒருகுற்றமாகக்கருதி அதனைக் கொல்லலாகாதவாறுபோல, ஒருவினையாளனைநாட்டிய தொழிற்றுறையில் அவனால் நட்டமொன்றுமில்லாதிருக்கச்செய்தே மிக்கலாபம் இல்லையென்பது காரணமாகத் தலைவன் அவனை அவ்வினையினின்றுநீக்குதல் கூடாதென்பதும், அவ் ஆடு, உடையான் மருத்துவமுஞ்செய்யாது கொல்லவுங்கொல்லாது உபேக்ஷித்திருக்குமளவில், தானே இறந்துபடுமதுபோல, முன்னைய நிலையினின்று மிக்கலாபங் காட்டமாட்டாத தொழிற்றுறைவினையாளன், தலைவன் தன்னை உபேக்ஷித்திருப்பதுகண்டு தானாய் விரைவில் அவ்வினையாட்சியினின்றும் விலகிவிடுவனென்பதும் ஒருங்குபெறப்பட்டன. **சாகக்கிடக்கும்வெள்ளாட்டை யேறிமிதித்துக் கொல்வானேன்** என இடையர்குழுவழக்கால்வந்த பழமொழிப்பொருள் இப்பாட்டிற் காட்டப்பட்டது. முட்டுக்கடாயை வெட்டிப்பலியிடுவர் என்பது இதன் குறிப்பாதலால், நட்டங்காட்டும் கடையாயவினையாளனை அவ்வினையாட்சியினின்றும் காட்டிக் களைவரென்பது குறிப்பாற்போந்த குறிப்பாயிற்று.

40. பயனோக்கா தாற்றவும் பாத்தறிவொன் றின்றி
யிசைநோக்கி யீகின்ற ரீகை—வயமாப்போ
லாலித்துப் பாயு மலைகடற் றண்சேர்ப்ப
**கூலிக்குச் செய்துண் ணு மாறு.**

எ-து, அருளினாற் பிறர்க் கொன்றைக்கொடுத்தாற் றமக்கு மறுமைக்கண் பயக்கும் பயனை ஆராயாதே, மிகவும் பகுத்தறியுமறிவொன்றின்றிப் புகழின்பொருட்டு ஈகின்றாரீகை, புலிபோல ஆலித்துப்பாயா நின்ற அலைகளையுடைய கடற்சேர்ப்பனே! கூலிக்குத் தொழில்செய்துண்ணுநெறியோடொக்கும் எ-று.

(குறிப்பு) இப்பாட்டு ஈகையின்றிறம் உணர்த்துகின்றது. அருளினாற் பிறர்க்கொன்றைக்கொடுத்தலாவது: அருள்பிறத்தற்குரியராய் ஓதியுணர்ந்தொழுகும் வறுமையுடைய சற்பாத்திரங்களும், பிறதொழிலாற் பொருள்தேடுதற்குரியரல்லாத களைகணற்றவருமாகிய இரவலர்க்கு அவர் இடர்தீர விரும்புவதொன்றைக் கொடுத்தல். இதுவே இசையின்வேறாகிய மறுமைப்பயன்பயக்குமாதலாற் 'பயனோக்கா'தென்றதன் குறிப்பால் விரித்துரைக்கப்பட்டது. 'ஆற்றவும்' என்பது பாத்தறிவினது இன்மைக்குவிசேடணமானமையால் அம்மிகுதி அதன் எதிர்மறையின்சிறுமையாற் குறிக்கவேண்டுமாகையால் 'மிகவும்பகுத்தறிவொன்றின்றி' என்றதற்குப் பகுத்தறிவு சிறிதுமின்றி என்பதே கருத்தாகக்கொள்க. இதனாற் பகுத்தறிவு சிறிதுவிரவினும் அறப்பயனளிக்குமென்பது குறிப்பாயிற்று. பகுத்தறிவாவது: இவர் எளியர், இவர் வலியர், இவர் ஒழுக்கமுடையோர், இவர் ஒழுக்கமில்லோர், இவர் ஓதினார், இவர் ஓதாதார், இவர் களைகணில்லார், இவர் களைகணுள்ளார் எனப் பகுத்து, ஓதியுணர்ந்தொழுகும் வறிஞர்களும், பிறவழியாற் பொருளீட்டுந் தகுதியில்லாத களைகணற்றாரும் அறக்கொடைக்குரியரென உணர்தல். இவ்வுணர்வின்றித் தம்மைப்புகழ்வாரையேநோக்கிக் கொடுக்கும் கொடைக்கு அப்புகழொன்றே பயனாயொழிதலால் அதனை 'இசைநோக்கியீகின்றாரீகை'என்றார். இவ்வீகைஉயர்ந்தோர்க்குரியதன்றென்பார் 'இசைநோக்கியீகின்றாரீகை'என அவர்க்கே யுரியதாக்கிக்கூறினார். ஈண்டு ஈகையென்று ஒழிந்தாராயினும் உவமையான் அவ்வீகையின்பயனாகிய இன்பநுகர்ச்சியென்பதே கருத்தாகக் கொள்க. ஆலித்து-ஆரவாரித்து. கடல்சேர்ப்புக்கும், தட்பம்சேர்ப்பனுக்கும் தனித்தனி விசேடணமாதலால் இயைபான் ஒருதொடராகக் கூறுதல்பற்றிக் கடற்சேர்ப்பனேயெனப் பொருள்கூறிவிடுத்தார். தட்பம்-தண்ணளி, 'கூலிக்குத்தொழில் செய்துண்ணுநெறியோடொக்கு' மென்றது, அற்றைக்கூலிவேலைசெய்து அதன் பயனை அவ்வப்பொழுதோடு உண்டுகழிக்கும் இன்பநுகர்ச்சியோடொக்குமென்றவாறு. பாத்தறிவின்றி இசைநோக்கியீகின்றாரீகையின் இன்பநுகர்ச்சி இங்ஙனம் தொழுதுண்சுவைநுகர்வோடொக்குமென்றமையால் இதனின்வேறாய் மறுமைப்பயனோக்கிப் பாத்தறிந்தீயுமீகையின் இன்பநுகர்ச்சி உழுதுண்சுவையோடொக்குமென்பது குறிப்பாயிற்று. ஆகவே பொழுதெல்லாம் அற்றைக் கூலிக்குழைத்து அன்மையிற்கிடைக்கும் சிறுகூழைநுகர்ந் தின்புறுதலைக்காட்டிலும் நன்னிலங்களிலே பருவத்தில்விதைத்தவை பலவாய்ப் பின்விளையும்

பெருங்கூழைத்தொகுத்து அதனை நுகர்ந் தின்புறுதல் சிறந்ததாவதுபோலப் புகழ் நோக்கிக்கொடுப்பதால் இம்மையின் அண்மையினுகரும் இசைநுகர்ச்சியைக் காட்டிலும், சற்பாத்திரங்களிற் காலமறிந்துகொடுக்கும் புண்ணியநுகர்ச்சி சேய்மைக்கண்ணதாயினும் பெரிதாதலால் அது சிறந்ததெனக் கருத்துநோக்கிப் பொருளொடுபொருத்தியுரைத்துக்கொள்க. இதனால் இசைநோக்கியீயுமீகையி னின்றும் அறனோக்கியீயும் ஈகை சிறந்ததென்பது பெறப்பட்டது. ஆயின், "அறவிலை வாணிக னாஅ யல்லன்"* என அறம்நோக்கியீயுமீகை பழிக்கப்பட்ட தன்றோவெனின், அன்று. அறப்பயனளிக்கு மதனையே பயனோக்காதுபுரிவான் என்பதுபற்றி ஈவோனைச் சிறப்பித்தவத்துணையல்லது பாத்திரமறிந்தீயுமதனைப் பழித்ததன்றெனவும், அறவிலைவாணிகனாகாதான் இசைவிலைவாணிகனுமாகா னாகையால் அவனது ஈகை இசைநோக்கிய ஈகையன்றெனவும் உணர்க. சான்றோர்க்குரிய கொடைமடமு மிசைநோக்கியதன்றாதலால் அதன்சிறப்பும் இதனின் வேறுபடத் தனியேகூறுப. தொழுதூண்சுவையி னுழுதூணினிது என்னும் பழமொழிப்பொருள் இப்பாட்டிற் கூற்றாலுங் குறிப்பாலும் காட்டப்பட்டது. ஒருவரது குறைவுடையவாழ்க்கையைக் கூறுமிடத்து "என்ன? அற்றைக் கூலிப்பிழைப்பு" என நாட்டுவழக்காய்வழங்கும் குறிப்புமொழியே இப்பாட்டிற்கு எடுத்துக்கொண்ட பழமொழி எனினும் அமையும்.

41. வெள்ளம் வருங்காலை யீரம்பட் டஃதேபோற்
கள்ள முடையாரைக் கண்டே யறியலா
மொள்ளமர்க் கண்ணா யொளிப்பினு முள்ளம்
படர்ந்ததே கூறு முகம்.

எ-து, † ... ... ... ... ...

... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... எ-று.

---

* புறநானூறு, செய்—134.

† இப்பாட்டுரை கிடைத்திலது. கிடைத்தால் எழுதிக்கொள்ளும்படி இடம் விடப்பட்டது.

(குறிப்பு) கண்டு அறியல் என்பவற்றை உவமைக்கண்ணுங் கூட்டுக. 'வெள்ளம்வருங்காலை யீரம்பட்டது கண்டறியல்போல்' என்றது நீர்வேட்கையுடையானொருவன், நீரறவறண்டதாய்த் தோண்டியவழி நீரூறக்கடவதாயிருப்பதொரு நீர்க்காலாகிய ஓடையைத் தோண்டுழி யீரம்பட்டதுகண்டு, அதன்கண் உண்ணீருண்டென்று அநுகூலத்தையறிதல்போல என்றவாறு. 'கள்ளமுடையாரைக் கண்டேயறியலாம்' என்றது தம்முள்ளக்கிடக்கையை வெளியிற்காட்டாத மனக்கள்ளமுடையோரை அவரோடு உரையாடுங்காலத்துநிகழும் அவரது முகக்குறியாகிய கருவிகொண்டே அவரது மனத்திற்கிடக்கும் செற்றமாகிய பிரதிகூலத்தை அறியலாம் என்றவாறு. இஃது ஒருவகை ஒப்பலொப்பு. 'ஒள்ளமர்க்கண்ணாய்' என்றது மகடூஉ முன்னிலை. 'ஒளிப்பினுமுள்ளம், படர்ந்ததேகூறு முகம்' என்றது தம் மனக்கிடக்கையைப் பிறரறியாவாறு அவ ரொளிக்குங்கருத்துடையராயினும் அவர் மனத்திடைமிக்கதனையே முகங்கூறுமாதலால் என்றவாறு. இது மனக்கள்ளமுடையாரைக்கண்டறிதற்கு ஒரு கருவிகூறியபடி. பட்டஃதேபோல் என்றதில் ஆய்தம் விரித்தல்விகாரம். ஏகாரம்-இசைநிறை. இதனால் அகக்கள்ளமுடையாரைக் குறிகளானே அறிந்து விலக்கவேண்டுமென்பது கூறப்பட்டது. அகத்திலுள்ளது முகத்திலேதோன்றும் என்னும் பழமொழிப்பொருள் இப்பாட்டிற் காட்டப்பட்டதுபோலும். இவ்வாறு, "முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங், காயினுந் தான்முந் துறும்", "அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங், கடுத்தது காட்டு முகம்"* எனவும், "அகம் பொதிந்த தீமை முகமுரைக்கு முன்ன, முகம்போல முன்னுரைப்ப தில்" "ஒருவன், முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை"† எனவும் பிறரும் கூறுவர்.

42. விளிந்தாரே போலப் பிறராகி நிற்கு
முளிந்தாரைத் தஞ்ச மொழியலோ வேண்டா
வளிந்தார்க ணாயினு மாராயா னாகித்
தெளிந்தான் விளிந்து விடும்.

எ-து, எப்பொழுதும் வெகுண்டாரேபோலப் பிறராகிநிற்கும் ஈரமற்றாரைத் தேறவேண்டாவென் றெளிதாகமொழிந்து கற்பிக்க வேண்டுவதில்லை; தமக் கன்புடையார் ஈரமுடையார்மாட்டும் ஆராயானாகித் தெளிந்தான் கெடும் எ-று.

(குறிப்பு) 'ஈரமற்றாரை' யென்றது அன்பும் அளியுமில்லாத வன்கண்ணரை யென்றவாறு. 'தேறவேண்டா' என்றது மொழியலுறுதற் கெடுத்துக் கொண்ட ஈரமற்றாரையென்னுஞ் செயப்படுபொருளுக் கவாய்நிலையான்வந்த

* திருக்குறள் 71-ம் அதிகாரம் (குறிப்பறிதல்) குறள்—7. 6.

† நான்மணிக்கடிகை-செய்—46, 69.

பயனிலைகொடுத்து முடித்துக்காட்டியவாறு. தஞ்சம்-எளிதென்னும் பொருளுணர்த்துவதோ ரிடைச்சொல்; இதனை, "தஞ்சக் கிளவி யெண்மைப் பொருட்டே"* என்பதனு லறிக. எளிதாகமொழிதலாவது விளிந்தாரேபோலப் பிறராகி நிற்கு முளிந்தாரை யாரும் இயல்பானே ஈரமற்றாரென்பது தாமேயறிந்து தேறுராதலால், சொற்கள் அறிவுறுத்துமாற்ற லிலவாமாறு தேறவேண்டாவென மொழிதல். 'மொழியலோவேண்டா' வென்றது மேற்சொல்வதன் கைமுதிக நியாயசித்தமாமென்றவாறு. ஓகாரம் தெரிநிலைப்பொருள்குறித்துநின்றது. அளிதல் மென்மைக்குறிப்பானமையால் அக்குறிப்புடைய அன்பும் ஈரமும் அதன் பொருளாயின. ஈரம்-அளி. ஒருவன் அரசன்மாட்டு அன்பும் ஈரமுமுடையானேயாயினும் அவனை உபதைகளான் ஆராயாது தெளிந்து அரசன் தன்காரியத்தை மேற்கொள்ளவைப்பின், பின் பவன் அன்பும் அளியும், அறம் பொருளின்ப முயிரச்சமென்னு நிமித்தங்களாற் போக்கப்பட்டுழிக் கீழறுத்துக்கெடுப்பானுகையால் அவனை உபதைகளானுந் தெளியவேண்டுமென்பார், 'அளிந்தார்க ணாயினு மாராயா னாகித், தெளிந்தான் விளிந்து விடு' மென்றார். அறவுபதைமுதலியவற்றாற் றெளியுமாற்றை, "அறம்பொரு ளின்ப முயிரச்ச"† மென்னுங் குறளுரையானறிக. அளிந்தார்கணாயினுமென்னும் உம்மை உயர்வுசிறப்புணர்த்தினமையான் 'முளிந்தாரைத்தஞ்சமொழியலோவேண்டா' என்றது கைமுதிகநியாயசித்தமென்பது பெறப்பட்டது. விளிந்துவிடுமென்றது தேற்றக்குறிப்பு. ஆராயாதுசெய்வது சீராகாது என்பது இதன் பழமொழி. இப்பாட்டு, "ஆய்ந்தாய்ந்துகொள்ளாதான் கேண்மை கடைமுறை, தான்சாந் துயரந் தரும்"‡ என்னுங் குறட்கருத்தைத் தழுவியது.

43\. மறந்தானுந் தாமுடைய தாம்போற்றி னல்லாற்
சிறந்தார் தமரென்று தேற்றார்கை வையார்
கறங்குநீர் காலலைக்குங் கானலஞ் சேர்ப்ப
விறந்தது பேர்த்தறிவா ரில்.

எ-து, தாமுடையபொருளைத் தாம் பாதுகாத்தலல்லது நமக்குச் சிறந்தா ரிவரென்றுதேறித் தேறப்படார்கையின்கண் மறந்தானும் வைக்கலாகாது; கறங்குநீர் காலலைக்குங் கானலஞ்சேர்ப்பனே! தம் கையினின்றும் போயபொருளை மீட்டறிவாரில்லை யாதலால் எ-று.

---

* தொல், சொல். இடைச்சொல்லியல். சூத்திரம்—18.

† திருக்குறள் 51-ம் அதிகாரம் (தெரிந்துதெளிதல்) குறள்—1.

‡ திருக்குறள் 80-ம் அதிகாரம் (நட்பாராய்தல்) குறள் 2.

(குறிப்பு) 'தாமுடையபொருளை' என்றது தம்வயமாகவேயிருத்தற்குரிய கைப்பொருளை என்றபடி. 'நமக்குச்சிறந்தாரிவரென்றுதேறி' என்றது நமக்குச் சிறந்தவுறவினராதலால் இவர் நம் கைப்பொருளைப் பாதுகாத்துதவுவர் எனத் துணிந்து என்றவாறு. 'தேறப்படார்கையின்கண்' என்றது உபதைகளாற் றேறப்படாதார்வயமாக என்றவாறு. 'மறந்தானும்வைக்கலாகா'தென்றது வைக்கலாகாதென்பதை மறவாதொழுகவேண்டும் என்றபடி. 'கையினின்றும்போன பொருளை மீட்டறிவாரில்லை' என்றது எடுத்துக்கொண்டபொருளுக்கேற்றதொரு பழமொழிப்பொருள்கூறியவாறு. அப்பொருளாவது ஒருவன்கையினின்றும் பிறனொருவன் கொண்டபொருளை அவன்கொடாது திரும்பக்கொள்ளுமாறு அறிவார் ஒருவருமில்லை என்பதாம். இது ஏது; ஆதலால் தேறார்கைவைக்கலாகாதென முடிக்க. இதன் பழமொழி போனதுபோனதுதான் என வழங்கும் உலகவழக்கெனவுணர்க. இது "வித்தம்பராஸ்த ஹஸ்தகதம்" என வடமொழியுள்ளும் "பூண்டவிங்குன்னைவிட்டுப் போனதுபோன தின்றே" எனத் திருவாலவாயுடையார்திருவிளையாடற்புராணத்துள்ளும்* வழங்கப்பட்டது.

44. கையார வுண்டமையாற் காய்வார் பொருட்டாகப்
பொய்யாகத் தம்மைப் பொருளல்ல கூறுபவேன்
மையார வுண்டகண் மாணிழா யென்பரிவ
செய்யாத வெய்தா வெனில்.

எ-து, தம்மைக்காய்வார் கைப்பொருளை யவர்கொடுக்க நிறையக்கொண்டு சிலருண்டமையால் அக்காய்வார்க்காக உண்மையன்றிப் பொருளல்லாதகுற்றங்களைச் சொல்லுவராயின், மையாரவுண்டகண் மாணிழாய்! அதற்கு என்காரணத்தாற் பரிவதாம்; செய்யாதகுற்றங்கள் தமக்குக் குற்றமாகாவாயின் எ-று.

(குறிப்பு) கை-கைப்பொருள். பின்வருதல்நோக்கி அப்பொருட்குரியராகிய காய்வார் என்னும் அடை கூட்டியுரைக்கப்பட்டது. 'அவர்கொடுக்க' என்றது அவரறியாது தாமே கவர்ந்துண்ணினும் அது சொல்லார் என்றவாறு. 'நிறையக்கொண்டு' என்றது சிறிதுகொண்டாரும் அது சொல்லார் என்றவாறு. 'சிலருண்டமையால்.........கூறுபவேல்' என்றது பலரும் இங்ஙனம் கொண்டுண்டு......கூறுர் என்றவாறு. 'அக்காய்வார்க்காக' என்றது அங்ஙனங் கொடுத்துதவி யேவிய பகைவர்பொருட்டாக என்றவாறு. தம்பொருட்டில்லாமையால் அவர் குற்றங்கூறுஞ் சொற்களை உறுதியுறச்சொல்லாரென்பது குறிப்பு. 'பொருளல்ல' என்றது பொருளாகக்கொள்ளத்தகாதனவென்னும் பொருளுடையுதாய்

* 48-வது வரகுணனுக்குச் சிவலோகங்காட்டியதிருவிளையாடல், செய்—21.

இங்குக் குற்றங்களை யுணர்த்தினமையால், பொருளல்லாதகுற்றங்களை எனப் பொருளுரைக்கப்பட்டது. தம்மைச்சொல்லுவாராயின் எனக் கூட்டுக. 'சொல்லு வாராயின்' என்றது ஒரோவழிச் சொல்லுதல் இயல்பென்றவாறு. 'என்கார ணத்தாற்பரிவதாம்' என்றது தாம் அக்குற்றத்தைச் செய்யாமையானும், அவர் அது சொல்லுதற்குக்காரணம் பிறிதுண்மையானும், பரிதற்கு ஒருகாரணமும் இல்லாமையாற் பரியவேண்டா வென்றவாறு. 'செய்யாதகுற்றங்கள்' என்றது குற்றங்களைச்செய்யாமை என்றபடி. எய்தாவெனின் என்றதற்குக் குற்றங்க ளாக எய்தாவெனின் என்பது கருத்தாதலால் அக்கருத்துநோக்கித் 'தமக்குக் குற்றமாகாவாயின்' எனப் பொருளுரைக்கப்பட்டது. 'எய்தாவெனின்' என்றது எய்துமெனிற் பரியவேண்டுமென்னுஞ் செயினென்வினையெச்சத் தெதிர்மறை யானமையால் எய்தாமையின் ஐயப்பாடின்றெனவும், எய்தாதென்பதே துணி வெனவும் கொள்க. செய்யாதகாரியம் செய்ததாகமுடியாதென்பதே இதன் பொருளென அறிக. இதனால் தம்மிடத்துக் குற்றம்வாராமற் பாதுகாக்கவேண்டு மென்பதும், அங்ஙனம் பாதுகாத்திருப்பாரைப் பிறகாரணம்பற்றிப் பிறர்கூறும் பொய்க்குற்றம் நிலைபெறாதாதலால் அதற்கு அவர் பரியவேண்டாவென்பதும் கூறப்பட்டன. "**செய்யாதகாரியம் பொய்யாது**" என்பது இதன் பழமொழி. இதில், பொய்யாதென்றது செய்ததாகமுடியாதென்றவாறு.

45. நோவ வுரைத்தாரைத் தாம்பொறுக்க லாகாதார்
நாவி னொருவரை வைதால் வயவுரை
பூவிற் பொலிந்தகன்ற கண்ணா யதுவன்றோ
தீயில்லை யூட்டுந் திறம்.

எ-து, தம்மைத் துன்புறும்படி வெகுண்டுவைதாரைத் தாம் பொறுக்கமாட்டாதார் தம்முடையநாவினாற் றும் பிறரொருவரை வெகுண்டுவைதா லவ் வைத வயவுரை, பூவிற்பொலிந்தகன்றகண்ணாய்! தம்மில்லைத் தாமே தீக் குணவாகவூட்டியதிறத்தோடொக்கும் எ-று.

(குறிப்பு) இது, தம்குற்றங்கண்டு ஒறுக்கும் மேலாயார் தம்மைச் சீறின் அது பொறுத்திருப்பதல்லது அதற்கேதுவாய்நிற்பாரைச் சீறுதல்கூடாதென் கின்றது. 'நோவவுரைத்தாரை' என்றது தாம்செய்தகுற்றங்கண்டு பின்னும் அது செய்யாமைப்பொருட்டு ஒறுக்குமியல்புடையார் தம்மைத் துன்புறும்படி வெகுண்டுரைத்தவுரையை என்றவாறு. 'தாம் பொறுக்கலாகாதார்' என்றது அவர் நோவவுரைக்கத்தக்காரும், தாம் அது பொறுக்கத்தக்காருமாகிய தொடர் புடையராயிருந்தும் அது செய்யாதார் என்றவாறு. அத்தொடர்பாவது வினை கொள்வோனும்-வினைசெய்வோனும், ஆசிரியனும்-மாணாக்கனும், தந்தையும்-

மைந்தனும், கணவனும்-மனையாளும், மாமியும்-மருகியும் முதலாயினோர் தமக்குள் அடக்கற்பாலரும் அடங்கற்பாலருமாதற்கேதுவாகிய தொடர்பு. 'பிறரொருவரை' என்றது தாம்செய்தகுற்றத்தைக்கண்டு ஒறுப்பார்க் கறிவுறுத்தி அவர் நோவவுரைத்தற்கு ஏதுவாயிருந்த பிறரொருவரை என்றவாறு. 'தம்முடைய நாவினால் வைதால்' என்றது குற்றம் தம்மீதாகவும் நோவவுரைத்தார் தலைவராகவுமிருக்கப் பிறரைநோதற்கு நாவெழாதிருக்கவே அது தன்னை முயன்றெழுப்பி அவரை வெகுண்டுவைதால் என்றவாறு. 'தம்மில்லைத் தாமே தீக்கு உணவாகவூட்டியதிறத்தோ டொக்கும்' என்றது ஒருவர் தம்மில்லைப் பழுதுபாராதகுற்றத்தாற் கூரைமுகடு பிரிந்தவாறே அதன்வழியிறங்கித் தம்மைத் துன்புறுக்கும் பனிவாடைக்காற்றுது, அப்பனிவாடைவந்து துன்புறுத்தற்கு வாயிலாய் நின்று, பழுதுபாராத தங்குற்றத்தைக் காட்டிக்கொடுத்த பிரிகூரையைச்சீறி அதனை யெரியூட்டியதோடொக்கும் என்றவாறு. எனவே பிரிகூரைவீட்டிற் பனியால்வருந்துமவர் தாம் அதனைப் பழுதுபாராதகுற்றம்தீர அக்கூரையை வேய்ந்து அவ்வருத்தம் தீர்வதுபோல், தலைவராற் கடியப்பட்டுவருந்துவாரும், தாம்செய்யவேண்டிய வினைகளைக் குறைவறச்செய்து தம் குற்றத்தைப்போக்கி வருத்தந்தீரவேண்டுமென்பது கருத்தாகக்கொள்க. **கூதலுக்காற்றுதகீதாரி குடிலைக்கொளுத்தியெரித்தானும்** என்பது இதன் பழமொழி; இது கிராம்ய வழக்கு. கூதல் - குளிர்வாடை. கீதாரி - ஆடுமேய்ப்பாருள் தலைவன். குடில்-ஆட்டுக்கிடையிற் குட்டிகளை அடைத்துவைக்கும் ஓலைக்கூடு. ஒருகிடையில் இரவிற் குட்டியடைத்தற்குதவாது பழுதுபட்டிருந்ததொரு கூட்டில் ஒருகீதாரி குளிர்வாடைக்கொதுங்கஅது குளிர்தடுக்குமாற்றலின்மைகண்டு, அதனைப் பழுதுபார்த்துக்கொள்ளும் அறிவின்றித் தீயிட்டெரித்தான் என்பது இதன் ஐதிகம். "மூட்டைக்கடிக்காற்றுதான் வீட்டைத்தீயிட்டெரித்தானும்" எனவும் ஒரு பழமொழி வழங்குவதுண்டு. இதற்கும் பொருந்துமாறு பொருளைப் பொருத்தியுரைப்பினும் அமையும்.

46. முகம்புறத்துக் கண்டாற் பொறுக்கலா தாரை
யகம்புகுது மென்றிரக்கு மாசை—பிருங்கடத்துத்
தக்க நெறியிடைப் பின்னுஞ் செலப்பெறா
ரொக்கலை வேண்டி யழல்.

எ-து, தம்முகத்தைப் புறத்துக்கண்டாலும் பொறுக்கிலாதாரை எம்மனையின்கண்ணேபுகுதுமென்று அவரை யிரந்துரைக்குமாசை, பெரியசுரத்தின்கட் பின்செல்ல, எளிதாம்வழியின்கட் டம்பின்செல்லப் பெறாத புதல்வர், அவருடைய மருங்கிலேயேறிப் போகவேண்டி யழுதலோடொக்கும் எ-று.

(குறிப்பு) இது, தம்மேல் வெறுப்புடையாருடன்கூடி ஒரு குடிவாழ்க்கை செய்தல் இயலாதென்பது கூறுகின்றது. 'தம்முகத்தைப் புறத்துக்கண்டாலும் பொறுக்கிலாதாரை' என்றது தம்மிடத்து மிக்கவெறுப்புடையராய்த் தம்வீட்டை விட்டு விலகிப்போயிருக்குமவரை என்றபடி. 'எம் மனையின்கண்ணேபுகுதும் என்று' என்றது நம்வீட்டுக்குப்போவோமென்றுசொல்லி என்றவாறு. இதனால் இங்கு வெறுப்புடையோரென்றது அகம்புகுக்கமுயல்வாரொடு ஒருவீட்டிலுறை தற்குரிய கிட்டியசுற்றத்தார் என்பதும், அவர் தம்வீட்டைவிட்டுவிலகி வேறிட மிருப்பார் என்பதும் பெறப்படும். 'அவரை யிரந்துரைக்குமாசை' என்றது வெறுப்புடையாரை வெறுக்கப்பட்டார் நாம் ஒன்றாயிருப்போமென்று பிரார்த் தித்துரைக்கும் ஆசைப்பாடு என்றவாறு. 'பெரியசுரத்தின்கட்பின்செல்ல' என்றது நெடிய காட்டுவழியில் உடன்செல்லவிரும்பி என்றவாறு. 'எளிதாம் வழி யின்கட் டம்பின்செல்லப்பெறுதபுதல்வர்' என்றது பின்றொடர்ந்துநடந்துசெல் லத்தகுதியுள்ள எளியவழியின்கண்ணும், தாமுடன்கொண்டுசெல்லற்குரியரல் லாத பிறருடையமக்கள் என்றவாறு. 'அவருடையமருங்கிலே ஏறிப்போகவேண்டி அழுதலோடொக்கும்' என்றது பெருஞ்சுரஞ்செல்லும் பிறர்மருங்கிலேயேறி யுடன்போகவேண்டியழும்பிள்ளையின்ஆசைப்பாடுபோலப் பயனற்றதாய்முடியும் என்றவாறு. இதனால் ஒருகுடிப்பிறந்தார் தமக்குள் வெறுப்புண்டாய்ப் பிரிவா ராயின், பின்பு அவர் ஒன்றாயுறைதல் இயலாதாதலால் அவர்க்குரியதாயபாக முதலியபெற்றுப் பிரிந்திருப்பதே நலமாமென்பது குறிப்பாயிற்று. இதன் பழமொழி ஊருக்குடன்வரவொண்ணுதெனப்பிள்ளை யொக்கலையேறவழுகிற தாம் என வழங்கப்படும்.

47. ஆயிரவ ராறு மறிவில்லார் தொக்கக்கால்
மாயிரு ஞாலத்து மாண்பொருவன் போல்கலார்
பாயிரு ணீக்கு மதியம்போற் பன்மீனுங்
காய்கலா வாகு நிலா.

எ-து, அறிவில்லாதார் ஆயிரவர்திரண்டாராயினும் மாயிருஞா லத்து அறிவான்மாட்சிமைப்பட்டவொருவன்போல விளங்கமாட்டார்; பரந்த இருளைநீக்கும் திங்களைப்போல நிலாவை யெரிக்கமாட்டா, பல மீனும் ஒருமுகமாய்த்திரண்டாலும்; அதுபோல எ-று.

(குறிப்பு) இது, அறிவுடைமையின் சிறப்புக்கூறுகின்றது. 'அறிவில்லா தார்' என்றதில் இன்மைச்சொல் ஈஷதர்த்தவாசகமாதலால் சிறிதறிவுடையார் என்பதே பொருளாகக்கொள்க. 'ஆயிரவர்' என்றதில் ஆயிரம் என்பது அள வின்மையின் உபலக்ஷணமாதலால் எண்ணிறந்தவர் என்பது கருத்தாகக்கொள்க

'திரண்டாராயினும்' என்றது பொருள்களுக்கு வியக்திபாஹுள்யத்தால், குணுதிக்கந்தோன்றுவ தியல்பாயிருக்கவும் என்றபடி. அதாவது அவற்றினளவு முதலியகுணமிகுதல் இயல்பேயாகவும் அறிவிற்சிறியார் பலர்திரண்டுழி அறிவு திரண்டு பெரிதாகா தென்பதாம். உம்மை திரளாதவழியும் தனித்தனி ஒவ்வாமையாகிய எச்சப்பொருளுணர்த்திநின்றது. 'மாயிருஞாலத்து' என்றது ஒவ்வுதல் ஓரிடத்துமில்லையென்னுந் தெளிவுணர்த்தியவாறு மாண்பு-இங்குப் புகழ் பொருள் அறிவாதலால் அறிவாலாகிய மாண்பெனக்கொள்க. மாண்பொருவன்-பண்புத்தொகை; மாண்புடையொருவன் என்றபடி. 'விளங்கமாட்டார்'என்றது விளங்குமாற்றலுடையராகார் என்றவாறு. அளவிற்சிறிய புன்மணி பலதொக்குழி அவை அளவான் ஒருநென்மணிக்கொப்பாவ தியல்பாயிருக்கச் சிற்றறிவுடையார் பலர்தொக்கவழி அறிவான் அவர் பேரறிவுடையோனொருவனுக்கு ஒப்பாதல்கூடாததென் என்னும் ஆசங்கையைத் திட்டாந்தத்தாற் பரிஹரிக்கிறுர் 'பாயிருணீக்கும்'என்று தொடங்கி. மதி-பூர்ணசந்திரன். இதனை "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப், பின்னீர பேதையார் நட்பு"* என்னுங் குறளுரையான் அறிக. தொக்கக்கால் என்னும் பொருளடையை உவமைக்கண்ணுங்கூட்டி 'ஒருமுகமாய்த்திரண்டாலும்' எனப் பொருளுரைக்கப்பட்டது. அளவு ஆற்றல் முதலியவற்றுற் பலர் ஒருங்குகூடி ஒருவற்கு இணையாகலாமாயினும் அறிவால் அங்ஙனம் கூடாமையாற் பேரறிவுடையோனொருவனுக்குச் சிற்றறிவுடையோரெல்லோரும் ஒருங்கு அடங்குவரென்பது கருத்தாகக்கொள்க. இதன் பழமொழியும்பொருளும்"[Grantha text] ॥" என வடமொழியுள்ளும், "கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும், வல்லா னொருவனையே மானுவரோ-அல்லாரும், எண்ணிலா வான்மீ னிலகிடினும் வானகத்தோர்,வெண்ணிலா வாமோ விளம்பு" என நீதிவெண்பாவுள்ளும்,† வழங்கப்பட்டுள்ளன.

48. நிரைதொடி தாங்கிய நீடோண்மாற் கேனு
முரையொழியா வாகு முயர்ந்தோர்கட் குற்ற
மரையாகன் றூட்டு மலைநாட மாயா
நரையான் புறத்திட்ட சூடு.

எ-து, நிரைத்த கடகத்தைத்தாங்கிய நீண்டதோளையுடைய மால் குற்றத்தைச்செய்தானுயினும் அம்மாலுக்குக் குற்றஞ்செய்தானென்னுமுரை யொருநாளும் ஒழியாவாகுமாதலால், நரையான்புறத்திட்டசூடுபோல் உயர்ந்தோர்மாட்டுள்ளகுற்றம் ஒருநாளும் மாயா; மரையாகன்றூட்டும் மலைநாடனே! எ-று.

* திருக்குறள் 79-ம் அதிகாரம் (நட்பு) குறள்—2.
† செய்—98.

(குறிப்பு) 'நிரைதொடிதாங்கிய' என்றது வெற்றிமிகுதி கூறியவாறு. 'நீள்தோள்' என்றது வலிமிகுதி கூறியவாறு. 'மால்' என்றது ஈண்டுப் பெருமைப்பொருளுடைமையானே சர்வாதிகனென்பது உணர்த்திநின்றது. குற்றம் மாயா என்னுங்குறிப்பால் 'மால் குற்றத்தைச் செய்தானாயினும்' என்னும் இசை எச்சம்விரிக்கப்பட்டது. 'மால் குற்றத்தைச்செய்தானாயினும்' என்றது அவன் அது செய்யாமை உணர்த்தியவாறு. 'அம்மாலுக்கு' என்றது புகழ்பொருளை வலியுறுத்தவேண்டிச் சுட்டுப்பொருளை வெளிப்படையாக்கிக்கூறியவாறு. 'உரை' என்றது ஈண்டுக் குற்றமென்னும் பொருட்குறிப்பாற் பழியுரையையுணர்த்தினமையால், 'குற்றஞ்செய்தானென்னும் உரை' எனப் பொருள்விரித்துரைக்கப்பட்டது. 'ஒருநாளும்' என்றது ஒழியாமையின் நிலைபேறுகூறியவாறு. 'நரையான்புறத்திட்டசூடு' என்றது நரையெருதின் உடற்புறத்திட்டசூட்டுத் தழும்பு என்றபடி. உயர்ந்தோர்-குடிப்பிறப்பு, கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவற்றானுயர்ந்தோர். 'மறையா' என்றது இருபெயரொட்டாய் ஒருவகைமானுக்குப் பெயராயிற்று. நரையெருதின்சூடு மறையாது என்பது இதன் பழமொழி. நரையெருது-வெண்மையுங் கருமையும் விரவியநிறமுடைய எருது. இது எருதுவகையில் உயர்ந்தது; மயிலையென்னும்பெயரால் வழங்கப்படுவது. இப் பழமொழி, "பெருவரை நாட பெரியார்கட் டீமை, கருநரைமேற் சூடேபோற் றோன்றும்"* என நாலடியுள்ளும் வழங்கப்பட்டது. குற்றம்வாராமற் பாதுகாப்பதில் உயர்ந்தோர் மிகவும் கருத்துடையராயிருக்கவேண்டுமென்பது குறிப்பு.

49. வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பிற்
றூங்கு மெயிலுந் தொலைத்தலா—லாங்கு
முடியுந் திறத்தான் முயலவாங் கூரம்
படியிழுப்பி னில்லை யரண்.

எ-து, உயர்ந்ததோளையுடைய செம்பியன்சீற்றம், மிக்க விசும்பின் கண் இயங்கியொழுகும் அசுரருடையவூரினையும் தேவர்கட்காகவென்று தொலைவித்தலான், எப்பொழுதும் ஒருகருமத்தை முடியுந்திறத்தாலெண்ணியரிதென்றுமுயல அமையும்; கூரிய அம்பை அடியமைய இழுத்துத் தொடுக்கப்பெறினது பட்டுருவமாட்டாத கவசமில்லை எ-று.

(குறிப்பு) 'உயர்ந்ததோளையுடைய' என்றது செம்பியனது பராக்கிரம மிகுதிதோன்றக் கூறியவாறு. செம்பியன்-சோழன். இது சிபிமரபிற்பிறந்தோன் என்னும் பொருளுடைய சைப்ய: என்னும் வடமொழிச்சிதைவாய் வழங்குவதொருபெயரென்பாரும் உளர். 'சீற்றம்' என்றது சீற்றங்கொண்ட

* நாலடியார் 19-ம் அதிகாரம் (பெருமை) செய்—6.

செயலென்றவாறு. அது இன்னதுசெய்தானென்றுதோன்றாத கோப்பியச் செயலென்பார் 'சீற்றம்' என்றதுணையேகூறி யொழிந்தார். 'மிக்கவிசும்'பென் றது-பகைவர் தாம்மேல்நின்றுகொண்டு கீழ்நின்றெதிர்ப்பாரை யெறிதற்கு விறன் மிக்கவிசும்பென்றவாறு. இது எயிலின் இடவலிமிகுதி கூறியபடி. தூங்கல்- இயற்கையான வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் வயமாகாதியலுதலாதலால் அவ்வினை நிகழ்ச்சியை 'இயங்கியொழுகல்' என்றார். இதனால் அவ்வெயிலின் செயற்கை வலிமிகுதி கூறியவாறு. 'அசுரருடையவூர்' என்றது தீயவருடையகுடியிருப் புப்போன்ற வூர்தியென்றபடி. இது இசையெச்சத்தால் அதன் துணைவலி கூறியவாறு. 'எயிலும்' என்ற வும்மை கொலைக்கரிய என்னும் உயர்வுகுறித் தமையா லுயர்வுசிறப்பாயிற்று. இது அவ் வெயிலின் றன்வலிகூறியவாறு. தொலைத்தல்-முற்றக்கெடுத்தல். இச்சரித்திரம், "ஒன்னா ருட்குந் துன்னருங் கடுந்திறற், றூங்கெயி லெறிந்தநின் னூங்கணோர் நினைப்பின்"எனப் புறநானூற் றுள்ளும்,* "வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன், ஓங்கரணங் காத்த வுறவோன்யா ரம்மானை,ஓங்கரணங் காத்த வுறவோ னுயர்விசும்பிற்,றூங்கெயின் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை"எனச் சிலப்பதிகாரத்தும்,† "ஒன்னார், ஓங் கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியுந், தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை"‡ எனச் சிறுபாணாற்றுப்படையினும், இன்னும் மணிமேகலை, கலிங்கத் துப்பரணிமுதலிய நூல்களிலுங் குறிக்கப்பட்டுள்ளது. 'ஆங்கு' என்பதற்கு அவ் வாறாகவே எனப் பொருளுரைத்துக்கொள்க; அதாவது பராக்கிரமசக்தியுடைய ராய்ப் பகைவரையழிக்கவிரும்பியவர் என்றபடி. இவ்வாறன்றித் தனிச்சொல்லை யாங்கும் எனப் பாடமோதிக் காலத்தையிடமாகப்பற்றி, எப்பொழுதும் எனப் பொருளுரைக்கப்பட்டது. 'எப்பொழுதும்' என்றது முயற்சிசெய்தற்குரிய காலங்களிலெல்லாம் என்றவாறு. 'ஒருகருமத்தை' என்றது அவாய்நிலையான் வந்தது. முடியுந்திறத்தான் முயலலாவது இவ்வாறுசெய்யின் இது தப்பாது முடியும் என ஆராய்ந் தவ்வாறுமுயறல். 'அரிதென்னுதுமுயல' என்றது அத் தெளிவான், அது எளிதின்முடியுமென்றெண்ணிமுயல என்றவாறு. 'அமையும்' என்றது அக்கருமங் குறையின்றிமுடியுமென்றவாறு. 'கூரம் படியிழுப்பினில்லை யரண்' என்றது முடியுந்திறத்தான் முயலுமாற்றை ஒரு பழமொழிப்பொருள் காட்டிவிளக்கியவாறு. இழுத்துவிட்டாற் கழுத்துநுவப்பாயும் என்பது இதன் பழமொழி. இது வீரவாதம்பேசிவிளையாடுஞ் சிறார்குழூவழக்காயுள்ளது. இதன் பொருள்:—இழுத்து-ஒருகூரிய அம்பினடியை விரற்சரட்டில்வைத்து ஆகன்ன மாக இழுத்து. விட்டால்-விசையூட்டிவிட்டால். கழுத்துருவப்பாயும்-எதிர் நிற்கும் பகைவரது கழுத்திலணிந்த கவசத்தையும் கழுத்தையும் பொற் றப்புறங்

* புறநானூறு செய்— 39 அடி-5, 6.

† சிலப்பதிகாரம் 29-வது வாழ்த்துக்காதை, அம்மானைவரி, செய் 1.

‡ பத்துப்பாட்டு, சிறுபாணாற்றுப்படை அடி 79—81.

கழன்றோடுமொறு பாயும் என்பதாம். "மன்னவர்நெஞ்சினில்வேடர்விடுஞ்சரம் வாயாவோ"* என்பதும் இப்பழமொழிபற்றியகூற்றெனவுணர்க. இதனால், கோப்பியமான வுபாயங்களைக்கொண்டு ஒடுங்கியிருந்து காலம்வாய்த்துழித் தப்பாது முயல எக்கருமமும் தவறாதுமுடியும் என்பது கூறப்பட்டது.

50. கற்றதொன் றின்றி விடினுங் குடிப்பிறந்தார்
மற்றொன் றறிவாரின் மாண மிகநல்லர்
பொற்ப வுரைப்பான் புகவேண்டா கொற்சேரித்
துன்னூசி விற்பவ ரில்.

எ-து, நற்குடிப்பிறந்தார் கற்றதொன்றில்லையாயினும், குடிப்பிறவாதுகற்றாரின் மாட்சிமைப்பட மிகநல்லர்; மாட்சிமைப்பட உரை சொல்லவேண்டுவதில்லை; கொற்சேரிக்கண்ணே துன்னூசியைவிற்பார் ஒருவருமில்லை அதுபோல எ-று.

(குறிப்பு) 'நற்குடிப்பிறந்தார்' என்றது கல்வி, அறிவு, ஒழுக்கங்களுள்ள ஒருகுடியிற்பிறந்தாரொருவர் என்றவாறு. 'கற்றதொன்றில்லையாயினும்' என்றது அந்நற்குடிக்குரியகுணங்களில் மற்றவையெல்லாமிருக்கத் தாம் கல்லாதிருக்கும் குறையொன்றுமே யுளதாயின் என்றவாறு. ஈண்டு நற்குடிக்குரிய கல்வியாவது வேதாகமபுராணாதிகளும் ஸ்மிருதிநூல்களும் ஓதியுணர்தலாம். 'குடிப்பிறவாதுகற்றாரின்' என்றது கல்வி, அறிவு, ஒழுக்கமில்லாத குடியிற்பிறந்து தாம் வேதாகமாதி யோதியுணர்ந்த கல்வியுடையராயிருப்பாரைக்காட்டிலும் என்றபடி. பயிற்சிமிகுதியாலுள்ளதாகிய வாசனையாற் குடிப்பிறப்புடையாரொழுக்கம் ஒருசிறிதும் வழுவாதாகையாலும், குடிப்பிறப்பில்லாத கற்றோரொழுக்கம் பயிற்சியின்மையால் வழுவுறுமாகையாலும் அக்கல்வியறிவுடைமையாகிய நன்மையினும் அநுபவமுடைமையாகிய நன்மை மிகச்சிறந்ததென்றவாறு. 'உரைப்பான் புகவேண்டா' என்றது அந்நூல்களிற்கூறிய ஒழுக்கங்களை உரைக்கும்பொருட்டு நற்குடிப்பிறவாத கற்றான், குடிப்பிறப்புடையாரிடத்துத் தர்மோபதேசபரனாய்ப் புகவேண்டா என்றவாறு. 'கொற்சேரித் துன்னூசி விற்பவரில்' என்றது அங்ஙனம்புகுதல் பயனின்முயற்சியென்பதை உணர்த்துவதற் கோர் பழமொழிகூறியவாறு. கொற்சேரி-கொல்லர்தெரு. துன்னூசி-இழைநுழையூசி. 'ஒருவருமில்லை' என்றது ஒருவரும்புகார் என்பதை வலியுறுத்தியவாறு. கொல்லர்குலமக்களல்லாதார் தொழிற்சாலையிற்சென்று கொல்லுத்தொழில்கற்றாராயினும் அதுகல்லாத கொல்லர்குலமக்களுக்கு அவர் துன்னூசி செய்துகொடுக்கவேண்டாது தாமேசெய்துகொள்ளுமாறுபோலக் குடிப்

* கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், குகப்படலம், செய்—16 முன்னவனென்று.

பிறப்பில்லாத கல்வியுடையோன் கூறவேண்டாது குடிப்பிறப்புடையோர் தாமே யுணர்ந்தொழுகுவர் என்பதாம். ஆகவே தர்மோபதேசம் செய்தற்குரியோர், குடிப்பிறப்பு, கல்வி, அறிவு, ஒழுக்கம் இவையெல்லாமுடையராயிருக்க வேண்டுமென்பது ஆசிரியர் கருத்தென்பது குறிப்பாற்றோன்றிய குறிப்பாயிற்று. இப்பாட்டால், குடிப்பிறப்பின் சிறப்புக் கூறப்பட்டது. இக்கருத்து, [illegible] ஷ: । என வடமொழியுள்ளும் வழங்கப்படும். இதன்பழமொழி, ஒருவன் ஒருவனை நோக்கித் தன்றிறமைகூற, அதுகேட்ட மற்றொருவன், உன்வல்லமை இங்குச் செல்லாது; எனச் சொல்லவேண்டுமிடத்துக் கொல்லர்தெருவில் ஊசி விலையாகாது எனப் பிறிதுமொழிதலாக வழங்குவதாம். இப்பழமொழி, "கொண்டுழிப்பண்டம் விலையொரீஇக்கொற்சேரி, நுண்டுளைத்துன்னூசிவிற்பாரின்" என ஐந்திணையைம்பதிலும்,*'வைகொண்டவூசிகொற்சேரியின்விற்றெம்மில்வண்ணவண்ணப்,பொய்கொண்டுநிற்கலுற்றோபுலையாத்தின்னிபோந்ததுவே'எனத்திருச்சிற்றம்பலக்கோவையினும்,† "இருப்புக் கம்மியற் கிழைநுழை யூசியொன் றியற்றி, விருப்பிற் கோடியால் விலக்கெனும் பதடியின் விட்டான்" என இராமாயணத்துள்ளும்‡ வழங்கப்பட்டது.

51. இயற்பகை வெல்குறுவா னேமாப்ப முன்னே
யயற்பகை தூண்டி விடுத்தோர்—நயத்தாற்
கறுவழுங்கிக் கைக்கெளிதாய்ச் செய்க வதுவே
சிறுகுரங்கின் கையாற் றுழா.

எ - து, தனக்கு இயற்பகையாகியபகையை வெல்லுதலுற்றானொருவன், முன்னே தனக்கரணாகத் தன்பகைக்கு வேறேயொருபகை வளர்த்துவிட்டு ஒருநெறியாற் கறுவினுலொழுகித் தன்கைக்கெளிதாகத் தன்பகையைநெருக்குக; அப்பெற்றிசெய்தல், முதுகுரங்கு சிறுகுரங்கின்கையாலே வேவுறுகூழைத் துழாவியசெயலையொக்கும் எ-று.

(குறிப்பு) இயற்பகையாகியபகை என்றது தான்முடிக்கக்கருதியகாரியத்துக்கு ஸ்வபாவசித்தமாயுள்ள விரோதியாகியபகை என்றவாறு. வெல்குறுவான்-வெல்லத்தொடங்கும் ஒருவன். 'தன்பகைக்கு' என்றது தன்காரியத்துக்கு விரோதியாயுள்ள பகைவர்க்கு என்றவாறு. 'வேறேயொருபகை வளர்த்துவிட்டு' என்றது அப்பகைவர்க்கு விரோதியாய்த் தமக்கு இனமா

* ஐந்திணையைம்பது செய்யுள்—21.
† திருச்சிற்றம்பலக்கோவை செய்—386.
‡ இராமாயணம், இராவணன்வதைப்படலம். செய்யுள்—121.

யிருக்கும் பிறரை அவர்மேற்செல்லுமாறு தூண்டிவிட்டு அப்பகைவரது வலியின் அளவறிந்துகொண்டு என்றவாறு. 'ஒருநெறியால்' என்றது பகைவலி மிக்கிருக்குமாயின் அது குறைவுற்றுக் கைக்கெளிதாம்வரை காலம்பார்த்து அடங்கியிருக்கவேண்டுமென்னும் விதிவிசேடத்தைமேற்கொண்டு என்றவாறு. 'கறுவினுளொழுகி' என்றது உட்பகையாகவொழுகி என்றவாறு. 'தன்கைக்கெளிதாக' என்றது தன்கைக்கு எளிதாகுமளவில் என்றவாறு. 'தன்பகையை நெருக்குக' என்றது விரோதியையடர்த்துக் கருதியகாரியத்தைக் கைக்கொள்க என்றவாறு. 'அப்பெற்றிசெய்தல்' என்றது அங்ஙனம்செய்தல் என்றவாறு. 'முதுகுரங்கு சிறுகுரங்கின்கையாலே வேவுறுகூழைத்துழாவியசெயலையொக்கும்' என்றது எடுத்துக்கொண்டபொருளுக்கேற்றதொரு திட்டாந்தமாகக்காட்டப்பட்ட பழமொழிப்பொருளை விரித்துரைத்தவாறு. இப்பழமொழி கூழ்சுடுமென்று நினைந்தகுரங்குதன்குட்டியின்கையாற்றுழாவிற்றும் எனவும், குரங்கு குட்டியைவிட்டாழம்பார்த்ததுபோலும் எனவும், வழங்கப்படும். இது இயல்பு பற்றிவந்தவழக்கு. சிறுகுரங்கின்கை ஏதுவானமையால் அதற்கேற்ற முதுகுரங்கு வேவுறுகூழ் என்னும் வினைமுதலும் செயப்படுபொருளும் விரித்துரைக்கப்பட்டன. வேவுறுகூழ்-சுடுசோறு. 'துழாவியசெயலையொக்கும்' என்றது துழாவி வேவுறுகூழின் சூட்டின்கடுமை யறிந்து, அது குறைந்திருந்தால் உடனேகொள்வதும், மிக்கிருந்தால் அது தணியும்வரை தாழ்த்திருந்துகொள்வதுமாகிய செயலையொக்கும் என்றவாறு. இதனுள், கூழுணவு காரியசித்திக்கும், சூடு அக்காரியசித்திக்கு விரோதியான இயற்பகைக்கும், முதுகுரங்கு காரியத்தின் முயல்வோனுக்கும், சிறுகுரங்கின்கை இயற்பகைமேற்செல்லவிடும் அயற்பகைக்கும் உவமங்களாம். இதனாற் பகைவலியறியாதான் அதனை யறிந்துசெய்யுமாறு கூறப்பட்டது.

52. பாரதத் துள்ளும் பணையந்தந் தாயமா
வீரைம் பதின்மரும் போரெதிர்ந் தைவரோ
டேதில ராகி யிடைவிண்டா ராதலாற்
காதல்ரோ டாடார் கவறு.

எ-து, பாரதத்துள்ளும் தம்முடையதாயமே பணையமாகக்கொடுத்து ஈரைம்பதின்மரும் சூதுபோரையெதிர்ந்து மற்றையைவரோடும் பகைவராகி வேறுபட்டுநீங்கினார்களாதலால், உற்றாரோடு கவறாடார் எ-று.

(குறிப்பு) இப்பாட்டுச் சூதாடல்கூடாதென்பது கூறுகின்றது. 'பாரதத்துள்ளு'மென்றது வேததுல்யப்பிரமாணமாகக் கருதப்படும் இதிகாசமாகிய மஹாபாரதத்துள்ளும் என்றவாறு. உம்மை உயர்வுசிறப்புணர்கின்றது. அது நுதலும் பொருளுக்குப் பிரமாணவலி கூறியவாறு. 'தாம்' என்றது ஈரைம்பதின்மராகிய

தார்த்தராட்டிரர் என்றவாறு. 'தாயமேபணையமாகக்கொடுத்து' என்றது உரியோர்க்கன்றி ஒருவாற்றானும் தாம் பிறர்க்குக்கொடுக்கத்தகாத தாயபாகத்தையும் பணையமாகவைத் தென்றவாறு. இதனால் ஸ்வயார்ஜிதங்களைவைத்தல் சொல்ல வேண்டாதாயிற்று. இது சூதின்மயக்கமிருக்கும்படிகூறியவாறு. 'ஈரைம்பதின்மரும்' என்றது ஓரைவராகிய பாண்டவரோடு அவரின் இருபதிற்றளவான்மிக்க இனவலியுடையவருமென்றவாறு. இதனால் வலிமிக்குடையோரும் கெடுவரென்பது குறிப்பாயிற்று. போர் என்றதற்கு, கவறு என்னுங்குறிப்பால் 'சூதுபோரை' எனப் பொருளுரைக்கப்பட்டது. 'மற்றையவரோடும் பகைவராகி' என்றது இருபதிற்றோரைவராய் ஒன்றுபட்டிருக்கக்கடவராகியதாம் ஓரைவரோடுறவொழிந்து குறைந்ததுமேயன்றி அவருக்குப் பகைவருமாகி என்றவாறு. இடைவிண்டாராதலால் என்பது ஞாபகவேதுவாதலால் அதன் உரையாகிய 'வேறுபட்டுநீங்கினார்களாதலால்' என்பதற்கு, வேறுபட்டுநீங்கினார்களென்று அறியப்படுதலான்என்பது கருத்தாகக்கொள்க. 'வேறுபட்டுநீங்கினார்'என்றது கிருஷ்ணதௌத்யத்தாலும் உடன்பட்டு ஒன்றாகாது பொருது உயிர்நீங்கினார் என்றபடி. உற்றாரோடுகவறாடார் என்றாராயினும் விகாரத்தாற்றொக்க சிறப்பும்மையை விரித்து, அறிவுடையோர் என்னும் எழுவாயைவருவித்து, உற்றாரோடும் கவறாடார் அறிவுடையோர் எனப் பொருளுரைத்துக்கொள்க. இதனால் நொதுமலரோடும் ஏதிலரோடும் கவறாடல் மிக்கதீங்குபயக்கும் என்பது சொல்லவேண்டாதாயிற்று. ஈரைம்பதின்மரும் போரெதிர்ந் தைவரோடேதிலராகி யிடைவிண்டார் என்ற குறிப்பால், தம்மின்மிக்க வலியுடையாரொடு கவறாடலும் மிக்க தீங்குபயக்குமென்பது தானேபெறப்பட்டது. காதலோடாடார்கவறு என்பது பாடமாயின், காதல் காதலர்க்காகுபெயராகக்கொள்க. காதலரோடுங் கவறாடலாகாது என்பது இதன்பழமொழி. இப்பழமொழிப்பொருளே இப்பாட்டில் எடுத்துக்கொண்டபொருளாகவும், திட்டாந்தம் இதிஹாஸப்பொருளாகவும் காட்டப்பட்டுள்ளன.

53. அல்ல லொருவர்க் கடைந்தக்கான் மற்றவர்க்கு
நல்ல கிளைக ளெனப்படுவார்—நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்க வதுவே
மனைமர மாய மருந்து.

எ-து, ஒருவர்க்குத் துன்பம்வந்தக்கால் அவர்க்கு மிக்க கிளைகளென்று சொல்லப்படுகின்றவர்கள், நல்லசெய்கைமரபினாலே அத்துன்பத்தைநீக்குக; அந்நீக்கியசெய்கை, மனையின்கண்நின்ற மருந்தாய மரத்தோடொக்கும் எ-று.

(குறிப்பு) அல்லல் என்பது ஊழ், பகை, நோய், வறுமைமுதலியவற்று லுண்டாகும் துன்பம். மிக்கிளைகளாவார்—உடன்பிறந்தார்முதலாயினர். 'நல்லசெய்கைமரபினுலே' என்றது அத்துன்பந்தீருமாறு செய்துபோந்த அடிப் பட்டசெயல்களாலே என்றவாறு. 'மனையின்கண்ணின்றமருந்தாயமரத்தோடொக் கும்' என்றது நோயுற்றுரெருருவனுக்கு அந்நோயை உடனேதீர்க்கவல்ல மருந் தாகி அவன் மனையின்கண்ணேயுள்ளதொரு பச்சிலைமரம்போலும் என்றவாறு. இதனுள், துன்பத்துக்கு நோயும்,நல்கிளைகளினுதவிக்கு மனைமரத்தினுதவியும் உவமங்களாம். நல்ல வினைமரபின்மற்றதனை நீக்கவென்றது கிளைகளைநோக்கிய கூற்றுனமையால் ஒருவர்க்கு ஆபத்துவந்தகாலத்தில் அவருடைய நெருங்கிய கிளைகளாவார் உடன்சென்றுதவவேண்டுமென்னும் பொருளும், அங்ஙனம் உதவுவார் 'மனைமரமாயமருந்து' என்றது அல்லலுற்றுரைநோக்கிய கூற்றுக லால் அங்ஙனம் உதவுமவரைக் கைவிடலாகாதென்னுங்குறிப்பும் பெறப்பட்டன. மனைமரமாயமருந்து என்றது பழமொழிக்கூற்று. இது 'புழைக்கடைப்பச் சிலை' என வழங்கத்தகுவதாம். அது, இக்காலத்து அல்லலுற்றுர் அவ் அல்லல் தீருமாறு தம் நல்லகிளைகள் சொல்லும் சொற்கேளாதவிடத்து, அக்கிளையாயி ஞரைப் பிறர் நீவிர் இவர்க்கு இத்துன்பந்துடைக்கவொண்ணுதோவென வின வியக்கால் அவர் குறிப்பாகப் 'புழைக்கடைப்பச்சிலைமருந்துக்குதவுமா' என விடையிறுப்பதுண்டு. இது, மாமலையிலுள்ள மருந்தேபோலப் பிணிதீர்க்கவல் லார் அயலாராய பிறரிருக்கப் புழைக்கடைப்பச்சிலையோடொத்த உற்றுராகிய எம்மனேர்செயல் பயன்படாதுபோலும் என்னுங்குறிப்புடையதாகும். இதனுல் மாமலையிலுள்ள மருந்தேபோற் சேய்மைக்கண்ணின்று நல்லகிளையல்லார் அல் லற்கு உதவுதலினும் நல்லகிளையாயினுர் புழைக்கடைப்பச்சிலைபோல் அண் மைக்கண்ணின்றுதவுதல் சிறந்ததென்று கூறப்பட்டமையால், அல்லற்குதவாத நல்லகிளையை, "உடன்பிறந்தார்சுற்றத்தாரென்றிருக்கவேண்டா*"வென விலக் கியதோடு விரோதமின்றென வுணர்க. இதன் பழமொழிப்பொருள் "மருந் தாகித்தப்பாமரத்தற்றால்" எனத் திருக்குறளுள்ளு† மெடுத்தாளப்பட்டது.

54. தெள்ளி யுணருந் திறனுடையார் தம்பகைக்
குள்வாழ் பகையைப் பெறுத லுறுதியே
கள்ளினுற் கள்ள றுத்தல் காண்டு மதுவன்றே
முள்ளினுன் முட்களையு மாறு.

எ-து, ஆராய்ந்துணருந்திறத்தையுடையார் தம்பகைவர்க்குள்ளே வாழும் உட்பகையைப்பெறுதல் தமக்குறுதியே; தாம் முன்புகுடித்த தொருகள்ளை மற்றொருகள்ளைப் பின்குடித்து அறுத்தல்காணுநின்றோம்

---

* மூதுரை, செய்—20.

† திருக்குறள், 22-ம் அதி.; ஒப்புரவறிதல். 7.

அதுவன்றோ மற்றொருமுள்ளினாலே தன்காலிற்பாய்ந்தமுள்ளைக் களையுமாறு எ-று.

(குறிப்பு) தெள்ளுதல்-கோதுநீக்குதலொப்புமையால் ஆராய்தலாயிற்று. 'தம்பகைவர்க்குள்ளேவாழு முட்பகையை' என்றது தம் பகைவருக்கத்துள் அவருக்குட்பகையாயிருப்பாரை யென்றவாறு. பெறுதல் என்றது அப்பகையை வெல்லுந்துணையுந் தற்கால நட்பாகப்பெற்று அவரைக்கொண்டுகளைதல் என்றவாறு. உறுதி-ப்ராப்யம். இது காரியவாகுபெயராய் உபாயத்தையுணர்த்திற்று. கள்ளினாற் கள்ளறுத்தல்காண்டும் என்றது திட்டாந்தம். 'முன்புகுடித்ததொரு கள்ளை, மற்றொருகள்ளைப் பின்குடித்து அறுத்தல் காணாநின்றோம்' என்றது ஒருவகைக் கள்ளுண்டுகளித்தானொருவன் அக்கள்ளின் மாறுபட்டவீரியமுடையபிறிதொரு கள்ளையுண்ண முன்னிருந்த களிப்பொழிதல் அநுபவசித்தமென்றபடி. அதாவது: பிறிதோருபாயத்தாற் போக்கலாகாத கட்களியை அக்கள்ளின் மாறுபட்ட கட்களியாற்போக்குதல் கூடுமென்பதாம். இதனைத் "தான்செய் நோய்க்குத் தான்மருந் தாகிய, தேனிமிர் நறவின் றேறல் போல"* என்பதனாலு மறிக. அது என்றது அங்ஙனம் பகைகளைதலென்றவாறு. முள்ளினான் முட்களையுமாறு என்றது பழமொழி. இது, "கண்டகேநைவ கண்டகம்" என வடமொழியுள்ளும், "மோதிமுள்ளொடுமுட்பகைகண்டிடல்" எனச் சீவகசிந்தாமணியுள்ளும்† வழங்கப்பட்டது. இப்பாட்டால், பகைவரைவெல்லுந் தெளிவுந் திறனுமுடையார் அப்பகைவர்க்குட்பகையா யுள்ளாரை யுறவுகொண்டுவெல்லல் எளிதென்பது கூறப்பட்டது.

55. ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை யந்நாடு
வேற்றுநா டாகா தமவேயா மாயினா
லாற்றுணா வேண்டுவ தில்.

எ - து, அறிவுடையாராவார் மிகவுங் கற்றார்; அக்கல்வியாலாய அறிவினையுடையார்க்கு நான்குதிசையின்கண்ணுஞ் சொற்செல்லாத நாடில்லை; சென்றநாடுகள் வேற்றுநாடாகா, தம்முடையநாடுகளேயாம்; ஆயினால் அவ்வழிக்கு உணாக்கொண்டுபோகவேண்டியதில்லை அவர்கட்கு எ-று.

* இலக்கணவிளக்கம், அகத்திணையியல் 128-ம் சூத்திரவுரை யுதாரணம்.

† சீவகசிந்தாமணி, விமலையாரிலம்பகம், செய்—32.

(குறிப்பு) இது கற்றவர்க்கு எல்லாக்காரியமும் சுலபசாத்தியமாகுமென்று கல்வியின் நன்மை கூறுகின்றது. 'ஆற்றவுங்கற்றாரறிவுடையார்' என்றது கல்வியானது அறிவுடையாரால் கைக்கொள்ளத்தக்கது எனக் கல்வியின்சிறப்புத் தோன்றக் கற்றோரைக்கொண்டாடுங்கூற்றாயிருத்தலால் அதற்கு, "தவஞ்செய்வார்தங்கருமஞ்செய்வார்"* என்புழிப்போல, 'அறிவுடையாராவார் மிகவுங்கற்றார்' எனக் கிடக்கைமுறைமாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. இதற்குப் "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" என்புழிப்போலச் சிறந்த அறிவுடையோராவார் மிகவுங்கற்றார் என்பது கருத்தாகக்கொள்க. 'அஃ' தென்றது கற்றாரென்றதன் முதனிலைப்பொருளாகிய கல்வியைச்சுட்டினமையால் அஃதுடையார் என்றதற்குச் செய்யுள்விகாரத்தாற்றொக்க நான்கனுருபுவிரித்து உபசாரவழக்காக்கி 'அக்கல்வியாலாயவறிவினையுடையார்க்கு' எனப் பொருளுரைக்கப்பட்டது. 'நாற்றிசையுஞ்செல்லாதநாடில்லை' என்றதற்கு, செல்லுதற்கேற்ற அவாய்நிலையான்வந்த சொல் என்னு மெழுவாய்கூட்டி, 'நான்குதிசையின்கண்ணும் சொற்செல்லாதநாடில்லை' யெனப் பொருளுரைக்கப்பட்டது. 'சென்றநாடுகள்' என்றது, அங்ஙனம் அவர் சொற்சென்றநாடுகள் என்றவாறு. நாட்டில் அவர்சொற் செல்லலாவது-நாட்டார் அவர்சொல்வழிநிற்றல். 'வேற்றுநாடாகா' என்றது தமக்கு ஒருரிமையுமில்லாத பிறநாடாயிருப்பினும் தம் சொற்செல்லுதலால் அவை வேற்றுநாடென்று கருதப்படாவென்றவாறு. 'தமவேயா'மென்றது வேற்றுநாடாகாத பாரிசேஷகத்தாலும், தம் சொல்வழிநிற்றல்பற்றியும் தமக்கேயுரியவாம் என்றவாறு. இதனால் நாட்டுக்கு உடையோரினும் தமக்குரிமை மிக்கிருக்குமென்பது குறிப்பாயிற்று. 'ஆயினால்' என்றது ஆகவே என்பதன் திரிபாய் ஆதலால் என்னும் பொருளுணர்த்திநின்றது. 'ஆற்றுணாவேண்டுவதில்' என்றது பழமொழிக்கூற்று. இது, ஏதேனு மொரு கருதியபொருளைச் சுட்டி அது எளிதிற்கிடைக்குமெனவுரைக்கவேண்டுமிடத்து, 'அதற்குக் கட்டிச்சோறுகட்டிப்போகவேண்டாம்' என்னும் அடிப்பட்டநாட்டுவழக்கின் றொடர்மொழிப்பொருளையுடையது. 'வழிக்குணா' வென்றது, ஆற்றுணாவென்றதன் கண்ணழிப்பில் அலுக்காய்த்தொடர்ந்தவொருசொல்லாய்க் கருதியபொருள்கிட்டும்படியொழுகும்பெருமுயற்சிக்குத் துணையாய்க்கைக்கொள்ளப்படும் சாதனத்தையுணர்த்துங் குறிப்புமொழியாயிற்று. இப்பழமொழி, "கூற்றங்கொண்டோடத் தமியே கொடுநெறிக்கட் செல்லும்போழ்தி, னாற்றுணாக் கொள்ளீ ரழகலா லறிவொன்று மிலிரேபோலும்" எனச் சீவகசிந்தாமணியுள்ளும்,† பொதிசோறு என்னும் பரியாயப்பெயரான் அதன் உரையுள்ளும், தோட்கோப்பு என்னும் பரியாயப்பெயரால் "ஆட்பார்த் துழலு மருளில்கூற் றுண்மையாற்,

* திருக்குறள், 27-ம் அதிகாரம் (தவம்) குறள்-6.

† சீவகசிந்தாமணி 6-வது கேமசரியாரிலம்பகம் செய். 139.

றேட்கோப்புக் காலத்தாற் கொண்டும்மின்" என நாலடியுள்ளும்* வழங்கப் பட்டது. 'கொண்டுபோகவேண்டியதில்லை' யென்றது, கொண்டொழுக வேண்டியதில்லையென்றவாறு. கற்றோர்க்குத் தாம்கருதியவெல்லாம் யாங்கும் சுலபசாத்தியமாய்முடியுமென்பது கருத்து. இதனை, "வித்வான்ஸர்வத்ரபூஜ்ய தே"எனவும்,"யாதானு நாடாமா லூராமா"†லெனவும்"கற்றோற்குச்,சென்றவிட மெல்லாஞ் சிறப்பு"‡எனவும் பிறருங் கூறுதலா னறிக.

56. எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குத் துணையாவார்த் தாந்தேர்தல் வேண்டா
பிறர்க்குப் பிறர்செய்வ துண்டோமற் றில்லைத்
தமக்கு மருத்துவர் தாம்.

எ-து, எமக்கு ஓரிடர்வந்தாற் றுணையாவார் வேண்டுமென்றுகருதித் தமக்குத்துணையாவாரைத் தாம் தேடல்வேண்டா; பிறர்க்குப் பிறர்செய்வதொன்றுண்டோ? ஆதலான் மற்றுத் துணையாவாரைக் கண்டிலேம்; தமக்கு மருந்தாவார் தாமேயாதலான் எ-று.

(குறிப்பு) இது, தன்னயங்கருதியிருப்பார்நட்புக்கொள்ளற்கவென்கின்றது. 'தமக்குத்துணையாவாரை' என்றது தம்நட்பினர்க்குத்துணையாகாது ஸ்வயகார்ய நிரதராயிருப்பாரை யென்றவாறு. இவரைத் **தன்காரியக்கட்டி** எனவும், **ஸ்வய காரியப்புலி** எனவும் வழங்குவர் நாட்டார். 'தாம்தேடல்வேண்டா'என்றது எமக் குத்துணைவேண்டுமென்பார் தாம்முயன்றுதேடவேண்டா என்பதாம். அதாவது, அவர் ஸ்வயகார்யசித்தியின்பொருட்டுப் பிறரைத் தாமே தேடியடைந்து அவர்க் குத் துணையாவார்போன்று வஞ்சித்தொழுகுவராதலா லவரைத் தேடியுங்கொள் ளல்வேண்டா வென்றவாறு. 'பிறர்க்குப்பிறர்செய்வதொன்றுண்டோ' வென் றது எமக்குத்துணையாவார்வேண்டுமென்பாரும், தமக்குத்துணையாவாருமாகிய விருவருங்கூடித் தம்மு ளொருவர்நன்மையைநாடாது தத்தம்நன்மையையே நாடுவராதலால் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தாமாகாது பிறராவர்; ஆகவே பிறர்க்குப் பிறர்செய்யுமுதவி யொன்றுமில்லை என்றவாறு. இது ஒருவருக்கொரு வர் செய்கிறதென்ன? என் றடிப்படவழங்கிவரு முலகவழக்கினை, எடுத்துக் கொண்டபொருட்டுணிவிற் கேதுவாகக்காட்டியவாறு. இதனால் "இனைய ரிவ ரெமக் கின்னம்யா மென்று, புனையினும் புல்லென்னு நட்பு"§ என்றபடி யொரு

---

* நாலடியார், 2-ம் அதிகாரம் (இளமைநிலையாமை) செய்-10.

† திருக்குறள், 40-ம் அதிகாரம் (கல்வி) குறள்-7.

‡ மூதுரை, செய்—26.

§ திருக்குறள், 79-ம் அதிகாரம் (நட்பு) குறள்-10.

வரையொருவர் தாமாகவேபாவிக்குமிருவரு மொருவருக்கொருவர்செய்யு முதவியி லதிவியாத்தியின்றெனவுணர்க. 'ஆதலான் மற்றுத் துணையாவாரைக் கண்டிலே' மென்றது பிறர்க்குப்பிறர்செய்வதுண்டோவென்ற ஆராய்ச்சியிற் றோன்றிய துணிவுரைகூறியவாறு. 'தமக்குமருத்துவர்தாம்' என்றது பழமொழிக் கூற்று. இது தற்காப்பிற் பராக்காயிருப்பானொருவ னிடருற்றுழி அவனைநோக்கி யிடிப்பாருரைக்குமிடத்துத் தனக்குவயித்தியன் றானாகவேண்டும் என்னும் உலக வழக்காயுள்ளது. இதன்பொருள் ஒருவர்க்கு ஒருபிணிநோயுற்றுழி அப்பிணி நோயுற்றானாகிய தானே அந்நோய்தீர்க்குமருந்தின்கூற்றுள் முதலாய்நின்று தன் அறிவாற்றலொழுக்கங்களால் அந்நோய்தீர்த்தற்குக் காரணமாவதுபோல இடருற்றானும் தன் அறிவாற்றலொழுக்கங்களால் அவ்விடர்தீர்க்கு முபாயங்க ளுள் முதலாய்நின்று தீர்த்துக்கொள்ளவேண்டுமென்பதாம். நோயுற்றானே அந்நோய்தீர்க்கு மருந்தின்கூற்றுள் முதலாயுள்ளானென்பதை "உற்றவன் றீர்ப் பான் மருந்துழைச் செல்வானென், றப்பானாற் கூற்றே மருந்து"* என்னுங் குறளுரையானு மறிக. இக்குறளில், நோயுற்றானையும் அது தீர்ப்பானையும் மருந் தென்றுகூறியபடியே 'தமக்குமருத்துவர்' என்றதற்குத் 'தமக்குமருந்தாவார்' எனப் பொருளுரைக்கப்பட்டது.

57\. கைவிட்ட வொண்பொருள் கைவர லில்லென்பார்
மெய்பட்ட வாறே யுணர்ந்தாரான்—மெய்யா
மடம்பட்ட மானோக்கின் மாமயி லன்னாய்
கடம்பெற்றான் பெற்றான் குடம்.

எ-து, தனிசென்று ஒருவன் பிறர்க்குக் கைவிட்ட வொண்பொருள், பின்னைத் தன்கையின்கண்வருவதில்லையென்றுசொல்லுவார் மெய்ம் மைப்பட்டநெறியானே அறிந்தார்கள்; மெய்ம்மையாகவே, மடமையை யுடைத்தாகிய மானோக்கினையுடைய மாமயில்போல்வாய்! பிறர்க்குத் தனிசிட்டான் அத்தனிசுபெற்றபடியாவது சூளுறுதற்குப் பாம்புக் குடத்தைப்பெறுதல் எ-று. "பாழ்ந்தனிசுவேண்டிப் பாம்புக்குடம் பேற்றான்" என்னும் பழமொழி இது.

(குறிப்பு) இது சான்று சாசனம் அடகுமுதவியபற்றொன்றுமின்றிப் பொன்மயமானபொருள்களைப் பிறர்க்குக் கடன்கொடுக்கலாகாதென்பது கூறு கின்றது. 'கைவிட்டவொண்பொருள்' என்றதற்கு, 'கடம்பெற்றான்' என்னுங் குறிப்பால், 'தனிசென் றொருவன் பிறர்க்குக்கைவிட்டவொண்பொருள்' எனட

* திருக்குறள், 95-ம் அதிகாரம் (மருந்து) குறள்-10.

பொருளுரைக்கப்பட்டது. தனிசு-கடன். 'பிறர்க்கு' என்றது தன்னோடியைபில்லாத அயலாருக்கு என்றபடி. 'கைவிட்ட'வென்றது பின்னொருடர்தற்காதாரவான ஈடு சாசனமுதலியவொன்றுமின்றிக்கொடுத்த வென்றபடி. இதனால் வர்த்தகமுறைப்படிகொடுக்குந் தனிசு விலக்கப்பட்டது. 'ஒண்பொருள்' என்றது கொள்வோன் விழைவுற்றுவெஃகுமாறு அவன்நிலைமையின்மிக்க சிறந்தபொருள் என்றபடி. 'பின்னைத் தன்கையின்கண்' என்றது மறித்தும் கொடுத்தான்வயமாக வென்றவாறு. 'வருவதில்லை யென்றுசொல்லுவார்' என்றது வராதென்பார் என்றபடி. 'மெய்ம்மைப்பட்டநெறி' உண்மைப்பாடுடையநெறி, அதாவது பிரமாணங்களாம்; அவற்றானறிந்தாராவார்-பிராமாணிகர்கள்எனக்கொள்க. 'மெய்ம்மையாகவே' என்றது உதாரணங்காட்டும் பழமொழிக்கதை, கட்டுக்கதையன்று உண்மையாகவேநடந்தகதை என்ப துணர்த்தியவாறு. 'கடம்பெற்றான்பெற்றான்குடம்' என்றது பழமொழிக்கூற்று. இக்கூற்றில் இகழ்ச்சிக்குறிப்பாற் குடம்பெற்றதே கடன்பெற்றதாய்முடிந்ததென்பார் கடம்பெறுவானென்னாது கடம்பெற்றான்என இறந்தகாலத்தாற்கூறினார். எங்ஙனம்பெற்றான்என்பார்க்குக் குடம்பெற்றானாகியெனப் பெற்றபடிகூறுவார் கடம்பெற்றான் என்றமையால், அதற்கு 'தனிசுபெற்றபடியாவது சூளுறுதற்குப் பாம்புக்குடத்தைப்பெறுதல்' எனப் பொருளுரைக்கப்பட்டது. குடம் என்றதற்குப் பாம்புக்குடம் என அடையும், சூளுறுதற்கு என நிமித்தமும் இப்பாட்டிற்கெடுத்துக்கொண்ட பழமொழியின்கூற்றாலுங் குறிப்பாலுங் கூட்டியுரைக்கப்பட்டது. 'பாழ்ந்தனிசுவேண்டிப் பாம்புக்குடம்பெற்றான் என்னும் பழமொழியிது'வென்றது ஓரைதிகமடியாகப் பிறந்ததாய், இப்பாட்டிற்கெடுத்துக்கொண்ட பழமொழியினாகாரமிருக்கும்படி காட்டியவாறு. பாழ்ந்தனிசென்றது-ஈடு சான்று சாசனமுதலியவொன்றுமின்றிக் கொடுத்ததனிசென்றபடி. இதனாலும் சான்று அடகு சாசன முதலியவுள்ள தனிசு விலக்கப்படுதல்காண்க. இதன் ஐதிகமாவது:—சிறிதுபொருள்படைத்தானொருவன், தன்னிடமிருக்கும்பொருளைத் திருடர்கவராதிருக்கவேண்டிப் பிறரறியாதுவைத்துத் தன்னோடுபயின்றானொருவனுக்கு மந்தணத்திற் றனிசு கொடுக்க அத்தனிசுபெற்றான் அதனையிறுத்தற்குரியகாலத்திறுத்திலனாகத் தனிசிட்டோன் பன்னாட்டொடர்ந்து தனித்துக்கேட்டும் சாக்குப்போக்குச்சொல்லிக் கடத்திக்கொண்டுவருவதுகண்டு இனி இவன் நேரேதாரானென்று துணிந்து நியாயசபையில் முறையிட, அதுகேட்ட நியாயசபையார் எதிரியையழைத்துரைத்து நின்னெதிருரையென்னென்ன; யான்தனிசுபெற்றிலேன் என்ன; அதுகேட்டவர் வாதியைநோக்கி நீ யிவற்குத் தனிசிட்டதற்குச்சான்றுண்டோவென்ன; சான்றில்லையென்ன; சூளுரைகூறி யுன்வழக்கை மெய்ப்பிக்க நாளைவாவென்றுபோக்கி மறுநாள் அவன்வந்துழி அவ்வாதிகையிற் பாம்பின்குடங் கொடுப்பித்துஅதனுட்கையிட்டுச்சூளுரைகூறென்ன, அவனதிற்கையிடற்கஞ்சி நேற்றிரவேதனிசுபெற்றுக்கொண்டேனென்றுகூறி வழக்கைநிறுத்திக்கொண்டு

பொருளையிழந்தான் என்பதாம்.* இவ்வாறு பண்டைக்காலத்துப் பாம்பின்குடத்துக்கையிட்டுச்சூளுரைசொல்லும்வழக்குண்டென்பதை "ஆரங்கெடப்பரனன்பர் கொள்ளாரென்றவர்களுக்கா, வாரங்கொடுகுடப்பாம்பிற்கையிட்டவன்மாற்றலரை, வீரங்கெடுத்தசெங்கோற்கொல்லிகாவலன்வில்லவர்கோன், சேரன் குலசேகரன்முடிவேந்தர்சிகாமணியே" † என்பதனானறிக. (சான்றுவார் தீங்கெய்தினுமெய்துகவென்னுந் துணிவொடுநின்று கரிகூறவேண்டுமென்னும்நியமம் முற்காலத்துப் பிறநாட்டினுமிருந்ததென்பது என்ஸைக்ளோபீடியா (பிரிட்டானிகா) பதினேழாவதுவால்யூம் (9-வது பதிப்பு) 698, 699-வது பக்கங்களிற் கூறப்பட்டிருத்தலாலும் அறியத்தக்கது.)

58. நிரந்து வழிவந்த நீசரு ளெல்லாம்
பரந்தொருவர் நாடுங்காற் பண்புடையார் தோன்றார்
மரம்பயில் சோலை மலைநாட வென்றுங்
குரங்கினு ணன்முகத்த வில்.

எ-து, இடையறாது குடியாகப்பிறந்துவந்த கீழ்மக்களுளெல்லாம் பரந் தாராயுங்காற் பண்புடையாரொருவர் தோன்றார்; மரம்பயில் சோலைமலைநாடனே! என்றும் குரங்கினத்தில் நன்முகத்தவாயுள்ள குரங்குகளில்லை, அதுபோல எ-று.

---

* இதன் பழமொழியினைதிகம் பிறிதோராற்றானுங் கூறப்படுவதுண்டு. அதாவது.—உழுதொழில்வாழ்க்கையுடையானொரிளைஞன், தன்வீட்டாரறியாது தன் றோட்டத்திலுள்ள காய்கறிகளைவிற்றீட்டிய சிறுதேட்டைப் பிறரறியாது ஒருவனிடம் கடன்கொடுத்துவைத்துப் பின்பொருகாலத்துத் தனித்துக்கேட்டபொழுது, கடன்பெற்றான் அதனை வஞ்சித்துக்கொள்ளக்கருதி நாளையிரவிற் றருகின்றேன் வாவென்றுசொல்லிப்போக்கி, ஒருகுடத்தில் இரைவைத்துப் பாம்பைப்பிடித்து, அக்குடத்தின்வாயைக் கிழியால் மூடிக்கட்டி, வீட்டிற் கொணர்ந்துவைத்து, அன்றிரவிற் றனிசிட்டோன்வந்து கேட்க, இக்குடத்தில் இட்டுவைத்திருக்கிறேன் இதனை ஓசைப்படாது கொண்டுசென்று உன்தோட்டத்தில்வைத்து, எண்ணி எடுத்துக்கொள் என்றுசொல்லக்கேட்டு, அவன் குடத்தை யெடுத்தவளவிற் கனத்திருப்பதுகண்டு, பணக்கிழியென்று மகிழ்ந்து, அதனைக்கொண்டு தன்தோட்டஞ்சென்று வேலிமறைவில்வைத்துக் குடத்தின் வாய்க்கிழியை அவிழ்த்துக் குடத்துட்கையிட்டவாறே அதனுள்ளிருந்த பாம்பு சீறியெழுந்து கடிக்க உடனேஇறந்தான் என்பதாம்.

† நாலாயிரதிவ்யப்பிரபந்தம் பெருமாள்திருமொழித்தனியன்.

(குறிப்பு) இது குற்றமேசெய்யுங்கூட்டத்தாராகிய இழிகுலத்தவருள் ஒருவரேனும் நல்லொழுக்கமுடையராயிராராதலா லவரைநம்பலாகாதென்பது கூறுகின்றது. 'இடையருதுகுடியாகப்பிறந்துவந்தகீழ்மக்கள்' என்றது குலம் சாதி கோத்திரநியமமொன்றுமின்றி ஒருஞான்று முயர்குலத்தன்மையெய்தற் குரியராகாது வழிவழியே இழிதொழில்புரிந்துவந்த கீழ்மக்கள் என்றவாறு. இவரையே காங்க் என்னும்பெயரால் ஆங்கிலம்வல்லார்வழங்குவர். இவ்விழிகுல மானது நியமமுடைய சாதிவிசேடங்களிலுள்ள குடிப்பிறப்பின்வேறுதலால், இப் பாட்டின்கருத்து, "பெருங்கடலுட், பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார், நல் லாள் பிறக்குங் குடி"* என்பதனோடு மாறுபடாதெனவுணர்க. பரந்துநாடுங் காற் பண்புடையர்ரொருவர்தோன்றுர் எனக் கூட்டுக. 'பண்புடையார் ஒருவர் தோன்றுர்' என்றது நல்லொழுக்கமுடையாரொருவரும் தோன்றுரென்றவாறு. ஒருவரும் என்ற உம்மை விகாரத்தாற் றொக்கது. என்றுமென்றது, "மன்னுப் பொருளு மன்ன வியற்றே"† என்றதனு லும்மையுங் களனு மொருங்கு கூறிய வாறு. 'குரங்கினுள் நன்முகத்தவில்' என்றது பழமொழிக்கூற்று. இது, தூங்கு மூஞ்சியில் நல்லமூஞ்சியுண்டோ. என்றும், தூங்கிலியக்தூங்கி லேந்தக் தூங்கானுலேன்ன. என்றும் துஷ்டகிருத்தியஞ்செய்யுஞ் சிறுரைச்சுட்டி வழங் கப்படுகிறது.

59. முட்டின் றொருவ ருடைய பொழுதின்க
ணட்டிற்றுத் தின்பவ ராயிரவ ராபவே
கட்டலர்தார் மார்ப கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ வில்.

எ-து, ஒருவர் குறைவின்றிச் செல்வமுடையபொழுதின்கண் அவரட்டிலின்கண் ணுள்ளதனைத்தின்பவர் ஆயிரவருள்ளாராவர்; கட் டலர்தார்மார்பனே! கலியூழியாகியகாலத்துக் கெட்டார்க்கு நட்டார் ஒருவருமில்லை; ஆதலான் எ-று.

(குறிப்பு) இது கெடுங்காலக்கைவிடுவாரொடு கேண்மைகொள்ளலாகா தென்கின்றது. முட்டு-முட்டுப்பாடு; இது, தாமுண்ணுதற்கும் உற்றுர்க்குதவு தற்கும்போதாத பொருட்குறையையுணர்த்துங் குறிப்புமொழியாயிற்று. அக் குறைவின்மையே செல்வத்துக்கு நிறைவுடைமையாதலால், 'செல்வமுடைய பொழுதின்கண்' என்றது நிறைந்தசெல்வமுடையபொழுதின்கண் என்றவா றுயிற்று. 'அட்டிலின்கணுள்ளது' விரும்பியுண்ணுதற்கேற்ற விளஞ்சூடாறுத அறுசுவையுண்டியும் பண்ணியவகைகளுமுதலிய வுணவின்றொகுதி. 'தின்பவர்'

* நான்மணிக்கடிகை செய்—4.

† தொல். சொல். கிளவியாக்கம். சூத்திரம்—34.

என்றது பின் பவர் நன்றிமறப்பவர் என்பதுநோக்கிய செறற்சொல்லாயிற்று. 'ஆயிரவருள்ளாராவர்' என்றது மிகப் பலராவர் என்றபடி. கலியூழியாகியகாலம் என்றது கலிபுருஷன் என்னும் இழவூழ்த்தெய்வம் முறைசெலுத்துங்காலமாகிய இக் கடையுகமென்றவாறு. காலவியல்புந் தீவினைக்கே துணையாமாதலால் நன்றியறிதலுடையராயிருப்பா ரரியரென்பது கருத்து. 'கெட்டார்க்குநட்டாரோவில்' என்றது பழமொழிக்கூற்று. கெட்டார்க்கென்றது குறைவின்றிச் செல்வமுடையராயிருந்துகெட்டார்க்கு என்றபடி. 'நட்டாரோவில்' என்றதற்கு 'அட்டிற்றுத்தின்பவ ராயிரவராபவே' என்றகுறிப்பால் 'ஒருவருமில்லை'யெனப் பொருளுரைக்கப்பட்டது. ஓகாரம் தெரிநிலையானமையால் 'ஒருவருமில்லையாதலால்' என ஏதுவாக்கிப் பொருளுரைக்கப்பட்டது. 'ஆதலால்' என்றது கெடுங்காலைக்கைவிடுவார்நட்புக் கொள்ளற்கவென்னுங் குறிப்புப்பொருள்கொள்ளக் கூறியவாறு. 'கெடுங்காலைக்கைவிடுவார்கேண்மை'என்னுங் குறளும்* 'காலாடு போழ்தி'†வென்னும் நாலடிச்செய்யுளு மிக்கருத்துடையன. இதன்பழமொழி 'கேட்டவநக்குநட்டவநுண்டோ' என்பதாம். இது மிகுதிபற்றியவழக்கான்வந்த பழமொழி. இப்பழமொழிப்பொருள், 'நல்கூர்ந்தார்க்கில்லைசுற்றம்' எனச் சீவகசிந்தாமணியுள்ளும்‡ வழங்கப்பட்டது.

60. ஆற்று மிளமைக்கட் கற்கலான் மூப்பின்கட்
போற்று மெனவும் புணருமோ—வாற்றச்
சுரம்போக்கி யுல்குகொண்டா ரில்லையே யில்லை
மரம்போக்கிக் கூலிகொண் டார்.

எ-து, கற்கலாமிளமைக்கட் கற்கலாதான், மூப்புவந்தகாலத்துக் கல்வியைக்கற்றுப் போற்றுமென்று சொல்லப்படுவதும் ஒருவர்க்குக் கூடுமோ? மிகவுஞ்சுமந்து வழியைக்கடக்கப்போகவிட்டு ஒருவனைச் சுங்கங்கொண்டாரில்லை; ஓடத்தினின்றும்போகக் கரையேற்றிநின்று கூலிகொண்டாருமில்லை எ-று.

(குறிப்பு) இது கல்வியை அன்றறிவாமென்றிரா திளமைப்பிராயத்தே கற்கவேண்டுமென்கின்றது 'கற்கலாமிளமைக்கண்' என்றது பலவாற்றானுங் கற்றற்குயோக்கியமுள்ள இளமைப்பருவத் தென்றவாறு. அவையாவன, மனம் மாசுபடாமையும், உணர்தல்வேட்கையும், மனக்கவலையின்மையும், விடயாந்தரங்களில் மனஞ்செல்லாமையும், இயல்பானே குரவரதாணைக் கடங்கியொழுகுமியல்புடைமையும், ஆற்றல்குன்றாது வளர்வடைந்துவருதலும் முதலாயின.

* திருக்குறள் 80-ஆம் அதிகாரம் (நட்பாராய்தல்) குறள்—9.
† நாலடியார் 12-ம் அதிகாரம் (மெய்ம்மை) செய்—3.
‡ சீவகசிந்தாமணி 12 இலக்கணையாரிலம்பகம் செய்யுள்—158.

'மூப்புவந்தகாலத்' தென்றது பலவாற்றானுங் கற்றற்குயோக்கியமாகாத வயது நிரம்பியபிறகென்றவாறு. இதனை 'மூப்பதாமாண்டளவில்'* என்றார்பிறரும். 'கல்வியைக்கற்று' என்றது போற்றுமென்றதற்கேற்பச் சுட்டாற்போந்த செயப்படுபொருளை விரித்துரைத்தவாறு. 'போற்றுமென்றுசொல்லப்படுவது மொருவர்க்குக்கூடுமோ' வென்றது போற்றுவானென்று ஒருவர் சொல்லுவதுஞ் செய்யார் எனப் போற்றாமையை வலியுறுத்தியவாறு. 'மிகவு' மென்றது சுமப்பார் வர்த்தகத்தின்பொருட்டன்றித் தமக்கு நுகரும்பொருட்டுச் சுங்கமின்றிக்கொண்டுசெல்லற்குரிய அளவின்மேற்பட வென்றவாறு. 'வழியைக்கடக்கப்போகவிட்டு' என்றது சுங்கம்வாங்கும்வழிவாயிலைக் கடந்துசென்று போகவிட்டு என்றவாறு. இப்பாட்டிற் பின்னடியிரண்டும் இருதொடரிணைந்த தொருபழமொழிக்கூற்று. இப்பழமொழியின்சொரூபம் வழக்குஞ் செய்யுளு நோக்கி வந்துழிக்காண்க. இதன்பொருள் உபலக்ஷணவகையால் ஒன்றனை யொருவன் பெறுதற்குரியகாலத்துப் பெறாதுவிடுத்தாற் பின் பதனைப் பெறுத லரிது என்பதாம். இப்பொதுப்பொருளால், இளமையிற்பெறுதற்குரிய கல்வியைப் பெறாதுவிடுத்தான் பின் பதனைப் பெறுதலரிது என்னுஞ் சிறப்புப்பொருள் துணியப்பட்டது. இப்பாட்டால், கல்விகற்றற்கு இளமைப்பருவமே சிறந்த தென்றமையாலும், முதுமைப்பருவத்திற் கற்கலாகாதென்றுவிலக்காமையாலும், கல்வி கரையிலவாதலால் இளமையிற்கற்றா னவ்வளவிலொழியாது மேலுங்கற்றல் முதுமையி னியலுமாதலாலும்இது'என்னொருவன்சாந்துணையுங்கல்லாதவாறு'† என்னுங் குறட்கருத்தொடு மாறுபடாதென்க. இதில் 'மரம்போக்கிக்கூலிகொண்டார்' என்னும் பழமொழியிலுள்ள ஓடத்தை உபலக்ஷணவகையாற் பண்டியாக வைத்து,"உழந்தாலும் புத்தச்சொன் றிட்டேர்த றேற்றா,திழந்தார் பலரா லிடும்பை நீர் யாற்று, ளழுந்துமாலப்பண்டி யச்சிறா முன்னே, கொளுஞ்சீலங் கூலியாக் கொண்டேர்மின்பாகீர்" எனச் சீவகசிந்தாமணியுள்ளும்‡ வழங்கப்பட்டது.

61. உணற்கினிய வின்னீர் பிறிதுழியில் லென்னுங்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார்—கணக்கினை
முற்றப் பகலு முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று.

எ-து, உண்ணுதற்கினிய இந்நீர் பிறிதோரிடத்தில்லையெனக் கருதிக் கிணற்றகத்தேவாழுந் தவளைபோல ஒழுகலாகாது; நூலொன்றினையே முடியும்படி நாடோறும்வெறாதே யினிதாகவோதிக் கற்றலிற் பலநூல்களையுங்கேட்டலே நன்று; ஆதலான் எ-று.

---

* நல்வழி, செய்-39.

† திருக்குறள் 40-ம் அதிகாரம் (கல்வி) குறள்—7.

‡ சீவகசிந்தாமணி, 13-வது முத்தியிலம்பகம், செய்-23.

(குறிப்பு) இது ஒருநூற்கல்வியினும் பலநூற்கேள்வி சிறந்ததென்கின்றது. 'இங்கீர்' என்றது இங்குள்ளநீர்போலும்நீர் என்றவாறு. இல்லெனல் தலைவினைவினையாகாத குறிப்புச்சொல்லாதலால் 'இல்லையெனக்கருதி' வாழுமெனத் தாற்பரியப்பொருளுரைக்கப்பட்டது. 'கிணற்றகத்தேவாழுந் தவளைபோலொழுகலாகா' தென்றது தான் றெரிந்ததொருநூலினையே பயின்று பிறிதொருநூலும் அத்துணை நன்றன்றென்று பயிலாதுவிட்டிருக்கலாகாதென்றவாறு. தனிச்சீர் உரையொடுபொருந்தக் 'கணக்கொன்றே' என்றிருக்கவேண்டும். 'முற்றப்பகலும் முனியாதினிதோதி' என்றது கற்றலின் சிறந்தமுறையிருந்தபடி கூறியவாறு. 'நூலொன்றினையே' என்றது கற்குங்காலத்துப் பலநூலுமொருங்கு பயிலாது கற்கத்தகு மொருநூலையே பாடங்கேட்பது நன்றென்றுணர்த்தியவாறு. 'முடியும்படி' என்றது இடையில்விட்டொழியாது விரைவில்முடியும்படி வேண்டுமெனவு பயின்று என்றவாறு. 'நாடோறு' மென்றது உரியகாலங்களை வீணாக்காது என்றவாறு. 'வெருதே' என்றது விருப்புடையனுய்க்கொண்டென்றவாறு. 'இனிதோதி' என்றது மனஞ் சோர்வடையவிடாது அநாயாசமாகப் பாடம் வரப்பண்ணி யென்றவாறு. இவை கற்கும் முறைகளாம். கணக்கொன்றே கற்றலின் எனக் கூட்டுக. 'பலநூல்களையு'மென மறுதலையடையும் செயப்படு பொருளும் வருவித்துரைக்கப்பட்டன. 'கற்றலிற்கேட்டலேநன்று' என்றது கற்றல்நன்று அதனினும் கேட்டல் மிகவும் நல்லது என்றவாறு. ஏகாரம் தேற்றப்பொருள்குறித்துநின்றது. ஆதலால் என்னும் ஏது ஒழுகலாகாதென்னுந் துணிபொருள்கொண்டுமுடிந்தது. கிணற்றுத்தவளை நாட்டுவளமறியாது என்பது திதன்பழமொழி. கணக்கொன்றே முற்றப்பகலு முனியாதினிதோதிக் கற்றொழுகுவாரைக் கூபகூர்ம: எனப் பழிப்பதும், பலநூல்களையுங் கேட்டொழுகுவாரை வைஹ-ஶ்ருத: எனப் புகழ்வதும் வடமொழிவழக்கு. இப்பழமொழிப்பொருளே, "ஊற்றுநீர்க் கூவலு ளுறைபு மீனனார், வேற்றுநாட்டதன்சுவை விடுத்தன் மேயினார்"* எனச் சீவகசிந்தாமணியினும் உபலக்ஷண வகையா லெடுத்துரைக்கப்பட்டது.

62. கழுமலத் தியாத்த களிறுங் கருவூர்
விழுமியோன் மேற்சென் றதனால்—விழுமிய
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது.

எ-து, கழுமலமென்னு மூரின்கண்ணே பிணித்துநின்றகளிறும், கருவூரின்கண்ணேயிருந்த கரிகால்வளவன் கடிதிளையனுயினும் அவன் சிறப்புடையனுதலால் அவன்மேற்சென்று தன்பிசையெடுத்துக்கொண்டு அரசிற்குரிமைசெய்ததாதலால் விழுமியபொருளைக் காதலிப்பினும் காதலியாதுவிடினும் உறக்கடவன தீண்டாவாய்விடுதல் அரிது எ-று.

* சீவகசிந்தாமணி, 5-வது பதுமையாரிலம்பகம் செய்-11.

(குறிப்பு) இது முயற்சியின்றியும் நல்லூழ்வலியால் விழுப்பேறடைத லியலுமென்ப துணர்த்துகின்றது. கழுமலத்தென்றது கருவூரின்சேய்நிலத் துள்ளதென்னுங் குறிப்புணர்த்தியவாறு. யாத்த என்றது அவ்வூரைவிட்டுப் பிறிதிடம்புக்கறியாது கட்டுண்டுபழகிய வென்றவாறு. களிறு என்றது தகுதி யறியுந்திறனில்லாத விலங்கு என்றவாறு. கருவூர் என்றது தேசாந்தரமாகிய சேரநாட்டுள்ளதென்னுங் குறிப்புணர்த்தியவாறு. இவை நான்கும் வளவன் விழுப்பயனெய்தற் கியைபின்மையுணர்த்திநின்றன. 'கரிகால்வளவன் கடி திளையனுயினு' மென்றது இசையெச்சம். இதுவும் அவ னரசுரிமையெய்தற் கியைபின்மைகாட்டியபடி. 'அவன் சிறப்புடையனுதலால்' என்றது அவன் அரசுரிமையெய்தற்குச் சிறந்த நல்லூழுடையனுதலால் என்றவாறு. இஃ தொன்றுமே யவனரசுரிமையெய்தற் கேதுவாய்நின்றதென்பதாம். 'விழுமிய பொருளை' என்றது ஒருவன் தானுகவே முயன்றெய்தற்கரிய பெரும்பேறுகளை என்றவாறு. 'காதலிப்பினுங் காதலியாதுவிடினு' மென்றது விரும்பிமுயலினும் முயலாதுபேக்ஷித்திருப்பினு மென்றவாறு. 'உறக்கடவன' வென்றது நல்லூழா லுறற்பாலனவாகிய நலங்கள் என்றவாறு. 'நீண்டாவிடுதலரிது' என்றது அவ் வூழுடையானைப் பற்றுதொழியாவென்றவாறு. இப்பாட்டிற் பின்னடி இரண் டும் பனுவல்வழக்காய்ப்பிறந்த பழமொழிக்கூற்று. இது நாலடியுள்ளும்* வழங் கப்பட்டது.

63\. எவ்வந் துணையாப் பொருண்முடிக்குந் தாளாண்மை
தெய்வ முடிப்புழி யென்செய்யு—மொய்கொண்டு
பூப்புக்கு வண்டார்க்கு மூர குறும்பியங்குங்
கோப்புக் குழிச்செய்வ தில்.

எ-து, துன்பமே தனக்குத்துணையாக ஒருவன் நினைத்தபொருளை முடிக்குந் தாளாண்மை, முற்பிறப்பிற்செய்த தீவினைவந் திடையூறு செய்தால் அவ்வினையைவலிந்து என்செயவற்று; பூப்புக்கு வண்டார்க் கும் ஊரனே! எங்கும் தடையின்றிச் செல்லவல்ல அரசன் கைக் கொண்டநாட்டின்கட் குறும்பன் வலிந்துசெய்வதொன்றில்லையாத லான் எ-று.

(குறிப்பு) இது வலியான்மிக்க இழவூழின்முன் எளியமுயற்சி யழி வெய்துமென்பது கூறுகின்றது. 'துன்பமேதனக்குத்துணையாகவென்றது' பொருண்முடித்தற்கேற்ற காலமிடமுதலிய பிறதுணையொன்றுமின்றி என்ற வாறு. 'ஒருவனினைத்தபொருளை முடிக்குந்தாளாண்மை' யென்றது இடையூறில் வழிக் கருதியபொருளைமுடித்தற்குப்போதியவளவினையுடைய மெய்ம்முயற்சி

---

* நாலடியார், 11-ம் அதிகாரம் (பழவினை) செய்-9.

யென்றவாறு. தாளாண்மை யென்செய்யு மென்னுங்குறிப்பால் 'தெய்வமென்றது' ஈண்டு முயற்சிக்குவிரோதியாயுள்ள இழவூழ்த்தெய்வமாயிற்று. அது முடித்தலாவது காரியக்கேடாகிய தன்காரியமேமுடியுமாறு முயற்சியைக் கெடுத்தல். 'அவ்வினையைவலித் தென்செயவற்று' என்றது அவ்வலியதீவினையை எளியமுயற்சியானது வலித் தொன்றுசெய்து வெல்லற்பாலதில்லை யென்றவாறு. மொய்கொண்டு என்செயவற்று எனக் கூட்டுக. 'குறும்பியங்குங், கோப்புக்குழிச்செய்வதில்' என்பது திட்டாந்தமாகக்காட்டிய பழமொழிக்கூற்று. இப்பழமொழியின்சொரூபம் வழக்குஞ்செய்யுளுநோக்கி வந்துழிக் காண்க. இது நைடதத்துள், "வைய மேழுடை மன்ன னிறுத்தலும், வெய்ய பாசறை விட்டகல் வேனிரின்"* எனப் பொருள்பற்றி யெடுத்தாளப்பட்டது. 'எங்குந் தடையின்றிச்செல்லவல்ல அரசன்' என்றது எந்நாட்டுந் தடையின்றித் தன்னாணை செல்லவல்ல சார்வபௌமனான அரசன் என்றவாறு. 'கைக்கொண்டநாடு' - கையாட்சியிலுள்ளநாடு. குறும்பன் என்றது குறுநிலமன்னனொருவனென்றவாறு. இதனாற் குறும்பர்பலர்கூடி எதிர்த்தல் விலக்கப்பட்டமையால், "ஊழையு முப்பக்கங்காண்பர்"† என்னுங்குறளொடு மாறுபடாதாயிற்று. 'வலித்துசெய்வதொன்றில்லை' என்றது அப்பேரரசனாணையினடங்கிச் செயலற்றிருப்பதன்றி அவ்வாணையொடு மாறுபடத் தன்னாணையை வலிந்துசெல்லச்செய்யுமுபாயமொன்றுமில்லையென்றவாறு. 'ஆதலால்' என்றிருப்பது அதுபோல என்றிருக்க வேண்டும். பேரரசனாணையை ஒரு குறுநிலமன்னனாணை வெல்லாதவாறுபோல இறைவனாணையாகிய வலியதீயூழை உயிரினாணையாகிய ஒரு எளியமுயற்சி வெல்லாதென்பதாம். ஆணை என்றது இங்குச் சங்கற்பத்தை எனக் கொள்க. இவ்விரண்டுபாட்டானும் ஊழானன்றி, முயற்சி பயனளித்தலிற் சிறழ்ச்சியுடையதன்றென்பது கூறப்பட்டது.

64. கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை யொருவர்க்கு—நல்லா
யிழுக்கத்தின் மிக்க விழிவில்லை யில்லை
யொழுக்கத்தின் மிக்க வுயர்வு.

எ-து, கல்லாதார்முன்பு சொல்லுங் கட்டுரையின்மிக்கதொரு பொல்லாமையில்லை ஒருவர்க்கு; நல்லாய்! இழுக்கத்தின்மிக்கதோரிழிவுமில்லை; ஒழுக்கத்தின்மிக்கதோருயர்வுமில்லை, ஆதலான் எ-று.

* நைடதம், இந்திரப்படலம் செய்-2.

† திருக்குறள், 62-ம் அதிகாரம் (ஆள்வினையுடைமை), குறள்-10.

(குறிப்பு) இது கல்லாதவரிடை வைதுஷ்யப்பிரஸங்கம்செய்யலாகாதென உடன்பாட்டானு மெதிர்மறைமுகத்தானுங் கூறுகின்றது. கல்லாதவர்-கல்வியறிவில்லாதவர். கட்டுரை-வைதுஷ்யப்பிரஸங்கம். 'பொல்லாமையில்லை' என்றது வேண்டாமைபிறிதொன்றில்லையென்றவாறு. பின்னடியிரண்டும் ஒருபழமொழி. இது கட்டுரைவகையால் வந்தது. இது"ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி, னெய்துவ ரெய்தாப் பழி"* எனத் திருக்குறளினு மமைந்துள்ளது. இழுக்கம்-நெறியினீங்கியசெயல். ஒழுக்கம்-நெறிமுறையொழுகல். கல்லாதவரிடைக் கட்டுரை பயனில்கூற்ருய்ப் பயனிலசெய்யற்க வென்னும் நெறிவழிப்படாமையால் அது நெறியினீங்கியசெயலா யிழுக்கமாயிற்று. அது செய்யாமை பயனிலசெய்யாமையாகிய நெறிவழிப்பட்டமையா லொழுக்கமாயிற்று. 'ஆதலான்' என்றது கல்லாதவரிடைச்சொல்லுங்கட்டுரை யிழுக்கத்தின்பாற்படுதலாலும், அது செய்யாமை யொழுக்கத்தின்பாற்படுதலாலும் என்றவாறு. இது ஒருவர்க்கு அதனின்மிக்கதொரு பொல்லாமையில்லை என்று அன்வயத்தானும் வெதிரேகத்தானும் துணிதற்கு ஏதுவாசகமாயிற்று. 'இழுக்கத்தின்மிக்கதோரிழிவுமில்லை' என்றது கல்லாதவரிடைக்கட்டுரைசொல்லுதல் தீதென வுடன்பாட்டாற்கூறுதற் கேதுவாயிற்று. 'ஒழுக்கத்தின்மிக்கதோருயர்வுமில்லை'யென்றது கல்லாதவரிடைக்கட்டுரைசொல்லாமையே நல்லது என எதிர்மறைமுகத்தாற்கூறுதற்கு ஏதுவாயிற்று. 'கல்வியாறுயகழிநுட்பம்'† என்றபாட்டு நூல்கற்க வருமாணுக்கர் அந்நூற்பொருள்கொள்ளற்கேற்றகல்வியிலராயிற் சொல்லலாகாதெனக் கற்பிப்போனைநோக்கியகூற்றுகையாலும், இப்பாட்டுக் கல்லாதாரவையுள் வைதுஷ்யப்பிரஸங்கம்செய்யலாகாதெனக் கோட்டிகொள்வாரைநோக்கிக்கூறிய கூற்றுகையாலும் இவை தம்முட் கூறியதுகூறலன்றென வுணர்க. இதனுல், கற்றற்கு அதிகாரநியமம்வேண்டுவதுபோலக் **கேட்டற்கும்** அதிகாரநியமம் வேண்டுமென்பது பெறப்பட்டது. "ஒளியார்முனொள்ளியராதல்வெளியார்முன், வான்சுதைவண்ணங்கொளல்"‡ என்பதும் இக்கருத்துடையது.

65. வென்றடு கிற்பாரை வெப்பித் தவர்காய்வ
தொன்றொடு நின்று சிறியார் பலசெய்தல்
குன்றொடு தேன்கலா வெற்ப வதுபெரிது
நன்றொடு வந்ததொன் றன்று.

எ-து, வென்று தம்மைக் கொல்லவல்லாரை மனத்தைக்கொதிப்பித்தவர்வெகுள்வதொருகாரியத்தொடுநின்று எளியராய்ப் பல குற்றங்களைச்செய்தல், குவடுகளும் தேன்பொதிகளும் தம்முள் விரவிநெருங்கிய வெற்பையுடையானே! மிகவும் அது தனக்கு நன்றொடுவந்தனவன்று எ-று. குற்றென்பதும் வரும்.

* திருக்குறள், 14-வது அதிகாரம் (ஒழுக்கமுடைமை) குறள்-7.
† இந்நூலின் மூன்முஞ்செய்யுள்.
‡ திருக்குறள் 72-ஆம் அதிகாரம் (அவையறிதல்) குறள்—4.

(குறிப்பு) இது வலிமிக்க அரசரை அவரி னெளியராயினூர் அவமதிக்க லாகாதென்பது கூறுகின்றது. 'வென்று தம்மைக் கொல்லவல்லாரை' யென்றது போர்நேர்ந்துழித் தம்மை வெல்லவுங் கொல்லவும்வல்ல வலிமிக்கஅரசரை யென்றவாறு. 'மனத்தைக்கொதிப்பித்து' என்றது அவர்க்குச் சொல்லாலுஞ் செயலாலுஞ்செய்யக்கடவமரியாதைகளைச்செய்யா துபேக்ஷிக்கும் அவமதிப்பால் அவர்மனம் புழுங்குமாறுசெய்து என்றவாறு. 'அவர் வெகுள்வதொரு காரியத்தொடுநின்று' என்றது அவர் வெகுள்வதாகிய பிரதிகூலமொன்றேயன்றிப் பிறிதொருபயனுமில்லையாக வென்றவாறு. 'எளியராய்' என்றது அவர் வெகுண்டால்வருந்தீங்கு தாங்கமாட்டாதாராய் என்றபடி. 'பலகுற்றங்களைச் செய்தல்' என்றது முன்செய்தது பராக்கிரலன்றென்றெண்ணுமாறு குற்றங்களைத் தொடர்ந்துசெய்தல் என்றவாறு. 'நன்ருவெந்தொன்றன்று' என்றது தீங்குடையவாகும் என்னும் பழமொழிப்பொருள்கொடுத்து முடித்துக் காட்டியவாறு. பெரியாரையவமதிக்குஞ் சிறியாரை யிடித்துரைக்குமிடத்து அச் சிறியார்செய்யுஞ்செயலைச்சுட்டி இது "நல்லதோடுபட்டதில்லை" என வழங்கும் அடிப்பட்டவழக்கே இப்பாட்டிற்கு எடுத்துக்கொண்டபழமொழியெனவறிக. உரை முடிந்தபிறகு குற்றென்பதும்வரும் என்றெழுதப்பட்டிருப்பது ஆராயத்தக்கது; குன்றென்பதும்வரும் என்பது பிரதிபேதம்.

66. முன்னின்னு ராயினு மூடு மிடர்வந்தாற்
பின்னின்னு ராகிப் பிரியா ரொருகுடியார்
பொன்னுச் சொரினும் புகாஅர் புனலூர
துன்னினு ரல்லர் பிறர்.

எ-து, முன்பு ஒருகாரணத்தால் இன்னுராயினும் தம்மைமுழுக்கும் இடர்வந்தாற் பின் இன்னுராகிப் பிரியாதேபொருந்தவர் ஒருகுடிப்பிறந்தார்; பொன்னைப் பிறரைச்செய்யினும் பிறர் தமக்கோரிடர் வந்தால் அவ்விடத்தின்வந்துபுகுதார்; புனலூரனே! ஒருகுடிப்பிறவாதார் துன்னினுரல்லராகலான் எ-று.

(குறிப்பு) இது சுற்றத்தார்துணை சிறந்ததென்பதுகூறுகின்றது. 'முன்பொருகாரணத்தால்' என்றது தம்மைமுழுக்குமிடர்வருதற்குமுன்பு தாயவழக்கு முதலிய யாதேனுமொருகாரணத்தால் என்றவாறு. 'இன்னுராயினு' மென்றது ஒருவர்க்கொருவர் இனிமையற்ற பகைவராயிருப்பினு மென்றவாறு. உம்மை காரணமுள்ளவழியு மின்னுராகாரென்பது குறித்துநின்றது. 'தம்மைமுழுக்கு மிடர்வந்தால்' என்றது தம்முள் யாரேனும் ஒருவரையாயினும், இருவரையுமாயினும் அழுந்தச்செய்யுங்கேடு வருவதாயிருப்பின் என்றவாறு. 'பின்னின்னுராகி, என்றது உடனே ஒருவர்க்கொருவர் இனிமையுடையு நட்பினராய் என்ற

வாறு. 'பிரியாதேபொருந்துவர்' என்றது வேற்றுமையின்றி யொன்றுபடுவர் என்றவாறு. 'ஒருகுடிப்பிறந்தார்'-குடிப்பிறப்புடைய ஒருகுலத்திற் பிறந்தவர். மூன்றாமடி பழமொழிக்கூற்று. 'பொன்னாகப் பிறரைச்செ யினும்' என்றது தம் மோடொருகுலத்திற்பிறவாதபிறரைப்பொன்மிக்குடையராகச்செய்துவைப்பினு மென்றவாறு. பிறர் என்றது அங்ஙனம் செய்துவைக்கப்பெற்ற பிறராகிய அவர் என்றவாறு. தமக்கென்றது,அப்பிறரைப்பொன்மிக்குடையராகச்செய்துவைத்த தமக்கே என்றவாறு. 'வந்துபுகுதார்' என்றது வந்து துணைசெய்யாது விலகி நிற்பர் என்றவாறு. தன்னினாரல்லர் பிறர் என்றதனைப் பிறர் தன்னினாரல் லர் எனக்கூட்டிப் பழமொழிப்பொருளைச்சாதித்தற் கேதுவாக்கி 'ஒருகுடிப் பிறவாதார் தன்னினாரல்லராகலான்'எனப் பொருளுரைக்கப்பட்டது. "பொன் னுச்செய்தாலும் பொருந்தார் பொருந்துவரோ" என்ப திதன்பழமொழி. ஒருகுலத்தார்கட் பொழிக்கற்பாற்றன்றென்பது கருத்து.

67\. சுற்றத்தார் நட்டா ரெனச்சென் றொருவரை
யற்றத்தாற் றேறா ரறிவுடையார்—கொற்றப்புள்
ளூர்ந்துலகந் தாவின வண்ணலே யாயினுஞ்
சீர்ந்தது செய்யாதா ரில்.

எ-து, சுற்றத்தாரென்றும் நட்டாரென்றுங்கொண்டு ஒருவரை மறைத்துச்செய்யுங்காரியத்தின்கண் அறிவுடையார் தேறார்; வென்றி யையுடைய புள்ளையூர்வதுஞ்செய்து உலகத்தைக் காலாற்கடப்பதுஞ் செய்த உயர்ந்தமுதல்வனேயாயினும், தனக்குச் சீர்க்கப்பெற்ற தொன்றை ஒழியவிடுவாரில்லை எ-று. தன்பேறு சிறிதாயிருந்ததாயிற் பழியும் பாவமும் பாராதே யாவராயினும் மனந்திரிந்துவெளவுவர் எ-று.

(குறிப்பு) இது, பிறரறியிற் பொருட்பேற்றை அவர் தமதாக்கிக்கோடற் குரிய சீரியகாரியத்தி லொருவரையும் நம்பலாகாதென்கின்றது. 'சுற்றத்தா ரென்றும் நட்டாரென்றுங்கொண்டு' என்றது இவர் நம் சுற்றத்தாராதலால் நமக் கனுகூலம்செய்வரென்றேனும், இவர் நட்டாராதலால் நமக் கனுகூலம் செய்வரென்றேனும், மனத்துட்கொண்டென்றவாறு. 'ஒருவரை' என்றது தானல்லாத பிறரொருவரையும் என்றவாறு. விகாரத்தாற்றொக்க முற்றும்மையை விரித்துரைத்துக்கொள்க. அற்றம்-பிறரறியாது மறைக்கத்தகுவது. அற்றத்தால் என்றது வேற்றுமைமயக்கமாதலால 'ஒருவரை மறைத்துச்செய்யுங்காரியத்தின் கண்' எனப் பொருளுரைக்கப்பட்டது. மறைத்துச்செய்யுங்காரியமாவது:— பிறிதொருதுணையும்வேண்டாது தனியேமுயல வெளிதினெய்தும் பொருட் பேற்றினைத் தன்னதாக்கிக்கொள்ளற்குரிய காரியம். 'அறிவுடையார் தேறார்'

என்றது அக்காரியவிஷயத்தில் அறிவுடையோர் தெரிந்தெடுக்கமாட்டார் என்ற வாறு. 'வென்றியையுடைய புள்ளையூர்வதுஞ்செய்து' என்றது இந்திராதி தேவர்களெல்லாரையும்வென்று, அண்ணலாகிய தன்னினும் வரத்தா லுயர்வு பெற்ற கலுழனைத் தனக்கு ஊர்தியாகக்கொண்டதுமேயன்றி யென்றவாறு. 'உலகத்தைக் காலாற்கடப்பதுஞ்செய்த' வென்றது எல்லாமுடையனை என்ற படி. இத்தொடர் இக்கருத்துடையதென்பதை "அடியளந்தான்,றாஅய தெல்லா மொருங்கு"* என்பதனானுமறிக. 'உயர்ந்தமுதல்வனேயாயினு'மென்றது முதல் வராயுள்ளாருட் டலைவனேயாயினு மென்றவாறு. இதனை,'முதலாவார் மூவ ரம் மூவ ருள்ளும், முதலாவான் மூரிநீர் வண்ணன்'† என்பதனானுமறிக. 'தனக்குச் சீர்க்கப்பெற்றதொன்றை'யென்றது தன்னதாக வெளிதிற்கொள்ளத்தகுவதாய் வாய்க்கப்பெற்றதொன்றை யென்றவாறு. 'ஒழியவிடுவாரில்லை' யென்றது ஒழிய விடுவாரொருவருமில்லையாகலால்யாரும் தம்மதாகக் கைப்பற்றிக்கொள்வ ரென்ற வாறு. சீர்ந்தது-மெலித்தல்விகாரம். அண்ணலேயாயினும்அச்சுற்றத்தார் நட்டார் சீர்ந்தது செய்யாதாரில் எனைப் பன்மைவினைக்கேற்ற எழுவாய் விரித்துமுடித்துக் கொள்க. 'தனப்பேறு சீரிதாயிருந்ததாயிற் பழியும் பாவமும் பாராதே யாவ ராயினும் மனந்திரிந்து வௌவுவர்' என்றது 'சீர்ந்ததுசெய்யாதாரில்' என்ற பழ மொழிப்பொருளை விரித்துரைத்தவாறு. யாரும் 'வாய்த்ததை விடமாட்டார்' என்னும்அடிப்பட்டவழக்கேஇப்பாட்டிற் கெடுத்துக்கொண்டபழமொழிபோலும்.

68. எனைப்பலவே யாயினுஞ் சேய்த்தாப் பெறலிற்
றினைத்துணையே யானு மணிக்கோட னன்றே
யினக்கலை தேன்கிழிக்கு மெறற்கல்சூழ் வெற்ப
பனைப்பதித் துண்ணார் பழம்.

எ-து, எத்துணைப் பலவாயினும் காலநெடிதுசென்றுற் பெறுமத னிற் றினையளவேயாயினும் அணித்தாகவொருபொருளைப்பெற்றுத் தான்கோடல் மிகவும் நன்று; இனக்கலைகள் தேன்பொதிகளைக்கிழிக்கும் பிறங்கியகற்கள்சூழ்ந்தவெற்பனே! பனையைநட்டு அப்பனைபழுத்தாற் பழமுண்போமென்றிருப்பார் ஒருவருமில்லை எ-று.

(குறிப்பு) இது சூசிகடாஹந்யாயத்தாற் சேய்மைக்கட் பெரும்பயனுறு முயற்சியினும் அண்மைக்கட் சிறுபயனுறுமுயற்சி சிறந்ததென்பது கூறுகின் றது. 'எத்துணைப்பலவாயினு' மென்றது பனையளவான் மிக்கபலவாயினும் என்றபடி. 'காலநெடிதுசென்றுற்பெறுமதனின்' என்றது நெடுங்காலமுயன்று சென்றுற் பெறலாம்பயனாகிய அம் மிகப்பலவாகியபொருளினும் என்றவாறு

---

* திருக்குறள், 61-ம் அதிகாரம் (மடியின்மை) குறள்-10.

† நாலாயிரதிவ்யப்பிரபந்தம் இயற்பா முதற்றிருவந்தாதி, பாசுரம்-15.

'இனையளவேயாயினு மணித்தாக வொருபொருளைப்பெற்றுத் தான்கோடல் மிகவும்நன்று' என்றது சிற்றஞ்சிறுகாலேமுயல உடனேகிடைக்கும்பொருள் அளவான் மிகச்சிறிதாயிருப்பினும் அதனையே கைக்கொள்ளுதல் மிக நன்றென்றவாறு. அணித்துக்கோடல் என்பது அணிக்கோடல் எனக் கடைக்குறையாயிற்று. அணித்தாகக்கொள்ளுதல் என்பது பொருள். 'இனக்கலைக டேன் பொதிகளைக்கிழிக்கும்' என்றது தம்மினங்களுடன் கூடிய ஆண்குரங்குகள் தேனிறால்களைப்பிய்த்து இனங்களையூட்டித் தாமுமுண்ணுகின்றனென்றவாறு. பிறங்கிய கற்கள்-விளக்கமுள்ள சிறுகுன்றுகள். பனைப்பதித்துண்ணார்பழமென்பது பழமொழிக்கூற்று. 'பனையைநட்டு, அப்பனைபழுத்தாற் பழமுண்போமென்றிருப்பாரொருவருமில்லை' என்றது பசியுடையராய் அப்பசிதீரப் பனம்பழமுண்ணும் வேணவாவுடையாரெவரும், எளியமுயற்சியிற் கிடைப்பதொரு பனம்பழத்தைத் தேடியுண்டு பசிதீராது, அதன் கொட்டைதேடிக்கொணர்ந்தூன்றித் தண்ணீர் வார்த்து வளர்த்துவர்து அது பனைமரமாய்ப் பின் காய்த்துப் பழுக்கும் மிக்க பழங்களை நுகர்வேமென் றெதிர்பார்த்திரார் என்றபடி. "பசித்துண்ணவேண்டிப் பனைநடுவாருண்டோ" என்ப திதன்பழமொழி. இப்பொருள்பற்றி நாளைக் கிடைக்கும் பலாப்பழத்தைக்காட்டிலும் இன்றுகிடைக்குங் களாப்பழம் நல்லது எனவும் ஒருபழமொழி வழங்குவதுண்டு.

69\. தந்தம் பொருளுந் தமர்தம் வளமையு
முந்துற நாடிப் புறந்தர லோம்புக
வந்த ணருவி மலைநாட சேணோக்கி
நந்துநீர் கொண்டதே போன்று.

எ-து, தந்தமது பொருளினதளவினையும, தமாகளசெல்வத்தினளவினையும் முந்துறவே ஆராய்ந்தறிந்து உய்தற்குத்தக்கவகை புறந்தருதற் பொருளைப் பொருள்செய்து பாதுகாக்க; அந்தணருவிமலைநாடனே! பின் தனக்கு நீர்பெறலாங் காலநெடுமையைப்பார்த்து நந்து நீரைத் தாங்கியதுபோல எ-று.

(குறிப்பு) இது ஈட்டியபொருளை வீண்செலவுசெய்யாது சிக்கெனவுடையராய் வைத்து வாழவேண்டுமென்கின்றது. 'தந்தமதுபொருளினதளவினையும்' என்றது ஒவ்வொருவரும் தம்மாலீட்டப்பட்டுள்ள பொருளினதுஅளவு இத்துணையென்பதையும் என்றவாறு. 'தமர்கள்செல்வத்தினளவினையும்' என்றது தம்மாற் பாதுகாக்கத்தக்க இருமுதுகுரவரும் மனைவியும் மக்களும் ஏவலாளரும் மற்றுந் தம்மைப்பற்றிய சுற்றத்தாரும் உண்டுடுத்தணியவேண்டும்பொருள்களும் அவற்றிற் குபகரணங்களுமாகச் செலவுசெய்யவேண்டும்பொருளினளவையும் என்றவாறு. முந்துறவாய்ந்தறிதலாவது செலவிட்டுவாழவேண்டும் பிற்றைஞான்றின் முற்படவே அவ்விருவகைகளத்தையும் சீர்தூக்கியறிதல்.

'உய்தற்குத்தக்கவகை புறந்தருதற்பொருளைப் பொருள்செய்துபாதுகாக்க'வென்றது, தம்பொருளினளவுசிறிதாயின் தாமுந் தமருமுயிர்வாழுமாறு பாதுகாப்பிற்கு வைத்திருக்கும் அப்பொருளைப் பிறிதொருசெலவும்செய்யாது சிக்கெனவுடையராய்ப் பாதுகாத்துவாழவேண்டுமென்றவாறு. "சேணோக்கி நந்து நீர்கொண்டதே போன்று" என்பது பழமொழிக்கூற்று வுதாரணங்காட்டியவாறு. 'பின் றனக்கு நீர்பெறலாங் காலநெடுமையைப்பார்த்து நந்து நீரைத்தாங்கியதுபோல' என்றது நத்தை தன்கூட்டினுள்ளே பனிக்காலத்திலீட்டிவைத்தநீரைத் தான் வீண்விரயஞ்செய்யாது காற்றாலுஞ் சூட்டாலுஞ் சுவறவிடாது புதர்நிழற்பசுமரங்களிலொட்டிக் கூட்டின்வாயைமூடி மிக்கசிக்கெனவுடையதாய் மாரிக்காலத்தளவும் வைத்தருந்தி வாழுமாறுபோல என்றவாறு. இதனால், சுருங்கியபொருளுடையார் அப்பொருளைத் தீயர்கவர்ந்துகொள்ளவிடாது தண்ணளியுடையோரான வலியோர்சார்புபற்றிச் சேமித்துவைத்துக்கொண்டு சிக்கெனவுடையராய் நுகர்ந்து வாழவேண்டுமென்பது குறிப்பாயிற்று. இதன்பழமொழிச்சொரூபம் வழக்குஞ் செய்யுளுநோக்கி வந்துழிக் கண்டுகொள்க.

70. சிறியவ ரெய்திய செல்வத்தின் மாண்பு
பெரியவர் நல்குரவு நன்றே—தெரியின்
மதுமயங்கு பூங்கோதை மாணிழாய் மோரிற்
முதுநெய்தீ தாதலோ வில்.

எ-து, கீழ்மக்கள்பெற்றசெல்வத்தின் மாட்சிமைப்பட்ட பெரியோர்பெற்றவறுமை உலகத்துப் பயன்படும்; ஆராய்வோமாயின், தேன்மிடைந்த பூங்கோதையையுடைய மாணிழாய்! மோர்போலப் பழைய நெய் தீதாகமாட்டாது; நன்றேயாம் அதுபோல எ-று.

(குறிப்பு) இது வினைத்தூய்மையின் உயர்வுகூறுகிறது. 'கீழ்மக்கள் பெற்றசெல்வத்தின்' என்றது பழிபாவங்களையஞ்சாது பொருளொன்றையே கருதிய கீழ்மக்கள் தீநெறியிலீட்டிய நிறைசெல்வத்தைக்காட்டிலும் என்றவாறு. 'மாட்சிமைப்பட்டபெரியோர்பெற்றவறுமை யுலகத்துப்பயன்படும்; ஆராய்வோமாயின்' என்றது அங்ஙனமீட்டாமையாற் பொருள்வரவின்றி நெறிநின்றபெரியோர்க்கு வறுமைவருமாயினும் அது ஆராயுமிடத்து உலகிற் கொழுக்கநடையைக்காட்டி அதனை வலியுறுத்திப் பயன்படுமென்றுதோன்றுதலால் அது மிக நன்றென்றவாறு. 'தேன்மிடைந்தபூங்கோதையையுடையமாணிழாய்' என்றது (மகளே-முன்னிலை) வண்டுகள்மொய்க்கும் பூச்சூட்டணிந்தகூந்தலினையும் சிறந்த அணிகலங்களையுமுடையாய் என்றவாறு. உரையில் 'மோர்போல' என்றது மோரின் என்றிருக்கவேண்டும். மோரைக்காட்டிலும் என்றவாறு. 'பழையநெய்

தீதாகமாட்டா'தென்றது (புதிதாய்ப்பெருகியுள்ளமோரைக்காட்டிலும்) பழைய தாய்ச்சுருங்கியுள்ளநெய் தீதாகாது நன்றாகுமென்றவாறு. அதனினும் புதிய நெய் மிகவுநன்றாகுமென்பது சொல்லாமையேபெறப்பட்டமையால் அதனுப மேயமாகிய பெரியவரெய்தியசெல்வம் மிகவு நன்றாகுமென்பதும் குறிப்பாயிற்று. இதன்பழமொழியின்சொரூபம் வழக்குநோக்கி வந்துழிக்காண்க. இப்பாட்டின் கருத்து, "பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர், கழிநல் குரவே தலை"* எனத் திருக்குறளிலுமுள்ளது. பாவமும் பழியுமுண்டாகச் சிறியராயினோரீட்டுஞ் செல்வத்திரட்சியினும் அங்ஙனமீட்டாமையால் நெறிநின்றபெரியார் வறுமை யுறினும் அது சிறந்ததென்றமையாற் பொருளை நன்னெறியினின்றேயீட்ட வேண்டுமென்பது குறிப்பாயிற்று.

71. வன்பாட் டவர்பகை கொள்ளினு மேலாயார்
புன்பாட் டவர்பகை கோடல் பயமின்றே
கண்பாட்ட பூங்காவிக் கானலந் தண்சேர்ப்ப
வெண்பாட்டம் வெள்ளந் தரும்.

எ-து, வலியதகைமையையுடையாரொடு பகைகொள்ளினும் மேலாயார் எளியதகைமையையுடையாரோடு பகைகோடல் ஒருபயனும் படாது; கண்களின்றகைமையாயுள்ள பூங்குவளைகளையுடைய கானலந் தண்சேர்ப்பனே! பருவமழையன்றியே வெண்பாட்டமும் வெள்ளந்தரு மாதலா னென்றவாறு.

(குறிப்பு) இது ஒருவரோடும் பகைகொண்டு மேற்செல்லலாகாதென் கிறது. 'வலியதகைமையையுடையாரொடு பகைகொள்ளினும்' என்றது அறிவு ஆண்மை பெருமை என்னும் மூவகையாற்றலானுந் தம்மின்வலியராயினா ரோடு மாறுபட்டு மேற்செல்லினும் செல்லுக என்றவாறு. உம்மையால் அது வும்கூடாதென்பது கருத்தாயிற்று. 'மேலாயார்' என்றது அவ்வாற்றலான்மிக்கா ராயினாரென்றவாறு. 'எளியதகைமையையுடையாரோடுபகைகோடல் ஒரு பயனும்படாது' என்றது அவ்வாற்றலா லிழிந்தாரோடு மாறுபட்டுமேற்செல்லல் கூடாதென்றபடி. வலியார்மேற்செல்லின் ஒரோவழி அவர் இவரது எளிமையை யும் அறிவின்மையையுமுணர்ந்து பிழைப்பிற்குத் தகவொறுத்து அறிவுறுத்திவிட உய்தலுங்கூடுமாதலால் வன்பாட்டவர்பகைகொள்ளினுங்கொள்க என்றும், எளி யோர்மேற்செல்லின் அவர் தா மொருவாற்றானும் இவர்க்குய்தல் அரிதென்று துணிந்து பலதீங்குகளும் ஒருங்குபுரிவராதலாலும் அவற்றிற்கெல்லாமஞ்சாது அவரைக்கொல்லினும் பழியும் பாவமுமெய்துதலானும் அது பயமின்றென்றுங்

* திருக்குறள் 66-ஆம் அதிகாரம். (வினைத்தூய்மை) குறள்—7.

கூறப்பட்டன. பயமின்றென்றது செய்யலாகாதென்றபடி. 'கண்களின்றகை மையாயுள்ள' என்றது மகளிர்கண்களின் றகைமைபோலுந் தகைமையையுடைய என்றவாறு. இது பூவிற்கு அடையாயிற்று. 'பூங்குவளை' பூக்களையுடைய குவளை. கானல்-கழிக்கரைச்சோலை. "வெண்பாட்டம் வெள்ளந்தரும்" என்பது பழமொழிக்கூற்று. இதனுள் வெண்மை கருமையின்மறுதலையாய்ப் பாட்டத்தை விசேடித்தலால் வெண்பாட்டமென்றது கார்காலமல்லாத வேனிற்காலத்துப் பெய்யும் மழையை யுணர்த்திற்று. பாட்டம்-மழைபெயல். பாட்டமும் என்னும் உம்மை விகாரத்தாற்றொக்கது. 'பருவமழையன்றியே வெண்பாட்டமும் வெள்ளந்தருமாதலான்' என்றது கார்காலத்துமழையேவெள்ளந்தருமென்றெண்ணற்க; வேனிற்காலத்துமழையும் வெள்ளந்தருமாதலால் அதன்மேலும் செல்லலாகாதென்றவாறு. அதன்மேலும் செல்லலாகாதென்பது பொருட்குறிப்பாற்பெறப்பட்டது. வெள்ளந்தருதல்-நீரைப்பொழிதல். இது எடுத்துக்காட்டாதலால் 'ஆதலானென்றவாறு' என்றது ஆதலான் அதுபோலவென்றவாறு என்றிருக்க வேண்டும். பருவமழை ஒழியாதுநின்றுபொழிதலால் வலிமிக்குடையதும், வெண்பாட்டம் சிறிதுபொழுதுபெய்தொழிதலால் வலியில்லதுமாகிய வேறுபாடுடையவாயினும் அவற்றைமதியாது எதிர்த்துச்செல்வார் அவற்றின் அம்புமாரியாற் றுக்குறுதல் ஒருதலையானெய்துவர். அவற்றுட் பருவமழையிற்செல்வார், இடி, ஆலி, சுழிகாற்று முதலியவற்றால் வாதையில்லாமையும், வெண்பாட்டத்திற்செல்வார் இடிமுதலியவற்றால் வாதையுறுதலும் எய்துவராதலாற் பருவமழையிற் செல்லுதலினும் வெண்பாட்டத்திற்செல்லுதல் தீதாவதுபோல, வலியாரும் எளியாரும் வலியால்வேறுபாடும், தம்மையெதிர்ப்பார்மேல் அம்புமாரிபெய்தலால் ஒப்புமையும் உடையராயினும், வலியராயினர் எளியார்மேன் மிக்கசினங்கொள்ளாது அவர் அடங்குமளவே போர்புரிவராதலாலும்,எளியராயினர் தமக்கு உய்யுமாறில்லாமையாற் றம்மேலெதிர்த்துவரும் வலியாரை யில்லையெனச்செய்யக்கருதி மிக்கசீற்றங்கொண்டு தாங்கவொண்ணாதபலதீங்குகளைச்செய்து கொல்லத்துணிவராதலாலும் வலியார்மேற்செல்லுதலினும் எளியார்மேற்செல்லுதல் தீதாகுமெனத் திட்டாந்தத்தொடு பொருத்தியுரைத்துக்கொள்க. இப்பாட்டிற்சொல்லப்பட்டபகை ஆக்கிரமணம் என்னும் மேற்செலவும், "வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா, மெலியார்மேன் மேக பகை"* என்னுங் குறளிற் சொல்லப்பட்டபகை தற்காப்பின்பொருட்டு எதிர்த்தலுமாகிய வேறுபாடுடைமையால் இஃது அக்குறளொடு மாறுபடாதென உணர்க. இப்பாட்டிற்கு எடுத்துக்கொண்ட பழமொழியின்வடிவம் வழக்கும் செய்யுளும்நோக்கி வந்துழிக் கண்டுகொள்க. எளியாரைப் பகையாக்கிக்கொள்ளலாகாதென்னும் நீதியை நரியேதிர்த்தாற் சிங்கம் என்னுந் தொடர்மொழியால் நாட்டார்வழங்குகின்றனர்.

---

* திருக்குறள் 87-ம் அதிகாரம் (பகைமாட்சி) குறள்—1.

72. நடலை யிலராகி நன்றுணரா ராய
முடலை முழுமக்கண் மொய்கொ ளவையு
ளுடலா வொருவற் குறுதி யுரைத்தல்
கடலுளான் மாவடித் தற்று.

எ-து, மனத்தின்கட் கவலையிலராய் நன்மையறியாராகிய மனம் வலிய முழுமக்கண்மொய்கொண்டவவையின்கணிருந்தவொருவற்கு அறிவிற்குடலாகிய வுறுதியாயினவற்றையுரைத்தல் கடலுள்ளே மாங்கனியைவடித்தாற்போலும் என்றவாறு.

(குறிப்பு) இது நல்லோரல்லாதார் கூட்டத்துள்ள ஒருவனுக்குச் சாஸ்த்ரார்த்தஸாரதமங்களான தத்வஹிதபுருஷார்த்தங்களை உபதேசிக்கலாகாதென்கிறது. 'மனத்தின்கட்கவலையிலராய்' என்றது விசாரமற்றசிந்தையராய் என்றபடி. விசாரமாவது பிறப் பிறப்புப் பிணி மூப்பு வறுமைகளின் றுன்பமுணர்ந்து அவற்றிற்கஞ்சி அவைதீரும்வாயில் நாடுதல். 'நன்மையறியாராகிய' என்றது இவை தமக்கு நன்மையாயின; இவை தமக்குத் தீமையாயின எனப் பகுத்துணர்ந்து நன்மையாகிய ஒழுக்கங்களை விரும்பாதவராகிய என்றவாறு. 'மனம்வலியமுழுமக்கள்' என்றது அன்பு, விருப்பம், அச்சம், பச்சாத்தாபம் முதலிய மனநெகிழ்ச்சியோடுகூடிய குணங்களொன்றுமின்றி, அம்மனம் வலியடைந் திறுகுதற்குரிய வெறுப்பு, தறுகண், களிப்பு முதலிய துர்க்குணங்களையுடைய அறிவிலாமக்கள் என்றபடி. முடலை-வலிமை. இங்கு முழுமை-திருத்தப்படாமையுணர்நின்றது; முழுமரமென்புழிப்போல. மொய்கொளவையுள் ஒருவற்குடலாவுறுதியுரைத்தல் எனக் கூட்டுக. உடலாவுறுதி-வினைத்தொகை. ஒருவற்கு என்பது இடைப்பிறவரல் 'மொய்கொண்டவவையின்கணிருந்தவொருவற்கு' என்றது கொச்சைமக்களாதலால் ஆட்டுமந்தைபோலத் திரண்டகுழுவிலுள்ள ஒருவனுக்கு என்றபடி. ஒருவனுக்குரைத்தலே கூடாதென்றமையால் எல்லோர்க்கு முரைத்தல் கூடாதென்பது சொல்லவேண்டாதாயிற்று. 'அறிவிற்குடலாகிய வுறுதியாயினவற்றையுரைத்தல்' என்றது ஞாதவ்வியங்களான தத்வ*ஹித†புருஷார்த்தங்களை‡யுபதேசித்தல் என்றவாறு. உடல்-இங்கு இலக்கணையால் அங்கவாசகமாயிற்று. அறிவிற்கு விடயங்கள் அங்கமாகையால் அங்ஙனங்கூறினர். 'கடலுள்ளே மாங்கனியை வடித்தாற்போலும்' என்றது உவர்க்கடலுள் ஒருதுளி

* தத்துவம், "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின், வகைதெரி வான் கட்டே யுலகு" (திருக்குறள் 3-வது அதி. நீத்தார்பெருமை குறள்—7) என்னுங் குறளாற் சொல்லப்பட்டவை.

† ஹிதம், தீயனவொழித்து நல்லனசெய்தல்.

‡ புருஷார்த்தம் அறம் பொரு ளின்பம் வீடென்பன.

நீரில் அது இன்சுவையெய்தற்பொருட்டு ஒரு தேமாங்கனியைப் பிழிந்தாற் போலும் என்றவாறு. தேமாங்கனிரசம் பிழியப்பெற்ற உவர்க்கடலின் நீர்த்துளி யானது, அதன்கணுள்ள பிறநீர்த்துளிகளின் கூட்டரவால் இன்சுவையெய்தா தொழிந்து திருந்தாதவாறுபோல மூடலைமுழுமக்கண்மொய்கொளவையுளுள்ளா னொருவனுக்கு உறுதிப்பொருளை யுபதேசிப்பினும் அக்குழுவினுள்ளார்கூட்டர வால் அவன் அதனை யுள்ளத்துட்கொள்ளாதொழிதலால் அவன் ஒருநாளுந்திருந் தான் எனக் கருத்துநோக்கி யுவமையொடுபொருத்தி யுரைத்துக்கொள்க. "கட லுளான்மாவடித்தற்று" என்பது பழமொழிக்கூற்று. இது ஒப்புமைவகையால் வியர்த்தம் என்னும் பொருட்குறிப்புடையதாய்ப் "பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்று"* என நாலடியுள்ளும், "ஆற்றிற்கரைத்தபுளியாக்கிடாமலென்னன் பையெல்லாம்" எனத் திருவேகம்பமாலையினும்† வழங்கப்பட்டது. சமுத்திரத்திற் பெருங்காயம் கரைத்தாற்போலும் என்பது சாமானியவழக்கு.

73. யானுமற் றிவ்விருந்த வெம்முனு மாயக்கால்
வீரஞ் செயக்கிடந்த தில்லென்று கூடிப்
படைமாறு கொள்ளப் பகைதூண்ட லஃதே
யிடைநாயிற் கென்பிடு மாறு.

எ-து, யானும் இவ்விடத்திருந்த வென்முன்ளேனுமாக வொரு வினைசெய்யத்தொடங்கியக்காற் பகைவரால் வீரஞ்செயக்கிடந்த தொன்றுமில்லையென்றுசொல்லிப் பிறருந் தம்மோடுகூடிப் படைத் தொழிலின்கண் மாறுகொள்ளும்வகை பகையைமிகச்சொல்லுதலாகிய வது ஆடுகாத்துக்கிடக்கும் இடையர்நாய்க்குக் கள்ளர் எலும்பிடுமாறு போலு மென்றவாறு.

(குறிப்பு) இது வலிமிக்கபகைவரை அடுத்துக்கெடுக்குமாறும், வஞ்ச தீஞ்சொற்சொல்வாரை நம்பலாகாதென்பது மொருங்குகூறுகிறது. 'யானும் என்றது பிற பகைவர்செருக்கையடக்கவல்ல யானுமென்றபடி. இது கெடுப்பான் கூற்றாய் அவன் தன்னையுணர்த்தியவாறு. 'இவ்விடத்திருந்த' என்றது கெடு கப்படுவானை அவன்பகைவரும் பிறரும்றியுமாறு கெடுப்பான்சுட்டிக்காட்டியவாறு. 'என்முன்னேனுமாக' என்றது கெடுக்கப்படுவான் கெடுப்பானுகியதன்னைத் த னென்று நம்பும்படி அன்புடைமையும் பணிவுடைமையுந்தோன்ற உறவுமுறை கூறியவாறு. 'ஒரு வினைசெய்யத்தொடங்கியக்காற் பகைவரால் வீரஞ்செய

---

* நாலடியார் 26-ம் அதிகாரம் (அறிவின்மை) செய்யுள்—7.

† பட்டினத்தார்பிரபந்தம், திருவேகம்பமாலை செய்—22.

கிடைந்ததொன்றுமில்லை"என்றது இதுகாறும் எம்முண் மாறுபாடுடையோமாயிருந்தோமாதலாற் பிறபகைவர் செருக்குற்றிருந்தார்; இப்பொழுது ஒன்றுபட்டோமாதலால் நாங்கள்கூடிச்செய்யப்போகும் ஒருகருமத்திற் பிறர் பகைவராய்வந்து அவர் வெற்றியடையக்கிடந்ததொருசெயலுமில்லை; எல்லாவெற்றியையும் யாமேயடைவோம் என்றவாறு. 'பிறரும்' என்றது பகைவரல்லாத பொதுமலாய்நின்றவரும் என்றவாறு. 'தம்மொடுகூடி' என்றது பகைவராய்க் கெடுப்பாராகிநிற்குந் தமக்கு அநுகூலராய் என்றவாறு. படைத்தொழில்-போர். 'மாறுகொள்ளும்வகை' என்றது கெடுக்கப்படுவானைப் பிறரெல்லாம் வீரமானத்தால் விரோதிக்கும்படி என்றவாறு. பகையைமிகச்சொல்லுதலாவது பகைவர்பலராய்மிகுமாறு வீரம்பேசுதல். "இடைநாயிற்கென்பிடுமாறு" என்பது பழமொழிக்கூற்று. அடுத்துக் கெடுக்குமியல்புடையான்கூறும் இன்மொழியை அறிவுடையோர் கேட்டுழி அதனைச்சுட்டி இடைநாய்க்கிட்டவேலும்பிது எனவழங்கும் வழக்கே இப்பழமொழி எனக்கொள்க. 'கள்ளரெலும்பிடுமாறுபோலும்' என்றது கள்ளர் என்பிட்டு வஞ்சிக்குமுபாயம்போலும் உபாயமென்றவாறு. அதாவது:—ஆடுதிருடுங்கள்ளர், ஆட்டுக்கிடைகாத்திருக்கும் நாய் தம்மை ஐயுற்றுக் குரையாதிருக்கும்வண்ணம் பச்சூன்றசைபற்றிய என்புத்துண்டத்தைச் சிறிது சேய்மைக்கண்வைத்திருந்து, மோப்பங்கொண்டு அந்நாய் தம்மருகுவருவதுகண்டு, அவ்வென்புத்துண்டத்தை அதன்முன்பிட அதனை அந்நாய் உவந்துகௌவிக்கௌவிச் சுவைத்து மகிழ்ந்து கள்வரைத் தமராகக்கருதி ஆட்டுக்கிடைப்பாதுகாப்பிற் பராக்காயிருக்குமளவிற் கள்வர் தம்மினத்தாரையேவி ஆடுமுதலியவற்றைத் திருடிச்செல்லச்செய்வது போலக் கெடுப்பாரும், கெடுக்கப்படுவோர்கேட்டுத் தம்மைத் தமரென்று நம்பியுவக்குங் களிப்பாற் பாதுகாப்பிற் பராக்காயிருக்குமாறு, "யானுமற் றிவ்விருந்த வெம்முனு மாயக்கால், வீரஞ் செயக்கிடந்ததில்லென்று" சொல்லல்போன்ற வஞ்சத் தீஞ்சொற்களைச்சொல்லித் தம்மினத்தாரைத்தூண்டி அப்பகைவரது பாதுகாப்பற்ற நாடுமுதலியவற்றைக் கைப்பற்றச்செய்தலாம்.

74\. கண்ணில் சுபவர் கருத்துணர்ந்து கைம்மிக
நண்ணி யவர்க்கு நலனுடைய செய்பவே
லெண்ணி யிடர்வரு மென்னார் புலிமுகத்
துண்ணி பறித்து விடல்.

எ-து, கண்ணோட்டமில்லாத கீழ்மக்கள் கருத்தின்கண்விரும்பியதுணர்ந்து செயன்மிக்கு அவரோடு நண்புகொண்டு நன்மையாயின செய்வாராயின், ஆராய்ந்திதுசெய்தால் நமக்கிடர்வருமென்னாதே புலிமுகத்தினுண்ணியை அருளினாலேபறித்ததனோடொக்கும் என்றவாறு.

(குறிப்பு) இது கண்ணோட்டமில்லாதார்க்கு நன்மைசெய்யலாகாதென்கிறது. 'கண்ணோட்டமில்லாதகீழ்மக்கள்' என்றது (ஏது அடையானடுக்கப்பட்டமையால்) கண்ணோட்டமின்மையொன்றுமே சௌர்ய வீர்ய தைர்ய பராக்கிரம முதலிய நற்குணங்களையும் அநுகூலர்பக்கல் தீக்குணங்களாக்கிக்கொள்ளுந் தீயார் என்ற குறிப்புணர்த்தியவாறு. 'கருத்தின்கண்விரும்பியதுணர்ந்து' என்றது அவர்க்குச்செய்யும் நன்மையின் சிறப்புத்தோன்றக் கூறியவாறு. கருத்தின் கண்விரும்பியதுணர்ந்து நன்மையாயினசெய்வாராயின் என இயையும். கருத்தின்கண் விரும்பியதுணர்ந்துசெய்யுஞ் சிறந்தநன்மைக்கே தீங்குபுரியும் இயல்புடையராயின் அவர் கருத்துணராதுசெய்யும் நன்மைக்கு மிக்க தீங்குவிளைப்பரென்பது சொல்லவேண்டாதாயிற்று. ஆகவே அவர்க்கு ஒருவிதத்திலும் நன்மை செய்யலாகாதென்பது குறிப்பு. 'செயன்மிக்கு' என்றது தீயாரோடிணங்கலாகாதென்னும் விதியைக்கடந்து என்றவாறு. இங்கு ஒழுக்கத்தையுணர்த்தும் கையும் செயலும் விதிவாக்கியத்துக்கு ஆகுபெயராயின. 'அவரோடுநண்புகொண்டு' என்றது தம்மொடுநண்பில்லாத அக்கயவரோடு தாமாய் ஒருதலை நண்புகொண்டென்றவாறு. 'செய்வாராயின்' என்றது செய்தல் அரிதென்னுங் குறிப்புணர்த்தியவாறு. 'ஆராய்ந்து இதுசெய்தால் நமக்கு இடர்வருமென்றுதே' என்றது இதுசெய்தால் நமக்கு இடர்வருமென்று ஆராயாதே என்றபடி. 'புலிமுகத்திலுண்ணியை' என்றது புலி தன்றைப் போக்கிக்கொள்ளவொண்ணுதபடி அதன் கண்ணிமையைப்பற்றி ரத்தபானம்பண்ணும் உண்ணியை என்றவாறு. கண்டு முகம் ஆகுபெயராயிற்று. 'அருளினலே' என்றது பிறிதொருபயனுங்கருதாது புலியின்றுயர்தீர்த்தலொன்றே கருதி யென்றவாறு. 'பறித்ததனேடொக்கும்' என்றது பறித்ததோர் ஐதிகச் செயலோடொக்கும் அச்செயலென்றவாறு. அச்செயலென்ற சுட்டு வருவித்துக் கூட்டியுரைத்துக்கொள்க. 'எண்ணியிடர்வருமென்ஞர்' என்னும் உவமையடையைப் பொருளொடுங்கூட்டிவிரித்துரைத்துக்கொள்க. "புலிமுகத் துண்ணி பறித்துவிடல்" என்பது ஒரைதிகமடியாகவந்த பழமொழிக்கூற்று. இதனைதிகமுங் கூற்றுமேலவிளங்கும். இது "வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி, யாங்கதனுக் காகார மானாற்போல்"* எனப் பிறிதோராற்றானும் வழங்கப்படும் சௌரிய வீரிய தைரிய பராக்கிரமமுதலிய குணவிசேடங்களாற்சிறந்த புலியின்முகத்து அதனுதிரத்தை யுண்ணுதவாறு உண்ணியைப்பறித்தகயக நன்மைபுரிந்தவனைக் கண்ணோட்டமின்றிக் குடரைப்பறித் துதிரக் உயிரைப்போக்கிய அப்புலிபோலச் சௌர்யாதிகுணங்களுடையரா கூதின்யமுள்ள கயவர்கள் தமக்கு நன்மைசெய்வார்க்கும் எனக் கருத்துநோக்கிப் பொருளொடுபொருத்தி யுரைத்து

* மூதுரை, செய்யுள்—15.

75. பெரியார்க்குச் செய்யுஞ் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமே லிசைமுரலு மூர வதுவன்றோ
நாய்மேற் றவிசிடு மாறு.

எ-து, பெருமைக்குணமுடையோர்க்குச் செய்யக்கடவ சிறப்பினை விரும்பிச் சிறுமைக்குணமுடையார்க்குச் செய்துவிடுதல், பொறிவண்டு பூமேற்படிந் திசைமுரலாநின்றவூரனே! அதுவன்றோ! குதிரைமேலிடக் கடவ பண்ணினை நாய்முதுகிலிடுநெறி யென்றவாறு.

(குறிப்பு) இது தகுதியில்லாதார்க்குச்செய்யுஞ் சிறப்பின்குற்றம் கூறுகிறது. பெருமைக்குணங்களாவன:—கல்வி அறிவு ஒழுக்கம் குடிப்பிறப்பு வீரம் வினைத்திட்பம் சால்பு முதலியன. 'செய்யக்கடவசிறப்பினை' என்றது செய்யக்கடமைப்பட்டசிறப்புக்களை யென்றவாறு. அவை பொற்பூமுதலிய பரிசும் பட்டமும் புரவலர்தம்மோடிருக்கையு மெடுபடியு முதலாயின. 'விரும்பி' என்றது வெளியிடத்தகாதகாரணத்தால் அவரைவிரும்பி என்றவாறு. சிறுமைக் குணமுடையார் - பெருமைக்குணங்களின் மாறுபட்டகுற்றங்களையுடையராய்க் காமநெறியொழுகுமவர். 'செய்துவிடுதல்' என்றது செய்துவிட்டோமேயென்று பச்சாத்தாபமுண்டாகும்படி தவறுகச்செய்தல் என்றவாறு. இதுவே பின்னும் அதுவென்று சுட்டப்பட்டமையால், தகாது என ஒருபயனிலைச்சொல்வருவித்து முடிக்கற்பாற்று. இங்ஙனம் முடியாதிருப்பின் மேல் அதுவென்னுஞ்சுட்டு வேண்டாதுகூறலாம். "நாய்மேற்றவிசிடுமாறு" என்பது பழமொழிக்கூற்று. தகாதார்க்குச்செய்யுஞ்சிறப்பை நாய்க்கிட்டதவிசு என வழங்கும் அடிப்பட்ட வழக்கே இதன்பழமொழியாகும். நாய்மேற்றவிசிடுமாறென்றமையால், 'குதிரை மேலிடக்கடவபண்ணினை' என மறுதலையுவமம் வருவித்துரைக்கப்பட்டது. பண் - ஏறுகுதிரைமேலிடுஞ் சேணமென்னுந்தவிசு. 'குதிரைமேலிடக்கடவ பண்ணினை நாய்முதுகிலிடுநெறி' என்றது தகாதகாரியம், பயனில்லாதசெயல், இகழப்படுஞ்செயல், அறிவில்லாதசெயல், முறையில்லாதசெயல் எனப் பலதிறத்தானும் பழித்தற்குரிய குறிப்புணர்த்தியவாறு. இப்பழமொழிக்கு மறுதலையுவமம் யானைமேலிட்டதவிசென்பதே சிறந்ததெனக்கொண்டு, "அடுகளிற்றெருத்தினிட்ட, வண்ணப்பூந்தவிசுதன்னை ஞமலிமேலிட்டதொக்கும்" எனச் சீவகசிந்தாமணி*யுள் வழங்கப்பட்டது. இப்பழமொழியிலுள்ள எழனுருபைப் பொருட்டுப் பொருளுணர்த்தற்குரிய விடயசத்தமியாகவும், மறுதலையுவமம் நாயகராகவும் கொண்டு, நாயகருக்கிட்டதவிசை நாய்க்கிட்டுக்குர்தவைத்தவாறும் எனப் பிறிதோருரையில் வரையப்பட்டுள்ளது. இக்கருத்துப்பற்றியே திருவாசகத்தில்

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், செய்யுள்—202.

"நாயினுக்குத்தவிசிட்டு நாயினேற்கே"* எனவும், "நம்மையுமோர்பொருளாக்கி நாய்சிவிகையேற்றுவித்த"† எனவும், "நன்றாகவைத்தென்னை நாய்சிவிகையேற்றுவித்த"‡ எனவும், "ஒருநாய்க்குத்தவிசிட்டிங்கூனுருடல்புகுந்தான்"|| எனவும், "பொற்றவிசுநாய்க்கிடுமாறன்றே"§ எனவும் வழங்கப்பட்டது. இவ்வாற்றானே "நாய்மேற்றவிசிட்டுநன்றாய்ப்பொருட்படுத்த"$ என்றதும் இக்கருத்துடையதாமென வேறுரையை ஆதரித்தற்கேதுவாயிற்று.

76. செருக்கெழு மன்னர் திறலுடையார்ச் சேர்ந்தா
ரொருத்தரை யஞ்சி யுலைதலு முண்டோ
வுருத்த சுணங்கி னொளியிழாய் கூரி
தெருத்து வலியதன் கொம்பு.

எ-து திறலுடைய செருமேவியிருந்த மன்னவரையடைந்தவர்கள் பிறரொருவரையஞ்சித் தளர்தலுமுண்டோ; முலைமேற்றோன்றிய சுணங்கினையுடையவொளியிழாய்! வலிய வெருத்தின்கொம்பு கூரிதாகலா னென்றவாறு. எருத்து வலியதன்கொம்பென்பதனைப் பிடர்வலியதன் கொம்பென்பாருமுளர்.

(குறிப்பு) இது வலியாரைச்சார்தலின்வன்மை கூறுகிறது. 'திறலுடைய' என்றது திறலுடையராயுள்ள என்றவாறு. இது மன்னவரெனப் பின்வரும்பெயருட னியையும். திறல் - வலி. திறலுடைமை அஞ்சாமைக்கும் செருமேவியிருத்தல் தளராமைக்கும் ஏதுவாகக்காட்டப்பட்டன. செரு-போர். அது இங்குச் சேர்ந்தார் பகைவரோடு பொரும்போர் என்பது குறிப்பாற்பெறப்பட்டது. 'பிறரொருவரையஞ்சித்தளர்தலுமுண்டோ' என்றது தாம் பிறராயினு ரெல்லாரையும் அச்சுறுத்தித் தளரச்செய்வதல்லது தாமொருவருக்கும் அஞ்சித் தளராரென்றவாறு. "கூரி தெருத்துவலியதன்கொம்பு" என்பது பழமொழிக் கூற்று. இப்பழமொழிவடிவம் வழக்குஞ் செய்யுளும்நோக்கி வந்துழிக்காண்க. எருத்துவலியது என்பதனை வலியதாகியஎருது என்னும்பொருளில் எருத்துவலியது என விசேஷணோத்தரபத கர்மதாரயசமாசத்தொடராகவைத்து ஆறனுருபு கூட்டி 'வலியவெருத்தின்கொம்பு' எனப் பொருளுரைக்கப்பட்டது. 'கூரிதாகலான்' என்றது மொண்ணையாயிருப்பினும் கூர்மையுடையதுபோற் பாயுமாகலா

* திருவாசகம், சுட்டறுத்தல், செய்யுள்—28.
\+ ,, அச்சோப்பதிகம், செய்யுள்—9.
‡ ,, திருக்கோத்தும்பி, செய்—8.
|| ,, உயிருண்ணிப்பத்து, செய்யுள்—2.
§ ,, திருவேசறவு, செய்யுள்—5.
$ ,, திருக்கோத்தும்பி, செய்யுள்—20.

னென்றவாறு. இதனால், அது கூரிதாயிருப்பின் மிகவும் உருவப்பாயுமென்பது சொல்லவேண்டாதாயிற்று. வலியுள்ள எருத்தின்கொம்பு மொண்ணையாயிருப் பினும் அது பாயும்போது அவ்வெருத்தின்வலியாற் பாயப்படுமுடலிற் கூரிய கொம்புபோல விரைந்து உருவப்பாயும்; அவ்வாறே திறலுடைய அரசரைச் சார்ந்தபிறர் திறனிலராயினும், அத்திறலுடையரசரதுவலிகொண்டு வலி யுடையார்போலத் தம்பகைவர் அஞ்சித் தளருமாறு தாக்குவரெனத் திட்டாந்தத் தொடு பொருத்தியுரைத்துக்கொள்க. இதனால், வலியாரைச்சேர்ந்தார் எளியாரா யிருப்பினு மவரை யெள்ளலாகாதென்பதும் குறிப்பாயிற்று.

77. அன்பி னெகிழ வழிபட்டுக் கொள்ளாது
நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வது
கன்றுவிட் டாக்கறக்கும் போழ்திற் கறவாது
யம்புவிட் டாக்கறக்கு மாறு.

எ-து, அன்பி னொருவ னெகிழும்படி தான் வழிபட்டொழுகி யவனாலுள்ளபயன்கொள்ளாது தானினைத்தபொழுதே முடித்துக் கொள்வேனென்றுகருதி முயறல், ஆவினைக் கறக்கும்பொழுதறிந்து கன்றுவிட்டுக்கறவாது அவ்வாவினை யம்பினைவிட்டுக் கறக்குநெறியோ டொக்கு மென்றவாறு.

(குறிப்பு) இது உடையோரிடத்து ஒன்று இரந்துபெறுமாறுகூறுகிறது. 'அன்பினொருவனெகிழும்படி' என்றது இரப்பானாகிய தான்செய்யும் அன்பி னால் இரக்கப்படுவோனாகிய பிறனொருவன் உளநெகிழும்படி என்றவாறு. 'தான்' இரப்பான். வழிபட்டொழுகலாவது - உரியோன்சொல்வழிநிற்றலும் அவன் மனமறிந்து வேண்டுவனசெய்தலும் முதலாயின. அவனாலுள்ளபயன்கொள்ள லாவது அவனிடத்துள்ளதொருபொருளை அவன் மனமுவந்துகொடுக்குஞ்செவ்வி யறிந்து இரந்துகொள்ளுதல். 'நினைத்தபொழுதே முடித்துக்கொள்வேனென்று கருதிமுயறல்' என்றது இரப்போன் தான் வேண்டும்பொழுது தனதாற்றலைக் காட்டியச்சுறுத்தித் தன்விருப்பத்தை முடித்துக்கொள்வேனெனஎண்ணி முயறலென்றவாறு. மூலத்தில் 'ஆக்கறக்கு' மென்பவற்றுள், முன்னது எழு வாய்த்தொடராகவும், பின்னது இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொட ராகவும்கொள்க. ஆக்கறக்கும்போழ்தில் என்பதற்கு ஆவானது தானே கறக்கும் பொழுதறிந்து என்பதே பொருளாமாயினும், 'ஆவினை' என்றது, பின் 'கறவாது' என்றவினைக்கேற்ற செயப்படுபொருள் வருவித்துரைத்தவாறு. 'ஆவினைக்கறக் கும்பொழுதறிந்து' என்றது ஆவினை, அது கறக்கும்பொழுதறிந்து என்று கூறிய வாறு. அதாவது ஆப் பசிதீரப் புல்லார்ந்து நீர்பருகிக் கன்றுள்ளிப் பான்மடிசுரந் திருக்குஞ்செவ்வியறிந்து என்றபடி. 'கன்றுவிட்டு' என்றது செவ்விவாய்ந்திருப்

பினும் கறத்தல்சோர்வுபடாமைக்குச் சிறந்ததோ ருபாயங்கூறியவாறு. ‘அவ் வாவினை’ என்றது தானே கறக்குமியல்பினையுடைய அதனையென்றவாறு. ‘அம்பினைவிட்டுக்கறக்குநெறியோடொக்கும்’ என்றது அம்புகொண்டெய்தலான் அச்சுரத்திக் கறக்குமுறைபோலுமென்றவாறு. இதன்பழமொழி, கன்றூட்டக் கறவாதகறவை கம்பிட்டடிக்கக்கறக்குமா எனவும், பொதுமைபற்றித் தானுக் கனியாதது தடிகொண்டடிக்கக் கனியுமோ எனவும் வழங்கப்படும். இதனுவமையை, வழிபாடுபுரிந்து கன்றுவிட் டூட்டக்கறப்பாருக்குப் பால்சுரந்தளிக்கும் கறவைபோலக் கொடுப்பாரும், வழிபாடுபுரிந்து மனமுவக்கச்செய்துகொடுக்குஞ் செவ்வியறிந்து விருப்புடையாரைமுன்னிட் டிரப்பார்க்கே கொடுக்கத்தகுவ தாய்த் தம்மிடத்துள்ளபொருளை மனமுவந்துகொடுப்பர் எனவும், அம்புவிட்டு அச்சுரத்திப் பால்கறக்கப்புகுவாரால் அப்பாலுக் காதாரமாகிய உதிரத்தை யொழுக்கினும் ஒழுக்குவதல்லது பால்சிறிதுமுதவாத கறவைபோல, இரக்கப் படுவோரும், ஆற்றலால் அச்சுறுத்தியிரப்பாரால் விரும்பியபொருளின்றுதாரங்கள் அழியினும் அழியவிட்டிருப்பதல்லது அவர்விரும்பியது சிறிதும் அளியார் எனவும் பொருளொடு பொருத்திவிரித்துரைத்துக்கொள்க.

78. இணரோங்கி வந்தாரை யென்னுற்ற கண்ணு
முணர்பவ ரன்றே யுணர்ப—வுணர்வார்க்
கணிமலை நாட வளறுடிக் கண்ணு
மணிமணி யாகி விடும்.

எ-து, தொடர்ச்சியறாதுயர்ந்துவந்தாரை யவர்கள் எல்லா விடருற்றகாலத்தும் அறிவுடையா ரப்பெற்றியே யவர்களையுணர்ந்து மதிப்பர்; அணிமலைநாடனே! சேறுடியவிடத்து முணர்வார்க்கு நல்லமணி மணியேயாய்த்தோன்று மதுபோல வென்றவாறு.

(குறிப்பு) இது உயர்ந்தகுடிப்பிறந்தார் தாழ்வடைந்தாராயினும் இகழப் படாரென்கிறது. ‘தொடர்ச்சியறாது’ என்றது குலபரம்பரையாக என்றவாறு. ‘உயர்ந்துவந்தாரை’யென்றது குணமுடைமையால் நன்குமதிக்கப்பட்டுவந்தாரை என்றபடி. ‘எல்லாவிடருற்றகாலத்தும்’ என்றது எவ்விடருற்றகாலத்தும் என்றபடி. இடர்களாவன: காரியக்கேடு, பொருட்கேடு, இரணம், வறுமைமுதலிய வற்றால் உளவாயதுன்பங்கள். அவற்றையுறுதலாவது அத்துன்பங்களில் அழுந்தல். ‘அறிவுடையார்’ என்றது அவரதுதகுதியறியும் அறிவுடையார் என்றபடி. ‘அப்பெற்றியே யவர்களையுணர்ந்துமதிப்பர்’ என்றது அவர் இடருற்றிருக்குந் தாழ்வுநிலைநோக்காது இயற்கையினுளதாம் உயர்வுநிலையொன்றேநோக்கி அவர்களை நன்குமதிப்பர் என்றபடி. ‘சேறுடியவிடத்தும்’என்றது அணிகலங்களி லிடு

தங்கத்திடையிற் பதிந்திருத்தலையிழந்து அங்கணச்சேற்றில் அழுந்திக்கிடப்பினும் என்றவாறு. 'உணர்வார்க்கு' என்றது மணிகளின் குணநலமுணர்வார்க்கு என்றவாறு. 'நல்லமணி'-மாணிக்கம். 'மணியேயாய்த்தோன்றும்' என்றது அணிகலங்களிற் பொதிந்துவிளங்கிய முன்னையநிலையினின்றுந் தாழ்வடைந்ததாகத் தோன்றாதென்றவாறு. 'அதுபோல' என்றது பொருளொடுபொருத்திமுடித்தற்கெடுத்துக்காட்டுறுப்பினை விரித்துரைத்தவாறு. இதன்பழமொழி மண்ணிற் கிடந்தாலும் மாணிக்கந்தாழாது எனப் பிறிதுமொழிதலாக வழங்கப்படுகிறது. இதன்பொருள், மண்ணிற்கிடந்து மாசடைந்திருந்தாலும் மாணிக்கமணியை அதன் மாசுடைமைபற்றியிகழாது அதன் குணமகிமையாகிய தேசுடைமைபற்றி மேற்கொள்வதுபோலக் குலபரம்பரையிற் றேசுற்றுயர்ந்தோரை ஒருதாழ்வுவந்துழி அத்தாழ்வுநோக்கியிகழாது அவரதுகுணமகிமையாகிய தேசுடைமைநோக்கி மேற்கொள்ளவேண்டுமென்பதாம்.

79. கோவாத சொல்லுங் குணனில்லா மாக்களை
நாவா யடக்க லரிதாகு—நாவாய்
களிகள்போற் றூங்குங் கடற்சேர்ப்ப வாங்கி
வளிதோட் கிடுவாரோ வில்.

எ-து, பொருந்தாதனவற்றைச் சொல்லவல்ல குணமில்லாத மாக்களை நாவினிடத்தை யடக்குதல் பிறர்க்கரிதாகும்; கண்ணுகர்ந்தாடுங் களிகள்போல நாவாய்கடூங்குங் கடற்சேர்ப்பனே! காற்றைவாங்கித் தம்முடையதோண்மேலேயிடவல்லாரில்லை யென்றவாறு.

(குறிப்பு) இது புல்லறிவாளரைத் தெளிவிக்கலாகாதென்கிறது. 'பொருந்தாதனவற்றை' என்றது நூல்வழக்கோடும் உலகவழக்கோடும் பொருந்தாதவிஷயங்களையென்றவாறு. கோத்தன முறைப்பட்டனவாதலாற் கோவாதன முறையில்லனவாய் இருவகைவழக்கினுஞ் சேராவாயின. 'சொல்லவல்ல' என்றது சொல்லுதலளவேயன்றிச் சொல்லியவண்ணஞ் செய்யவல்லரல்லாத என்றவாறு. 'குணனில்லா' என்றது ஒருகுணமுமில்லாது பலகுற்றங்களும் பொருந்திய என்றவாறு. 'மாக்களை' என்றது விலங்கினம்போலக் காமசாரமாய் ஒழுகுமவரையென்றவாறு. 'நாவினிடத்தையடக்குதல்' என்றது நாவிற்கிடமாயுள்ள வாயையடக்குதல் என்றவாறு. நாவிற்கிடமாயுள்ளதென அவர்வாயை விசேடித்துக்கூறியது நாவுள்ளதுணையும் அவர்வாய் அடங்காது; அதனையறுத்தால் அடங்கும் என்னும் சொற்குறிப்புணர்த்தியவாறு. அவர்வாயையடக்குதலாவது: அவர்சொல்லுமவை அங்ஙனமன்றென மெய்ப்பித்து அவர் எதிர்மொழி சொல்லாதிருக்கும்வகைசெய்தல். வாய் இங்குப் பேச்சுக்கு ஆகுபெயராயிற்று.

மாக்களை நாவினிடத்தையடக்குதல் என ஈருருபிணைந்துநின்றது. நாவாலடக்கல் என்பது பாடமாயின் அவரை எதிருரைகூறி யடக்கல் அரிதெனப் பொருளுரைத்துக்கொள்க. அருமை-ஈண் டின்மையுணர நின்றது. இங்கு நாவென்றது கருவியாகுபெயராய் உரையையுணர்த்தியதாம். 'பிறர்க்கரிதாகும்' என்றது அப்புல்லறிவாளரின்வேறாய பேரறிவாளர்க்கு அரிதாகுமென்றவாறு. பிறபுல்லறிவாளர் அறிவொப்புமையால் மாறுபட் டுரையாடாராதலால் அங்ஙனங் கூறினாரென்க. "வாங்கி, வளிதோட்கிடுவாரோவில்" என்றதுமூலம் பழமொழிக்கூற்று. 'காற்றைவாங்கித் தம்முடையதோண்மேலே யிடவல்லாரில்லை'யென்றது அதனுரை. இதனுள், 'காற்றைவாங்கி' என்றது காற்றைத்திரட்டி யுருட்டி நீட்டி வளைத்து என்றவாறு. வாங்குதல்-வளைத்தல். 'தம்முடையதோண்மேலேயிட வல்லாரில்லை' என்றது அங்ஙனம்வளைத்தசெயற்கருஞ்செயல்தோன்றப் பூண்ட பரிசாகத் தம்முடையதோளுக்கு வளையலாயிட்டுக்காட்டவல்லார் ஒருவருமில்லையென்பதாம். ஒப்புயர்வற்றசெயற்கருஞ்செயற்கு அச்செயலாலாகியதொன்றே சிறந்தபரிசாமாதலால் அங்ஙனங்கூறினார். 'இல்லையென்றவாறு' என்றிருப்பது இல்லை; அதுபோலுமென்றவாறு என உவமவுருபு விரித்துரைக்கற்பாற்று. வாங்கி வளிதோட்கிடுவாரில்லாதவாறுபோலக் கோவாதசொல்லுங் குணனில்லா மாக்களை நாவாயடக்குவாருமில்லை; அடக்குவாருளராயின் வளிதோட்கிடுவாருமுண்டு என்னும் விதண்டையானே புல்லறிவாளர்வாயினை யடக்கலாகாதென்பது வற்புறுத்தப்பட்டது. இப்பாட்டுக், "காணுதாற்காட்டுவான்றான்காணான் காணுதான், கண்டானுந்தான்கண்டவாறு"* என்னுங் குறட்கருத்துடையது. இப்பழமொழி ஒப்புமைபற்றி, "மானிடன்விசும்பைத்தோல்போற்சுருட்டுதல் வல்லனுயி, னீனமில்சிவனைக்காணுதிடும்பைதீர்வீடுமெய்தும்"† எனக் காஞ்சிப் புராணத்துள் வழங்கப்பட்டது.

80\. தாழார மார்ப கசடறக் கைகாவாக்
கீழாயோர் செய்த பிழைப்பினை—மேலாயோ
ருள்ளத்துக் கொண்டுநோந் தூக்கல் குறுநரிக்கு
நல்லநா ராயங் கொளல்.

எ-று, வடமாகக் கோக்கப்பட்ட முத்தினையுடையமார்ப! குற்றமறவொழுக்கங்களைப்பாதுகாவாத கீழ்மக்கள்செய்தபிழையினை, மேன்மக்கள் தம்மனத்தின்கட்கொண்டு மற்றதற்குநொந் தக் கீழாயினாரை யிடும்பைசெய்தற் கூக்குதல், சிறியநரியின்பொருட்டு நாராயணமென்னு மம்பினை யெய்தற்குவாங்கிக்கொண்டதனோடொக்கு மென்றவாறு.

* திருக்குறள் 85-ம் அதிகாரம் (புல்லறிவாண்மை) குறள்—9.
† காஞ்சிப்புராணம், சனற்குமாரப்படலம் செய்—43.

(குறிப்பு) இதுவும் பெரியாரைப் பிழைக்கலாகாதென்கிறது. 'குற்ற மற வொழுக்கங்களைப் பாதுகாவாத கீழ்மக்கள்' என்றது பாவந்தேயுமாறு வருணாச்சிரமசமயவொழுக்கங்களைப் பாதுகாவாது காமசாரமாய்யொழுகுங் கீழ்மக்கள் என்றவாறு. வருணாச்சிரமசமயவொழுக்கத்தாற் பாவந்தேயுமென்பதை "ஒழுக்கத்துநீத்தார்பெருமை"* என்னுங் குறளுரையானறிக. மேலாயோர்-ஒழுக்கத்து நீத்தாராயமேன்மக்கள். 'தம்மனம்' என்றது பிறர்குற்றமுணராத சிறப்புணர்த்தியவாறு. கொண்டு, நொந்து என்றது கொள்ளுதலுங்கொடிது; நோதலுங் கொடிது; இவ்விரண்டும் ஒருங்குகூடினவர் எங்ஙனந்தாங்குவர் என்னுங் குறிப்புணர்த்தியவாறு. 'இடும்பைசெய்தற் கூக்குதல்' என்றது ஒறுக்கத்தொடங்கல் என்றவாறு. "குறுநரிக்கு நல்லநாராயங்கொளல்" என்பது பழமொழிக்கூற்று. 'சிறியநரியின்பொருட்டு' என்றது சிறியநரியை எய்துகொல்லும்பொருட்டு என்றவாறு. சிறியநரி-குள்ளநரி. நாராயணமென்னுமம்பு-நாராயணாஸ்திரம். 'வாங்கிக்கொண்டதனோடொக்கும்' என்றது தவஞ்செய்து பெற்றுக்கொண்டு அதனாலதனை எறியத்தொடங்குதலோடொக்கும் என்றவாறு. இதன் பழமொழிப்பொருள் ஒப்புமைபற்றிக் குள்ளநரியெய்யக்கோதண்டம்வேண்டுமோ எனவும், கோழியடிக்கக்குறுந்தடிகோள்வானேன் எனவும், வழக்கிலும்,"கோழிவெண்முட்டைக்கென்செய்வதெந்தாய்குறுந்தடிநெடுங்கடல்வண்ணா"† எனவும் "எருக்கிலைக்காகவெறிமழுவோச்சலென்செய்வதெந்தைபிரானே"‡ எனவும் பெரியதிருமொழியுள்ளும் வழங்கப்பட்டது. இப்பாட்டாற் சிறியார்செய்தபிழை கண்டுவெகுளும் பெரியாரைநோக்கிப் பிழைபொறுப்பிப்பார்கூறுவதுபோன்று பெரியாரைப்பிழையாமைகூறப்பட்டதெனக்கொள்க. "வென்றடுகிற்பாரை"§ என்ற பாட்டுக்கு வலியான்மிக்கஅரசரும், இப்பாட்டுக்குத் தவத்தான்மிக்கமுனிவருமாகிய விடயபேதமுடைமையால் இது கூறியதுகூறலாகாதென உணர்க.

81. நாடி நமரென்று நன்கு புரந்தாரைக்
கேடு பிறரொடு சூழ்தல் கிளர்மணி
நீடுகல் வெற்ப நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல்.

எ-து, ஆராய்ந்து நமக்கிவர் தமராவரென்றுமதித்து மிகவுந் தம்மைப் புரந்தாரைப் பிறரோடு கேடுசூழ்தல்,கிளர்மணிநீடுகல்வெற்பனே! உணர்வின்றித்தாமேறியிருந்த மரக்கொம்பினைக் குறைத்துவிட்டதனோடொக்கு மென்றவாறு.

---

* திருக்குறள் 3-ம் அதி. (நீத்தார்பெருமை) குறள்—1.

† திவ்யப்பிரபந்தம், பெரியதிருமொழி 10-ம்பத்து 9-வதுதிருமொழி பாசுரம்-7.

‡ ,, ,, ,, ,, ,, பாசுரம்-6.

§ இந்நூலின் 65-ம் செய்யுள்

(குறிப்பு) இது ஸ்வாமித்துரோகம் செய்யலாகாதென்கிறது. 'ஆராய்ந்து நமக்கு இவர் தமராவரென்றுமதித்து' என்றது பலரைப்பரிசோதித்து அவரு ளெல்லாம் இவரே நமக்கு வேற்றுமையில்லாததுணைவர் எனநினைத்து என்ற வாறு. இது அவர் கேடுசூழ மனஞ்செல்லாமைக்கு நிமித்தங்காட்டியபடி. 'மிகவுந்தம்மைப்புரந்தாரை' என்றது தாம் அவரைப் பாதுகாத்தமையினின்றும் மிகவும் தம்மைப் பாதுகாத்தவரை யென்றவாறு. இதுவும் அவர்செய்த நன்றி மறத்தற்கு மனமெழாதிருக்க நிமித்தங்காட்டியபடி. 'பிறரோடுகேடுசூழ்தல்' என்றது அவர்க்குப் பகைவராயினாரோடுகூடிக் கேடாயினவற்றைச்சூழ்ந்துசெய் தல் என்றவாறு. கேடு-இங்குக் கேட்டிற்குக்காரணமாகியசெயலை யுணர்த்திற்று. 'உணர்வின்றி' என்றது தமக்குக் கேடும் பழியும் பாவமும் ஒருங்குவருமென்னு முணர்வின்றி என்றவாறு. இவ்வுவமையடை பொருளொடுங்கூட்டியுரைக்கற் பாற்று. இவ்வுணர்வொன்றிருப்பிற் பிறகாரணங்கள் என்னிருப்பினும் அது செய்யாரெனச் செய்யாமைக் குபாயமும் குறிப்பாற் காட்டப்பட்டது. 'தாமேறி யிருந்தமரக்கொம்பினைக் குறைத்துவிட்டதனோடொக்கும்' என்றது தம்மைத் தாங்கியிருக்கும் மரக்கொம்பின்மேலேயிருந்துகொண்டு அதனைக் கீழே குறைத்து விட்டதனோடொக்கும் என்றவாறு. இருதலையினுங்கெடுவது கினையும் முதலு மாதலால், முறையே கெடுக்கப்படுவார்கேட்டினும் கெடுப்பார்கேடே மிக்கதென் பது குறிப்பாயிற்று. தனக்குப் பற்றுயிருந்ததொரு மரக்கொம்பை அதன்மேலிடத் திருந்துகொண்டே கீழிடத்தை வெட்டிவீழ்த்தியவன் பிறிதொருபற்றில்லாமை யாற் றானும் அதனொடுவீழ்ந்திறப்பதுபோலத் தமக்குப் பற்றுயிருப்பாரைப்பற்றி யிருந்துகொண்டே அவரைக்கெடுப்பானும் பிறிதொருபற்றில்லாமையால் அவ ருடன் ஒருங்குகெடுவன் எனக் கருத்துநோக்கிப் பொருளொடுபொருத்தி யுரைத் துக்கொள்க. இதன்பழமொழி, தனக்கேகேடுபயக்கு மறிவிலிசெயலைச்சுட்டி இது மூனைமரத்திலிருந்து அடிமரத்தைவெட்டினாற்போலும் என நாட்டுவழக்காக வழங்கப்படுகிறது.

82. பொற்பவும் பொல்லா தனவும் புனைந்திருந்தார்
சொற்பெய் துணர்த்துதல் வேண்டுமோ—விற்கீ
ழரிபாய்ப் பரந்தகன்ற கண்ணு யறியும்
பெரிதாள் பவனே பெரிது.

எ-து, நல்லனவற்றையுந் தீயனவற்றையும் மருங்கிருந்தார்புனைந்து சொற்களைப் பெய்துணர்த்துதல்வேண்டுமோ; விற்போலும் புருவத்தின் கீழரிபரக்கப்பட்டுப் பரந்தகண்ணினையுடையாய்! பெரிதுமுதன்மையை யுடையனு யாளுமவனே மிகவு மறியு மென்றவாறு.

(குறிப்பு) இது மன்னரைச்சேர்ந்தொழுகலின் வகைவிசேடங் கூறுகிறது. பொற்பவென்பது பொல்லாதனவற்றின் மறுதலையாதலால் நல்லவெனப் பொருளுரைக்கப்பட்டது. நல்லனவாவன நன்மைபயக்குஞ் செயலுஞ் சொல்லும். 'தீயன'-தீமைபயக்குஞ் செயலுஞ் சொல்லும். 'மருங்கிருந்தார்'-மன்னரைச்சார்ந் தொழுகுங்காரியத்தலைவர். 'புனைந்துசொற்களைப்பெய்துணர்த்த'லாவது சுருக்கமாயுங் குறிப்பாயுஞ்சொல்லாது அறியாதார்க்குரைப்பதுபோல விரித்து வெளிப்படையாயுரைத்தல். 'வேண்டுமோ' என்றது இன்றியமையாததன்றுதலாலும், தன்னை யறிவிலியென்றுமதித்துரைப்பதா யரசன்கருதுவனுதலாலும் வேண்டாவென்றபடி. 'பெரிதும் முதன்மையையுடையனுயானுமவ' னென்றது அந் நல்லவுந் தீயவுமாகியபயனைத் தற்சார்ந்தாரைக்காட்டிலும் மிகவுமநுபவித்தறிதற்குரியனுன அரசன் என்றபடி. அல்லதூஉம் ஆட்சியின்பயிற்சியாலாகிய அநுபவவுணர்வுடையஅரசன் எனினுமாம். இது பெரிதறியும் என்பதற் கேதுவாயிற்று. 'மிகவுமறிய'மென்றது மிகவுமறியுமாதலா லுணர்த்துதல்வேண்டுமோ வெனக் கூட்டி முடிக்கற்பாற்று. ஆள்பவனறியானேவென்னும் அடிப்பட்ட வழக்கே இப்பாட்டிற்கெடுத்துக்கொண்ட பழமொழியெனவறிக.

83. உற்றதற் கெல்லா முரஞ்செய்தல் வேண்டுமோ
கற்றறிந்தார் தம்மை வெகுளாமை காப்பமையு
நெற்செய்யப் புற்றேய்ந்தாற் போல நெடும்பகை
தற்செய்யத் தானே கெடும்.

எ-து, உற்றதற்கெல்லாந் தனித்தனியே தம்மை வலிசெய்யவேண்டுமோ, கற்றறிந்தவர்க டம்மைவெகுளாமைகாப்பதே யமையும். நெற்செய்யப்புற்றேய்ந்தாற்போலப் பெரியபகை தானேகெடுந் தன்னை வலிபண்ண வமையு மென்றவாறு.

(குறிப்பு) இது அரசர் நீதிநூல்வல்லாரோடு விரோதிக்கலாகாதென்கிறது. 'உற்றதற்கெல்லாந் தனித்தனியே தம்மை வலிசெய்யவேண்டுமோ' வென்றது அரசியற்குப் பலவகையானு மிடையூறுகளுண்டாவ தியல்பு; அவை யொவ்வொன்றிற்கும் வெவ்வேறுவலிசெய் திடர்ப்படுவர் அறிவிலார்; அறிவுடையோ ரவையொன்றுஞ்செய்யவேண்டாது எல்லாவற்றிற்கும் எளிதிற்செய்தற்குரிய உபாயமொன்றைச் செய்திருப்பர் என்றவாறு. பலவகையாகவரு மிடையூறுகளாவன:- தாயத்தார், பகைவர், தெய்வம், கொல்குறும்பர், வினைசெய்வார், சுற்றத்தார், குடிகள்முதலாயினோராற் பலதிறப்படவருவன. 'கற்றறிந்தவர்கள் தம்மை வெகுளாமைகாப்பதேயமையு' மென்றது அவ்வெளியவுபாயம் யாதெனவினவியவழி இதுவென விடையிறுத்தவாறு. 'கற்றறிந்தவர்' என்றது நீதிநூல்களைக் கற்றறிந்தசான்றோர் என்றவாறு. 'தம்மைவெகுளாமை' என்றது அரசராகிய

தம்மை அச்சான்றோர் வெகுளாதிருக்கும்வண்ணம் என்றபடி. காப்பு - அவர் வெகுள்வதற்குக் காரணங்களான நீதியொடுபடாதனசெய்தலும்,அவர்சொல்வது கேளாமையும், அவரையவமதித்தலு முதலிய பிழைகள் தம்மாட்டணுகாது பாது காத்தல். ‘அமையு’மென்றது இக்காப்பொன்றுளதாகவே அவர்களவ்வரசனை யநுவர்த்தித்து வேண்டுவனசெய்து எல்லாவிடையூறுகளையும் போக்குவராத லாற் பிறிதோருபாயந்தேடவேண்டாவென்றவாறு. அவர் விரோதமுளதாயின் அவ்விரோதத்துக்கேதுவாகிய நீதியில்லாதசெயல்களைத்தடுப்பாரின்மையால் நாடு கெடுவதுகண்டு அவரே அச்செயல்களைக் குடிகட்கும் பகைவர்க்குங்காட்டித் தாமு முபேக்ஷித்திருக்கப் பலவகைவிரோதங்களாலும் அரசன் பகைக்கெளிய னாய்க் கெடுவன்என்பது கருத்து. இங்ஙனங்காவாமையாலுண்டாகிய நீதிநூல் வல்லார் வெகுளியைப்போக்குதற் குபாயம்யாதென நிகழும்வினாவை யவலம் பித்துத்திட்டாந்தமுகத்தா லதற் குபாயங்கூறுகின்றார்,‘நெற்செய்ப்புற்றேய்ந்தாற் போல’ என்றுதொடங்கி. “நெற்செய்யப்புற்றேய்ந்தாற்போல” என்பது பழ மொழி. இதன்பொருள் புற்பற்றியதரிசுநிலத்தைத் தொளியுழு தெருவிட்டு நெற்பயிர்நட்டு நீர்கால்யாக்கவே நீர்மூடுதலாலும் நெற்பயிரின்றுளடர்த்தியாலும் முன்பிருந்தபுல்விதைகள் முளைத்துச் செழித்துவளர்தற்கிடமின்றித் தேய்ந்து குறைந்தாற்போலும் என்பதாம். ‘பெரியபகை’ என்றது எல்லாப்பகையுள்ளும் பெரிதாகிய நீதிநூல்வல்லார்பகை என்றவாறு. ‘தானேகெடு’ மென்றது “ காரணநசிக்கக் காரியநசிக்கும் ” என்னுநியாயத்தால் அதனைக்கெடுத்தற்குப் பிறிதோருபாயந்தேடவேண்டுவதில்லை என அதனைக் கெடுக்குமுபாயத்தி னெண்மைகூறியவாறு. பின்னையொன்றுஞ் செய்யவேண்டுவதில்லையோவென் னும் வினாவுக்கு விடையாக, அமையுமென்பதைப் பின்னு மநுவர்த்திசெய்து தற் செய்ய அமையும் எனக்கூட்டி, தன்னை வலிபண்ணவமையுமெனப் பொரு ளுரைக்கப்பட்டது. இது, “ஆதலாற் றன்னைவலிபண்ணவமையு” மென்றிருக்க வேண்டும். தன்னைவலிபண்ணலாவது நீதிநூல்வழியொழுகுதல். ஒழுகவே, அவர்விரோதம் வளர்தற்கிடமில்லாமையாலும் அவர் விரோதமுண்டாதற்கு வேறுகாரணமில்லாமையாலும் விரோதமொழிந்து அவர்தாமே யநுகூலராவராத லால், பிறிதோருபாயம்வேண்டுவதில்லை; நீதிநூல்வழியொழுகுதலாகிய கடமை யொன்றே செய்யவமையுமென நிகமிக்கப்பட்டதாயிற்று. இதன்பழமொழி “நெற்செய்யப் புற்றேயுமாப்போலே தன்னடையே நிரஸ்தராவர்களிறே” எனத் திருவாய்மொழியின் முதற்பாட்டின் ஈட்டிற் காட்டப்பட்டுள்ளது.

84. இதுமன்னுந் தீதென் றிசைந்ததூஉ மாவார்க்
கதுமன்னு நல்லவே யாகு—மதுநெய்தல்
வீநாறு கானல் விரிதிரைத் தண்சேர்ப்ப
தீநா டிருவுடையார்க் கில்.

எ-து, இவ்வினை யிவர்க்கு மிகவுந் தீங்கினைத்தருவதொன்றே யென்று பிறர்சொல்லும்வகை வந்துபொருந்தியவினையுஞ் செல்வமாகக் கடவார்க் கதுநல்லதேயாய்விளையும்; தேனையுடைய நெய்தற்பூக்கணுறு நின்ற கடற்சோலையையுடைய விரிதிரைத் தண்சேர்ப்பனே! தீமையைப் பயக்குநாட்கள் புண்ணியமுடையார்க்கில்லை யதுபோல வென்றவாறு.

(குறிப்பு) இது கேடுபயக்குஞ்செயலும் ஆகூழுடையார்க்கு நன்மைபயக்குமென்கிறது. 'இவ்வினை' யென்றது ஆகூழுடையார்முயலும்முயற்சியைச் சுட்டிற்று. 'இவர்க்'கென்றது அம்முயற்சியுடையாரைச்சுட்டிற்று. 'மிகவுந்தீங்கினைத்தருவ' தென்றது அவ்வினையினியல்பானே மிகவுந்தீங்கினைத்தருவதென்றவாறு. 'பிறர்சொல்லும்வகை' என்றது அநுபவசித்தமா யெல்லாராலுமறியப்பட்டதாய் என்றபடி. 'வந்துபொருந்திய' வென்றது அவர்தாமும் மனமறிந்துசெய்யத்தக்கதல்லாத என்னுங்கருத்துடையதாய்த் தீங்குபயக்குஞ்செயல் என்பதை வலியுறுத்தியவாறு. உம்மை உயர்வுசிறப்புணர்த்திற்று. எச்சவும்மை எனினுமியையும். 'செல்வமாகக்கடவார்க்கு' என்றது ஆகூழுடையார்க்கென்றவாறு. 'அது நல்லதேயாய்விளையும்' என்றவுரை 'அது பொருந்துநல்லதேயாய் விளையும்' என்றிருக்கவேண்டும். இதனுள் அதுவென்றதனால் ஆவார்க்கென்பதன் கண்ணுள்ள ஆக்கத்தைச்சுட்டி, அவ்வாக்கம்பொருந்துதற்கேதுவாகிய நல்வினையாய்முடியும் எனப் பொருளுரைத்துக்கொள்க. இங்ஙனங்கொள்ளாக்கால் அது என்னுஞ்சுட்டு, இசைந்ததூஉம் என்றது பயனிலைகொள்ளாதிருக்க வதனைச் சுட்டவேண்டாமையால் நின்றுவற்றுமெனவுணர்க. 'தீமையைப்பயக்குநாட்கள் புண்ணியமுடையார்க்கில்லை' என்றது புண்ணியப்பயனனுபவிக்கக்கடவார்க்குத் தீயநாட்களும் தீமைபயப்பனவல்லவென்றவாறு. தீயநாட்கள் முகூர்த்தநூல்களுளாகாதனவெனவொழித்தவை. அவையும் புண்ணியமுடையார்க்குத் தொடங்கியகருமமுடிதற்கு நல்லனவாவதுபோலக் கேடுபயக்குஞ்செயல்களும் நல்லூழுடையார்க்குக் கேடுபயவாது நல்லனவா யாக்கம்பயக்குமென்பது கருத்து. இது "தீயவு, நல்லவாஞ் செல்வஞ்செயற்கு*" என்னுங் குறட்கருத்துடையது. "ஆகூழுடையாருக்காகாதநாளில்லை" என்ப திதன்பழமொழி. நல்ல என்பது-சாதிப்பன்மையாய் ஒருமைப்பெயர்க்குப் பயனிலையாயிற்று.

85. ஒட்டிய காத லுமையா ளொருபாலாக்
கட்டங்க வெல்கொடிக் கொண்டானுங் கொண்டானே
விட்டாங் ககலா முழுமெய்யுங் கொள்பவே
நட்டாரை யொட்டி யுழி.

* திருக்குறள், 38-ஆம்அதிகாரம் (ஊழ்) குறள்—5.

எ-று, பொருந்திய அன்பினையுடைய வுமையாளைத் தனக்கொரு கூறாகக் கட்டங்க வெல்கொடியைக்கொண்டமுதல்வனுங் கொண்டான்; அதுபோலத்தம்மையங்குவிட்டகலார் தம்முடம்புமுழுதினானுங் கலந்துகொள்வர் தம்மொடுநட்டாரை யவர்கள்வந்தடைந்தவிடத் தென்றவாறு.

(குறிப்பு) இது, கொழுநன் மனையாளையாதரிக்குமாறுகூறுவதுபோன்று, மனையாள் கணவனை யன்பொடு வழிபட்டொழுகவேண்டுமென்கிறது. கணவனுதரவின்றிப் புலந்துவருந்துமொருத்திக்குப் புத்திகற்பிக்கும் ஒருமுதுமகள் கூறிய துறைப்பாட்டாகவுமாம். 'பொருந்திய' என்றது அநுவர்த்தித்தொழுகுபவளாகிய என்றபடி. ஒட்டுதல் அநுவர்த்தித்தலாதலை ஒட்டிப்பாடுதல் என்பதனானுணர்க. அநுவர்த்தித்தலாவது: பின்பற்றல். இங்கு அன்பு-பர்த்ருவாத்ஸல்யம். ஒட்டுதலும் காதலுமாகிய இவ்விரண்டும், சிவபிரானதுநினைவால் உமையாளை ஒருகூறாகக்கொள்வதற்கும், தாம்பத்யதர்மம் கூறுவார்நினைவால் அங்ஙனம் கொண்டமை போதாதென்பதற்கும் ஏதுவாயின. 'தனக்கொருகூறாக' என்றது தன்னை அன்போடுவழிபடுமவளாதலால் அவட்குத் தன்னாற் கொடுக்கத்தகுவதொருசிறந்தபரிசிதுவேயென்று தன்னுள்ளேநினைந்து தன்னுடலினிடத்தே தானொருகூறும் அவளொருகூறுமாயிருக்கும்படி என்றவாறு. 'கட்டங்கவெல் கொடியைக்கொண்டமுதல்வனும்' என்றது இன்பச்சுவையோடியையாத வுருத்திரச்சுவையொன்றற்கேயுரியசெயலுடைமைதோன்ற வெடுக்கப்பட்ட மழுப்படையெழுதிய வெற்றிக்கொடியையுடைய முதற்கடவுளாகிய சிவபிரானுமென்றவாறு. இது கொள்ளவேண்டுமாறுகொள்ளாமைக்கு ஏதுக்காட்டியபடி, சிவபிரானுக்கு மழுப்படையெழுதிய வெற்றிக்கொடியும் ஒன்றுண்டென்பதை, "வலமழு வுயரிய நலமலி கங்கை, நதிதலை சேர்ந்த நற்கருணைக் கடல்"* என்பதனானும் அறிக. 'கொண்டான்' என்றது படுத்தலோசையா யிசைக்கும் ஒலிவேறுபாட்டால் அதிருப்திக்குறிப்புணர்த்துமாதலால், ஒட்டிய காதலுடையாளாகிய மனைக்கிழத்தியைக் கணவனுடம்பின் ஒருகூறாகக்கொள்ளுதலும் ஒருகொள்ளுதலாகக்கொள்ளலாகாது என மேற்கொண்டுகளைந்தவாறாயிற்று. இனி இவ்வாறன்றி, ஒற்றித்திருக்குமுயிர்களையுடல்விட்டுநீங்கப் பிரிக்குங் கட்டங்கத்தை† வெற்றிக்கொடியாகக்கொண்ட முதல்வனுமொருபாலாகக்

---

* சிவப்பிரகாசசுவாமிகள் பிரபந்தத்திரட்டு, நால்வர்நான்மணிமாலை, செய்-16.

† கட்டங்கம், மழு, கணிச்சி என்பன ஒருபொருட்பெயர்கள். இது ஊழியினிறுதிக்காலத் துயிர்கவருமியல்பினதென்பதை, "மடங்கலுங் கணிச்சியுங் காலனுங் கூற்றுந் தொடர்ந்துசெல் லமையத்துத் துவன்றுயிருணீஇ, உடங்கு கொட்பனபோற் புகுத்தனர்தொழூஉ" என்னுங் கலித்தொகை 105-ம்பாட்டடிகளின் உரையாலும் விசேடவுரையாலும் அறிக.

கொண்டானென்னுங்குறிப்பாற் கூட்டத்தைவிழையும்பிறர் முழுமெய்யானுங் கொள்வர் எனத்துணிதற்கேதுவாக்கி யுரைப்பினுமமையும். 'அதுபோல' என்றது, மூலத்துள்ள ஆங்கென்பதன்பொருளாய், விட்டகலார் என்பதன் முதனிலை வினைகொண்டு முடிந்துநின்றமையால் 'அதுபோலத்தம்மையங்குவிட்டகலார்' என்றதற்கு, இன்பநுகரும்பிறர் ஒட்டியகாதலுடையராகிய மகளிரை யொருபாதி யுடம்பாற்கொண்டு மற்றொருபாதியுடம்பா லவ்வொட்டியாருடம்பைவிட்டிருக்க மாட்டாதவராகி எனப் பொருளுரைத்துக்கொள்க. இதனுள் அங்கு என்றது மற்றொருபாதியுடம்பைச்சுட்டியவாறு. 'விட்டகலார்' என்றது விட்டகலா என்னும் ஈறு தொக்கவினையெச்சப்பொருளாகிய முற்றெச்சமாய் முழுமெய்யுங்கொள்ப வென்பதற்கேதுவானமையால் ஒட்டியொழுகுமகளிருடம்பின்கண் வேட்கை மிகுதியால் அதனை யொருசிறிதும் விட்டுப்பிரியமாட்டாதவராகி என்றபடி. 'தம்முடம்புமுழுதினுனுங்கலந்துகொள்வர்' என்றது காதலியைக் காதலன்கலக்குங்கலப்பு, சர்வாங்கசமவேதமாயிருக்குமென்றபடி. இதனை "இடியினுங் கொடியினுமயங்கியாவதுங், கடிமணக்கிழமையோர் கடலின்மிக்கதே"* என்பதனுணறிக. இனி,ஒட்டியொழுகுதல் இவ்வுலகத்தின்கண்ணதாகவிதிக்கப்பட்டமையால் ஆங்கென்றதற்கு இரட்டுறமொழிதலால் மறுமையுலகமாகிய துறக்கத்தின்கண் எனவும், தம்முடம்புமுழுதினுனுங் கலந்துகொள்வர் என்றதற்கு அவ்வுலகிற் றம்கணவர் தாமடைந்துள்ள தெய்வசரீரமாகிய உடம்புமுழுதினுனுங் கலந்துகொள்ளும் பர்த்ருசாயுஜ்யம் அளிப்பர் எனவும், கணவர் தெய்வவழிபாடு புரியாது ஒட்டியொழுகியதம்மையே வழிபட்டொழுகினும் கற்புடைமகளிராகிய தாமெய்துந்துறக்கத்துத் தம்முடனைக்கியமாவரெனவும் பொருளுரைத்துக் கொள்க. கலவாதவியல்புடையவுடம்புமுழுதினுனுங்கலத்தல்சொல்லவே கலக்குமியல்புடைய வுயிர்முழுதினுனுங்கலத்தல் சொல்லவேண்டாதாயிற்று. இதனால், கணவர் பிற தெய்வவழிபாடுசெய்தடையும் சாயுஜ்யபதவியையும், மனைக்கிழத்தியர் கணவர்வழிபாட்டால், பர்த்ருசாயுஜ்யம்பெற்றடைவர் என்பது குறிப்பாயிற்று. ஆகவே மகளிர்க்கு மறுமையொன்றே யடைதற்குரியதெய்வவழிபாட்டினும் இருமையுமடைதற்குரியகணவர்வழிபாடே சிறந்ததென்பதுபெறப்பட்டது. கொள்கவெனவிதியாது கொள்பவென்றமையால் அவர்க்கு இது கற்றறிந்து விதிபற்றியொழுகவேண்டாத இயல்பான ராகப்பிராப்தமாகு மென்னுங்குறிப்பாற் பிறழ்ச்சியின்மைகூறப்பட்டது. 'நட்டாரை' என்றது, மனைக்கிழத்தியரான தம்மொடுநட்டாராகிய கணவரை என்றவாறு. "மாகனகந்திகழ்கோகனகம் பொலியும், ஆயிழைநண்பனை† என்றார் பிறரும் இங்குக் கணவரை நட்டார் என்றது, ஒரோவழி யவர் பிழைசெய்யினும் அது பொறுக்கற்பாற்றென்பதை வலியுறுத்தற்கெனக்கொள்க. நட்டாருழைப் பிழைபொறுக்கவேண்டுமென்பதைத் திருக்

* சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், செய்—167.

† திருவரங்கக்கலம்பகம், செய்—21.

குறளுட் பழமை என்னும் அதிகாரப்பொருள்கொண்டறிக. அவர்கள் வந்தடைந்தவிடத்து' என்றது, மனைக்கிழத்தியர் வலியச்சென்றடைந்து அன்புடன்வழிபட்டொழுகினல் என்றவாறு. இதனல் மகளிர் கணவரை அன்புடன் வழிபட்டொழுகாராயின் அவர் கணவர் அவரைவிட்டுப்பிரிந்து வேறுபடுவர் என்பது குறிப்பாயிற்று. ஆகவே மகளிர் கணவரோடு ஐக்கியமாந்துணையும் அவரை அன்பொடுவழிபட்டு ஒழுகவேண்டுமென்பது குறிப்பாற்றோன்றிய குறிப்பு. முன்பு ஒட்டியகாதல் எனக் காதலும் உடனியைந்தமையால் இங்கும் ஒட்டுதலோடு அன்புடைமைகூட்டியுரைக்கற்பாற்று. இதன்பழமொழி 'நட்டாரையோட்டினர்நல்லமணம்பெறுவர்' என்பதாம். இது, கணவனுதரவுபெறுதவருந்து மகளொருத்தியைநோக்கி அவளுக்கு நல்லறிவுகொளுத்து முதியோர்கூற்றுள், 'நீ கணவனை வழிபட்டொழுகினல் எல்லாநன்மையுமடைவை' என்னுங் கருத்துடன் வழங்கப்படும்.

86. உழையிருந்து நுண்ணிய கூறிக் கருமம்
புரையிருந்த வாறறியான் புக்கான் விளித
னிரையிருந்து மாண்ட வரங்கினுள் வட்டுக்
கரையிருந் தார்க்கெளிய தே.

எ-து, முதன்மையையுடையானொருவ னருகிருந்து நுண்ணிய காரியங்களையாராயாதுசொல்லிக் குற்றமிருந்தநெறியறியாதே யக்கருமத்தைச் செய்யப்புக்கவன் கெடுதலுளது. ஆட்களாக நிரையிருக்கப்பட்டு மாட்சிமைப்பட்ட வட்டாடு மரங்கின்கட்போந்தே மருங்கிருந்தார் கூறுதற் கெளியவாய்த்தோன்றும் வட்டுப் போற்கண் பொருதலரியவாமாறுபோல வென்றவாறு.

(குறிப்பு) இது, அரசன் கேவலபராதீனனுய் வினைசெய்யலாகாதென்கிறது. 'முதன்மையையுடையானொருவன்' என்றது அரசனைத் தன்வயமாக்கிக் கொண்டொடத்து மொருவனென்றவாறு. இது கூறி, புக்கான் என்னுங்குறிப்பால் உழையிருத்தற்குரிய எழுவாயாக வருவித்துரைக்கப்பட்டது. 'அருகிருந்து' என்றது அவனைவிட்டுப் பிரியாதிருந்துகொண்டு என்றவாறு. இது தன்சொற்கொள்ளச்செய்தற்கும் பிறர்சொற்கொள்ளாதொழித்தற்கும் உபாயமாயிற்று. 'நுண்ணியகாரியங்களை' என்றது நுண்ணறிவுடையோரால் ஆராய்ந்தறிந்து செய்தற்குரிய ராஜ்யகார்யங்களை என்றவாறு. 'ஆராயாதுசொல்லி' என்றது "முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும், படுபயனு" முதலாயினவற்றை அறிவுடையாருடனிருந்தாராயாது தனக்குத்தோன்றியவாறேசொல்ல அது தன்னையேயுட்கொண்டு என்றவாறு. இங்கு, மனத்தொழிலின்மைகுறிக்கும்

வாய்த்தொழிலேபற்றி, கூறியென்றமையானே ஆராயாமை பெறப்பட்டது. கூறி என்னும் எச்சம் "நடுவிகந்தாமாக்கம்"* என்புழிப்போலப் பிறவினைகொண்டது. 'குற்றமிருந்தநெறியறியாதே' என்றது அக்காரியத்தின் விரோதமிருந்தபடியறியாதே என்றவாறு. 'அக்கருமத்தைச் செய்யப்புக்கவன்' என்றது அக்கருமத்தைச் செய்யப்புக்கவரசன் என்றவாறு. 'கெடுதலுள'தென்றது கெடுதல் தவறுதென்றவாறு. 'ஆட்களாகநிரையிருக்கப்பட்டு' என்றது போர்க்களத்துக்காலாள்என்னும் படைவீரர் முன்னணியாகநின்றாற்போல ஆள் என்னும் வட்டுக்கள் முன்வரிசையாயிருக்கப்பட்டு என்றவாறு. 'மாட்சிமைப்பட்ட' என்றது போர்க்களம் ரத கச துரகங்களையும் படைத்தலைவரையுமுடையதாய்ச் சிறப்புற்றிருப்பதுபோல, யானை குதிரை தேர் மந்திரி என்னும் வட்டுவகைகளையுடையதாய்ச் சிறந்த என்றவாறு. 'வட்டாடுமரங்கின்கண்' என்றது போர்க்களம்போல்விளங்கும் ஆடரங்கின்கண் என்றவாறு. 'போந்தே' என்றது அறியான் புக்கான் என்னும்பொருட்குறிப்பாற் பராதீனமாகவேபோந்து என்றவாறு. 'மருங்கிருந்தார்கூறுதற்கெளியவாய்த்தோன்றும்வட்டு' என்றது ஆடுவோரேயன்றிப் பக்கத்திருப்போரும் "அரசைப்பகைத்து ஆட்காலிற்கட்டு" எனமரபழியவழங்கற் கெளியதாய்த்தோன்றும் வட்டரசு என்றவாறு. 'போற்கண் பொருதலரியவாமாறுபோல' என்றது விளிதல் என்ற பொருள்வினைக்கேற்பத் திட்டாந்தவினைவருவித்துரைத்தவாறு. இதன்பொருள்:-போல்என்னும் வட்டு விசேடம்வரின் அதனொடுபொருதலரியதாய்க் கெடுமாறுபோலும் என்பதாம். 'போல்' என்றது வட்டறையினுள் எட்டாமறையேறிய காலாள்வட்டின்பெயர். இது காலாளின்வேறாகிய பிறிதொருவட்டுப்போறலின் போல் என்னுங் குழூஉக் குறிப்பெயரால் வழங்கப்படும். இதனை'மஸ்து'என்னுந் திசைச்சொல்லாலும்வழங்குவர். இது பிறவட்டுக்களால் வெட்டப்படாது அவற்றையெல்லாம்வெட்டவும், எதிரியரசைக்கட்டவும் வல்லது. போர்க்கண் என்பது பாடமாயின், போர்க்களத்தின்கட்சென்று எனப் பொருளுரைத்துக்கொள்க. இதன்பழமொழி வட்டுக்கரசு கட்டுக்கெளிது என்பதாம். இதன்பொருள் வட்டரசுபோலும் பிரேரகபராதீனனாய் வினைசெய்யுமரசன் சதுரங்க சைநியமுடையனாயிருப்பினும் அவன் பகைவர்க்கெளியனாய்க் கட்டுப்படுவன் என்பதாம். இது பிறிதுமொழிதலாகியகுறிப்பு. இங்குஅக்குறிப்பொழியச்செம்பொருளுணரநின்றது. இக்காலத்துப்பிரேரகபராதீனனை அரசனை யிழித்துரைக்குமிடத்து, இவன் என்னராஜா? இஸ்பேட்டு ராஜா. எனச் சீட்டுவிளையாட்டுவழக்கில்வைத்து வழங்கப்படுகிறது. இப்பாட்டின் ஈற்றடி பிரதிகளிற் பலவாறு வேறுபட்டுள்ளது; ஒன்றானும் உண்மைப்பாடமுடையதாகத்தோன்றவில்லை. அது, "வட்டுக், கரைசிருந்தார்க்கெளியதாம்" என்றிருக்கவேண்டும். வட்டுக்கரைசு - வட்டரசு. இருந்தார் - மருங்கிருந்தார். எனக்கொண்டு, இருந்தார்க்கெளியதாம் வட்டரசுவிளிதல்போலுமெனக்கூட்டிப் பொருளொடுபொருத்தியுரைத்துக்கொள்ளற்கியையும்.

---

* திருக்குறள், 12-ம் அதிகாரம் (நடுவுநிலைமை) குறள்—3.

87. கள்ளியகிலுங் கருங் காக்கைச் சொல்லும்போ
லெள்ளல் கயவர்வா யின்னுரையைத்—தெள்ளிதி
னூர்க்கு மருவி மலைநாட நாய்கொண்டாற்
பார்ப்பாருந் தின்பா ருடும்பு.

எ-து, கள்ளியின்கட்பிறக்கு மகிலையுங் கருங்காக்கைவாயின்கட் சொல்லையும்போலக் கீழாயினார்வாயிற்பிறந்ததேயாயினும் நல்லுரை யாயின் அதனை யிகழாதொழிக. மிகவுமார்க்கு மருவியையுடைய வணி மலைநாடனே! நாய்கொண்டவுடும்பினைப் பார்ப்பாருந்தின்பர் அதுபோல வென்றவாறு.

(குறிப்பு) இது, கீழாயினோர்சொல்வதும் நல்லுரையாயின் அது கேட்கற் பாற்றென்கிறது. அந்நல்லுரையைக் குற்றம்பற்றியிகழலாகாதென்கிறார் திட்டாந்த முகத்தால்'கள்ளியகிலு'மென்றுதொடங்கி. 'கள்ளியின்கட்பிறக்குமகிலையும்'என்றது நச்சுமரமாய்க் குலத்தாலிழிந்தகள்ளியினிடை யொரோவழி யகில்பிறக்கு மாயின் அதனையும் என்றவாறு. கள்ளியினிடை யொரோவழி யகில்பிறக்குமென் பதை,"கள்ளிவயிற்றினகிற்பிறக்கும்"*என்பதனானறிக.'கருங்காக்கைவாயின்கட் சொல்லையும்,என்றது கட்கின்னாத நிறங்கரிய பிணந்தின்னிக்காக்கையின்வாயிற் செவிக்கின்னாத கத்துதலாகிய சொல்லையும்என்றவாறு. குற்றம்பற்றி எள்ளப்படா தென்னுங்குறிப்பாற் கரைதலென்னாது சொல்லெனப்பட்டது. 'போல' என்றது கள்ளியகில் குலத்தாலும் நலத்தாலுமிழிந்ததாயினும் பரிமளமுடைமைபற்றியும், ஒழுக்கத்திலிழிந்த கருங்காக்கைச்சொல் செவிக்கின்னாதாயிழிந்ததாயினும் பிர மாணமாதல்பற்றியும் அவற்றினிழிவுநோக்காது குணமொன்றேநோக்கி அறி வுடையோர்கொள்ளுதல்போல என்றவாறு. ஒரோவழிக் காக்கைவாய்ச்சொற் பிரமாணமாகுமென்பதனை, "காக்கைவாயினுங்கட்டுரைகொள்வர் காரணகுருளக் கொடியானே"† என்பதனானறிக. "கொடிகூப்பிடினுங், குறியாநயப்பவர்போற் கொடியேன்சொலுங் கொள்வனென்றே"‡ எனவும், "சினக்காக்கைவாயினுறுங் குரற்சொல்லொக்கும்"¶ எனவும் பிறருங்கூறினார். 'கீழாயினார்' என்றது இங் குக் குலத்தாலும் நலத்தாலும் ஒழுக்கத்தாலும் தோற்றத்தாலும் சொல்லாலும் சிறவாதிழிந்த கீழ்மக்கள் என்றவாறு. 'நல்லுரையாயின்' என்றது பயனுள்

* நான்மணிக்கடிகை, செய்—6.

† நாலாயிரப்பிரபந்தம், பெரியாழ்வார்திருமொழி, 5-ம் பத்து, 1-ம் திருவாய் மொழி, பாசுரம்—1.

‡ திருவரங்கத்தந்தாதி, செய்—91.

¶ மறைசையந்தாதி, செய்—58.

நன்மைபயத்தற்குரிய சொல்லாயிருப்பின் என்றவாறு. 'இகழ்ந்தொழிக'என்றது அவரது குலம் நலம் ஒழுக்கம் தோற்றம்முதலியபற்றி இகழலாகாதென்றவாறு. இதனால் உதாசீனபாவமொழியாமையால் அதனையும் ஒழிக்கின்றார் 'நாய்கொண்டால்' என்றுதொடங்கி 'நாய்கொண்டவுடும்பினைப் பார்ப்பாருந்தின்பர் அது போல' என்றது வேட்டைநாய் பற்பதியக்கௌவிப்பிடித்ததாயினும் உடும்பின் றசை யுண்பார்க்கு நன்மைபயத்தலால் அதனை நாய்வாய்ப்பட்டதென்றிகழாது பார்ப்பாரும் விரும்பிக்கொள்வர், அதுபோலக் கயவர் ஒருசெய்திசொல்லுமிடத்து நல்லுரைதோன்றின் அதனைக் கயவர்வாய்ப்பட்டதென் றிகழாது உயர்ந்தோரும் விரும்பிக்கொள்வர் என்றவாறு. பார்ப்பாரும் என்னும் உயர்வுசிறப்பும்மையால் எல்லோருந்தின்பரென்பது குறிப்பு. இதன்பழமொழி பண்டையவூழிக்காலத் தொழுக்கம்பற்றிப்பிறந்ததாதலால் அவ்வொழுக்கம் பழிக்கப்பட்ட பிற்காலத்து வழக்கிற் பொருளற்றமையால் இறந்ததாயிற்று. இவ்வொழுக்கம் பண்டைக் காலத்தார்கொண்டதென்பதை, "ஶ்வாவிதம் ஶல்யகம் கோதாம் கட்க கூர்ம ஶஶாம்ஸ்ததா; பக்ஷ்யாந் பஞ்சநகேஷ்வாஹு:" எனவும், "ஶ்வபிர்ஹதஸ்ய யந்மாம்ஸம் ஶுசி தந்மநுரப்ரவீத்" எனவும் வழங்கும் பிரமாணங்களாலறிக. "வேட்டையின்ஞமலி கறித்திடுசெய்யமென்றசையும், ஒன்றியமிச்சிலெனவிகழ்ந்துரையாருணர்ந்துளோர்"* என்பது மொருசான்று. இங்ஙனமன்றி, "நோய்கொண்டாற், பார்ப்பாருந்தின்பருடும்பு" என்பது பிரதிபேதமாயிருப்பினும், அது இழிந்தோர்வாய்ப்பட்ட நல்லுரைக்கு உவமமாகாமையானும், உடும்பே யிழிக்கப்பட்டதாகவேண்டுமாதலானும், பொருளொடுபொருந்தாமையானும், பிறிதொருசிறப்புமில்லாமையானும் அது பாடமன்றெனவுணர்க.

88. தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்ப ரெனப்பட்டார்க்
குற்ற குறையை யுரைப்பதாந்—தெற்ற
வறையா ரணிவளையாய் தீர்த லுறுவார்
மறையார் மருத்துவர்க்கு நோய்.

எ-து, மிகவிரங்கித் தம்துன்பத்தைக்கேட்டாற் றீர்ப்பரென்று தாங்கருதப்பட்டார்க்குத் தாங் காதலுற்றகாரியத்தை மறையாதே தாமுரைப்பர்; அறுத்துச்செய்யப்பட்ட அணிவளையையுடையாய்! நோய்தீரவேண்டுவார் அந்நோயை மருத்துவர்க்கு மறையார்; அது போல எ-று.

(குறிப்பு) இது, தாமுற்றகுறைதீர்க்கவல்லாரைப்பெற்றுழி அவர்க்கு அது சொல்லுவது இகழ்ச்சியன்றென்கிறது. பரிந்துதீர்ப்பரெனத் தெற்றப்பட்டார்க்கு

* காசிகண்டம், 39-வது இல்லறங்கூறிய அத்தியாயம் செய்—11.

ஒருவர் தாம் உற்றகுறையைத் தெற்ற உலரப்ப எனக்கூட்டுக. 'தாங்கருதப்பட்டார்க்கு' என்றது தம்மாற் றெளியப்பட்டார்க்கென்றவாறு. 'தாங்காதலுற்ற காரியத்தை' என்றது தாம் அவரிடை விரும்பிநின்றகாரியத்தை என்றவாறு. 'நோய்தீரவேண்டுவார்' என்றது மானத்தாற் பிறர்க்குரையாது மறைத்தற்குரிய நோய்தீரவிரும்புமவர் என்றவாறு. 'அந்நோயை மருத்துவர்க்குமறையார் என்றது அந்நோயைத்தீர்க்கவல்லமருத்துவர்க்கு மானத்தால்நாணி மறையாதவராய் அந்நோயிருந்தபடிதெளியச்சொல்வர் என்றவாறு. 'அதுபோல' என்றது உரைப்ப என்பதனோடுகூட்டிமுடித்து ஒருதொடராக்கற்பாற்று. இதன்பழமொழி தாய்க்கொளித்தசூலும்மருத்துவர்க்கொளித்தநோயுமில்லை என்பதாம். இது, "வாளாலறுத்துச்சுடினும் மருத்துவன்பால், மாளாதகாதல்நோயாளன்போல்" எனப் பெருமாள்திருமொழியுள்* வழங்கப்பட்டது.

89. கண்ணுண் மணியேபோற் காதலா னட்டாரு
மெண்ணுந் துணையிற் பிறராகி நிற்பரா
லெண்ணி யுயிர்கொள்வா னேன்று திரிபினு
முண்ணுந் துணைக்காக்குங் கூற்று.

எ-து, ஒருவன் தன்கண்ணுண்மணியேபோல் அன்பினால் நண்பு கொள்ளப்பட்டாருந் தங்காரியமுடியவெண்ணியவளவு வந்தவாறே பின்பு ஒருபொழுதும்நில்லாதே நட்பைவிட்டுப்பிறராய்நிற்பர்; ஆராய்ந்தொருவனுயிரைக்கொள்ளவேண்டித் திரியாநின்றதாயினும் அவ்வுயிரைத் தானுண்ணுங்காலம்வருமளவும் அவ்வுயிர்க்குப் பிறிதோரிடையூறுவாராமற்காத்து அக்காலம்வந்தவளவிலே கூற்றுவனுண்ணுமது போல எ-று.

(குறிப்பு) இது பயன்கொண்டொழியுநட்பின் கொடுமைகூறுகிறது. 'பிறராய்நிற்பர்' என்றது பிறர்போலப் பரிவின்றியிருப்பார்சில ரென்றவாறு. 'ஆராய்ந்து' என்றது துணிவுடையதாய் என்றவாறு. 'ஒருவனுயிரைக்கொள்ள வேண்டி' என்றது ஒருவனுயிரை யுடம்பினின்றுங்கவரவேண்டி என்றவாறு. 'திரியாநின்றதாயினும்' என்றது அவ்வுயிருடையுடம்பைவிட்டுநீங்காது அதனுடனிகழ்வதாய்த்தோன்றினும் என்றவாறு. 'அவ்வுயிரைத் தானுண்ணுங்காலம் வருமளவும்' என்றது உண்பானொருவன்வளர்த்தவுயிரைத் தானுண்ணவிரும்பிக் கொல்லுங்காலம்வருந்துணையும் என்றவாறு. 'அவ்வுயிர்க்குப் பிறிதோரிடையூறு வாராமற்காத்து' என்றது அவ்வுயிர்க்குப் பிறிதொன்றினாலுஞ் சாவுண்டாகாதவாறு காப்பதுபோலக்காத்து என்றவாறு. 'கூற்றுவனுண்ணுமதுபோல' என்றது

* நாலாயிரப்பிரபந்தம், பெருமாள்திருமொழி, 5-வதுபதிகம், பாசுரம்—4.

காலக்கடவுள் வாய்ப்பெய்துநிற்குமதுபோலும் என்றவாறு. இத்தகையோர்நட்புக் கொள்ளற்பாற்றன்றென்பது குறிப்பு. இது காலத்தின்வேறுபடக் கருதப்பட்டமையால் "மாலைபடர்தரும்போழ்து"* என்புழிப்போல உண்ணுந்துணைக் காக்குங்கூற்றென்றார். இக்கூற்று ஒருவனுயிர்வாழ்க்கைக்குத்துணையாய் உடனுறைந்திருப்பதுபோன்றிருந்து முடிவில் இறுதியைப்பயப்பிப்பது. இதனை, "நாளென வொன்றுபோற்காட்டி யுயிரீரும், வாள்"† என்பதனானும் அறிக. இப்பழமொழி, "செயிரிற் குறைநாளாற் பின்சென்றுசாடி, யுயிருண்ணுங் கூற்றமும் போனம்"‡ எனக் கலித்தொகையுள்ளும் எடுத்தாளப்பட்டது. இப்பழமொழி வடிவம்வந்துழிக் கண்டுகொள்க.

90. செந்நீரார் போன்று சிதைய மிதிப்பார்க்கும்
பொய்ந்நீரார் போன்று பொருளை முடிப்பார்க்கு
மந்நீ ரவரவர்க்குத் தக்காங் கொழுகுபவே
வெந்நீரிற் றண்ணீர் தெளித்து.

எ-து, தங்கருமத்தைக் கெடவொழுகுகின்ற பிறர்க்கும் செவ்விய நீர்மையுடையாரைப்போன்றும், பொருளைப் பாதுகாத்துமுடிக்கின்ற பிறர்க்கும் அவர்க்கன்புபட்டில்லாதாரைப்போன்றும் இப்பெற்றியால் அந்நீர்மைகளையுடைய அவரவர்க்குத்தக்கபெற்றியால் ஒழுகவேண்டும்; வெய்யநீரிற் குளிர்ந்தநீரையளாவியாற்றினாற்போல எ-று.

(குறிப்பு) இது, உட்பகையாயினாரிடத்தும் பகைநட்பாக்கொண்டொழுகத் தொடங்குவாரிடத்துந் தக்காங்கொழுகுமாறு கூறுகிறது. 'தங்கருமத்தைக் கெடவொழுகுகின்றபிறர்க்கும்' என்றது முதலடியின்பொருளாதலால், தம்மாட்டுச் செவ்வியநீர்மையுடையாரெனத்தோன்றுமாறு புறத்தேகாட்டி அகக்கோட்டமுடையராய்த் தமக்குக் காரியக்கேடுண்டாகும்படிநடக்கும் உட்பகையாயினார்க்கும் என்பதுகருத்தாகக்கொள்க. சிதைதல்வினைக்கேற்ற கருமம்விரித்துரைக்கப்பட்டது. மிதித்தல் நடத்தலாய் ஒழுகுதலுணர்த்திற்று. உம்மை ஆக்கமுணர்த்தியது; பின்வருமும்மையுமது. 'செவ்வியநீர்மையுடையாரைப்போன்றும்' என்றது தாமும் அவர்க்குச் செவ்வியநீர்மையுடையாராகத்தோன்றும்படி புறத்தேகாட்டியும் என்றவாறு. இது உம்மையாற்போந்தபொருள். செவ்வியநீர்மை-நேர்மை. 'பொருளைப்பாதுகாத்துமுடிக்கின்றபிறர்க்கும்' என்றது இரண்டாமடியின் பொருளாதலால், இனிமையற்ற உதாசீனரென்றுதோன்றுமாறு புறத்தேகாட்டியகத்தே தம் கருமக்கேடுவாராது உதவிபுரிந்து பகைநட்பாக்கொள்ளவிரும்பிய

* திருக்குறள், 123-ம் அதிகாரம், (பொழுதுகண்டிரங்கல்), குறள்—9.
† ,, 34-ம் அதிகாரம், (நிலையாமை), குறள்—4.
‡ கலித்தொகை, செய்—105.

பிறர்க்கும் என் பதுகருத்தாகக்கொள்க. நீர்மை-இனிமையாய் அன்பினையுணர்த்தி நின்றது. பொய்ம்மை-இன்மைப்பொருளுணாநின்றதாதலால், 'பொய்ந்நீரார் போன்று' என்றது அன்பில்லாதநொதுமலர்போன்று என்றவாறு. பொருள்- இங்குப்பொருள்கருதிமுயலுங் கருமத்துக்காகலால் ஆகுபெயராயிற்று. 'அவர்க் கன்புபட்டில்லர்தாரைப்போன்றும்' என்றது அவர்க்குத் தாமும் நொதுமலராகப் புறத்தேகாட்டியும் என்றவாறு. இதுவும் உம்மையாற்போந்தபொருள். 'இப் பெற்றியால்' என்றது இவ்வியல்பாக என்றவாறு. 'அந்நீர்மைகளையுடைய அவ ரவர்க்குத்தக்கபெற்றியால் ஒழுகவேண்டும்' என்றது கருமஞ்சிதையமிதிப்பார்க்கு அவ்வளவின் அவர்கருமஞ்சிதையமிதித்தும், பொருளைமுடிப்பார்க்கு அவ்வள வின் அவர்பொருளைமுடித்தும் ஏற்றத்தாழ்வின்றி ஒழுகவேண்டும் என்றவாறு. ஒழுகுபவென உலகியன்மேல்வைத்துக்கூறினுராயினும் கருத்துநோக்கி யொழுக வேண்டும் என விதிப்பொருளுரைக்கப்பட்டது. "வெந்நீரிற் றண்ணீர் தெளித்து" என்பது பழமொழிக்கூற்று. இது ஒழுகுப என்பதற்கு விசேடண மாயிற்று. 'வெய்யநீரிற் குளிர்ந்தநீரையளாவியாற்றினுற்போல' என்றது மேற் கொள்ளினுற்றவொண்ணுதகுடுமிக்க வெய்யநீரை யாற்றுமளவு அதன்குடுதணி யத் தண்ணீரையளாவியாற்றி மேற்கொள்ளுதல்போலும் என்றவாறு. செந்நீரார் போன்று சிதையமிதிப்பாரதுகருமத்தைத் தாமும் சிதையமிதியாதவழி அவர் மிகை தணியாதாதலால் அது தணியுமாறு மிதித்தல் வெந்நீர்மிகைதணிக்குந் தண்ணீர்தெளித்தலாயிற்று. பொய்ந்நீரார்போன்றுபொருளைமுடித்துப் பகைநட் பாக்கொண்டொழுகத்தொடங்குவார்க்குத் தாமும்அவர்பொருளைமுடித்துப் பகை நட்பாக்கொண்டொழுகத்தொடங்காதவழி அவர் பழையபகையாய் மிகுவராதலால் அவர் மிகைதணியுமாறு பொருளைமுடித்தலும் வெந்நீர்மிகைதணிக்குந் தண்ணீர் தெளித்தலாயிற்று. வெந்நீர்மிகையைத் தண்ணீர்தணிக்கும் என்பது இதன் பழமொழி.

91. பெருமலை நாட பிறரறிய லாகா
வருமறையை யான்றோரே காப்ப—அருமறையை
நெஞ்சிற் சிறியார்க் குரைத்தல் பனையின்மேற்
பஞ்சிவைத் தெஃகிவிட் டற்று.

எ-து, பெருமலைநாடனே! பிறரறியலாகாதவருமறையையமைந்த வறிவுடையாரேகாக்கவல்லார்; அரியமறையை நெஞ்சினுற்சிறியகுணத் தார்க்குச்சொல்லுதல் நெடும்பனையின்மேற் பஞ்சியைவைத்தெஃகினாற் போலும் எ-று.

(குறிப்பு) இது, மந்தணமுரைத்தற்குரியார் இவரென்கிறது. 'பிறரறிய லாகாதவருமறையை' என்றது தம்முள்மனத்தால்வேறுபாடின்றி ஒன்றுபட்டிராத பிறர் அறியலாகாது மறைக்கத்தக்கதும் கடைக்கொட்கற்பாலதுமாகியகருமங்களை என்றவாறு.'அமைந்த அறிவுடையாரே காக்கவல்லார்'என்றது வேறுபாடில்லாத ஒற்றுமையுடையாருள்ளும் இயற்கையானும் நூலானும் நிரம்பிய அறிவுடை யோரே வெளிவிடாது நெஞ்சில்வைத்துக் காக்கவல்லோர் என்றவாறு. இதனால் மந்தணமாயவற்றை மிக்கநண்புடையராயிருக்கும் அறிவுடையார்க்கே யுரைக்க வென்பது குறிப்பாயிற்று. அதனையெனச்சுட்டியொழியாது பின்னும் "அரு மறையை" என்றது உற்றுரேயாயினு மறிவிலராயி னவர்க்குரைக்கலாகாதென்ப தறிவித்தற்கென்க. 'நெஞ்சிறுற்சிறியகுணத்தார்க்கு' என்றது பிறபெருங் குணங்களுடையராயிருப்பினும் நெஞ்சிறுற் சிறியகுணமுடையராயிருப்பராயி னவர்க்கு என்றவாறு. நெஞ்சிறுலாகிய சிறியகுணம்-பேதைமை. உணர்த்தல் என்னுதுஉரைத்தல் (சொல்லுதல்) என்றது குறிப்பாலாயினும் பிறரறியலாகாத கோப்பியமென்னுங்குறிப்புணர்த்தியபடி. நெடும்பனையென மோனைத்தொடைக் கேற்றவிசேடண மூலத்தில்லாமையாலும், மூலத்தில்லாதநெடுமைவிசேடணம் உரையில் வருவிக்கவேண்டாமையாலும், மூன்றுமடியிறுதிச்சீர் பனையின்மேல் என்றிருப்பது சுவையின்மையானும் அது உண்மைப்பாடமின்றெனவும், நெஃ கான்முதன்மொழியுடையதாயிருந்திருக்கவேண்டுமெனவும் உணர்க. மூலத் துள்ளும் உரையுள்ளும் பனையின்மேல் என்றிருப்பவை 'மணையில்' என்றிருக்க வேண்டும். மணை-ஆசனம். அது பருத்தியினின்றும் பஞ்சுபிரித்தெடுக்குங் கருவிக்குக் குறிதாயிராது நெடிதாயிருக்குமாதலால் அது நெடுமணையென விசே டிக்கப்பட்டு அக்கருவிக்கு அடையடுத்த சினையாகுபெயராயிற்று. இக்கருவி அடையின்றியே மணையெனவழங்கப்படுகிறது. 'பஞ்சியைவைத்தெஃகிலுற் போலும்' என்றது நுண்பொருளாகியபஞ்சினை நெஞ்சிற்கொள்ளுமாறு அக்கருவி வாய்வைத்துச் சுழற்றியென்னுங் கைபிடியைப்பற்றியெஃகுங்கால் அக்கருவி யப்பஞ்சினை விரைவின்உட்கொண்டு நெஞ்சிற்றங்கவையாது உடனே புறத்தே வெளிவிட்டிருப்பதுபோல் அவரும் புறத்தே வெளிவிடுவராதலால் அவர்வயின் உரைக்கலாகாதென்றவாறு. எஃகல்-இயக்கற்கரியதொன்றை எளிதினியக்குங் கருவியின் வியனிலைநெடுமுனையைப்பற்றியியக்கல். இதனை இயக்கற்கரிய கற் பாரைமுதலியவற்றை யவ்வாறியக்கும் இருப்புக்கம்பிக்கு எஃகு என்னும் பெயர் வழக்குண்மையானறிக. "பஞ்சுண்டமணைக்குநெஞ்சுண்டோ" என்பது இதன் பழமொழி. இது பிறிதுமொழிதலாய்ப் பொருளையுணர்த்துவதாயினும் இப் பாட்டிலுவமையளவாய்நின்றது. பனையென்பதேபாடமாயின் அது பன்னுதற் றொழிலுடைமைபற்றி அக்கருவிக்கக்காலத்திருந்துவிழுந்ததொரு பெயராதல் வேண்டும்.

92. பொலந்தா ரிராமன் றுணையாகப் போதந்
திலங்கைக் கிழவற் கிளையா—னிலங்கைக்கே
பேர்ந்திறை யாயதூஉம் பெற்றான் பெரியாரைச்
சார்ந்து கெழீஇயிலா ரில்.

எ-து, பொற்றாரையுடையவிராமனைத் தனக்குத் துணையாகக் கருதிப்போந்து, இலங்கைக்கிழவனாகிய இராவணற்கிளையான், இலங்கைக்கே மீட்டும் இறைவனானான்; ஆதலாற் பெரியராயிருப்பாரைச் சார்ந்தால் அச்சார்ச்சியாற் பயன்பெறாதாரில்லை எ-று.

(குறிப்பு) இது, பெரியாரைத் துணைக்கோடலின் நன்மைகூறுகிறது. 'பொற்றாரையுடைய' என்ற விசேடணம் இராமபிரானது மணிவண்ணத்திருமேனிக் கியையக்கூறியவாறு. "இலங்கைக்கிழவற்கிளையான்" என்றது பகைப்பக்கத்துள்ளானாகிய வீடணன் என்றவாறு. இதனால் நட்பின்பக்கத்தார் நலம்பெறுதல்சொல்லவேண்டாதாயிற்று. அன்றியும், எல்லாச்செல்வத்தாலும்நிறைந்த இலங்கைக்கிளவரசு என்னுங்குறிப்பால் எளியார்நலம்பெறுதலும் சொல்லவேண்டாதாயிற்று. அன்றியும், "எம்பெருமான் பின்பிறந்தாரிழைப்பரோ பிழைப்பு"* என்பதற்கெதிராக இலங்கைக்கிழவற்கிளையான் இழைப்பதுபிழைப்பே என்றுதுணிதற்குரிய பிறப்புடையன் என்னுங்குறிப்பால், பிழைப்பிலார் என்றுதுணிதற்குரிய பிறப்புடையார் நலம்பெறுதலும் சொல்லவேண்டாதாயிற்று. 'இலங்கைக்கே' என்றதனால் எல்லாச்செல்வத்தாலுமிக்கதற்கு என்னுங்குறிப்பால் ஏதேனுமொருகருதியசெல்வமுடைய நலம்பெறுதல் சொல்லவேண்டாதாயிற்று. 'மீட்டுமிறைவனானான்'என்றது நட்டப்பொருள்பெற்றான் என்னுங்குறிப்புணர்த்தியவாறு. இதனால், ஆக்கப்பொருள்பெறுதல்சொல்லவேண்டாதாயிற்று. நட்டப்பொருள்பெறுதலரிதென்பதைக் கெட்டமாடுதேடுமுன்னாம் எட்டுமாடுதேடலாம் என்னும் பழமொழியானறிக. 'ஆயதூஉம்' என்றது தொழிற்பெயர்ப்பொருளுணரநின்றமையால் பெற்றான் என்பதன்பொருளுடன்கூட்டி இறைவனானான் எனப்போந்தபொருளுரைக்கப்பட்டது.'இறையாயதூஉம்'என்ற உம்மை, இராவணனாற்கொல்லப்படாதுய்ந்தமையுமன்றி என்ற அநிஷ்டநிரஸனமும், இலங்கையரசாளும் இஷ்டஸித்தியுந்தோன்ற நின்றமையால் இறந்தது தழீஇய எச்சமாயிற்று. இதனால் அநிஷ்டநிரஸனம், இஷ்டப்ராப்தி இரண்டும் ஒருங்கடைவரென்பது குறிப்பாயிற்று. இதுகாறும்எடுத்துக்கொண்டபொருளுக் கேற்றதோர் இதிகாசங்காட்டப்பட்டது. 'பெரியராயிருப்பாரை' என்றது அறிவு ஆண்மை பெருமைகளான் மிக்காரை என்றவாறு. 'சார்ந்து' என்றது ஈண்டுச் சித்தமில்லாத சாத்தியவினையாதலால் சார்ந்தால் என்றும், அவ்வினையெச்சவாய்

* கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம், குகப்படலம்—செய்-௬௦.

பாட்டுக்குக்காரணப்பொருண்மையால் அச்சார்ச்சியாலென்றும் பொருளுரைக்கப் பட்டது. 'பயன்பெறுதாரில்லை' என்றது எல்லாரும் பயன்பெறுவர்என்னும் எஞ்சாமைப்பொருள்தோன்றக் கூறியவாறு. **பெரியாரைச்சார்ந்தவர்பேறு பெறுவர் என்பது இதன் பழமொழி.**

93. சால மறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
காலை கழிந்ததன் பின்றையு—மேலைக்
கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையு மூர்ந்தான்
முறைமைக்கு மூப்பிளமை யில்.

எ-து, மிகவும் மறைத்தோம்பிச் சான்றோராயிருப்பார் புலனாகாமை யச்செயலையொளிப்பவும் பலகாலம்கழிந்ததன்பின்பும் முன்னொருகாலத்துக் கறவையின்கன்றையூர்ந்தபுதல்வனைத் தந்தையாகியசோழனும் தேராலூர்ந்தானாதலால் வழக்கிற்கு மூப்பிளமையில்லை எ-று.

(குறிப்பு) இது, காலங்கழிந்தாலும் கடமைசெய்துதீரவேண்டுமென்கிறது. 'மிகவு மறைத்தோம்பிச்சான்றோராயிருப்பார் புலனாகாமை அச்செயலையொளிப்பவும்' என்றது மனுமுறைகண்டசோழன்மகன் ஆன்கன்றின்மேல் அவசமாய்த் தேரூர்ந்தசெய்தியையறிந்தவராகியஅமைச்சர்கள்தாம்சிறிதுமறியாதவர்போன்று ரகசியமாகப்பலவாற்றாலும் கரியிலதாக்கிமறைத்து அரசனுக்குப்புலனாகாதவாறு செய்திருக்கவும் என்றவாறு. இதனால், சான்றில்லாமையால் வழக்கிறந்துபடுமென்னும் அரசியனூனோக்கத்தை அறநூல்நோக்கம்பற்றி மறுத்துரைத்தவாறாயிற்று. 'பலகாலங் கழிந்ததன்பின்பும்' என்றது அரசியனூனோக்கால் வழக்குத் தொடர்தற்குரியகாலவரையறையினின்றும்மிக்ககாலம்கழிந்தபின்பும்என்றவாறு. இதுவும், வழக்குத்தொடர்தற்குரியகாலவரையறைகடந்தால் அவ்வழக்கு இறந்துபட்டதாகுமென்னும் அரசியனூனோக்கத்தை அறநூனோக்கம்பற்றி மறுத்துரைத்தவாறு. 'முன்னொருகாலத்து' என்றது அறம் தலைதடுமாறிய இக்கலிகாலத்தன்று; அது நிலைநின்ற முன்னையவூழிக்காலத்தென்றவாறு. அன்றியும் இது, பண்டைக்காலந்தொட்டடிப்படவழங்கும்வழக்கென இதிகாசத்தின் வலிமைகூறியதாகவுமாம். "கறவையின்கன்றையூர்ந்தபுதல்வனை" என்றது ஆவின்கன்றின்மேற்றேரூர்ந்தபாவந்தீரப் பிராயச்சித்தஞ்செய்யமுயன்ற புதல்வனை என்றவாறு. 'தந்தையுமூர்ந்தான்' என்றது அம்முயற்சியானறிந்தமனுமுறைகண்டசோழனும் அரசனும்நிலையினன்றித் தந்தையாம்நிலையினின்று தன்றேர்க்காலிற்கிடத்தியூர்ந்தான் என்றவாறு. வேறு சான்றின்மையாலுங்காலங்கழிந்தமையாலும் அரசியல்நூல்கள் இவ்வொறுப்புக்கிடங்கொடாதாகையால் அந்நிலைவேண்டாது அறநூல்நோக்கொன்றேகருதி யொறுத்தான் என்பார் வேந்தன் என்னாது தந்தையுமூர்ந்தான் என்றார். உம்மையால் மைந்தனும் அதற்குடம்பட்டான் என்பது

குறிப்பு. இதுகாறும் எடுத்துக்கொண்டபொருளுக்கேற்றதோர் இதிகாசங்கூறப்பட்டது. இது பெரியபுராணத்துள் விரித்துச் சிறிது வேறுபடக்கூறப்பட்டுள்ளது. 'ஆதலால்' என்றது இவ்விதிகாசங்கொண்டு எடுத்துக்கொண்டபொருள் துணிதற்கு ஏதுவசனங்கூறியவாறு. 'வழக்கிற்கு மூப்பிளமையில்லை' என்றது விவகாரபதத்தில் வழக்குத்தொடரப்படுதற்குரியார் தம் கடமையைச் செய்துதீர்ப்பதற்குக் குறித்தகாலங்கடந்தமைகுற்றமும், அக்காலங்கடவாமைகுணமுமாகக் கொள்ளுதல்கூடாதாதலால் எப்பொழுதும் செய்துதீர்க்கவேண்டுமென்றவாறு. அதாவது: கடன்கோடல்பற்றிய வழக்குள்வழிச்சான்றில்லாதொழியினும், காலாதிக்கிரமணமாயினும் அறநெறியொழுகுநன்னெஞ்சுடையார் தாம் இறுக்கவேண்டியகடனை யுடையார்க்கிறுத்துத்தீர்ப்பதுபோலச்செய்யக்கடமைப்பட்டவற்றைச் செய்துதீர்க்கவேண்டுமென்பதாம். வழக்குக்குவயதில்லை என்பது இதன்பழமொழி. வழக்கு-விவகாரபதம் பதினெட்டென்னுமவை.* வயது-காலபரிமாணம். இதன்பொருள் மாறுபட்ட இருவர் மன்றத்துச்சென்று வழக்குத்தொடர்தற்கும், மன்றத்தார் அதனையேற்றற்குமே அரசியலுடையாராற் காலவரையறைகற்பித்துக்கொள்ளப்பட்டதேயன்றி அறநெறியொழுகுவார் தம்கடமையைத் தாமே செய்துதீர்த்தற்குக் காலவரையறைகற்பிக்கப்படாமையால் ஒருவர்க்குச்செய்யக்கடவகடமைகளைக் காலாவதியாயிற்றென்று செய்துதீராதொழிதல் கூடாதென்பதாம்.

94. நற்பால கற்றாரு நாடாது சொல்லுவ
ரிற்பால ரல்லா ரியல்பின்மை நோவதென்
கற்பா விலங்கருவி நாடமற் றியாரானுஞ்
சொற்சோர் விலாதாரோ வில்.

எ-து, நல்லகுடிப்பிறந்தகற்றோரும் ஆராயாது சிலசொல்லுவாரக்குடிப்பிறவாதா ரியல்பின்மையைநோவதென்; கற்பாவிலங்கருவி நாடனே! சொல்லின்கட்சோர்வுபடாதார் உலகின்கண் யாவருமில்லை. எ-று.

(குறிப்பு) இது, பிறர் ஒன்றுசொல்லுங்கால் அவரது சொற்சோர்வை நோக்கி வருந்தாது பயனொன்றையேகொள்ளவேண்டுமென்கிறது. 'நல்லகுடிப்பிறந்த'என்றது 'நற்பால' என்னும் பெயரெச்சப்பொருளை விரித்துரைத்தவாறு.

---

* விவகாரபதம் பதினெட்டாவன:—கடன்கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதைநல்காமை, ஒப்பிப்பணிசெய்யாமை, கூலிகொடாமை, உடையனல்லான்விற்றல், விற்றுக்கொடாமை, கொண்டுள்ளமொப்பாமை, கட்டுப்பாடுகடத்தல், நிலவழக்கு, மாதராடவர்தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, சூது, ஒழிபு என இவை.

பால்-இடம். அது இங்குப் பிறத்தற்கிடமாகிய குலத்தையுணர்த்திற்று. குலத்திற்பிறந்தார் மரபுதவறாதினியனவாகச்சொல்லுவரென்பது குறிப்பு. இதனை "நிலத்திற்கிடந்தமை கால்காட்டுங் காட்டும், குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்"* என்பதனான் அறிக. 'கற்றாரும்' என்றது எண்ணும் எழுத்துமாகிய கலைகளைக் கசடறக்கற்றாரும் என்றவாறு. இவர் சொற்பிழை பொருட்பிழையில்லாது சொல்லவல்லவரென்பது குறிப்பு. 'ஆராயாது சிலசொல்லுவர்' என்றது உலகியல் வாசனையால் ஒரோவழித் தம் நெஞ்சொடுபடாது சில பிழைபடச்சொல்வாராயிருக்கச்செய்தே என்றவாறு. 'குடிப்பிறவாதாரியல்பின்மையைநோவதென்' என்றது குடிப்பிறப்பில்லாதார்சொல்லின்கண்ணுள்ள இன்னாமையும் பிழைகளுமாகிய இயல்பின்மையைநினைந்து நோவவிரகில்லை என்றவாறு. குடிப்பிறவாதாரெனவே கல்வியில்லாதவரென்பதும் அடங்கிற்று. செவ்வியசொற்களுக்கு இனிமையும் பிழையின்மையும் இயல்பானமையால், 'குடிப்பிறப்பில்லாதார்சொல்லின் இயல்பின்மை' என்றது இன்னாமையும் பிழையுமாவனவாம். 'கற்பாலிலங்கருவிநாடனே' என்றது மலைகளினிடத்தேவிளங்கிய அருவிபாயு நாட்டையுடையானே என்றவாறு. "யாரானுஞ், சொற்சோர்விலாதாரோவில்" என்றது பழமொழிக்கூற்று. இது எடுத்துக்கொண்டபொருளைநாட்டுதற்குரிய விஷயவாக்கியமாகிய சத்தப்பிரமாணமாகக் காட்டப்பட்டமையாற் கூறியது கூறலன்றாயிற்று. 'சொல்லின்கட்சோர்வுபடாதார் உலகின்கண் யாவருமில்லை' என்றது சோர்வுகாண்பார் தம் சொல்லிலும் சோர்வுண்டாமாதலால் அச்சோர்வுபற்றி நொந்திகழாது பயனொன்றேகொண்டொழிகவென்னுங் குறிப்பால், நொந்திகழாமைக்குபாயமு மொருங்குணர்த்தியவாறு. இதன்பழமொழி வடிவம் வந்தவழிக்கண்டுகொள்க.

95. தத்தமக்குக் கொண்ட குறியே தவமல்ல
செத்துக சாந்து படுக்கமன—னொத்துச்
சமத்தனாய் நின்றொழுகுஞ் சால்பு தவமே
நுகத்துப் பகலாணி போன்று.

எ-து, தத்தமக்குச்சமயத்தார்கொண்ட வேறுபட்டகுறிகளையுடைய வேடங்களன்று தவமாவது; தன்னையொருவன் வாய்ச்சியாற் செத்துக; சந்தனக்குழம்புமேலே பூச; தான் மனம்பொருந்தி அவ்விருதிறத்தார்க்கும் நடுவனாய்நின்றொழுகு மமைதிதவமாவது. நுகத்தின்கண் நடுநிற்கும் பகலாணியேபோல எ-று.

* திருக்குறள் 96-ம் அதிகாரம் (குடிமை) குறள்—9.

(குறிப்பு) இது, தவத்துக்குப் புறவொழுக்கத்தினும் விருப்பு வெறுப்பற்ற சமநிலையே மிகச்சிறந்ததென்கிறது. 'தத்தமக்கு' என்றது சமயநிலைபற்றிப் பல வேறுவகைப்பட்ட தவவொழுக்கமுடையார்க்கெல்லாம் என்றவாறு. 'சமயத் தார்கொண்டவேறுபட்டகுறிகளையுடைய வேடங்களன்று தவமாவது' என்றது அவ்வச்சமயத்தார்கொண்ட தலைமழித்தலும் வளர்த்தலும் உடுத்தலும் பூசலும் முதலிய பலவகைப்பட்டகுறிகளுஞ் செயல்களுமாகிய புறவேடங்களே தவத்துக் குச் சிறந்தவுறுப்பன்று என்றவாறு. ஈண்டுத் தவத்தினுறுப்பைத் தவமென்றது உபசாரவழக்கு. 'தன்னையொருவன் வாய்ச்சியாற்செத்துக' என்றது தன்னை யொருவன் செற்றம்பற்றி ஒருபுறம் வாய்ச்சியாற் செதுக்குவானாகவும் என்ற வாறு. 'சந்தனக்குழம்புமேலேபூச' என்றது மற்றொருவன் அன்புபற்றி அடி களிற் சந்தனக்குழம்புசாத்திப் பூசைபண்ணுவானாகவும் என்றவாறு. 'தான் மனம் பொருந்தி' என்றது அவ்விருசெயலிலும் வெறுப்பு விருப்பின்றி யுடம்பாடுடைய னாய் என்றவாறு. 'அவ்விருதிறத்தார்க்கும் நடுவுநின்றொழுகுமமைதி' என்றது முறையே பிரதிகூலமும் அநுகூலமும் செய்பவராய்த்தம்மைநினைத்திருக்கும் அவ் விருதிறத்தாரிடத்தும் வெறுப்புவிருப்பற்ற நடுவுநிலைமையுடையனாய்நின்றொழு கும் அகவுறுப்பாகிய சால்புடைமை என்றவாறு. 'தவமாவது' என்றது தவத்துக் குச்சிறந்தவுறுப்பென்றவாறு. இது, "வாய்ச்சிவாயுறத்திமாந்தர்மயிர்தொறுஞ் செத்தினாலும், பூச்சுறுசாந்தமேந்திப்புகழ்ந்தடிபணிந்தபோதும், தூக்கியிவ் விரண்டுநோக்கித்தொல்வினையென்றுதேறி, நாச்செறும்பராவுங்கொள்ளார் நமர்பிறரென்றுமுள்ளார்"* எனச் சிந்தாமணியிலும், "செஞ்சாந்தெறியினுஞ் செத்தினும் போழினும், நெஞ்சோர்ந்தோடாநிலைமை. அது காமவெகுளிமயக்க நீங்கினார்கண்ணேநிகழ்வது"† எனப் பொருளதிகாரவுரையிலும் வந்துள்ளது. "நுகத்துப்பகலாணிபோன்று" என்றது பழமொழிக்கூற்று. இது இங்குச் 'சமத்தனாய்' என்றதற்கு அடைமொழியாய்நின்றது. நுகத்துப்பகலாணி-சகட்டி னுகத்தினிடையேயுள்ள விரிதாள் என்னும் இழுப்பாணி. இது சகடிழுக்கு மெருதுகட்கிடையே ஒருபாற்கோடாது சமனாய்த் தன்னிலையினிற்றலால் நடுவு நிலைமைக் குவமையா யடிப்பட்டு வழங்கப்படுவது; "நுகத்திற்பகலனையாய்"‡ எனத் தஞ்சைவாணன்கோவையுள்ளும் வழங்கப்பட்டது. இப்பழமொழிவடிவம் வந்தவழிக் கண்டுகொள்க.

96. மாட மழிந்தக்கால் மற்று மெடுப்பதோர்
கூட மரத்திற்குத் துப்பாகு மஃதேபோற்
பீடில்லாக் கண்ணும் பெரியார் பெருந்தகைமை
யீடில்லதற் கில்லைப் பாடு.

* சீவகசிந்தாமணி 13-வது முத்தியிலம்பகம், செய்—227.

† தொல்காப்பியம் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல் 12-ஞ்சூத்திரவுரை.

‡ தஞ்சைவாணன்கோவை செய்—48.

எ-து, மாடம் செய்கையன்றியழிந்தக்கால் அதன்கண் மரமுதலாயினவுறுப்புக்கள் பின்னையுமெடுப்பதொரு கூடத்துக் குதவும், அதுபோலப் பெரியோர் தஞ்செல்வம் அழிந்தவிடத்தும் தம் பெருந்தகைமையின்கண்வழுவார்; வலியிலதற்குப் பெருமையிலதாதலால் எ-று.

**(குறிப்பு)** இது பெரியோர்வறுமையுறினும் அவர் தம் பெருந்தகைமையிற் குன்றார் என்கிறது. கூடத்துக்கு மரம் துப்பாகும் என உருபுபிரித்துக் கூட்டிக்கொள்க. மாடம் மேனிலையுடைய சிறந்தவீடு, அதன் மரமுதலாயினவுறுப்புக்கள், தூண், உத்தரம், துலாக்கட்டை, நிலைமுதலியன. கூடம் மேனிலையில்லாத சிறியவீடு. பெரியோர் குடிப்பிறப்பாலுயர்ந்தோர். தம் பெருந்தகைமையாவது இயன்றவளவு தம்மையடைந்தார்க்கு ரக்ஷகமாயிருத்தல். அதன்கண்வழுவாமையாவது, அதனைநீங்காதிருத்தல். அதாவது பெருமைபொருந்திய மாடவீடு செய்கையின்றிச் சிதைவுற்றதாயினும் அது தன்னுள்ளுறுப்புக்களாற் பிறிதொரு கூடவீடுசமைத்தற்குபகாரப்பட்டுத் தண்ணிழலுடையதாயடைந்தார்க்கு ரக்ஷகமாவதுபோலக் குடிப்பிறப்பாலுயர்ந்தார் வறுமையுற்றாராயினும் தம்மையடைந்தார்க்குத் தண்ணளியுடையராய் ரக்ஷகமாவர் என்பதாம். இதன்திட்டாந்தம், "செய்கையழிந்துசிதன்மண்டிற்றாயினும், பெய்யாவொருசிறைபேரிலுடைத்தாகும்" * என்பதுபோன்று சிறந்திருக்கவேண்டுமாகையா லுரையெழுதுமுன்னமே இதன்மூலம் வேறுபட்டதுபோலும். ஈடில்லதற்கில்லைப்பாடு என்பது பழமொழிக்கூற்று. இது எடுத்துக்கொண்டபொருளை எதிர்மறைமுகத்தானும் வலியுறுத்தியவாறு. 'வலியிலதற்குப் பெருமையிலதாதலால்' என்றது பிறிதுமொழிதலாய், ஆற்றலில்லாதார்க்குப் பெருமையில்லையாதலாற் பெருமையடையவிரும்புவோர் தம்மையடைந்தபிறர்க் குபகரிக்கு மாற்றலுடையராயிருக்கவேண்டு மென்னும் பொருள்குறித்துநின்றது.

97. தழங்குகுரல் வானத்துத் தண்பெயல் பெற்றாற்
கிழங்குடைய வெல்லா முளைக்குமோ ராற்றான்
விழைந்தவரை வேர்சுற்றக் கொண்டொழுகல் வேண்டா
பழம்பகை நட்பாத லில்.

எ-து, முழங்குமோசையையுடைய முகிற்கணுள்ள தண்பெயலைப் பெற்றாற் கிழங்குடையபுன்முதலாயினவெல்லாம் ஒருவகையான் முளையாநிற்கும்; பழைதாகப் பகைவராய்வாழ்கின்றாரை விரும்பியொருவரும் நட்பாகக்கொண்டொழுகவேண்டா; பழம்பகை நட்பாதவில்லையாதலான் எ-று.

* நாலடியார் 15-ம் அதிகாரம் (குடிப்பிறப்பு) செய்—7.

(குறிப்பு) இது, பழம்பகையாயுள்ளாரோ டுறவுகொள்ளலாகாதென்கிறது. 'தண்பெயல்' என்றது, தண்பெயலையுடையகார்காலம் எனக் கொள்க. 'கிழங்குடையபுல்' கோரைமுதலிய புல்வகையாகியவை. 'ஒருவகையான் முளையாநிற்கும்' என்றது விளைநிலத்துத்தோன்றாது மறைந்துகிடந்த அவை அந்நிலத்துள்ள விளைபயிர்வளர்ச்சிக் கிடையூறாக முளைத்துக் கிளைத்துத் துணையாயிருப்பது போன்றுகாட்டி யப்பயிர்களை நலியாநிற்கும் என்றவாறு. இது உருவகவகையாற் பிறிதுமொழிதலாய்நின்று, காலங்கருதித் தோன்றாதுமறைந்தொழுகும் பழம்பகையாயுள்ளார் தமக் காங்காலம்வந்தவாறே தம்நாட்டின்கணாங்காங்குத்தோன்றி நிலைபெற்றுத் துணையாவார்போன்று கரந்து குடிகளைநலியாநிற்பர் என்னுங் குறிப்புணர்த்தினமையால், மேல் மூலத்துள் அவற்றை யென்றது அவரை யெனச் சுட்டிக்கூறினாராதலால் அச்சுட்டுப்பெயர்க்குப் 'பழைதாகப் பகைவராய் வாழ்கின்றாரை' எனப் பொருளுரைக்கப்பட்டது. 'பழைதாகப் பகைவராய் வாழ்கின்றாரை' என்றது நெடுங்காலம், அல்லது குலபரம்பரையாய்ப் பகையுடையராயிருந்துவருமவரை என்றவாறு. 'விரும்பியொருவரும் நட்பாகக் கொண்டொழுகவேண்டா' என்றது அக்கிழங்குடையபுல் வேர்சுற்றியூன்றிப் பயிரை நலிவுறுத்தாதவாறு அவற்றைக் களைந்து புறத்தேயெறிவதுபோல அப்பகைவர் தம்நாட்டிற் காலூன்றிக் குடிகளைக் கரந்து நலிவுறுத்தித் தமக்குக் கேடுசெய்யாதவாறு அவர்மேல் வெறுப்புடையராகி அவரைப் பகையாகவே கொண்டு களைந்து புறம்பாக்கவேண்டும் என்பதாம். இதனுள் விளைநிலம் நாடும், பயிர் தம்குடிகளும், புற்கிழங்குகள் மறைந்தொழுகும் பழம்பகைவரும், தண்பெயல்(கார்)அவர்கிளைத்தற்குரியபருவமும், அப்புல் சுற்றிவேரூன்றல் அவர் பக்கத்துணையுடையராய் நிலைபெறுதலும், அக்களை பயிர்களைநலிதல் அப்பகைவர் தம் குடிகளைநலிதலும், அவைகளை வேரூன்றாதவாறு களைந்தெறிதல் அவர் தம் நாட்டிற் காலூன்றவிடாதுகளைந்து புறத்தகற்றலுமாகக்கொள்க. இவை கூற்றானுங் குறிப்பானுங் கொள்ளப்பட்டன. இவ்வாறு "வையகமுழுவதும்வறிஞரோம்புமோர், செய்யெனக்காத்தினிதரசுசெய்கின்றான்"* எனக்கம்பரும், "மிடியனொருசெய்யாளனச்செய்விளையக்காக்குஞ்செயல்போல"† எனச் சிவப்பிரகாசரும் கூறிப்போந்தனர். 'பழம்பகைநட்பாதலில்' என்பது பழமொழிக்கூற்று. இது இப்பாட்டி லெடுத்துக்கொண்டபொருளுக்குப் பிரமாணமாகக் காட்டப்பட்ட விஷயவாக்கியமானமையாற் கூறியதுகூறலன்றாயிற்று. பழம்பகைநட்பாகாது என்பதிதன்பழமொழி. இது "பாட்டினைக்கேட்டலோடும்பழம்பகைநட்புமாமே"‡ எனச் சிந்தாமணியினும்வந்துள்ளது. அதனுரையுள் "பழம்பகைநட்பாதலில் என்னும் பழையமொழியுமுளதன்றே" என இப்பாட்டினீற்றடி காட்டப்பட்டுள்ளது.

* கம்பராமாயணம் பாலகாண்டம் அரசியற்படலம் செ-12.

† பிரபுலிங்கலீலை 3-வது மாயையினுற்பத்திகதி. செ-49.

‡ சீவகசிந்தாமணி 7-வது கனகமாலையாரிலம்பகம் செய்-185.

98. வெள்ளம் பகையெனினும் வேறிடத்தார் செய்வதென்
கள்ள முடைத்தாகிச் சார்ந்த கழிநட்புப்
புள்ளொலிப் பொய்கைப் புனலூர வஃதன்றோ
வள்ளில்லத் துண்ட தனிசு.

எ-து, தமக் கிடையிட்டநாட்டின்கணுள்ளபகைவர் வெள்ளம் போல மிகப்பலராயினும் அவர்கள்வந்து தம்மைநலிந்துசெய்யுந்துன்ப மென்? மனத்தின்கண் வஞ்சனையுடைத்தாய்த் தம்மைச்சார்ந்த மிகநட் டார்செய்யுந்துன்பத்தைச் செய்யமாட்டாராதலாற் புள்ளொலிப் பொய்கைநல்லூரனே! அந்நட்புத் தம்மோடொக்கவோரில்லின்கண் ணிருந்தார்மாட்டுக்கொண்டதனிசுபோலும். எ-று.

(குறிப்பு) இது உட்பகையுண்டாகாவா றொழுகவேண்டுமென்கின்றது. 'தமக்கிடையிட்டநாட்டின்கணுள்ளபகைவர்' என்றது தம்நாட்டினின்றும் பிற நாடிடையிட்ட புறநாட்டின்கணுள்ளபகைவர் என்றவாறு. இது வேறிடமென் றதனாற் பெறப்பட்டது. பகை-ஆகுபெயர். வேறிடத்தார் என்றது பிறநாடுகடந் தும்வரும் பகைவர் எனப் பகையின்வலிமிகுதிகாட்டியபடி. 'வெள்ளம்போல மிகப் பலராயினும்' என்றது தாம் ஒன்றென்னுமெண்ணுகை அவர் வெள்ளமென்னுமெண் ணளவாய் மிக்கிருப்பினு மென்றவாறு. 'அவர்கள்வந்து தம்மைநலிந்துசெய்யுந் துன்பமென்' என்றது அவர்களுக்குத்தடையா யிடையிட்டிருக்குநாடுகடந்து வந்து ஒருகாலவிசேடத்தில் தம்மைமெலிவிக்குந்துன்பம் உட்பகையுள்ள சிலர் இடைவிடாதுசெய்யுந்துன்பத்தினும் பெரிதாகாதென்றவாறு. இங்கு என் என்றது எவ்வளவென்னும்பொருளுடையதாய்ச் சிறிதென்னுங்குறிப்புணர்த் தினமையாற் பெரிதாகாதென விளக்கியுரைக்கப்பட்டது. இதனாற் புறப்பகை யாயினார்செய்யுந்துன்பத்தினும், உட்பகையாயினார்செய்யுந்துன்பம் வெள்ளம் போல் மிகப்பலவாமென்பது குறிப்பாகி அது எதுவாயிற்று. இங்ஙனம் போந்த பொருளைத்திரட்டியே 'மனத்தின்கண்வஞ்சனையுடைத்தாய்த் தம்மைச்சார்ந்த மிகநட்டார்செய்யுந்துன்பத்தைச் செய்யமாட்டாராதலால்' எனப் பொருளுரைக் கப்பட்டது. 'மனத்தின்கண் வஞ்சனையுடைத்தாய்' என்றிருப்பது மனத்தின் கண்வஞ்சனையுடையராய் என்றிருக்கவேண்டும். இதன்பொருள் சொற்செயல் களால் இனிமையுடையார்போற்காட்டிக்கொண்டு மனத்தின்கண் வஞ்சனை

புடையராய்நின்று என்றவாறு. ‘கள்ளமுடைத்தாகிச்சார்ந்தகழிநட்பு’ எனச் செறலின் றுயர்திணை யஃறிணையாயிற்று. இதனை, வேறிடத்தார்பகை வெள்ள மெனினும் என்றகுறிப்பின் அவாய்நிலையால்வந்த சிறிதெனினும் என்னும் பயனிலைகொடுத்து முடித்துக்கொண்டு அஃதென்னுஞ் சுட்டோடியைக்க. ‘தம்மைச்சார்ந்த மிகநட்டார்’ராவார்-அரசர்க்குத் தம்வினைசெய்வாரும் சுற்றமும் குடிகளுமாகிய இவர். ‘அந்நட்பு’ என்றது மனத்தின்கண் வஞ்சனையுடையராய்க் கரந்து தம் முடனுறைவார்நட்பு என்றவாறு. ஈற்றடி பழமொழிக்கூற்று. இத னுள், வள்ளில்லத் தென்றிருப்பது உள்ளில்லத்து என்றிருக்கவேண்டும். ‘உள்ளில் லத்துண்டதனிசு’ என்பது இல்லத்துட்கொண்ட கடனென்றுபொருள்படுமாத லால், ‘தம்மோடொக்க வோரில்லின்கண்ணிருந்தார்மாட்டுக்கொண்ட தனிசு போலு’மெனப் பொருள் விரித்துரைக்கப்பட்டது. தனிசு கடன். ‘தம்மோ டொக்க வோரில்லின்கண்ணிருந்தார்மாட்டுக்கொண்டதனிசுபோலும்’ என்றது தம்மோடொக்க வோரில்லின்கண்ணே துச்சிலிருப்பார்மாட்டுக்கொண்ட கடன் போல மிகத்துன்புறுக்கும் என்றவாறு. அதாவது அவர் அடிக்கடி கேட்டுவருத்தி உண்ணுதற்கீட்டிவரும்பொருளையுங் கவர்ந்து துன்புறுத்துவதுபோல உட்பகை யாயினரு மிடைவிடாது துன்புறுத்துவாராதலா லவர்நட் பொழிக்கவேண்டு மென்பதாம். இதன்பழமொழி உள்வீட்டுக்கடன் உள்ளங்கைச்சிரங்கு என வழங்கப்படும். இதன்பொருள், உள்ளங்கைச்சிரங்கு உண்ணும்போதெல் லாந் துன்புறப்பதுபோல உள்வீட்டுக்கடனும் உண்ணவிடாது துன்புறுக்கு மென்பதாம்.

99. அடங்கி யகப்பட வைந்தினைக் காத்துத்
துடங்கிய மூன்றினான் மாண்டவு—டம்பொழியச்
செல்லும்வாய்க் கேமஞ் சிறுகாலைச் செய்யாரே
கொல்லிமேற் கொட்டுவைத் தார்.

எ-று, தாமடங்கித் தம்மைம்பொறியுந் தமக்ககப்படப் பாதுகாத்துத் தாந் தொடங்கியவொழுக்கங்கள் மனமொழி மெய்களான்மாட்சிமைப் பட் டிவ்வுலகத்தின்கண் உடம்பொழியத் தாம்செல்லும் மறுமையுலகத் துக்காமுறுதியைக் காலத்தாலேசெய்யாதார், கொல்லிமேல் நெற்கூடு புரிந்துவைத்தாராவர். எ-று. இதனுட் கொட்டென்பது நெற்கூடென்ற வாறு. அல்லதூஉங் கிழங்ககழ்ந்துண்டற்குக் கருவியாங் கொட்டென் பாரு முளர்.

(குறிப்பு) இது அன்றறிவாமென்னாது இம்மைக்கண்ணே மறுமைக்குறுதியாயின காலம்பெறச்செய்யவேண்டுமென்கிறது. "அன்றறிவாமென்னாதறஞ்செய்க"* என்றார் பிறரும். 'தாமடங்கி' என்றது தாம் மெய்மொழிமனங்களானறங்கடையாகிய தீயொழுக்கிற்செல்லாதடங்கி என்றவாறு. 'தம்மைம்பொறியுந் தமக்ககப்படப் பாதுகாத்து' என்றது உரியராகியதமக் குரிமையாயுள்ள இந்திரியங்களுக்கே தாம் பராதீனராய்த் தம்மையழியமாறி யைம்புலவின்பங்களைக் காமசாரமாய் நுகரச்செல்லாது அவ்விந்திரியங்களை விஹிதவிஷய விநியோகயோக்கியமாகத் தமக்கு ஸ்வாதீனமாயிருக்கும்படி பாதுகாத்தென்றவாறு. 'தாந் தொடங்கியவொழுக்கங்கள்' என்றது தாம் அநுஷ்டிக்கத்தொடங்கின வர்ணாச்ரமதர்மங்களும் சமயாசாரங்களும் என்றவாறு. 'மனமொழிமெய்களான் மாட்சிமைப்பட்டு' என்றது திரிகரணசுத்தியாற் சிறப்புற்று என்றவாறு. திரிகரணசுத்தியாவன:—செற்றம் சினம் வஞ்சம் முதலிய தீக்குணமின்மையும் யோகநிலைநிற்றலுமாகிய மனத்தூய்மையும், பொய் குறளை கடுஞ்சொல் பயனில்சொல்லின்மையும் பிழையறமொழிதலுமாகிய மொழித்தூய்மையும், சிந்தையும் மொழியுஞ் செவ்வியவாய் நீராடி நித்தியக்கடன்முடித்திருக்கும் ஒழுக்கமுடைமையாகிய மெய்த்தூய்மையுமாம். தொடங்கியவொழுக்கங்கள் மாட்சிமைப்பட்டுச்செய்யாதார் எனச் சினைவினை முதல்வினைகொண்டுமுடிந்தது. 'இவ்வுலகத்தின்கண் உடம்பொழிய' என்றது தானல்லாதவுடம்பு இவ்வுலகிலழியவும் என்றவாறு. இதனால் இவ்வுலகவாழ்க்கைக்கண் உடம்பைக்குறித்துச்செய்வன தமக்குச்செய்வனவாகாவென்பது குறிப்பாயிற்று. 'தாம்' என்றது ஆன்மாவாகிய தாம் என்றவாறு. 'மறுமையுலகத்துக்காமுறுதியைக் காலத்தாலேசெய்யாதார்' என்றது மறுமையுலகத்துக்காமுறுதியை மேற்சொல்லியவாறு காலம்பெறச்செய்யாது அடக்கமின்றி ஐம்பொறிவயத்தராய் மனமுதலியகோடிப் பொருள்தேடி இம்மையுலகத் தின்பந்துய்த்திருப்பவர் என்றவாறு. 'கொல்லிமேல் நெற்கூடு புரிந்துவைத்தாராவர்' என்றது மேலைக் குணவுவிளைக்கவேண்டிப்புரிந்துவைத்த விதைநெற்கூடுகளை நெருப்பிலிட்டெரித்து ஒருசில பொரியாய்த்தெறித்து விழுமவற்றைப் பொறுக்கி யுண்டுமகிழு மறிவிலிகள்போலு மென்றவாறு. நெற்கொட்டு, நெற்கூடு, நெற்கோட்டை என்பன ஒருபொருட்பெயர். நெறிப்படவொழுகின் இம்மை மறுமை இருமையுமொருங்களிக்கவல்ல கருவிகரணங்களைக்கெடுத்து மறுமைப்பயனிழந்து இம்மையி னற்பசாரமாகிய சிற்றின்பத்தைநுகர்வார்க்கு, நெறிப்படச்சமைப்பிற் பொரியும் போனகமுமாகவல்ல நெற்

* திருக்குறள்; 4-ம் அதிகாரம் (அறன்வலியுறுத்தல்) குறள்—6.

கூட்டைச் சுட்டுக்கெடுத்து அற்பசாரமாகியபொரியொன்றே பயனாகக்கொள்ளு மறிவிலிகளை யுவமமாக்கினர். 'எனைப்பலவே'* என்னும்பாட்டுப் பொருட் கேடின்றிப் பயன்பெறுதலும் இப்பாட்டுப் பொருட்கேடெய்திப் பயனிழத்தலு மாகிய பொருள்வேறுபாடுண்மையா லிவை தம்முண் மாறுபாடிலவாயின. இதன் பழமொழி, சிறியபயன்கருதிப் பெரியபொருளையழிக்கு மறிவிலிகளைச்சுட்டி இவர் சூடுசுட்டுப் பொரிபொறுக்கிகள் என வழங்கப்படுகிறது. சூடு, கூடு என் பனவும் நெற்போரையுணர்த்தும் ஒருபொருட்சொற்கள். 'அல்லலுளுங் கிழங்க கழ்ந்துண்டற்குக்கருவியாங் கொட்டென்பாருமுளர்' என்றது கொட்டென்பது நெற்கூடென்னும்பொருளில்வழக்குண்மையறியார்கூறிய வுரைவேறுகாட்டிய படி. அவர்கொண்டகருத்தாவது, உண்பாருயிர்கொல்வதாகிய நாவிக்கிழங்கினை யுண்ணற்குரியகிழங்கெனமயங்கியதனை யகழ்ந்துண்ணமுயல்வார்போலும் என்ப தாம். இங்குக் கொட்டுவைத்தல், கொட்டென்னுங்கருவிகொண்டு வெட்டி யெடுக்கமுயலு முயற்சியையுணர்த்துங் குறிப்புமொழியாயிற்று. ஆகவே, "அடங்கி யகப்படவைந்தினைக்காத்துத், துடங்கியமூன் றினுண்மாண்டுண், டும்பொழியச் செல்லும்வாய்க்கேமஞ்சிறுகாலைச்செய்தல்" தாமுய்தற்கும், அதுசெய்யாது மறுதலைபுரிதல் தாமுய்யா தழிதற்கும் ஏதுவாணமையாற் றாமுய்யா தழிதற்கேது வாகிய கொல்லிமேற்கொட்டுவைத்தல் இதற்கொப்பாயிற்று.

100. நல்கூர்ந் தவர்க்கு நனிபெரிய ராயினார்
செல்விருந் தாகிச் செலவேண்டா—வொல்வ
திறந்தவர் செய்யும் வருத்தங் குருவி
குறங்கறுப்பச் சோருங் குடர்.

எ-து, மிகப்பெரியசெல்வராயினார் வறுமையையுடையார்க்கு விருந்தாகிச்செல்லவேண்டா; செல்வராயின் அச்செல்லப்பட்ட வறுமை யுடையாராயினார் தமக்கியல்வதனைக்கடந்து விருந்துசெய்யும்வருத்தம் குருவி குறங்கறுப்பவே குடர்சோருமதுபோலும். எ-று.

(குறிப்பு) இது வலியார் எளியார்க்குவிருந்தாகலாகாதென்கிறது. 'குருவி குறங்கறுப்பச்சோருங்குடர்' என்பது பழமொழிக்கூற்று. 'குடர்சோருமதுபோ லும்,' என்றது குடர்சோரும்வருத்தம்போலும் என்றபடி. ஏனையவலிமிக்க விலங்குகளாற்றுதற்குரிய குறங்கின் றசையறுப்பினை அத்துணைவலியில்லா, குருவி சிறிதும் ஆற்றாதழிவதுபோலப் பொருண்மிக்குடையபிறர் ஆற்றுத,

* இந்நூலின் 68-ம் செய்யுள்.

குரிய வலியோர்விருந்துபுகுதலை எளியோராற்றுமாற்றலின்றி யழிவாராதலைால் அவர்பால் வலியார்விருந்துபுகலாகாதென்பது கருத்தாகக்கொள்க. இதன் பழமொழிவடிவம் வந்தவழிக்கண்டுகொள்க. இது, பொருளொப்புமைபற்றி "யானை மிதிக்கச்சந்துண்டா" என வழங்கப்படும். இம்முதனூறுபாட்டுக்களின் முதற்குறிப்புவருமாறு:—

உலகு கல்லாதான் கல்வி கேட்பார்
புலம் ஈனுலகத் தாஅமெனக் கெந்நெறி
இருந்தாய் பெரிய மிக்கு விழுமிழை
பாப்புத் தாநட் டங்கண் நண்பொன்றி
உள்ளது தக்கார் கறுத்துக் காவலனை
உரைமுடி வுரைத்தார் அருமை இசைவ
உரிமை விடலரிய தேர்ந்து தாமாற்ற
முழுதுடன் நிறையான் எமரிது தெருளாது
வெஞ்சினம் பரந்த தமனென்று மிக்குடையார்
வைத்ததனை யுற்றான் நாட்டிப் பயனோக்கா
வெள்ளம் விளிந்தார் மறந்தானும் கையாற
நோவ முகம்புறத் தாயிரவர் நிரைதொடி
வீங்குதோட் கற்றதொன் றியற்பகை பாரதத்
தல்லல் தெள்ளி ஆற்றவும் எமக்குக்
கைவிட்ட நிரந்து முட்டின் றூற்றும்
உணற்குக் கழுமலத் தெய்வம் கல்லாதவர்
வென்றடு முன்னின்னார் சுற்றத் தெனைப்பல
தந்தம் சிறியவர் வன்பாட்டு நடலை
யானும் கண்ணில் பெரியார் செருக்கெழு
அன்பின் இணரோங்கிக் கோவாத காழார
நாடிநமர் பொறப்பவும் உற்றதற் கிதுமன்னும்
ஒட்டிய வுழையிருந்து கள்ளி தெற்றக்
கண்ணுண் செந்நீரார் பெருமலை பொலந்தார்
சால நற்பால தத்தமக்கு மாடம்
தழங்கு வெள்ளம்பகை யடங்கி நல்கூர் பரி
பழமொழி முதனூற் றடிவர விவையே.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| முதற் பாட்டுரை. | க<br>கூ-ச | கெடுத்தற்குரிய<br>பேருடம்பினையுடையதாதலிற் பெரிதாயது | கெடுத்தற்கரிய<br>பேருடம்பினையுடையதனுலி பெரிதாயது |
| ஷ | கூ0 | ஶ்ராவொ | ஶ்ராவா॰ |
| எ | க | பழமொமி | பழமொழி |
| க௪ | கூ | நட்பதாயினு | நட்பேயாயினு |
| ஷ | கக | யார்நட்பே | யாவர்நட்பே |
| ரு0 | ரு | நீர்க்காலாகிய ஒடையை | நீர்க்காலாகியஇடவிசேடத்தை |
| ஷ | உக | நீமைமுகமுரைக்கும் | நீமைமனமுரைக்கும் |
| ருரு | ய-கூ | வெயரிக்க | வெறிக்க |
| அக | கஎ | மோரி | மோரின் |
| கூகூ | ௪௪ | ஒருகூறுகக்கொள்வதற்கும் | ஒருகூறுகக்கொண்டதற்கும் |
| க0கூ | உ | கள்ளியகிலுங் கருங் காக்கைச் | கள்ளி யகிலுங் கருங்காக்கைச் |
| ககரு | கூச | ரீடில்லதற் கில்லைப் பாடு | ரீடில் லதற்கில்லைப் பாடு |
| கஉ0 | எ | ஓ கு | அரிது |
| கஉரு | உக | வேண்டும்பகைவரை | பகைவனை |
| கஉஎ | கூகூ | ஊடநஉ | ஊடநொ |
| ககூரு | கரு | விளங்கிளாய் | விளங்கிழாய் |

குறிப்பு:—முகவுரைமுதலியன புத்தகமுழுதுமுடிந்தபின்பு எழுதிச்சேர்க்கப்படும்.